வெளியீடு 15-3-99 Issued 15-3-99

15 செப் 1999

875 / 99

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

# தமிழ்நாடு
# சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்
# செயலக வெளியீடு

# TAMIL NADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATES
# OFFICIAL REPORT

வெள்ளிக்கிழமை, ஏப்ரல் 24, 1998 – தொகுதி 47– எண் 2

**Friday the 24th April, 1998 – Volume 47 – No. 2**

D
V21, 31'N98
N98.47.2
219088

பேரவைச் செயலகம், சென்னை - 600 009
Assembly Secretariat, Fort St. George,
Chennai-600 009

[Price Rs. 3.00

**24-4-1998**

## உள்ளடக்கம்


| | பக்கங்கள் |
|---|---|
| **1. வினாக்கள்-விடைகள்—** | |
| உடுக்குறியிட்ட வினாக்கள் | 231-273 |
| **2. விதி 110-ன்கீழ் அறிக்கை—** | |
| அரசு அலுவலர்களுக்கு 1-1-1998 முதல் அகவிலைப்படி 3 சதவீதம் கூடுதலாக வழங்கல் குறித்து முதலமைச்சரின் அறிக்கை | 274-275 |
| **3. சிறப்புக் கவன ஈர்ப்பு—** | |
| (அ) ஆசிரியர்கள் பிளஸ்-2 விடைத்தாள்களை மதிப்பீடு செய்ய மறுத்து, போராட்டம் நடத்துவது. | 275-293 |
| (ஆ) மெட்ரிகுலேஷன் தேர்வுக்கான வினாத்தாள் தேர்வுக்கு முன்னரே வெளியானது. | 293-316 |
| **4. அறிவிப்புகள்—** | |
| (அ) நிகழ்ச்சி நிரலில் உள்ள கவன ஈர்ப்பு ஒத்திவைக்கப் பெறுதல் | 316 |
| (ஆ) போக்குவரத்துத் துறை அமைச்சர் அளித்த துணை வினாவிற்கான பதிலில் திருத்தம் | 322 |

| | பக்கங்கள் |
|---|---|
| 5. மானியக் கோரிக்கைகள், 1998-99, விவாதமும் வாக்கெடுப்பும்—தொடர்ச்சி | |
| கோரிக்கை எண் 28—தொழிலாளர் நலனும் தொழிற்சாலைகளும் | 316-387 |
| மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான் | 317, 321, 324-325, 331, 339-341, 368-385 |
| திரு. ப. ரங்கநாதன் | 322-329 |
| திரு. ஜி. சொக்கலிங்கம் | 329-334 |
| *திரு. கே. சுப்பராயன் | 317, 334-338, 341-345, 347-348 |
| *திரு. ஆ. நடராசன் | 348-352 |
| *திரு. டி. மணி | 319, 352-357, 386 |
| திரு. வி.பி. சிங்காரவேலு | 357-362 |
| *திரு. வி.கே. லட்சுமணன் | 321, 362-368, 387 |
| 6. அரசினர் தீர்மானம்— | |
| விதி 32-ஐத் தளர்த்தல் | 387-388 |
| 7. அரசினர் சட்டமுன்வடிவுகள் (ஆய்வு செய்தல்)— | |
| (அ) தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் (திருத்தச்) சட்டமுன்வடிவு, 1998 | 388-390 |
| மாண்புமிகு திரு. கோ.சி. மணி | 388-390 |
| (ஆ) தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் ([illegible]ம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 1998 | 390-392 |

| | பக்கங்கள் |
|---|---|
| 7. அரசினர் சட்டமுன்வடிவுகள் (ஆய்வு செய்தல்)—தொடர்ச்சி | |
| மாண்புமிகு திரு. கோ.சி. மணி | 390, 391 |
| (இ) தமிழ்நாடு வேளாண் விளைபொருள் வாணிக (முறைப்படுத்துதல்) திருத்தச் சட்டமுன்வடிவு, 1998 | 392-394 |
| *மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம். | 392, 393 |
| 8. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள் | 394 |


219088

# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

**சித்திரை 11, வெகுதான்ய — திருவள்ளுவர் ஆண்டு 2029**
**1998 ஏப்ரல் 24, வெள்ளிக்கிழமை**

மாண்புமிகு பேரவைத் தலைவர் **திரு. பி.டி.ஆர். பழனிவேல் ராஜன்** அவர்கள் தலைமையில் காலை 9.30 மணியளவில் பேரவை கூடியது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:**

"நாடோறு நாடுக மன்னன் வினைசெய்வான்
கோடாமை கோடா துலகு."

உழைப்போர் உள்ளம் வாடாமல் இருக்கும் வரையில் உலகின் செழிப்பும் வாடாமல் இருக்கும். எனவே, உழைப்போர் நிலையை ஒவ்வொரு நாளும் அரசினர் ஆய்ந்தறிந்து ஆவன செய்ய வேண்டும்.

## 1. வினாக்கள்-விடைகள்

### உடுக்குறியிட்ட வினாக்கள்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினாக்கள்-விடைகள். வினா எண் 321, திரு. ந. பாண்டுரங்கன், மாண்புமிகு கல்வி அமைச்சர்.

**321—**

**நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாக்குதல்**

***6146—திரு. ந. பாண்டுரங்கன்:**

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவண்ணாமலை மாவட்டம், பெரணமல்லூர் ஒன்றியம், நமத்தோடு கிராம நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

[1998 ஏப்ரல் 24

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) திருவண்ணாமலை மாவட்டம், பெரணமல்லூர் ஒன்றியம், நமத்தோடு கிராம ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்துவது சார்ந்த கருத்துருக்கள் பெறப்பட்டன.

(ஆ) 1997-98 ஆம் கல்வியாண்டில் புதிய அரசு உயர்நிலைப் பள்ளிகளைத் தேர்வு செய்யும்பொருட்டு அமைக்கப்பட்ட உயர்மட்டக் குழு இப்பள்ளியைப் பரிந்துரைக்காததால் 1997-98 இல் தரம் உயர்த்தப்பட்ட பள்ளிகளில் இப்பள்ளி இடம் பெறவில்லை, தேர்வு செய்யப்படவில்லை.

**திரு. ந. பாண்டுரங்கன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டதைப்போல 1997-98 இல் ரூ. 60,000/- என்று, அரசு விதித்திருந்த அந்தத் தொகையைக் கட்டி, உயர்நிலைப் பள்ளி வரும் என்று அந்தப் பகுதி மக்கள் எதிர்பார்த்துக் கொண்டிருந்தார்கள். ஆனால் சென்ற ஆண்டு அது நடைபெறவில்லை. மறுபடியும் 40,000 ரூபாய் கட்டியிருக்கிறார்கள். அரசு விதித்திருக்கிற ஒரு இலட்சம் ரூபாயைக் கட்டிவிட்டதால், இந்த ஆண்டு உயர்நிலைப் பள்ளி வரும் என்று எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். குறிப்பாக அந்தப் பகுதியில் 200-க்கும் மேற்பட்ட மாணவர்கள் கல்வி பயிலுகின்றனர். பக்கத்தில் 1 கிலோ மீட்டர் தொலைவில் கோணாமங்கலம் என்ற ஊரில் ஒரு நடுநிலைப் பள்ளி இருக்கிறது. அந்த நடுநிலைப் பள்ளியிலும் 200-க்கும் மேற்பட்ட மாணவர்கள் பயிலுகின்றனர். 6 ஆம் வகுப்பு முதல் 8ஆம் வகுப்புவரை பயிலுகிறார்கள். எனவே இதையும் இணைத்து, தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட மாணவர்கள் பயன் அடைகிற வகையில், இந்த ஆண்டு நடுநிலைப் பள்ளியின் தரத்தை உயர்த்தி அறிவிக்க, அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இரண்டு மூன்று விளக்கங்களை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு நான் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். அமைச்சர் முன்வருவாரா என்பது அடையாளத்திற்கே. தவிர, ஒரு குழு தீர்மானித்துத்தான் அந்தப் பள்ளிகளில் எது அதிகத் தரம்



1998 ஏப்ரல் 24]

உயர்ந்துள்ளதோ அந்தப் பள்ளியை ஏற்றுக்கொள்ள வேண்டிய நிலைமை அந்தக் குழுவிற்கு இருக்கிறது. மற்றொன்று, 200-க்கு மேற்பட்ட மாணவர்கள் என்றெல்லாம் குறிப்பிடுவது நம்முடைய கணக்கிலே வராது. 8 ஆம் வகுப்பு படிப்பவர்களைப் பொறுத்து 9 ஆம் வகுப்பு; 5 ஆம் வகுப்பு படிப்பவர்களைப் பொறுத்து 6ஆம் வகுப்பு, இப்படித்தான் பள்ளிக்கூடங்கள் தொடங்க முடியும். அந்த வகையில் 8ஆம் வகுப்பிலே 44 மாணவர்கள்தான் அங்கே பயின்று கொண்டிருக்கிறார்கள். ஒருவேளை அந்த எண்ணிக்கை 50 ஆக இருந்தாலும்கூட, அதிலே 30 பேர், 32 பேர்தான் தேர்வு பெறுவார்கள். அதுமட்டுமல்லாமல், பக்கத்தில் உள்ள பள்ளிக்கூடம் என்று அவர்களால் சுட்டிக்காட்டப்படுகிற பள்ளிக்கூடம், அவர்களும் அதைப்போல உயர்நிலைப் பள்ளியைக் கேட்பார்களேயானால், பக்கத்தில் இரண்டு பள்ளிகள் கேட்கிறபோது எந்தப் பள்ளிக்குத் தருவது என்பதையும் இந்தக் குழுதான் தீர்மானிக்க வேண்டும். எனவே அவற்றையெல்லாம் ஆய்வு செய்து, இந்தக் குழு முடிவெடுத்துத் தெரிவிக்கிறபோது, வாய்ப்பு இருக்குமானால் மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிடுகிற பள்ளிக்கூடமும் தரம் உயர்த்தப்படும்.

**திரு. ந. பாண்டுரங்கன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டதைப்போல நமத்தோடு கிராம நடுநிலைப் பள்ளியில் ஏறக்குறைய 55 மாணவர்கள் கல்வி கற்பதாக எனக்குத் தகவல் வந்திருக்கிறது. அதேபோல, பக்கத்தில் இருக்கிற கோணாமங்கலம் நடுநிலைப் பள்ளி ஆசிரியர்களும் மாணவர்களும் நமத்தோடு நடுநிலை பள்ளிக்கு அனுமதி வழங்கலாம் என்று சொல்கிறார்கள். எனவே, இதை இணைத்து இந்த ஆண்டு நமத்தோடு நடுநிலைப் பள்ளியைத் தரம் உயர்த்தி அறிவிக்க அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய வேண்டுகோள் குறித்து அந்தக் குழுவிற்குத் தெரிவிக்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர்களுக்கு ஒரு வேண்டுகோள். இந்த வினா குறிப்பிட்ட ஒரு கிராமத்தைப் பொறுத்தது. இதிலே துணை வினா கேட்க வேண்டுமென்று தமிழ்நாட்டில் இருக்கிற எல்லா சட்டமன்ற உறுப்பினர்களும் விரும்புகிறார்கள். நமத்தோடு கிராமத்தைப் பற்றி யாராவது கேட்க விரும்பினால் நான் துணை

வினாவை அனுமதிப்பேன். இந்தக் கேள்வியை வைத்துக்கொண்டு நீங்கள் உங்கள் தொகுதியில் இருக்கிற கிராமத்தைப்பற்றியோ, பள்ளிகளைப் பற்றியோ கேட்டால் கல்வி அமைச்சரிடம் அந்த விவரங்கள் இருக்காது. ஆகையினால் இந்தக் கிராமத்தைப்பற்றி யாராவது துணை வினா கேட்க விரும்பினால் நான் அனுமதிப்பேன். பொதுவான கேள்விகளை அனுமதிக்க முடியாது.

வினா எண் 322, திரு. பி. என். சுப்பிரமணி, மாண்புமிகு கல்வி அமைச்சர்.

முற்பகல் 9-35

**322—**

**சிலம்பாட்ட வீரர்களை வெளிநாட்டுக்கு அனுப்புதல்**

***10156—திரு. பி.என். சுப்பிரமணி:**

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வேலூர் மாவட்டத்தில் தமிழக பண்டைய வீர விளையாட்டான சிலம்பாட்டத்தில் இந்தியாவிலேயே முதலிடம், இரண்டாமிடத்தில் வெற்றி பெற்றவர்களை வெளிநாட்டுக்கு அனுப்பும் திட்டம் அரசிடம் உள்ளதா?

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தேசிய அளவு சிலம்பாட்டப் போட்டியில் வெற்றி பெற்ற வேலூர் மாவட்டத்தைச் சேர்ந்த சிலம்பாட்ட வீரர்களை வெளிநாட்டுப் போட்டிகளில் கலந்துகொள்ள அனுப்பும் திட்டம் குறித்த கருத்துரு ஏதும் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தால் பெறப்படவில்லை. அத்தகைய கோரிக்கை தமிழ்நாடு மாநில சிலம்பாட்டச் சங்கத்திலிருந்து உரிய சான்றுகளுடன் பெறப்படின், ஆய்வு செய்து, விதிகளின்படி நடவடிக்கை எடுக்கப்படும்.

**திரு. பி.என். சுப்பிரமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் பண்டைய காலத்திலும், சேர, சோழ, பாண்டிய மன்னர்கள் காலத்திலும் போர் செய்கின்ற வீரர்கள் சிலம்புப் பயிற்சியைப்



பெற்றார்கள். அதே நேரத்தில் எதிரிகளிடமிருந்து தங்களைத் தற்காத்துக் கொள்ளவும், சண்டையில் எதிரிகளை வீழ்த்தவும், நீண்டநாள் நோயில்லாமல் வாழவும் சிலம்பாட்டம் பயன்பட்டு வந்தது. கடந்த இரண்டு ஆண்டுகளுக்கு முன் வி.ஜி.பி. தங்கக் கடற்கரையில் வெளிநாட்டினர்கள், குறிப்பாக கிழக்கு ஆசிய நாடுகளைச் சேர்ந்த வீரர்களும்...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் வினாவைக் கேட்க வேண்டுமேயொழிய, எழுதி வைத்துக் கொண்டு, அதைப் பார்த்து சொற்பொழிவு ஆற்றக்கூடாது.

**திரு. பி.என். சுப்பிரமணி:** பேரவைத் தலைவரவர்களே, தெற்கு ஆசியப் போட்டியிலும் சிலம்பாட்டத்தைக் காட்சிப் போட்டியாக செய்து காட்டினார்கள். விஜி.பி. தங்கக் கடற்கரையில், வணக்கத்திற்குரிய மாண்புமிகு மேயர் அவர்கள் வெற்றி பெற்றவர்களுக்குப் பரிசுகளை வழங்கினார்கள். வேலூர் மாவட்டத்தைச் சேர்ந்த வீரர்கள் கடந்த 6 மாத காலத்திற்கு முன் ஆந்திராவில் நடைபெற்ற போட்டியில் என்னுடைய தலைமையில் கலந்துகொண்டு இந்தியாவிலேயே சிறப்பாக விளையாடி முதலிடம், இரண்டாம் இடத்தில் வெற்றி பெற்று பரிசுகளைப் பெற்றுள்ளனர். ஆகவே இவர்களை ஊக்கப்படுத்தவும், சிலம்புக் கலையை வெளிநாட்டினருக்கு வெளிப்படுத்தவும், வெற்றி பெற்ற சிலம்பாட்ட வீரர்களை அரசு செலவில் வெளிநாட்டிற்கு அனுப்ப உத்தேசம் உண்டா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்**: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இவ்வளவு விவரம் தெரிந்த உறுப்பினருக்கு விண்ணப்பம் போடுகிற ஒரு விவரம் தெரியாமல் போய் விட்டதற்காக வருந்துகிறேன். இரண்டாவது, எந்த அடிப்படையில் விண்ணப்பம் போடுவது என்பதும், எந்த எந்த முறைகளில் வெளிநாட்டுக்கு அவர்களை அனுப்புவது என்பதும் ஏற்கெனவே விதிமுறைகளில் இடம் பெற்றிருக்கின்றன. வெளிநாட்டிலே உள்ள ஒரு தேசிய நிறுவனம் அல்லது இப்படிப்பட்ட விளையாட்டு மன்றம் அவர்களைக் கலந்து கொள்ளும்படிக் கேட்டு, அழைப்பு அனுப்புமானால், அப்படி வெளிநாட்டுக்கு அனுப்பப்படுகிறவர்களுக்கு முதல் உரிமை வழங்கப்பட்டு உதவி செய்யப்படுகிறது. எந்தவொரு அமைப்பிலே இடம் பெற்றவராக இருந்தாலும், அவர்களுக்கு அந்த அமைப்பிலேயிருந்து எந்த உதவியும் கிடைக்கவில்லையென்றால், விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் உதவி

செய்ய முன்வருகிறது. எனவே, அந்த விவரங்களையெல்லாம் தெரிந்து விண்ணப்பம் செய்தால் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் - அதுவும் ஒரு தனி அமைப்பு, அது ஏறத்தாழ ஒரு அட்டானமஸ் அமைப்பு - உரிய முறையில் பரிசீலிக்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சிலம்பாட்டம் பற்றியா கேட்கப் போகிறீர்கள்? திரு. இரா. தாமரைக்கனி.

**திரு. இரா. தாமரைக்கனி:** ஆமாம் சார், அது எனக்கு ரொம்பப் பிடிக்கும். (சிரிப்பு) மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, தமிழகத்தினுடைய வீர விளையாட்டான சிலம்பாட்டம், பள்ளி மாணவர்களுக்கு என்று இல்லாமல், உடற்பயிற்சி ஆசிரியர்களும் அந்தச் சிலம்பாட்டத்தைக் கற்றுக்கொள்ள வேண்டுமென்று ஏதாவது விதி முறைகள் இருக்கிறதா? அப்படிக் கற்றுக்கொண்டு மாணவர்களுக்கு சிலம்பாட்டம் விளையாடச் சொல்லிக் கொடுக்கப்படுமா? உதாரணமாகச் சிலம்பாட்டம் ஆடுகிறவர்கள் வரிசைகளைச் சரியாகச் செய்ய மாட்டேன் என்கிறார்கள். 'தாயைக் காத்த தனயன்', 'தாய்க்குப் பின் தாரம்' போன்ற படங்களில், எம்.ஜி.ஆர். அந்தமாதிரி ஒரு வரிசை காட்டுவது நன்றாக இருக்கும் (சிரிப்பு) அந்த வரிசைகள் காட்டுவது நன்றாக இருக்கும் (குறுக்கீடு) 'ஆயிரத்தில் ஒருவன்' படத்தில் கத்திச் சண்டை போடுவார். அந்தமாதிரி வரிசைகள் சரியாக வரமாட்டேன் என்கிறது. எனவே இந்தமாதிரி படங்களை எல்லாம் உடற்பயிற்சி ஆசிரியர்களுக்கு, சிலம்பாட்டம் ஆடுகிறவர்களுக்கு போட்டுக் காண்பிக்க வேண்டும். அதுமட்டுமல்ல, சடுகுடு, சிலம்பாட்டம் போன்றவற்றைப் பள்ளிக்கூடங்களிலே மட்டும்தான் சொல்லித் தருகிறார்கள். காலேஜிலும் அதைச் சொல்லித் தர வேண்டும். அதேபோல சிலம்பாட்டத்தைச் சொல்லித் தர வேண்டும். இதை தேசிய விளையாட்டாக ஆக்குவதற்கு மாநில அரசை மத்திய அரசு வற்புறுத்துமா என அறிய விரும்புகிறேன். (சிரிப்பு) பேரவைத் தலைவரவர்களே......

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பரவாயில்லை, பரவாயில்லை, நீங்கள் சொல்வதைப் புரிந்து கொண்டோம். மாண்புமிகு கல்வி அமைச்சர்.

முற்பகல் 9-40

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய விளையாட்டையெல்லாம் தேசிய





விளையாட்டாக ஆக்க வேண்டுமென்று நினைக்க வேண்டிய அவசியம் நமக்குக் கிடையாது. நம்முடைய நாட்டில், நம்முடைய விளையாட்டுகளில் ஓரளவுக்கு நல்ல முறையில் பயிற்சி பெற்றவர்கள் இருக்கிறார்கள். பயிற்சி பெற்றுக் கொண்டிருக்கிறார்கள். சிலம்பு விளையாட்டு போன்றவற்றில், பள்ளிக்கூடங்களில் அதிக கவனம் செலுத்த இப்போது வாய்ப்பில்லை. ஓரளவு எங்கேனும் அரிதாகத்தான் நடைபெறுகிறது. ஆனால் தனிப்பட்ட கழகங்கள், சிலம்பு விளையாட்டுக்கான கழகங்கள் இந்தப் பயிற்சியில் மேம்பட்டு விளங்குகின்றன. அவர்கள் விண்ணப்பிப்பார்களேயானால், அவர்களை மேலும் ஊக்கப்படுத்த இந்த மேம்பாட்டு ஆணையம் தகுந்த முறையில் கவனம் செலுத்தும். அதைப்போல எம்.ஜி.ஆர். அந்தக் காலத்தில் நடிக்கிறபோது எப்படியெல்லாம் சிலம்பு அடிபோட்டார்; சிலம்பு விளையாட்டை எப்படியெல்லாம் நடித்துக் காட்டினார் என்று சொன்னார்கள். அவர் அடி போட்டார்; மற்றவர்கள் எல்லாம் 'பாவலா' காட்டுகிறார்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு பெ. சு. திருவேங்கடம்.

**திரு. பெ.சு. திருவேங்கடம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மூலக் கேள்வியைக் கேட்டிருக்கிற நம்முடைய ஆற்காடு சட்டமன்ற உறுப்பினர் திரு. சுப்பிரமணி அவர்களுக்கு இந்தச் சிலம்பாட்டம் தெரியும் என்று நான் ஒரு வாரப் பத்திரிகையிலே படித்திருக்கிறேன். இந்த விளையாட்டை ஊக்கப்படுத்த, அவரை இந்த அரசு பயன்படுத்திக் கொள்ளுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது அவர்களுடைய ஊக்கம், முயற்சி, அமைப்பு, செயல்பாடு, இவைகளைப் பொறுத்துதான் வளர முடியும். யார் எந்த அமைப்பிலிருந்து செயல்பட்டாலும் அந்த விளையாட்டு அமைப்பை ஊக்கப்படுத்த இந்த மேம்பாட்டு ஆணையம் ஆவன செய்யும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. டி. மணி.

**திரு. டி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த சிலம்பாட்டத்தில் மூன்று விதமான பயிற்சி முறைகள் கையாளப்பட்டு வருகின்றன. அதிலே ஒன்று 2-½ அடி நீளம் இருக்கிற கம்பு; அதைக்

கொண்டு சிலம்பாடுவார்கள். அந்தப் பயிற்சி பெறுகின்றவர்களுக்கு, மாணவர்களாக இருந்தாலும் சரி, யாராக இருந்தாலும் சரி, கண் மிகவும் கூர்மை பெறுவதற்கும், கான்சன்டிரேட் பண்ணுவதற்கும் பயன்படுகிறது. எனவே, என்னுடைய கேள்வி, பள்ளியிலே ஓர் ஆசிரியர் அமைப்பை வைத்து மாணவர்களுக்குப் பயிற்சி கொடுத்தால் அந்த இரண்டுவிதமான நன்மைகள் வரும் என்ற அடிப்படையில் இதற்கு அரசு ஏதாவது ஏற்பாடு செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது எல்லாம் கல்வி அமைச்சர் நினைத்தவுடன் எந்தத் திட்டத்தையும் நிறைவேற்றக்கூடிய இடத்தில் இல்லை. ஏற்கெனவே ஏற்றுக்கொள்ளப்பட்டு, நிறைவேற்றப்படுகிற திட்டங்களை இன்னும் முழு அளவுக்கு செம்மைப்படுத்துவதற்கு இந்த அரசு பெரும் முயற்சியில் ஈடுபட்டிருக்கிறது. குறைகளைப் போக்க, உரிய கல்வி கிடைக்க, சாதாரண உடற்பயிற்சி கிடைக்க, இதற்கான அடிப்படைகள் உருவாக்கப்படுகின்றன. எந்தப் பள்ளியிலும் இதற்கான குழு மிகுந்த ஆர்வத்துடன் நடத்தி வருவார்களேயானால், அவர்கள், பள்ளிக்கல்வி இயக்குநருக்குத் தெரிவிப்பார்களேயானால், அனுமதி வழங்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ப. ரங்கநாதன்.

**திரு. ப. ரங்கநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் சிலம்பாட்டத்தைப் பொறுத்தவரையில், சென்னை, செங்கல்பட்டு மாவட்டங்களில் எல்லாம் இடியாப்ப நாயக்கர் பரம்பரை, சார்பட்டா பரம்பரை என்ற பட்டமே இருக்கிறது. இந்த இரண்டு பரம்பரைகளில் உள்ளவர்கள், புலி வேஷம் போட்டு ஆடுவார்கள். புலி எப்படி கர்ஜித்துக் கொண்டு காட்சியளிக்கின்றதோ, அதுபோல மனிதர்களை உருவாக்கி ஒரு வீர விளையாட்டாக ஆடுவார்கள். அதுபோன்று 'செடி குச்சி', 'பானா', 'சிலம்பு', 'கர்ளி' இப்படியெல்லாம் விளையாட்டுகள் இருக்கின்றன. உடல் வலிமையும், கூர்மையும் பெறுவதற்கும், இளைஞர்கள் உடலை வலிமையாக வைத்துக் கொள்வதற்கும் பழைய காலத்தில், பெரியவர்கள் இந்த விளையாட்டுகளைக் கற்றுக் கொடுத்தார்கள். இப்படிப்பட்ட விளையாட்டுகளை மீண்டும் ஆரம்பப் பள்ளிக்கூடங்களில், பாடத் திட்டத்தில் சேர்த்து சொல்லிக் கொடுப்பதற்கு அரசு ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.



**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிலம்பு, யோகம், வேறு சில விளையாட்டுகள் இவையெல்லாம் நடத்த வேண்டுமென்ற பொதுவான கருத்து இருக்கிறது. ஆனால் சில பள்ளிக்கூடங்களில் இடவசதி கிடையாது; சில பள்ளிக்கூடங்களில் போதுமான அளவுக்கு எல்லா சூழ்நிலை வசதிகளும் அமைக்கப்படுவதில்லை. மாநகராட்சிப் பள்ளிகளிலேகூட இவை அமைக்கப்படுவதில்லை. அண்மைக் காலத்தில் மிகுந்த அக்கறை செலுத்தப்படுகிறது. எனவே சூழ்நிலை ஒத்துவருமானால், குறிப்பிட்ட பள்ளிகளில் இப்படிப்பட்ட விளையாட்டுகள் நடத்த வேண்டுமென்று அங்கே உள்ள தலைமை ஆசிரியரோ அல்லது பெற்றோர் ஆசிரியர் கழகமோ தெரிவிப்பார்களானால், அதை அனுமதித்து, நடைமுறைப்படுத்தலாம். ஆசிரியர் யாருக்காவது சிலம்பாட்டம் தெரிந்தால், அவர்கள் வேண்டுமானால் பயிற்சி தரலாமே தவிர, தனியாக ஆசிரியர் ஒருவரை நியமிப்பது என்பது இயலாத காரியம்.

முற்பகல் 9-45

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. லா. சந்தானம்.

**திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிலம்பாட்டம் என்பது தன்னைப் பாதுகாத்துக் கொள்வதற்காகவே கிராமப்புறங்களில் கற்றுக்கொள்ளப்படுகிற ஒரு ஆட்டம். எதிரிகளிடமிருந்து பாதுகாத்துக் கொள்வதற்கு, இப்போது எப்படி துப்பாக்கி போன்ற உயர்ந்த ஆயுதங்களைப் பயன்படுத்துகிறார்களோ, அதைப்போல, சிலம்பாட்டம் என்பதும் தன்னை தற்காத்துக் கொள்வதற்காக ஏற்படுத்தப்பட்ட ஒரு ஆட்டம். எனவே, அந்த ஆட்டத்தை வசதியுள்ள ஏதாவது ஒரு பள்ளியிலே, மாவட்டம் ஒன்றுக்கு ஒரு பள்ளி என்று தேர்வு செய்து ஒவ்வொரு மாவட்டத்திலும் அந்தப் பள்ளியிலே இந்தச் சிலம்பாட்டப் பயிற்சியைக் கற்றுத் தருவதற்கு அரசு முன்வருமா என்று அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பள்ளியிலே நடைபெற வேண்டிய பல்வேறு பயிற்சிகளைப் பற்றி உரிய ஆலோசனை வழங்குவதற்கும், ஊக்கப்படுத்துவதற்கும், பெற்றோர்-ஆசிரியர் கழகம் உரிமை பெற்றிருக்கிறது. அந்தப் பெற்றோர் - ஆசிரியர் கழகத்தின் மூலமாகத் தீர்மானிக்கப்படுமானால், அது இயக்குநரால் ஏற்றுக்கொள்ளப்படும்.

[1998 ஏப்ரல் 24

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ப. மோகன் கந்தசாமி.

**திரு. ப. மோகன் கந்தசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குறைந்தபட்சம் சட்டமன்ற உறுப்பினர்களுக்காவது இந்தச் சிலம்பாட்டத்தைக் கற்றுத்தர ஏற்பாடு செய்வார்களா என்று கேட்டுக் கொள்கிறேன். சில நேரங்களில் அது தேவையாக இருக்கிறது. இங்கே. ஆகவே, மூலக்கேள்வி கேட்ட நம்முடைய சட்டமன்ற உறுப்பினரை வைத்து நம்முடைய சட்டமன்ற வளாகத்திலே புதிய விடுதியிலே கூட அதைக் கற்றுக் கொடுக்கலாம். அதற்கு ஏற்பாடு செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதைத் தீர்மானிக்க வேண்டியது தாங்கள்தான்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ம. அப்துல் லத்தீப்.

**திரு. ம. அப்துல் லத்தீப்:** பேரவைத் தலைவர் அவர்களே, பண்டைய தமிழ் இலக்கியங்களிலே குறிக்கப்பட்டு இருக்கின்ற வீர விளையாட்டுகள் சிலம்பாட்டம், வாளாட்டம், கோலாட்டம் மற்றும் ஏறு தழுவுதல் போன்றவை. அதிலே சிலம்பாட்டத்தைப் பற்றி மிகச் சிறப்பாக இங்கே குறிப்பிட்டுப் பேசினார்கள். பொதுவாக நம்முடைய பகுதியிலே, வட ஆற்காடு, தென் ஆற்காடு மாவட்டம் உள்ளிட்ட பகுதிகளில், சில சொற்களும், இதற்குச் சான்றுகளாக இருக்கின்றன. வில்வாரணி, வீர அணி, படையாட்சி என்ற பெயர்கள் எல்லாம் எங்களுடைய மாவட்டப் பகுதியிலே இருக்கின்றன. எனவே, இவைகளை எல்லாம் அடிப்படையாக வைத்து, பண்டைய தமிழ் இலக்கியங்களிலே குறிக்கப்பட்டுள்ளதன் அடிப்படையில், வீர விளையாட்டுகள் எவை என்பதைக் குறித்து, அரசு ஒரு பட்டியல் தயார் செய்து, அதைப் பள்ளிகளிலே, கல்லூரிகளிலே ஊக்குவிக்க, புதிய ஒரு திட்டத்தை வகுத்துச் செயல்படுத்துமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பள்ளிக்கூடங்களில் செயல்படுத்த முடியுமா என்பது பள்ளிக்கூட நிர்வாகத்தில், அதற்காகிற செலவில் இதற்காக தனி ஆசிரியர்கள் நியமிக்க முடியுமா என்ற அடிப்படையில் ஆலோசிக்கப்பட வேண்டும். அது எளிதான காரியமாக இன்றைக்கு



1998 ஏப்ரல் 24]

இல்லை. ஆனால் பள்ளிக்கூடங்களில் இப்படிப்பட்ட பயிற்சி நடத்தக்கூடாதா என்று கேட்டால், நடத்தலாம். அந்தந்தப் பள்ளிக்கூடங்கள் விரும்பி, அவர்களே ஏற்பாடு செய்து நடத்திக் கொள்ளலாம். பெற்றோர்-ஆசிரியர் கழகம் துணை செய்யலாம். ஆனால் எது எது வீர விளையாட்டு என்பதை - பயிற்சி என்பது வேறு, வீர விளையாட்டு என்பது வேறு, ஜல்லிக்கட்டு போன்ற விளையாட்டுகளில், வீர விளையாட்டு என்று நாம் கருதுகிற அளவிற்கு அதிலே பலபேருக்கு உயிரிழப்பு ஏற்படுகிறது. தியாகம் செய்கிறார்கள். இன்னும் சொல்லப்போனால், சில பேர்கள் ஊனமடைகிறார்கள். ஆனால் அது முறையான விளையாட்டா என்று கேட்டால், சயன்டிபிக் என்று சொல்கிற முறையிலே அது முறையான விளையாட்டு அல்ல, வீரத்திற்குத்தான் அது அடையாளமா என்றால் அதுவும் இல்லை. தியாகம் செய்கிற மனப்பான்மையோடு அது அமைந்திருக்கிறதா என்று திட்டவட்டமாகச் சொல்ல முடியாது. ஆகவே, இப்படிப்பட்ட விளையாட்டுக்கு ஒரு காலகட்டத்திலே முக்கியத்துவம் இருந்தது உண்மை. ஆனால், மெல்ல மெல்ல, அது மாறத்தான் செய்யும். அதை முழு அளவுக்கு வீர விளையாட்டாக ஏற்றுக்கொள்ள முடியாது. மாண்புமிகு உறுப்பினர் திரு. லத்தீப் அவர்களுக்கு நான் சொல்ல விரும்புகிறேன். நம் நாட்டிலே பெரிய ரௌடியை வீரன் என்று நினைத்துக் கொண்டிருக்கிறார்கள். அதனாலே, வீரம் என்பது வேறு, தியாகமோ அல்லது போராட்டமோ வேறு. ஆகவே. அந்த அடிப்படையிலே இவற்றை எல்லாம் பிரித்துப் பார்த்துத்தான் விளையாட்டுகளைப் பற்றித் தீர்மானிக்க வேண்டும். வீரம் என்கிற பெயராலே, விபரீதமான விளையாட்டுகளை ஏற்றுக்கொள்ள வாய்ப்பு இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஐ. கணேசன்.

**திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'சுவர் இருந்தால்தான் சித்திரம் எழுத முடியும்' என்பார்கள். அதைப்போல, நல்ல ஆரோக்கியமான உடல் இருந்தால்தான் மனிதன் சிறப்பாக வாழ முடியும் என்று சொல்வார்கள். என்னைப் போன்றவர்கள் எல்லாம், இளம் வயதிலே, புரட்சித் தலைவர், எம்.ஜி.ஆர். நடித்த எத்தனையோ சினிமாப் படங்கள் மூலமாக அவர் ஆடிய வீர விளையாட்டுகளைக் கண்டு, அதேபோல் நாமும் ஆடவேண்டும் என்ற நினைப்போடு, தனி ஆசிரியரை வைத்து...

[1998 ஏப்ரல் 24

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அதற்கு உண்டான உடலை, முதலிலே தயார் செய்து கொள்ளுங்கள்.

முற்பகல் 9-50

**திரு. ஐ. கணேசன்:** அதை விட்டதினால்தான் இப்படி ஆகிவிட்டது தலைவரே (சிரிப்பு) தனி ஆசிரியர் வைத்துப் பயிற்சி பெற்று, இந்தச் சுழல் கம்பு சுற்றும்போது 30 பேர் கல் எறிந்தால் கூட தடுக்கப்படக்கூடிய வலிமை கிடைக்கும். பள்ளியிலே ஆசிரியர்-பெற்றோர் சங்கம் விளையாட்டுகளைக் கற்றுக் கொடுக்க முன்வந்தால் - ஆசிரியர் பெற்றோர் சங்கமல்ல, பெற்றோர் - ஆசிரியர் கழகம் முன்வந்தால் அமைச்சரவர்கள் அனுமதிப்பார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெற்றோர்—ஆசிரியர் கழகம் தீர்மானித்து இயக்குநருக்கு எழுதி அந்த அனுமதியைப் பெற்று தாராளமாக இப்படிப்பட்ட பயிற்சிகளை மாணவர்களுக்கு வழங்கலாம். மேற்கொண்டு எம்.ஜி.ஆர். அவர்களைப் பார்த்து நீங்கள் உடற்பயிற்சி பெற்று இப்படி ஆகிவிட்டேன் என்று சொன்னீர்கள். கடுமையான உடற்பயிற்சி இளவயதில் பயில்கின்றவர்களுக்கு, இடைக்காலத்திலே நடுவயதிலேகூட உடல் பாதிக்கப்படுகிறது. மிக அதிகமான கடுமையான பயிற்சி பெறுபவர்கள், குத்துச்சண்டை, பஸ்கி போடுகிறவர்கள், இதைப் போல வேறுவிதமான பார் விளையாட்டுகளை விளையாடுகிறவர்கள் பல ஆண்டுகள் பயிற்சியை அதே அளவிற்குத் தொடர்ந்து செய்யா விட்டால் பாதிக்கப்படுவார்கள். நடனம் ஆடுகிற பெண்மணிகள் கூட தொடர்ந்து ஆடிக் கொண்டிருக்காவிட்டால் 10 ஆண்டுகளில் பாதிக்கப்படுகிறார்கள். திரு. கணேசன் எப்போது பாதிக்கப்பட்டார் என்பது எனக்குத் தெரியாது. இருந்தாலும்கூட எச்சரிக்கையோடுதான் இவற்றைப் பயில வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்.

**திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வீரத்தின் விளைநிலமாக இருந்த தமிழ்



1998 ஏப்ரல் 24]

மண்ணானது இன்றைக்கு சோரம் நோக்கிப் போகின்ற சோகத்தையும் பல நேரங்களிலே பார்த்துக் கொண்டிருக்கிறோம். ஆகவே குறிப்பாக மாணவர்களையும், இளைஞர்களையும் வழி நடத்துவதற்கு, கவனச் சிதறல்கள் இல்லாமல் இருக்க, இத்தகைய வீர விளையாட்டுகளை ஊக்குவிப்பதன் மூலமாக அவர்களை நல்வழிப்படுத்த ஏதுவாக இருக்கின்ற காரணத்தாலே, இந்த சிலம்பம் போன்ற விளையாட்டுகளை, பள்ளி, கல்லூரிகளிலே அரசு அங்கீகரிக்க முன்வருமா? அப்படி அங்கீகரித்தால், அந்த விளையாட்டுகளில் பயிற்சி எடுத்துக் கொள்வதற்கு முன்வராதவர்கள் கூட ஆர்வம் காட்டுவார்கள் என்ற காரணத்தினாலே ஏனைய விளையாட்டுகளைப் போலவே இந்தச் சிலம்பமும் ஒரு விளையாட்டாக பள்ளி, கல்லூரிகளிலே அங்கீகரிக்கப்படுமா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அது பற்றி அந்தத் துறையிலே உள்ள கல்வியைப் பற்றித் தீர்மானிக்கிற குழுவின் மூலமாகத்தான் நான் அறிந்து விடையளிக்க வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 323, திரு. ஜி. நிஜாமுதீன், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்.

**323—**

**சித்த வைத்தியசாலையை விரிவுபடுத்துதல்**

***8407—திரு. ஜி. நிஜாமுதீன்:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

நாகப்பட்டினம் சித்த வைத்தியசாலையை விரிவுபடுத்தும் திட்டம் அரசின் செயற்குறிப்பில் உள்ளதா?

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தற்போது எதுவும் அரசின் பரிசீலனையில் இல்லை.

[1998 ஏப்ரல் 24

**திரு. ஜி. நிஜாமுதீன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாகை மாவட்ட அரசினர் மருத்துவமனையில் சித்த வைத்தியப் பிரிவு மிகவும் சிறப்பாக இயங்கிக் கொண்டிருக்கிறது. அங்கே வாத நோய் உள்ளவர்களுக்கு எல்லாம் மிகவும் அருமையான முறையில் வைத்தியம் செய்யப்பட்டு குணமாகிக் கொண்டிருக்கிறார்கள். இன்றைக்கு கூட்டம் அதிகமாக இருக்கின்ற காரணத்தினால், அந்த மாவட்டம் முழுவதிலிருந்து அனைத்து மக்களும் அங்கே வருகின்ற காரணத்தினால், அந்த மாவட்டத்திலுள்ள சித்த மருத்துவப் பிரிவை விரிவுபடுத்தி, மேலும் மருத்துவர்களையும், செவிலியர்களையும் பணியமர்த்த மறுபரிசிலனை செய்வாரா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சொல்வதைப்போல 1972ஆம் ஆண்டு நாகப்பட்டினம் மாவட்டத் தலைமை மருத்துவமனையிலே தொடங்கப்பட்ட சித்த மருத்துவப் பிரிவு மிகச் சிறப்பாக நடைபெற்று வருகிறது. கடந்த ஆண்டு வெளி நோயாளிகள் மட்டும் 35,698 பேரும், உள் நோயாளிகள் 2,465 பேரும் அங்கே சிகிச்சை பெற்றிருக்கிறார்கள். அதே பிரிவில் ஆயுர்வேதா, ஹோமியோபதி, யுனானி போன்ற பிரிவுகளும் தொடங்கப்பட்டிருக்கின்ற காரணத்தால் சித்த மருத்துவத்திற்கு என்று ஒதுக்கப்பட்ட 25 படுக்கைகள் போதவில்லை என்று அரசுக்கு தகவல் கிடைத்திருக்கிறது. அந்தப் பிரிவை விரிவுபடுத்த வேண்டுமென்றும் அரசு விரும்புகிறது. நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் நாகை மருத்துவமனையை மிகச் சிறப்பாகக் கவனிக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டதற்கிணங்கவும், நம்முடைய மாண்புமிகு அமைச்சர், கோ.சி. மணி மற்றும் மாவட்டச் செயலாளர் அம்பலவாணன் போன்றவர்கள் எல்லாம் அந்தப் பகுதிக்கு சிடி. ஸ்கேன் ஒன்று தரவேண்டுமென்று வற்புறுத்தியதன் பேரிலும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இந்த ஆண்டு நாகை, குமரி, திருவண்ணாமலை போன்ற மாவட்ட மருத்துவமனைகளுக்கு சிடி. ஸ்கேனும் வழங்கியிருக்கிறார்கள். மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் பொன்முடி அவர்கள், நெடுஞ்சாலையிலே அவருடைய விழுப்புரம் மருத்துவமனை அமைந்திருக்கின்ற காரணத்தினால் அங்கேயும் வேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள். ஏற்கெனவே முதலமைச்சர் அவர்கள் அனுமதித்த மூன்று சிடி. ஸ்கேன் வசதியோடு விழுப்புரத்திற்கும் சிடி. ஸ்கேன் இந்த ஆண்டு வைக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொண்டு, மாண்புமிகு உறுப்பினர் தெரிவித்த இந்த சித்த



1998 ஏப்ரல் 24]

மருத்துவப் பிரிவை விரிவுபடுத்துவதற்கு இந்த ஆண்டு அரசு நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 9-55

**மாண்புமிகு பேரவைத் தலைவர்** : வினா எண் 324, திரு. குழந்தை தமிழரசன், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்.

**324—**

**துணை மின் நிலையம் அமைத்தல்**

***8502—திரு. குழந்தை தமிழரசன் :**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விருத்தாச்சலம் வட்டம், எடச்சத்தூர் கிராமப் பகுதியில் துணை மின் நிலையம் அமைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அப்பணி எப்போது தொடங்கும்?

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே.

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்வி எழவில்லை.

**திரு. குழந்தை தமிழரசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எடச்சத்தூர் பகுதியில் துணை மின் நிலையம் அமைத்துத்தர வேண்டுமென்று கேட்டிருந்தேன். ஆனால், அதற்கு மாறாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பக்கத்திலே 3 கிலோ மீட்டர் தூரத்தில் முவாசாபகதூர் கிராமத்தில் 110 கே.வி. மின் நிலையம் அமைக்க உத்தரவு வழங்கியிருக்கிறார்கள். அந்தப் பணியை விரைந்து தொடங்க அரசு ஆவன செய்யுமா? மேலும் என்னுடைய தொகுதியில் அரசகுடை என்ற கிராமத்திலும் 110 கே.வி. மின் நிலையம் அமைக்க உத்தரவு

[1998 ஏப்ரல் 24

வழங்கியுள்ளீர்கள். அங்கு இடம் கிடைப்பது சிரமமாக இருக்கிறது. எனவே 1/2 கிலோ மீட்டர் தூரத்தில் நான் இடம் பார்த்துத் தரத் தயாராக இருக்கிறேன். அதற்கும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எடச்சத்தூர் கிராமப் பகுதிக்கு கூத்தவனூரில் நிறுவப்பட்ட 110/11 கிலோ வோல்ட் துணை மின் நிலையம் இப்போது தொடங்கப்பட்டுக் கொண்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் இங்கே சுட்டிக்காட்டியதுபோல இன்னமும் சில துணை மின் நிலையங்களை அந்தப் பகுதியிலே அமைக்கவிருக்கின்றோம். மாண்புமிகு உறுப்பினர் இடம் கொடுப்பதற்கு உரிய நடவடிக்கைகளை மேற்கொள்வார்களேயானால், மின்சார வாரியம் நிச்சயமாக துணை மின் நிலையங்கள் அமைத்துத் தரும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 325, திரு. வெ.அ. ஆண்டமுத்து, மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்.

**325—**

### பேருந்து நிலையம் அமைத்தல்

***7090—திரு. வெ.அ. ஆண்டமுத்து:**

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஈரோடு மாவட்டம், பவானிசாகரில் புதிய பேருந்து நிலையம் அமைக்கும் பணியை விரைவுபடுத்த அரசு உடன் நடவடிக்கை எடுக்குமா?

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

ஈரோடு மாவட்டம், பவானிசாகரில் புதிய பேருந்து நிலையம் அமைக்க ஐடிஎஸ்எம்டி திட்டத்தில் ரூ.17.00 இலட்சம் மதிப்பீட்டில் நகராட்சியால் அந்தப் பகுதியில் பிரேரணை தயாரிக்கப்பட்டு வருகிறது. பிரேரணை பெறப்பட்டதும் நடவடிக்கை எடுக்கப்படும்.



1998 ஏப்ரல் 24]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 326, திரு. ரா. ஈஸ்வரன், மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்.

**326—**

### வாசுதேவநல்லூர் தொகுதியில் கூட்டுக் குடிநீர்த் திட்டம்

***7401—திரு. ரா. ஈஸ்வரன்:**

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வாசுதேவநல்லூர் தொகுதி, கடையநல்லூர் - புளியங்குடி வரை உள்ள தாமிரபரணி கூட்டுக் குடிநீர்த் திட்டத்தினை சுப்பிரமணியாபுரம், வாசுதேவநல்லூர், கோட்டையூர், திருமலாபுரம், உள்ளார் மற்றும் சிவகிரி வரை நீட்டிக்கும் திட்டம் அரசின் ஆய்வில் உள்ளதா?

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

ஆம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 327, திரு. ப. மோகன் கந்தசாமி, மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர்.

**327—**

### வேளாண்மைக் கிடங்குகள் மூலம் விற்பனை

***7789—திரு. ப. மோகன் கந்தசாமி:**

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கோயம்புத்தூர் மாவட்டத்தில் ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திலும் விவசாயிகளுக்குத் தேவையான பூச்சி மருந்துகள், விதைகள், நுண் ஊட்டச் சத்துக்கள் ஆகியவற்றை வேளாண்மைக் கிடங்குகள், துணை

[1998 ஏப்ரல் 24

வேளாண்மைக் கிடங்குகள் மூலம் சீராக விற்பனை செய்ய அரசு ஆவன செய்யுமா?

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

கோவை மாவட்டத்தில் 22 பிரதான வேளாண்மை விரிவாக்க மையங்களும், 21 துணை வேளாண்மைக் கிடங்குகளும் விவசாயிகளுக்குத் தேவையான விதைகள் மற்றும் நுண் ஊட்டச் சத்துக்களை விநியோகித்து வருகின்றன. 1994 ஏப்ரல் மாதத்திலிருந்து பூச்சி மருந்துகள் விற்பனை நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. விவசாயிகள் தங்களுக்குத் தேவையான பூச்சி மருந்துகளை கூட்டுறவு மற்றும் தனியார் விற்பனையாளர் மூலம் பெறுகிறார்கள்.

**திரு. ப. மோகன் கந்தசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னதுபோல, அங்கே விவசாயக் கிடங்குகள் இருப்பது உண்மைதான். ஆனால், ஏழை விவசாயிகள் சென்று அந்த விதைகளைக் கேட்கும்போது அல்லது நுண் ஊட்டச் சத்து போன்றவைகளையெல்லாம் அங்கே கேட்கும்போது, ஸ்டாக் இல்லை என்று சொல்கிறார்கள். ஆனால், வசதி படைத்த விவசாயிகளுக்கு அவை விநியோகிக்கப்படுவதாக செய்திகள் வருகின்றன. எனவே, கடுமையான நடவடிக்கை எடுத்து அதை ஏழையெளிய விவசாயிகளுக்கும் கிடைக்க ஆவன செய்வார்களா எனத் தங்கள் மூலம் அமைச்சரைக் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் மோகன் கந்தசாமி அவர்கள் ஒரு குற்றச்சாட்டாக இங்கு சொல்கின்றார்கள். இந்த அரசு பொறுப்பேற்ற பிறகு எல்லா விவசாயக் கிடங்குகளிலும் விதைகள் சீராக வழங்கப்படுகின்றன. விதைகள் சீராக வழங்கப்படுவது மட்டுமல்லாமல், தரமான விதைகளாகத்தான் இப்போது நாம் வழங்கிக் கொண்டிருக்கிறோம். எங்காவது குறிப்பிட்ட ஒரு கிடங்கில் இப்படி தவறு நடக்கிறது என்று அவர் சுட்டிக்காட்டினால் இன்றே நடவடிக்கை எடுக்கத் தயார்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எஸ். எஸ். பொன்முடி,



1998 ஏப்ரல் 24]

**திரு. எஸ். எஸ். பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போதுள்ள சூழ்நிலையில் விவசாயத் தொழிலில் நவீன இயந்திரங்களைப் பயன்படுத்தினால்தான் இலாபகரமாக இருக்கும் என்ற நிர்பந்தமும், சூழ்நிலையும் ஏற்பட்டிருக்கிறது. இப்போது கூட்டுறவுச் சங்கங்களிலும், வேளாண்மைத் துறைகளிலும் டிராக்டர்கள், தெளிப்பான்கள் எல்லாம் வாடகைக்குக் கிடைக்கின்றன. ஆனால், வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் மூலம் கண்டுபிடிக்கப்படுகின்ற நவீன இயந்திரங்கள், அறுவடை இயந்திரங்கள், நாற்று நடுதல், களை எடுத்தல் போன்ற இயந்திரங்களெல்லாம் குறைந்த விலையில் வாடகைக்குக் கிடைக்க அரசு ஆவன செய்யுமா என அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-00

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் மூலம் உழவுத் தொழிலுக்குத் தேவையான சில நவீன கருவிகள் கண்டு பிடிக்கப்படுகின்றன. அவற்றினுடைய தொழில் நுட்பங்களை விவசாயிகளும், அதைப்போல அந்தக் கருவிகளை தயாரிக்கக்கூடியவர்களும் வந்து ஆலோசனை கேட்டால் அவர்களுக்கு அந்தத் தொழில் நுட்பத்தைப் பற்றி உரிய விளக்கங்கள் தரப்படுகின்றன. வேளாண்மைப் பல்கலைக்கழகமே அதுபோன்ற கருவிகளைத் தயாரித்து விவசாயிகளுக்கு இப்பொழுது வழங்குகின்ற நடைமுறை இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 328, டாக்டர் மு. தேவராஜன், மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர்.

**328—**

### காய்கறிகளை அரசு கொள்முதல் செய்தல்

***8622—டாக்டர் மு. தேவராஜன்:**

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பெரம்பலூர், திண்டுக்கல், தலைவாசல் போன்ற பகுதிகளில் அதிகமாக விளையும் தக்காளி மற்றும் இதர காய்கறிகளை அரசே

கொள்முதல் செய்து, பதப்படுத்தி, விளையாத காலங்களில் விற்பனை செய்ய முன் வருமா?

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

பெரம்பலூர், திண்டுக்கல், தலைவாசல் போன்ற பகுதிகளில் அதிகமாக விளையும் தக்காளி மற்றும் இதர காய்கறிகளை அரசே கொள்முதல் செய்து பதப்படுத்தி, விளையாத காலங்களில் விற்பனை செய்ய தற்போது அரசிடம் திட்டம் இல்லை.

**டாக்டர் மு. தேவராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தக்காளி போன்ற காய்கறிகள் அதிகமாக விளையும்போது விவசாயிகளுக்கு சரியான விலை கிடைப்பதில்லை. இடைத்தரகர்களே அதிக இலாபம் பெறுகிறார்கள். இதனால் உற்பத்தி செய்யும் விவசாயிகள் நலிவு அடைந்து போகிறார்கள். அழுகல் வகையைச் சேர்ந்த பொருள்கள் அதிகமாக விளையும்போது அரசாங்கம் கொள்முதல் செய்து பதப்படுத்தி, குறைவாக விளையும் காலத்தில் விற்பனை செய்ய முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசிடம் தற்போது அப்படிப்பட்ட திட்டம் இல்லை. ஆனால் தனியார் குளிர் பதனக் கிடங்குகள் வைத்து இருக்கிறார்கள். உறுப்பினருடைய மூலக் கேள்வியை பெரம்பலூர் பகுதியிலே 97 எக்டேரிலேதான் தக்காளி விளைகிறது. மொத்தம் 20.5 டன் உற்பத்தி ஆகிறது. இதற்காக ஒரு குளிர் பதனக் கிடங்கு அந்தப் பகுதியிலே ஆரம்பிக்கக்கூடிய வாய்ப்பு இல்லை. தனியார் இதுபோன்ற குளிர் பதனக் கிடங்குகள் வைத்திருக்கிறார்கள். அவற்றை பொருத்தவரையில் விவசாயிகள் இப்போது பயன்படுத்திக் கொண்டு இருக்கிறார்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. இரா. மணிமாறன்.

**திரு. இரா. மணிமாறன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்ற மானியக் கோரிக்கையின்போது மாண்புமிகு அமைச்சர் அவர்கள் திண்டுக்கல் மாவட்டத்தில் பல இடங்களிலே குளிர் பதன கிடங்குகள் அமைக்கப்படும் என்று அறிவித்திருக்கிறார்கள். அது மிகவும் அவசியமான ஒன்று. அதற்காக என்னுடைய நன்றியைத்





தெரிவித்துக்கொள்கிறேன். அதை உடனடியாகச் செய்ய வேண்டியது. காரணம் தக்காளி போன்ற பொருள்கள் அதிகமாக உற்பத்தி ஆகின்றபோது குறைவான விலைக்கு வியாபாரிகள் வாங்குகின்ற காரணத்தால் விவசாயிகள் பெரிதும் பாதிக்கப்படுகிறார்கள் எனவே இந்த ஆண்டே அந்த குளிர் பதனக் கிடங்குகளை கட்டித்தர அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுபோன்ற குளிர் பதனக் கிடங்குகளை டான்காஃப், தாய் நிறுவனம், ஒழுங்குமுறை விற்பனைக் கூடம், தோட்டக் கலைத் துறை ஆகியவற்றில் எந்தத் துறையின் மூலம் கட்டுவது என்று சில முடிவுகள் எடுக்கப்படுகின்றன. அப்படி நாம் ஒரு முடிவு எடுத்தாலும்கூட உரிய இடம் தேர்வு செய்வதிலே சில காலதாமதம் ஏற்படுகிறது. இப்போது அந்தத் தாமதத்தையெல்லாம்கூட தவிர்த்து இந்த ஆண்டு கிருஷ்ணகிரியிலும், அதைப்போல ஒட்டன்சத்திரத்திலும் இதுபோன்ற குளிர் பதனக் கிடங்குகளை தாய் நிறுவனத்தின் மூலம் கட்டுவது என்று முடிவு செய்திருக்கிறோம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 329, டாக்டர் ச. இராஜரெட்டி, மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.

**329—**

## பெங்களூருக்கு பேருந்துகள் இயக்குதல்

***6657—திரு. ச. இராஜ ரெட்டி:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தருமபுரி மாவட்டம், தளி தொகுதி, பேவநத்தத்திலிருந்து சௌமங்கலம் ஒசூர் வழியாக பெங்களூருக்கும், தேன்கனிக்கோட்டையிலிருந்து மர்தனபள்ளி, பேரூர், மது கொண்டபள்ளி வழியாக ஹோசூருக்கும், உணசனபள்ளியிலிருந்து குளகண்டபள்ளி, தவளகிரி, தளி, ஆணைக்கல்லு வழியாக பெங்களூருக்கும் பேருந்துகள் இயக்க அரசு ஆவன செய்யுமா?

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

[1998 ஏப்ரல் 24

கோரிக்கையில் உள்ள வழித்தடங்கள் இரண்டும் பிற மாநிலத் தடங்களாகும். இவ்வழித்தடங்களில் பேருந்துகள் இயக்கிட கர்நாடக மாநில அரசின் ஒப்புதல் தேவை. அம்மாநிலம் ஒப்புதல் அளித்தால்தான் இவ்வழித்தடங்களில் பேருந்துகளை இயக்க இயலும்.

**THIRU S. RAJA REDDY :** Honourable Speaker, Sir, this question was raised in the last session of the Assembly and the same answer was given then. Thalli Constituency is the border area for entering Karnataka State. Bangalore is close to Thalli Constituency. Vegetables are the major backbone of this Constituency. Without inter-state buses, vegetable growers cannot transport vegetables to the market in Bangalore. There are four important routes to Karnataka through Thalli Constituency. I request the Honourable Minister for Transport to run atleast one bus in each route so that the vegetable growers can transport vegetables to Bangalore city.

**HON. SPEAKER :** No, No. The Honourable Minister has said that without the Government of Karnataka's permission, they cannot run the bus. That is the answer given by the Honourable Minister.

**THIRU S. RAJA REDDY:** I request the Honourable Minister to find a solution to this problem.

முற்பகல் 10-05

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுகுறித்து கர்நாடகப் போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் சென்னைக்கு வந்தபோது பேசியிருக்கிறோம். குறிப்பாக இரண்டு மாநிலங்களுக்கு இடையில் போக்குவரத்துத் துறை பற்றி ஒப்பந்தம் ஏற்படுத்தப்பட வேண்டுமானால் மைல்களுடைய அடிப்படையிலும், பேருந்துகள் எண்ணிக்கையின் அடிப்படையிலும், இதில் ஏதாவது ஒன்றை வைத்துத்தான் ஒப்பந்தம் ஏற்படுவது வழக்கம். நாம் மைல்களுடைய அடிப்படையில், குறிப்பாக இங்கே ஆயிரம் கிலோ மீட்டர் கர்நாடகப் பேருந்துகள் ஓடுகின்றன என்று சொன்னால் நம்முடைய பேருந்துகள் கர்நாடக மாநிலத்தில் ஆயிரம் கிலோ மீட்டர் ஓட வேண்டும். அந்த அடிப்படையில் இந்த ஒப்பந்தம் இருக்க



1998 ஏப்ரல் 24]

வேண்டுமென்று சொல்லியிருக்கிறோம். இதுவரை அப்படித்தான் இருக்கிறது. அதற்கு அவர்கள் ஒப்புக்கொண்டு சென்று இருக்கிறார்கள். பூர்வாங்க பேச்சுகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. வெகு விரைவில் இந்த ஒப்பந்தம் ஏற்பட்ட பிறகு இந்த வழித்தடங்களில் பேருந்துகளை விடுவதற்கு அரசு முயற்சிகளை மேற்கொள்ளும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 330, திரு. பெ.சு. திருவேங்கடம், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.

**330—**

**சிற்றுந்து இயக்க தனியாருக்கு அனுமதி**

***13515—திரு. பெ.சு. திருவேங்கடம்:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழக அரசால் சிற்றுந்து இயக்க தனியாருக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) சிற்றுந்துகள் இயக்குவதற்கு அனுமதி கோரி தனியாரிடமிருந்து தமிழ்நாட்டில் இதுவரை 383 விண்ணப்பங்கள் பெறப்பட்டுள்ளன. அவற்றில் இதுவரை 68 நபர்களுக்கு சிற்றுந்து உரிமம் வழங்கப்பட்டுள்ளது. மற்ற விண்ணப்பங்கள் பரிசீலனையில் உள்ளன.

**திரு. பெ. சு. திருவேங்கடம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது இந்த சிற்றுந்து விடுகின்ற நிலையில், பஸ் ஏற்கெனவே செல்லுகின்ற மார்க்கங்களில் 2 கிலோ மீட்டர்தான் போகவேண்டும், 16 கிலோ மீட்டருக்கு மேல் போகக்கூடாது என்பது தான் இப்போது இருக்கிற விதி என்று நான் அறிகிறேன். அரசுப் போக்குவரத்துக் கழகப் பேருந்துகளாக இருந்தாலும், தனியாராக இருந்தாலும் எல்லா பஸ்களிலும் இப்போது ஓவர் லோடுடன்தான்

போகிறார்கள். ஓவர்லோடுடன் போனாலும் அரசுக்கு அதற்கேற்ப வரி கட்டுவது இல்லை. அவர்களுக்கு எத்தனை சீட்டுகள் இருக்கிறதோ அதற்குத்தான் வரி கட்டுகிறார்கள். அதனால் அரசுக்கு இலாபம் இல்லை. அப்படி இருக்கும்போது இந்த சிற்றுந்துகளை இன்னும் கொஞ்சம் விரிவு செய்து 2 கிலோ மீட்டர் என்று இருப்பதை 5 அல்லது 7 கிலோ மீட்டர் என்றும், 16 கிலோ மீட்டர் என்று இருப்பதை 25 அல்லது 30 கிலோ மீட்டர் என்றும் நீட்டித்துக் கொடுத்தால் எங்களைப் போன்ற சட்டமன்ற உறுப்பினர்களிடம் கிராமங்களில் டவுன் பஸ் கேட்கின்ற மக்களின் அந்தக் கோரிக்கைகள் நிறைவேற்றப்படும். அரசு பரிசீலனை செய்து இந்தப் புதிய திட்டத்தை அறிவிக்குமா என நான் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 16 கிலோ மீட்டர் இதுபோன்ற சிறிய பேருந்துகள் இயங்குவதற்கு அரசு அனுமதி அளித்து இருக்கிறது. இந்த 16 கிலோ மீட்டர்களில் பேருந்து இயக்கப்படுகின்ற தூரம் *1 கிலோ மீட்டருக்கு மிகைப்படாமல் இருக்க வேண்டும் என்று விதிமுறைகளிலே குறிப்பிடப்பட்டிருக்கின்றது. அதற்குக் காரணம் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன கருத்தின் அடிப்படையில் போக்குவரத்திற்கு இதுபோன்ற அனுமதி வழங்கப்படுமானால் - போக்குவரத்துக் கழக பேருந்துகள் இப்போதே நஷ்டத்தில் ஓடிக்கொண்டிருக்கின்றன—போக்குவரத்துக் கழகங்கள் மிகவும் இழப்புக்கு உள்ளாகும். கிராமங்களில் இந்தப் பேருந்துகளை விடுவதற்கு எந்தத் தனியாரும் முன்வரமாட்டார்கள். அவர்கள் சொல்லுவதுபோல் பேருந்துகள் இல்லாத இடங்களுக்கு ஓட்டுவதற்குத் தயாராக எத்தனை பேர் வருவார்கள் என்பதை தயவுசெய்து மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எண்ணிப்பார்க்க வேண்டும். ஆகவே, *1 கிலோ மீட்டர் பேருந்து ஓடுகின்ற தடங்களில் மட்டும் அந்தப் பேருந்துகளை ஓட்டலாம் என்று அந்த விதிமுறைகளில் அனுமதிக்கப்பட்டிருக்கிறது. இதுவரை 68 பேருக்கு இந்த வழித் தடங்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. இன்னும்கூட இதுபோன்ற *1 கிலோ மீட்டருக்கு மிகைப்படாமல் பேருந்துகள் இயக்கப்படாத தடங்கள் இருந்து, 16 கிலோ மீட்டருக்கு உள்ளாக--16 கிலோ மீட்டர் இருக்கவேண்டும் என்று அவசியம் கூட இல்லை--7 கிலோ மீட்டர், 8 கிலோ மீட்டர்வரை பேருந்துகள் செல்லாத

* மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க திருத்தப்பெற்றது.



இடங்களில் அனுமதி கேட்டு சிறிய பேருந்து இயக்குநர்கள் வருவார்கள் என்று சொன்னால் உடனடியாக அரசு அனுமதி வழங்கிட தயாராக இருக்கிறது என்பதையும் மாண்புமிகு உறுப்பினர்களுக்கு தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்.

**டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிற்றூர்களை இணைக்கின்ற ஒரு சிறந்த திட்டமாக இந்தத் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டிருக்கிறது. பல்லாயிரக்கணக்கான மனுக்கள் வந்து ஏறக்குறைய ஆயிரக்கணக்கில் இந்த சிற்றுந்துகள் இயக்கப்பட்டிருக்க வேண்டும். ஆனால், அந்த அளவுக்கு, எதிர்பார்த்த அளவுக்கு இந்தச் சட்டம் பயன் தரவில்லை. ஆகவே, இது 'o rlapping distance'.--இடையே ஓடுகின்ற தூரம் 2 கிலோ மீட்டர் என்று இருப்பதற்குப் பதிலாக 4 கிலோ மீட்டர் என்று அதிகரிக்க அரசு ஆவன செய்ய முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் அதற்கான காரணங்களை அவரிடம் நேரில் விளக்கியிருக்கிறேன். அவர்களுக்குக் கூட அது நன்றாகத் தெரியும். நாம் இதை அனுமதித்தால் நிச்சயமாகப் போக்குவரத்துக் கழகங்களைப் பாதிக்கும். நம்முடைய நோக்கமே பேருந்து வசதி இல்லாத இடங்களுக்கு இந்த மினி பேருந்துகள் வழங்க வேண்டும் என்பதுதானே தவிர, மினி பேருந்துகளை அதிகமாக்க வேண்டும் என்ற நோக்கம் இந்த அரசுக்கு இல்லை. பேருந்து வசதிகள் இல்லாத பகுதிகளுக்கு அந்தப் பகுதி மக்கள் பயன் பெறுகின்ற வகையில் இதை இயக்க வேண்டும் என்பதுதான் அரசினுடைய நோக்கம். அதற்கேற்ப இந்த விதிமுறைகள் வகுக்கப்பட்டிருக்கின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு இது எல்லாம் தெரியும். அவரே நேரில் என்னிடம் பேசியிருக்கிறார். நானும் அவரிடம் விளக்கி இருக்கிறேன். இந்த நடைமுறை குறித்து நான் அனுமதி பெற்று இருக்கிற அந்த 68 பேரை வரவழைத்து நேரில் பேசியிருக்கிறேன். இதுபோன்ற இடர்பாடுகள் வரும் என்ற சூழ்நிலை வருமானால் மீண்டும் அதைப்பற்றி பரிசீலிக்கலாம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஏ. ராசேந்திரன்.

[1998 ஏப்ரல் 24

முற்பகல் 10-10

**திரு. ஏ. ராசேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த 16 கிலோ மீட்டர் என்பதை, மலைப் பகுதிகளிலேயாவது நீட்டித்துத் தந்தால் —போளூர் பக்கத்திலேயிருக்கின்ற திருவண்ணாமலை மாவட்டத்தில் ஜவ்வாது மலை இருக்கிறது, அங்கெல்லாம் மலையிலே ஏறுவதற்கே 42 கிலோ மீட்டர், 45 கிலோ மீட்டர் இருக்கிறது. இந்த 16 கிலோ மீட்டர் என்பதை மலைப் பகுதிகளுக்காவது விதிவிலக்குத் தந்து கொஞ்சம் நீட்டித்துத் தர அரசு முன் வருமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேருந்து வசதிகள் இல்லாத பகுதியாக இருந்தால், அதுபோன்ற குறிப்பிட்ட இடங்கள் இருக்குமானால் நிச்சயமாக அரசு பரிசிலித்து அந்த இடங்களுக்கு அனுமதி வழங்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வை. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2 கிலோ மீட்டர் என்ற அந்த வரம்பு வட்டத் தலை நகரங்களிலிருந்து புறப்படுகிற இடங்களுக்கு மட்டுமே வைக்கப்பட்டிருப்பதாக அறிகிறேன். அது ஒன்றியத் தலைநகரங்களுக்கும் பொருந்தும் என்ற அடிப்படையிலே மாற்றினால் பல கிராமங்கள் பயன்பெறுவதற்கான வாய்ப்புகள் ஏற்படும். அதைப் பரிசீலித்து அந்த மாதிரி அறிவிப்பதற்கான முயற்சிகளைத் துறை மேற்கொள்ளுமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது எங்கேயிருந்து தொடங்குகிறது என்பதெல்லாம் பிரச்சினையே அல்ல. வட்டத் தலைநகரத்திலிருந்து வேண்டுமானாலும் தொடங்கலாம், ஒன்றியத் தலைநகரத்திலிருந்து வேண்டுமானாலும் தொடங்கலாம். வேண்டுமானால் உறுப்பினர்களே ஒரு ரூட்டை - ஒரு வழித் தடத்தைப் போட்டு வந்து, இது 16 கிலோ மீட்டர் இருக்கிறது; இதற்கு *1 கிலோ மீட்டருக்கு மேல் பேருந்து வசதிகள் எங்களிடத்தில் இல்லை என்று சொன்னால், நீங்களே உங்களுடைய ரூட்டைத் தயாரித்துக் கொண்டு வந்தால்கூட அதற்கு அனுமதி வழங்குவதற்கு அரசு தயாராக இருக்கிறது. ஆகவே, எங்கிருந்து வேண்டுமானாலும் தொடங்கலாம்; எங்கிருந்து வேண்டுமானாலும் முடியலாம். 16 கிலோ மீட்டருக்கு மிகையாக இருக்கக் கூடாது; அதிலே *1 கிலோமீட்டருக்கு மேல் பேருந்து வசதி பெற்ற இடமாக இருக்கக் கூடாது. இதுதான் விதிமுறை. வழித்தடங்களை நீங்களேகூட கேட்டுப் பெற்றுக்கொள்ளலாம்.

* மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க திருத்தப்பெற்றது.



1998 ஏப்ரல் 24]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்.

**திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்குப் படித்துவிட்டு வேலையில்லாத இளைஞர்கள் நிறைய பேர்கள் இருக்கிறார்கள். அவர்கள் நான்கைந்து பேர் கூட்டாகச் சேர்ந்து கூட்டுறவு முறையிலே இத்தகைய சிற்றுந்துகளை இயக்குவதற்கு அனுமதி கேட்டால் அவர்களுக்கு முன்னுரிமை தர அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் சிறு பேருந்துகளைப் பொறுத்தவரையில், எத்தனை பேர் விண்ணபித்திருந்தாலும் அத்தனை பேருக்கும் விதிமுறைகளுக்கு உட்பட்டு அனுமதி வழங்கலாம் என்றே குறிப்பிடப்பட்டிருக்கிறது. ஆகவே, யார் வேண்டுமானாலும் விண்ணப்பிக்கலாம்; அனைவருக்கும் வழங்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பா.மு. முபாரக்.

**திரு. பா.மு. முபாரக்:** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, 2 கிலோ மீட்டர், 16 கிலோ மீட்டர் என்கிற நிலையில் இந்தச் சின்னப் பேருந்துகளை இயக்குவது எங்கள் மாவட்டத்தைப் பொறுத்தவரையிலும் முழுமையாகவே சங்கடத்திற்கு உரியது. மேலும் அங்கு தனியார் பேருந்துகளே கிடையாது. அரசுப் பேருந்துகள் குறித்து கடந்த கூட்ட தொடரிலேயே நான் விவரங்களைச் சொல்லி நம்முடைய அரசும் ஏறத்தாழ 155 புதிய பேருந்துகளை வழங்கி, அந்த மாவட்டத்திலே

* மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க திருத்தப்பெற்றது.

வசதி செய்திருக்கிறார்கள். இருந்தாலும் இந்தச் சிறிய பேருந்துகள் - சிறிய வேன்கள் இயக்குவதற்கு, நிச்சயமாகவே இந்த 16 கிலோ மீட்டர் என்பதை அந்த மாவட்டத்திற்கு 30 கிலோ மீட்டர் என்றும், 2 கிலோ மீட்டர் இடைவெளி என்பதை 6 கிலோ மீட்டர் இடைவெளி என்றும் ஒதுக்கித் தர, தனியான சலுகை வழங்கப்படுமா என்பதை அன்புடன் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதிலே உள்ள நடைமுறைச் சிக்கல்களை மாண்புமிகு உறுப்பினர்கள் தெரிந்துகொள்ள வேண்டும். 6 கிலோ மீட்டர் இடைவெளி உண்டு என்று சொல்லிவிட்டால் பெரும்பாலும் வேன்களை எங்கே ஓட்டுவார்கள் என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். யாரும் ஏறாத இடத்திற்கு வேன்களை ஓட்டிச் செல்வதற்கு அவர்கள் ஒன்றும் பைத்தியக்காரர்கள் அல்ல. எங்கே அதிகமாக மக்கள் இருக்கிறார்களோ, ஒரு நகரத்திலேயிருந்து ஷட்டில் சர்வீசைப்போல அந்த 6 கிலோ மீட்டர் மட்டும்தான் ஓட்டிக்கொண்டிருப்பார்களே தவிர, எந்த இடத்திலே பேருந்து இல்லையோ அந்த இடத்திற்கு அந்த வசதியைச் செய்து தர வேண்டுமென்ற நோக்கம் நிறைவேறாது. ஆகவேதான் இந்த *1 கிலோ மீட்டர் விதிமுறை வகுக்கப்பட்டிருக்கிறது. நான் முன்பே சொன்னதைப்போல 30 கிலோ மீட்டருக்கு தேவைப்படின் அதை அரசு பரிசீலித்து, அந்தப் பகுதிகளிலே பேருந்துகள் இயங்காத சூழ்நிலை இருக்குமானால் அதிகபட்ச எல்லையை, கிலோ மீட்டருடைய அளவை தளர்த்தி, எந்தக் கிலோ மீட்டருக்கு வேண்டுமானாலும் அவர்களுக்கு அனுமதி வழங்குவதற்கு அரசு தயாராக இருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இறுதியாக திரு. பெ.சு திருவேங்கடம்.

**திரு. பெ.சு. திருவேங்கடம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சரவர்கள் அரசுப் பேருந்து நஷ்டமடையும் என்கிறார்கள். அது எனக்குப் புரியவில்லை. காரணம், அரசுப் பேருந்துகளோ, தனியார் பேருந்துகளோ ஓவர்லோடு ஏற்றித்தான் இன்றையதினம் எல்லா மார்க்கங்களிலும் போகின்றன. அதற்கான வரியைக்கூட அரசாங்கத்திற்கு கட்டுவதில்லை. அதனால் அதை

* மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க திருத்தப்பெற்றது.



மறுபரிசீலனை செய்ய வேண்டும். இரண்டாவது, திருவண்ணாமலை மாவட்டத்தில் இந்தத் திட்டத்தில் எத்தனை ரூட்ஸ் ஓப்பன் செய்யப்பட்டுள்ளன அல்லது கொடுக்கப்பட்டிருக்கின்றன என்பதை அறிவிக்க இயலுமா என்று நான் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவண்ணாமலையில் 18 விண்ணப்பங்கள் பெறப்பட்டிருக்கின்றன. அவை பரிசீலனையில் உள்ளன. வெகுவிரைவில் இந்த விதிமுறைகளுக்கு உட்பட்டு அவற்றிற்கு அனுமதி வழங்கப்படும். மாண்புமிகு உறுப்பினரவர்கள் அரசுப் பேருந்துகள் எவ்வாறு பாதிக்கப்படும் என்று கேட்டிருக்கிறார்கள். அவருக்கு தெரியும், பீக் ஹவர்சிலேதான் — காலையிலே 8.00-லேயிருந்து 10.00 மணி வரைதான் — பெரும்பாலான பேருந்துகளிலே கூட்டம் அதிகரிக்கிறது. மற்ற நேரங்களிலே காலியாகக்கூட ஓடிக்கொண்டிருக்கின்றன. அந்த நேரங்களிலே வேன் சர்வீஸ்களும் வருமென்று சொன்னால் இப்பொழுது வந்துகொண்டிருக்கின்ற வருமானம்கூடப் போக்குவரத்துக் கழகங்களுக்குக் குறைந்துவிடும். ஆகவேதான், பெரும்பாலான இடங்களில் அதுவும் இப்பொழுது மாணவர்களுக்கு இலவச பஸ் பாஸ் கொடுக்கிற காலகட்டத்தில் — வேண்டுமானால் இலவச பஸ் பாஸ் கொடுக்கிற இந்த நேரத்திலே — மாண்புமிகு உறுப்பினர்கள் போக்குவரத்துக் கழகப் பேருந்தைக் கேட்பதில்லை என்று சொன்னால் நாங்கள் நிச்சயமாக வேன் சர்வீசுக்கு அனுமதி வழங்கத் தயாராக இருக்கிறோம். அதற்கு தயாராக இருக்கிறார்களா? பெரும்பாலும், கிராமங்களிலே இருப்பவர்கள் பேருந்துகளைக் கேட்கிறார்கள். காரணம் இலவச பஸ் பாஸ். ஆகவே, பேருந்துகளும் ஓட வேண்டும், அதே இடத்தில் வேன்களும் ஓட வேண்டுமென்று சொன்னால், நிச்சயமாகப் போக்குவரத்துக் கழகங்கள் மிகுந்த நஷ்டத்திற்கு உள்ளாகும். ஆகவேதான் சில விதிமுறைகளோடு இந்த அரசு அனுமதித்திருக்கிறது.

முற்பகல் 10-15

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 331, திரு. வீ. தமிழ்மணி, மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்.

[1998 ஏப்ரல் 24

**331—**

### தேசிய நெடுஞ்சாலையாக மாற்றுதல்

***6006—திரு. வீ. தமிழ்மணி :**

மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மாமல்லபுரம், திருக்கழுக்குன்றம், செங்கற்பட்டு, காஞ்சிபுரம் சாலையை தேசிய நெடுஞ்சாலையாக மாற்றும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

மாண்புமிகு உறுப்பினர் தமிழ்மணி அவர்கள் கேட்டுக் கொண்ட மாமல்லபுரம், திருக்கழுக்குன்றம், செங்கற்பட்டு, காஞ்சிபுரம் சாலையை தேசிய நெடுஞ்சாலையாக மாற்றும் திட்டம் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

**திரு. வீ. தமிழ்மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் திருக்கழுக்குன்றம்-காஞ்சிபுரம் சாலை என்பது பெங்களூர் சாலையோடு இணையும் ஒரு பிரசித்தி பெற்ற சாலை. எஸ்.எஸ். ரோடு என்று சொல்வார்கள். காஞ்சிபுரத்திலேயிருந்து மாமல்லபுரத்திற்கு சுற்றுலாப் பயணிகள் அதிகம் வருகின்ற காரணத்தினாலும், சுற்றுலாப் பயணிகளை அதிகம் ஈர்க்கின்ற மாமல்லபுரத்திற்கு செல்லும் இந்தச் சாலையை நெடுஞ்சாலையாக மாற்றித் தந்தால் போக்குவரத்து மிகவும் சுலபமாக இருக்கும் என்ற காரணத்தினாலும் இதைச் செய்ய வேண்டும். அதே நேரத்தில், செங்கற்பட்டுக்கு அருகில் இரயில்வே கேட் ஒரு நாளைக்கு 50 முறை மூடித் திறக்கப்படுகின்ற காரணத்தினால் போக்குவரத்திற்கு மிகவும் இடைஞ்சலாக இருக்கிறது. எனவே, அதற்கும் மேம்பாலம் கட்டுவதற்கு அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருக்கழுக்குன்றம், சதுரங்கப்பட்டினம், சூரப்பன் விடுதி சாலையில் 14/8 கிலோ மீட்டரிலும், செங்கற்பட்டு நகரம் இச்சாலையில் 27/2 கிலோ மீட்டரிலும் இருக்கின்றன. அரசாணை



1998 ஏப்ரல் 24]

எண் 144 மூலம் அரசால் நிருவாக ஒப்புதல் அளிக்கப்பட்டு, வெள்ளத்தால் பழுதடைந்த அரசு சாலையை நிரந்தரமாக சீரமைக்க, சதுரங்கப்பட்டினம், சூரப்பன்விடுதி சாலையில் 12/6 முதல் 72/2 வரை உறுதிபடுத்துவதற்கு 590 இலட்சம் மதிப்பீட்டிற்கு பணி ஒப்புதல் அளிக்கப்பட்டிருக்கிறது. இச்சாலை மாவட்டச் சாலையாக இருக்கிறது. இதை உறுதிபடுத்துவதற்கு, மேம்பாடு செய்வதற்கு தமிழக அரசு தேவையான நிதியை ஒதுக்கீடு செய்திருக்கிறது. இந்தச் சாலையை அகலப்படுத்துவதற்கும் ஏற்பாடு நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. ஆனால், தேசிய நெடுஞ்சாலையாக மாற்ற வேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினர் கேட்டுக்கொண்டிருக்கிறார். நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் தலைவர் கலைஞர் அவர்கள் ஆட்சிப் பொறுப்பிலே இருக்கின்ற காலத்திலேதான் தமிழ்நாட்டிலே தேசிய நெடுஞ்சாலைகள் அதிகமாக கிடைத்திருக்கின்றன. குறிப்பாகச் சொல்ல வேண்டுமானால், 1971 ஆம் ஆண்டு நமக்கு 1,637 கிலோ மீட்டர்கள்தான் நெடுஞ்சாலையாக இருந்தது. அது 1997-இல் 2,002 கிலோ மீட்டராக வந்தது. அதுவும் 1997 ஆம் ஆண்டு நம்முடைய தலைவர் அவர்கள் மத்திய அரசிலே தரைவழிப் போக்குவரத்துத் துறை அமைச்சராக இருந்த திரு. டி.ஜி. வெங்கட்ராமன் அவர்களிடத்திலே எடுத்துச் சொன்னதன் மூலம் இந்த ஆண்டு 562 கிலோ மீட்டர்கள் நெடுஞ்சாலையாக நமக்கு அறிவிக்கப்பட்டிருக்கிறது. எனவே, மாண்புமிகு முன்னாள் மத்திய தரைவழிப் போக்குவரத்துத் துறை அமைச்சர் திரு. டி.ஜி. வெங்கட்ராமன் அவர்களுக்கு நன்றி கூற கடமைப்பட்டிருக்கிறேன். இந்த ஒரே ஆண்டில் 562 கிலோ மீட்டர் தேசிய நெடுஞ்சாலை நமக்கு, நம்முடைய தலைவர் முதலமைச்சர் அவர்களுடைய முயற்சியின் மூலமாகவும், திரு. டி.ஜி. வெங்கட்ராமன் அவர்களுடைய முயற்சியின் மூலமாகவும் கிடைத்திருக்கிறது என்பதை நான் தெரிவித்து மாண்புமிகு உறுப்பினர் தமிழ்மணி அவர்கள் குறிப்பிட்டுள்ள இச்சாலையை தேசிய நெடுஞ்சாலையாக ஆக்குவதற்குரிய செயற்குறிப்பு எதுவும் தமிழக அரசிடத்திலே இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 332. திரு. எம். ஆண்டி அம்பலம், மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர்.

[1998 ஏப்ரல் 24

332—

## கூடுதல் நிதி ஒதுக்கீடு

*** 3249—திரு. எம். ஆண்டி அம்பலம்:**

மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திண்டுக்கல் மாவட்டம், நத்தம் தொகுதி. நத்தம் கோவில்பட்டி அருள்மிகு கைலாசநாதர் கோயில் திருப்பணிக்கு கூடுதலாக நிதி ஒதுக்கீடு செய்ய அரசு முன்வருமா?

**மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன், தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

இத்திருக்கோயிலின் திருப்பணி வேலைகளுக்கு ஏற்கெனவே ரூ.1,00,000 அரசு மானியமாக வழங்கப்பட்டு, அத்தொகை இராஜகோபுர திருப்பணிக்கெனப் பயன்படுத்தப்பட்டுள்ளது. மீதமுள்ள வேலைகள் அனைத்தும் உபயதாரர்கள் மூலம் செய்யப்பட்டு, இந்த ஆண்டு ஜூன் திங்கள் குடமுழுக்கு நடைபெற உள்ளது. எனவே. இத்திருக்கோயிலுக்கு அரசின் கூடுதல் நிதி ஒதுக்கீடு தேவையில்லை.

**திரு. எம். ஆண்டி அம்பலம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்ற ஆட்சிக் காலத்திலே கும்பாபிஷேகத்திற்கு செலவு செய்யப்பட்டு வேலை நடந்துகொண்டிருக்கிறது. அதிலே குறிப்பாக இன்னும் வேலைகள் முடியவில்லை. கனம் அமைச்சர் அவர்கள் பழனி முருகன் கோயிலிலிருந்தாவது பணத்தை எடுத்து விரைவிலே அந்தப் பணியை முடித்துத் தர ஆவன செய்வாரா? அதுமட்டுமல்ல, நத்தத்திலே ஒரு மாரியம்மன் கோயில் இருக்கிறது. அதுவும் ஒரு புராதனக் கோயில். அங்கு ஒவ்வொரு வருடமும் பல்லாயிரக்கணக்கான பக்தர்கள் பூக்குழி இறங்குகிறார்கள். அந்தக் கோயிலையும்...

முற்பகல் 10-20

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் இந்தக் கோயிலைப்பற்றி மட்டும் துணை வினா கேளுங்கள்.



1998 ஏப்ரல் 24]

**திரு. எம். ஆண்டி அம்பலம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதுவும் என்னுடைய தொகுதியிலேதான் இருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அதற்காக உங்களுடைய தொகுதியிலே இருக்கிற எல்லா கோயில்களைப்பற்றியும் கேட்பதற்கு அனுமதிக்க முடியாது. அந்தக் கோயிலைப்பற்றி மட்டும் கேளுங்கள்.

**திரு. எம். ஆண்டி அம்பலம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஒரு சீனியர் மெம்பர் என்ற அடிப்படையிலே மாண்புமிகு தலைவர் அவர்கள் அதை அனுமதிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். ஆகவே, அந்தக் கோயிலும் பழுதடைந்த சூழ்நிலையிலே இருக்கிற காரணத்தால் கனம் அமைச்சர் அவர்கள் பெரிய மனது வைத்து அந்தப் பணியை மேற்கொள்வார்களா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே வினாவிற்கு எடுத்துக் கொள்ளப்பட்ட கோயிலினுடைய மொத்த வருமானமே ரூபாய் 47,448 தான். இந்த நிலையில் 10-12-1990-இல் நம்முடைய ஆட்சிக் காலத்தில்தான் 12 திருப்பணிகளுக்கு 7 இலட்சத்து 19 ஆயிரத்து 500 ரூபாய்க்கு ஆணை வழங்கப்பட்டிருக்கிறது. அதிலே அரசினுடைய பங்கு ஒரு இலட்சம் ரூபாய் என்று உறுதி செய்யப்பட்டு, ஏனையவற்றை நன்கொடையாளர்களிடமிருந்து பெற்றுக்கொண்டு செய்ய வேண்டும் என்ற உறுதியின் அடிப்படையில்தான் இந்த ஆணை வழங்கப்பட்டிருக்கிறது. ஏற்கெனவே, 90 விழுக்காடு வேலைகள் நன்கொடையாளர்களின் உதவியால் நடைபெற்று முடிந்திருக்கின்றன. வெகு விரைவில் அந்த நன்கொடையாளர்களைத் திரட்டி முழுப் பணியையும் செய்வதற்கு மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும். என்னுடைய துறையும் இதற்கான முழு ஒத்துழைப்பைத் தரும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 333, திரு. செல்வராஜ் என்கிற கவிதைப்பித்தன், மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர்.

**333—**

**சிவன் கோயிலைப் பழுதுபார்த்தல்**

***11132—திரு. செல்வராஜ் என்கிற கவிதைப்பித்தன்:**

மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

புதுக்கோட்டை மாவட்டம், குளத்தூர் தொகுதி, அன்னவாசல் ஒன்றியம், இலுப்பூரில் உள்ள சிவன் கோயிலைப் பழுது பார்த்து குடமுழுக்கு நடத்த அரசு ஆவன செய்யுமா?

**மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன், தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

திருக்கோயிலைத் தற்போது திருப்பணி செய்யும் செயற்குறிப்பு ஏதும் பரிசீலனையில் இல்லை.

**திரு. செல்வராஜ் என்கிற கவிதைப்பித்தன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய குளத்தூர் தொகுதி கோயில்கள் நிறைந்த தொகுதி. பள்ளித்தலமனைத்தும் கோயில் செய்வோம் என்று பாரதி பாடினான். தமிழாய், செந்தமிழனாக விளங்கும் நம் ஒப்பற்ற மாண்புமிகு முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களின் பொற்கால ஆட்சியில் கோயில்தலமனைத்தும் தமிழ்ப்பள்ளிகளாக மாறி வருகின்ற நல்ல வேளையில், இலுப்பூரைத் தாலுகாவாக ஆக்கி மக்கள் வயிற்றில் பால் வார்த்த கழக அரசு, மாண்புமிகு கலைஞர் அவர்களது அரசு, பொன்மாசிநாதர் திருக்கோயில் என்று அழைக்கப்படுகின்ற தொன்மை வாய்ந்த இலுப்பூர் சிவன் கோயிலைப் பழுதுபார்க்க நிதியொதுக்கீடு செய்து 50,000-க்கும் மேற்பட்ட பொதுமக்களின் வழிப்பாட்டுத் தலமான அதனை எழில்மிக்க கோயிலாக ஆக்க அரசு ஆவன செய்யுமா என்று தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவர் குறிப்பிட்டதைப்போல் அந்தக் கோயில் மிகவும் தொன்மைச் சிறப்புடைய கோயில் என்பதை நான் மறுக்கவில்லை. இப்போது அதனுடைய வருவாய் என்பது ஒரு





ஆண்டுக்கு 50,000 ரூபாய்தான். ஆனால், திருப்பணிக்கு என்று தந்திருக்கிற திட்டத்தில் அதற்கு 12 இலட்சம் ரூபாய் ஒதுக்கினால்தான் அந்தத் திருப்பணியை முழுமையாக முடிக்க முடியும். அதனால்தான் உடனடியாக அந்தப் பணியை எடுத்துக்கொள்ள முடியவில்லை. வேறு வகையில், எப்படியெல்லாம் நன்கொடையாளர்களைத் திரட்டி இந்தப் பணிகளைச் செய்யலாம் என்பதை அடிப்படையாக வைத்து இவை மேற்கொள்ளப்படும் என்று உறுதி செய்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 334, திரு. ஐ. கணேசன், மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்.

**334—**

**நியாய விலைக் கடை அமைத்தல்**

***7046—திரு. ஐ. கணேசன்:**

மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டம், எடப்பாடி ஒன்றியம், சித்தூர் ஊராட்சி, சித்தூரில் நியாய விலைக் கடையில் சுமார் 1,300-க்கு மேல் குடும்ப அட்டைதாரர்கள் உள்ளதால் 3 கி.மீ.-க்கு மேல் தூரமுள்ள மொரசப்பட்டி, சாவடிப்பாளையம், எல்லக்குட்டூர் ஆகிய ஊர்களுக்கு மொரசப்பட்டியிலேயே ஒரு நியாய விலைக்கடை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

**மாண்புமிகு திரு. கா.நா. நேரு, உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

சேலம் மாவட்டம், எடப்பாடி ஒன்றியம், சித்தூர் கிராமத்தில் சித்தூர் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கி நடத்திவரும் நக்கத்பட்டி நியாய விலைக் கடைக்குச் சம்பந்தப்பட்ட குடும்ப அட்டைகளைப் பிரித்து, எல்லக்குட்டூர் என்ற இடத்தில் ஒரு புதிய நியாய விலைக் கடையும், மொரசம்பட்டி என்ற இடத்தில் ஒரு பகுதிநேர நியாய விலைக் கடையும் திறப்பதற்கு 10-7-1997-இல் உத்தரவு வழங்கப்பட்டுள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புதிய நியாய விலைக் கடைகளைத் திறந்ததற்காக முதலிலே நான் நன்றியைச் சொல்லிக்கொள்கிறேன். அதேபோல், சாவடிப்பாளையத்திலே புதியதாக பகுதிநேர நியாய விலைக் கடையையாவது திறக்க அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கா.நா. நேரு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புதிய முழு நேரக் கடையைத் திறப்பதற்கும், பகுதிநேரக் கடையைத் திறப்பதற்கும் உள்ள அரசாணை சில சட்ட திட்டங்களைக் கொண்டிருக்கிறது. அந்தச் சட்ட திட்டத்தின்படி இருக்குமானால் நிச்சயமாக அந்தக் கடையைத் திறப்பதற்கு உரிய முயற்சிகள் மேற்கொள்ளப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 335, திரு. என். ஆர். அழகராஜா, மாண்புமிகு பால்வளத் துறை அமைச்சர்.

**335—**

**பால் பதனிடும் நிலையத்தைத் துவக்குதல்**

***6355—திரு. என்.ஆர். அழகராஜா:**

மாண்புமிகு பால்வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தேனி மாவட்டத்தில், 1990 ஆம் ஆண்டு திட்டமிடப்பட்டு செயல்படாமல் உள்ள பால் பதனிடும் நிலையத்தை மீண்டும் துவக்க அரசு ஆவன செய்யுமா?

**மாண்புமிகு திரு. க. சுந்தரம், பால்வளத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தேனி மாவட்டத்தில் பால் பதனிடும் நிலையம் அமைக்க திட்டமிடப்படவில்லை.

**திரு. என்.ஆர். அழகராஜா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த 7, 8 ஆண்டுகளுக்கு முன்னால் தேனியிலே பெரியாற்றங்கரையிலே பால் பதனிடும் ஆலைக்காக அரசை அணுகி, கடைசியாக அந்த இடத்தில் அமைக்க மாசுக் கட்டுப்பாட்டுத் துறை





அனுமதிக்காத காரணத்தால் அது நின்றுவிட்டது. மீண்டும் அதை வேறு ஒரு இடத்திலே அமைப்பதற்கு அரசு ஆவன செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன். மேலும், இப்போது 10,000 லிட்டர் வரை அனுமதியில்லாமலேயே தனியார்கள் பால் பதனிடும் தொழிற்சாலை அமைத்துக்கொள்ளலாம் என்று விதி இருக்கிறது. அதை உயர்த்தி - ஏனென்றால் அவ்வாறு செய்தால் இலாபகரமாக இருக்காது - 25,000 லிட்டர் என்ற அளவிற்காவது அனுமதி இல்லாமல் பால் பதனிடும் தொழிற்சாலை அமைத்துக்கொள்ள தனியார்களுக்கு அனுமதி அளிக்கப்படுமா என்றும் அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-25

**மாண்புமிகு திரு. க. சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பால் உற்பத்தியை வைத்துத்தான் பால் பதனிடும் பண்ணை அமைக்க இயலும். தேனி மாவட்டத்தில் மட்டும் 33 ஆயிரம் லிட்டர் பால்தான் உற்பத்தியாகின்றது. குறைந்தது ஒரு இலட்சம் லிட்டர் பால் உற்பத்தியானால்தான் அந்தப் பதனிடும் நிலையம் அமைக்க இயலும் என்பதை மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். இப்பொழுது 10 ஆயிரம் லிட்டர் அளவு, தனியார் பால் பண்ணை அமைக்க அவர்களுக்கு உரிமை இருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் 10 ஆயிரம் லிட்டருக்கு மேல் கேட்டிருக்கிறார். அதை அரசு பரிசீலிக்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 336, திரு. க.வெ.வீ. இராசமாணிக்கம், மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர்.

**336—**

**விபத்து வழக்குகளைத் துரிதப்படுத்துதல்**

***11306—திரு. க.வெ.வீ. இராசமாணிக்கம்:**

மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரை மாவட்டத்தில் நீதிமன்றங்களில் தேங்கிக் கிடக்கும் விபத்து வழக்குகளை விரைவில் முடிக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

[1998 ஏப்ரல் 24

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா, சட்டத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) மதுரையில், நான்காவது கூடுதல் சார்பு நீதிமன்றம் மோட்டார் வாகன விபத்து வழக்குகளை விசாரிப்பதற்கென்றே டிரிபியூனலாக இயங்கி வருகிறது. இந்த நீதிமன்றத்தைத் தவிர, மதுரை முதன்மை மாவட்ட நீதிமன்றமும், மதுரையில் உள்ள முதலாவது கூடுதல் மாவட்ட நீதிபதி-தலைமை குற்றவியல் நடுவர் நீதிமன்றமும், மதுரையில் உள்ள இரண்டாவது கூடுதல் மாவட்ட நீதிமன்றமும் மோட்டார் வாகன விபத்து வழக்குகளை விசாரித்து வருகின்றன. நிலுவையிலுள்ள விபத்து வழக்குகளை குறைக்கின்ற வகையில், Periodical Report-ஐப் பெற்று, சென்னை உயர்நீதிமன்றம் ஆய்வு செய்வதுடன் தேவையான அறிவுரைகளை அவ்வப்போது நீதிமன்றத்திற்கு வழங்கி வருகிறது. மேலும், அந்த வழக்குகள் விரைவாகவும், திறமையாகவும் முடிவதற்கு முதன்மை மாவட்ட நீதிபதி அடிக்கடி Camp நீதிமன்றத்தையும், Lok Adalat நீதிமன்றங்களையும் நடத்தி, இருசாராரையும் சமரசம் செய்து முடிவுக்குக் கொண்டு வருகிறார். அரசு துரிதமாகச் செயல்படுகிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ம. முத்துராமலிங்கம்.

**திரு. ம. முத்துராமலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுரை மாவட்ட நீதிமன்றங்களில் மோட்டார் வாகன விபத்து வழக்குகள் மொத்தம் எத்தனை இருக்கின்றன? அவற்றில் எத்தனை முடிவு பெற்றிருக்கின்றன என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னிடத்திலே தேங்கிக் கிடக்கின்ற வழக்குகளைப் பற்றி மட்டும்தான் விவரங்கள் இருக்கின்றன. 31-3-1998 முடிய 7,115 வழக்குகள் இப்பொழுது தேக்க நிலையில் இருக்கின்றன. தொடுக்கப்பட்ட வழக்குகள் பற்றிய விவரங்கள் என்னிடத்தில் தற்போது இல்லை. மாண்புமிகு உறுப்பினருக்கு அனுப்பி வைக்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 337, திரு. ஞானசேகரன், மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர்.



1998 ஏப்ரல் 24]

337—

### சுகாதாரச் சீர்கேடுகளைத் தடுத்தல்

***9192—திரு. சி. ஞானசேகரன்:**

மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சத்துவாச்சாரியில், ரங்காபுரம் பகுதியில் பாட்டரியை உருக்கி ஈயம் எடுப்பதால் அருகிலுள்ள பொதுமக்களுக்கு சுகாதாரச் சீர்கேடு ஏற்படுவதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், இது குறித்து அரசு எடுக்கும் நடவடிக்கையின் விவரம் என்ன?

**மாண்புமிகு திரு. என்.கே.கே. பெரியசாமி, கைத்தறித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ): சத்துவாச்சாரியில் ரங்காபுரம் பகுதியில் திருவாளர்கள் யூனிவர்சல் லெட் அல்லாய்ஸ் என்ற நிறுவனம் உரிய மாசுக் கட்டுப்பாடு சாதனங்களைப் பயன்படுத்தி வருவதால், இத்தொழிற்சாலை தொடர்பாக பொதுமக்களிடமிருந்து தமிழ்நாடு அரசுக்கு சுகாதாரச் சீர்கேடு தொடர்பாக புகார் எதுவும் வரவில்லை.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சத்துவாச்சாரியில் ரங்காபுரம் பகுதியிலே உள்ள இந்தக் கம்பெனி மாசுக் கட்டுப்பாடு வாரியத்திடமிருந்து அனுமதி பெறுகிறபோதே அவர்கள் ஒரு அளவு வைத்திருப்பார்கள். பிறகு படிப்படியாக அதை விரிவாக்கம் செய்கிறபோது அதிகமான புகையைக் கக்கி, அந்தப் பகுதியில் மாசு ஏற்பட்டு வருகிறது. இன்னும் சொல்லப்போனால், பக்கத்தில் நிறைய ஜல்லி மிஷின்கள் வந்துவிட்டன. பள்ளிக்கூடம் இருக்கிறது. தேசிய நெடுஞ்சாலையில் ஜல்லி மிஷின் இருக்கக் கூடாது என்று இருக்கிறது. ஆனால் எங்கு பார்த்தாலும் இப்படிப்பட்ட ஜல்லி மிஷின் வந்து, மாசுக் கட்டுப்பாடு வாரியம்...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் ஜல்லி மிஷினைப்பற்றித் துணை வினாவைக் கேட்கக் கூடாது. புகார் இல்லை என்று அமைச்சர்

பதில் சொல்லியிருக்கிறார். நீங்கள் ஒரு எம்.எல்.ஏ. நீங்களே புகார் கொடுக்கிறீர்களா?

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புகார் இருக்கிறது. அதைக் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** எங்கே இருக்கிறது? அதைக் கொண்டு வந்து கொடுங்கள்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தப் பகுதியிலே நிறைய புகையைக் கக்கி, அந்தப் பகுதி முழுவதும் மாசு அடைந்து, நிறைய மனுக்களைக் கொடுத்து இருக்கிறார்கள். அப்படி இருக்கிறபோது, புகார் இல்லை என்று தவறான தகவலை மாண்புமிகு அமைச்சருக்கு அந்தத் துறை தெரிவித்து இருக்கிறது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கடுமையான நடவடிக்கையை எடுத்து, மாசுக் கட்டுப்பாடு வாரியத்தின் மூலமாக மாசு ஏற்படாமல் இருக்க ஆவன செய்வார்களா என்று தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. என்.கே.கே. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் தெரிவித்த Universal Lead Alloys கம்பெனியில், Processing -இல் அந்த Effluents வருவதில்லை. உள்ளே வேறு விதத்திலே உபயோகிக்கின்ற கழிவுநீர், டிரெய்னேஜில் வருகின்ற கழிவுநீர் சுத்தப்படுத்தப்படுகிறது. இதிலிருந்து வெளியேறும் புகையைப் பற்றி நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் சொன்னார். அந்த அளவை வைத்து 21 மீட்டர் உயரத்திற்குப் புகைபோக்கி அமைக்கப்பட்டிருக்கிறது.

*முற்பகல் 10-30*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவையின் முன்னனுமதியோடு வினாக்கள்-விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

**மாண்புமிகு திரு. என்.கே.கே. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வருகின்ற 31-3-1998 வரை அவர்களுக்கு அனுமதி அளிக்கப்பட்டிருக்கிறது. இதுவரை எந்தவொரு புகாரும் அதுகுறித்து வரவில்லை. 31-3-1998-க்குப் பின்னர் இன்னொரு என்.ஓ.சி கொடுக்கின்றபோது நீங்கள் சொல்கின்ற புகார்களெல்லாம் பரிசீலனைக்கு எடுக்கப்பட்டு, அதன்பின்பு என்.ஓ.சி. கொடுக்கப்படும்.





**THIRU C. GNANASEKARAN:** Hon. Speaker, sir, I am not satisfied.

**HON'. SPEAKER:** I am satisfied with the answer.

**THIRU C. GNANASEKARAN :** I am not satisfied.

**HON'. SPEAKER :** It is *Speaker's discretion.*

வினா எண் 338, திரு. மு.பெ. சாமிநாதன், மாண்புமிகு கால்நடைப் பராமரிப்புத் துறை அமைச்சர்.

**338—**

**கால்நடைக் கிளை மருந்தகத்தை மருத்துவமனையாக்குதல்**

***10899—திரு. மு.பெ. சாமிநாதன்:**

மாண்புமிகு கால்நடைப் பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வெள்ளக்கோவில் தொகுதி, கம்பளியாம்பட்டியில் இயங்கி வரும் கால்நடைக் கிளை மருந்தகத்தை மருத்துவமனையாக உயர்த்தும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**மாண்புமிகு புலவர் பூ.ம. செங்குட்டுவன், கால்நடைப் பராமரிப்புத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ): செயற்குறிப்பு ஏதுமில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. மு.பெ. சாமிநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கால்நடைகளுக்குப் புகழ் வாய்ந்த காங்கேயம் மாடுகள் வெள்ளக்கோவில் தொகுதியில் கம்பளியாம்பட்டியில் இருக்கின்றன. அந்தப் பகுதியில் தற்போது கால்நடைக் கிளை மருந்தகம் அமைந்துள்ளது. அதனை மருத்துவமனையாக உயர்த்துவதற்கு செயற்குறிப்பு இல்லையென்று அமைச்சர் அவர்கள் தெரிவித்தாலும், அதனை மருந்தகமாக உயர்த்துவதற்கு தாராபுரம் கால்நடை உதவி இயக்குநர் அவர்கள் ஒப்புதல் அளித்துள்ளார்கள். அந்த ஒப்புதல், ஊராட்சி மன்றம் மற்றும்

ஊராட்சி ஒன்றியத்தினுடைய தீர்மானங்கள் மற்றும் முன்மொழிவுகள் ஆகியவை அனுப்பப்பட்டிருக்கின்றன. எனவே, நடப்பாண்டில், அந்தக் கிளை மருந்தகத்தைக் கால்நடை மருத்துவமனையாக உயர்த்துவதற்கு நடவடிக்கை எடுத்து, வாயில்லாத ஜீவன்களான அந்தக் கால்நடைகளைக் காப்பாற்றுகின்ற அளவிற்கு மறுபரிசீலனை செய்வார்களா என்பதைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு புலவர் பூ.ம. செங்குட்டுவன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஈரோடு மாவட்டம், வெள்ளக்கோவில் ஊராட்சி ஒன்றியத்தில், வெள்ளக்கோவில் மற்றும் காட்டுப்பாளையம் ஆகிய இடங்களில் இரண்டு கால்நடை மருந்தகங்களும், கோலப்பாளையம், காசப்பநாயக்கன்பாளையம், கம்பளியாம்பட்டி, முத்தாம்பாளையம், வீரசோழபுரம் ஆகிய இடங்களில் ஐந்து கால்நடைக் கிளை நிலையங்களும் ஏற்கெனவே இயங்கி வருகின்றன. கம்பளியாம்பட்டி கால்நடைக் கிளை நிலையத்தைக் கால்நடை மருத்துவமனையாக ஆக்க வேண்டுமானால், முதலில் கால்நடை மருந்தகமாக ஆக்க வேண்டும். பொதுவாக, கால்நடை மருந்தகங்கள் கிராமங்களிலுள்ள கால்நடைகளின் எண்ணிக்கையைக் கருத்தில் கொண்டு, அந்த ஊராட்சி ஒன்றியத்தினுடைய தீர்மானம் மற்றும் கருத்துரு பெறப்பட்டு பரிசீலிக்கப்படுகிறது. நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஊராட்சி ஒன்றியத்தின் தீர்மானத்தைக் கொடுத்திருப்பதாகச் சொல்கிறார்கள். அப்படியிருந்தால், அதை இந்த ஆண்டு பகுதி-2 திட்டத்தில் பரிசீலிக்கலாம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 339, திரு. உ. திசைவீரன், மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர்.

**339—**

**ஆதிதிராவிடர் மாணவர்கள் விடுதி தொடங்குதல்**

***2118—திரு. உ. திசைவீரன்:**

மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



(அ) பரமக்குடி அரசுக் கல்லூரியில் ஆதிதிராவிடர் மாணவர்கள் விடுதி இல்லாமல் இருப்பதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது தொடங்கப்படும்?

**மாண்புமிகு திரு. சமயநல்லூர் எஸ். செல்வராசு, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ): ஆம். புதிய விடுதியினைத் திறக்க அரசு ஆணையிட்டு, 15-11-1996 அன்று திறக்கப்பட்டுள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 340, திரு. இ. புகழேந்தி, மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர்.

**340—**

**கடலூரில் மீன்பிடித் துறைமுகம்**

***14060—திரு. இ. புகழேந்தி:**

மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கடலூரில் ஏற்கெனவே இயங்கிக் கொண்டிருந்த மீன்பிடித் துறைமுகத்தை மீண்டும் இயக்கிட அரசு முன்வருமா?

**மாண்புமிகு திருமதி எஸ். ஜெனிபர் சந்திரன், மீன்வளத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

ஆம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு: ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடம்பெற்றிருந்தால், அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

## 2. விதி 110-ன்கீழ் அறிக்கை அரசு அலுவலர்களுக்கு 1-1-1998 முதல் அகவிலைப்படி 3 சதவீதம் கூடுதலாக வழங்கல் குறித்து முதலமைச்சரின் அறிக்கை

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்து, சட்டமன்றப் பேரவை விதி 110-ன்கீழ் பேரவைக்கு ஓர் அறிக்கையை அளிக்க மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அனுமதி கேட்டிருக்கிறார்கள். அவர்களுக்கு அனுமதி தரப்படுகிறது, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டமன்றப் பேரவை விதி 110-ன்கீழ் இந்த அறிக்கையை அவைமுன் வைக்கின்றேன், தங்கள் அனுமதியோடு. மத்திய அரசு அலுவலர்களுக்கு விலைவாசிப் புள்ளி உயர்வின் அடிப்படையில் 1-1-1998 முதல் அகவிலைப்படியை ஊதியத்தில் 13-ல் இருந்து 16 விழுக்காடு என உயர்த்தி, மத்திய அரசு 13-4-1998 அன்று ஆணை பிறப்பித்துள்ளது. அதனையொட்டி, தமிழக அரசு அலுவலர்களுக்கும், ஆசிரியர்கள் மற்றும் காவலர்கள் உள்ளிட்ட அனைத்து அலுவலர்களுக்கும் 1-1-1998 முதல் அகவிலைப்படி ஊதியத்தில் 13-ல் இருந்து 16 விழுக்காடு என உயர்த்தி வழங்கப்படும். இதனால் குறைந்தபட்சமாக அகவிலைப்படி உயர்வு ரூ.76-ஆகவும், அதிகபட்சமாக ரூ.657/-ஆகவும் இருக்கும். இந்த அகவிலைப்படி உயர்வு, திருத்திய ஊதிய விகிதத்தில் சம்பளம் பெறும் அனைத்து அரசு அலுவலர்களுக்கும், உள்ளாட்சி நிறுவனங்கள், அரசு மானியம் பெறும் கல்வி நிறுவனங்களில் பணிபுரியும் ஆசிரியர்களுக்கும், அலுவலர்களுக்கும் பொருந்தும். மேலும், இதே விகிதத்தில் சத்துணவு அமைப்பாளர்கள், குழந்தை நல அமைப்பாளர்கள் மற்றும் கிராம உதவியாளர்களுக்கும் இந்த அகவிலைப்படி உயர்வு வழங்கப்படும். அரசு அலுவலர்களுக்கு அகவிலைப்படி உயர்த்தி வழங்கப்படுவதைக் கருத்தில் கொண்டு, சத்துணவுத் திட்டத்தில் பணிபுரியும் சமையலாளர் மற்றும் உதவியாளர்களுக்கும், இதர தொகுப்பூதியம் மற்றும் மதிப்பூதியம் பெறும் அலுவலர்களுக்கும் 1-1-1998 முதல் பின்வருமாறு தற்காலிக உயர்வு (Ad hoc increase) வழங்கப்படும்:





முற்பகல் 10-35

1-1-1996-க்குமுன் மாதம் ரூ.150-க்குக் குறைவாக மதிப்பூதியம், தொகுப்பூதியம் அளிக்கப்பட்டவர்களுக்கு மாதம் ரூ.10-; 1-1-1996-க்கு முன் மாதம் ரூ. 150-ம், அதற்கு மேலும் மதிப்பூதியம், தொகுப்பூதியம் அளிக்கப்பட்டவர்களுக்கு மாதம் ரூ.20-;

மேற்கூறிய அகவிலைப்படி உயர்வால், மொத்தத்தில் சுமார் 12.42 இலட்சம் அலுவலர்கள் பயன்பெறுவார்கள். மேலும், மாநில அரசு ஓய்வூதியர்கள் மற்றும் குடும்ப ஓய்வூதியர்களுக்கும், மத்திய அரசைப் பின்பற்றி ஒரு அகவிலைப்படித் தவணை 1-1-1998 முதல் வழங்கப்படும். அதன்படி, ஓய்வூதியம் மற்றும் குடும்ப ஓய்வூதியம் பெறுவோர்களது அகவிலைப்படி, 13-லிருந்து 16 விழுக்காடு என உயர்த்தி வழங்கப்படும். இதனால், குறைந்தபட்சம் ரூ.38-ம், அதிகபட்சம் ரூ.290-ம் பணப்பயன் அடைவார்கள். மேற்குறிப்பிட்ட திருத்திய அகவிலைப்படி, தமிழ்நாடு மாநில ஓய்வூதியம் மற்றும் குடும்ப ஓய்வூதியம் பெறுபவர்கள், உள்ளாட்சி மற்றும் அரசு மானிய உதவிபெறும் கல்வி நிறுவனங்களைச் சார்ந்த ஓய்வூதியம் மற்றும் குடும்ப ஓய்வூதியம் பெறுபவர்கள் மற்றும் மாதம் ரூ.150 கருணைத் தொகை பெறுபவர்கள் உட்பட எல்லோருக்கும் வழங்கப்படும். இதனால், ஏறத்தாழ 2.86 இலட்சம் ஓய்வூதியம் மற்றும் குடும்ப ஓய்வூதியம் பெறுபவர்கள் பயனடைவார்கள். மேற்குறிப்பிட்ட அகவிலைப்படி உயர்வு, 1-1-1998 முதல் ரொக்கமாக வழங்கப்படும். இந்தச் சலுகைகளினால், அரசுக்கு ஆண்டு ஒன்றுக்கு ஏற்படக்கூடிய செலவினம் ரூ.200.50 கோடி ஆகும். இந்தத் திருத்திய அகவிலைப்படி உயர்வினால், வழங்கவுள்ள நிலுவைத்தொகையையும் சேர்த்து — (Arrears) — அரசுக்கு நடப்பாண்டில் 233.92 கோடி ரூபாய் மொத்தச் செலவினம் ஏற்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

## 3. சிறப்புக் கவன ஈர்ப்பு

### (அ) ஆசிரியர்கள் பிளஸ்-2 விடைத்தாள்களை மதிப்பீடு செய்ய மறுத்து, போராட்டம் நடத்துவது

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்து, சிறப்புக் கவன ஈர்ப்பு மற்றும் ஒத்திவைப்புத் தீர்மானம். பிளஸ்-2 விடைத்தாள்களை மதிப்பீடு செய்ய மறுத்து, ஆசிரியர்கள் போராட்டம் நடத்துவது குறித்து திரு. இரா. தாமரைக்கனி, திரு. சி. ஞானசேகரன், திரு. மு. அப்பாவு

[பேரவைத் தலைவர்] [1998 ஏப்ரல் 24

ஆகியோர் ஒத்திவைப்புத் தீர்மானமாகவும், சிறப்புக் கவன ஈர்ப்பாக திரு. டி. மணி, திரு. கே. சுப்பராயன், திரு. குழந்தை தமிழரசன், திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன், திரு. ஐ. கணேசன், திரு. ஜி.கே. மணி, டாக்டர் சு. கிருஷ்ணசாமி, திரு. ஜி. நிஜாமுதீன், திரு. லா. சந்தானம், திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன், திரு. வை. சிவபுண்ணியம், திரு. பி.ஆர். சுந்தரம் ஆகியோரும் அறிவிப்புகளைக் கொடுத்து இருக்கிறார்கள். எல்லாவற்றையும் சிறப்புக் கவன ஈர்ப்பாக அனுமதித்து, கட்சிக்கு ஒருவர் என்ற முறையில், முதலில் திரு. குழந்தை தமிழரசன் அவர்களைப் பேச அழைக்கிறேன்.

**திரு. குழந்தை தமிழரசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பிளஸ்-2 மாணவர்கள் எழுதிய விடைத்தாள்களைத் திருத்தக்கூடிய ஆசிரியர்கள், அவற்றைத் திருத்தாமல் புறக்கணித்து, கடந்த ஒரு வார காலமாகப் போராட்டம் நடத்தி வருகிறார்கள். ஆதலால், பெற்றோர்கள் மத்தியிலும், பிளஸ்-2 மாணவர்கள் மத்தியிலும் ஒரு பதட்டமான சூழ்நிலையும், எதிர்காலம் குறித்து ஒரு கேள்விக்குறியும் அவர்கள் மனதிலே எழுந்திருக்கிறது. நம்முடைய மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களும், அந்தப் போராட்டத்தை ஆசிரியர்கள் நடத்தியவுடன் அவர்களை அழைத்துப் பேசியிருக்கிறார்கள். போராட்டத்தைக் கைவிட வேண்டுமென்ற வேண்டுகோளையும் வைத்திருக்கிறார்கள். இருந்தாலும், தொடர்ந்து அவர்கள் போராட்டம் நடத்தி வருவதால், எதிர்காலத்திலே மாணவர்களின் தொழிற்கல்விச் சேர்க்கைக்கு நீண்ட காலம் ஆகுமென்ற நிலைமை இருக்கிறது. அடுத்த ஆண்டு மாணவர்கள் சேர்க்கைக்கும் காலதாமதம் ஆகும். அதனால், அவர்களுடைய படிப்பும் நீண்டகாலம் ஆகிக்கொண்டே போகின்ற சூழ்நிலை உருவாகியிருக்கிறது. எனவே, ஆசிரியர்கள், கிராமத்திலே சொல்வதைப்போன்று, இப்போது தொண்டையிலே நெருக்குகின்ற ஒரு நிலையை மாணவர்களிடம் செய்து வருகிறார்கள். ஆசிரியர்களின் கோரிக்கை எப்படியிருந்தாலும், மீண்டும் அவர்களை அழைத்துப் பேசி, அவர்களுடைய போராட்டத்தைக் கைவிடுவதற்கு அரசு முன்வரவேண்டும். இந்த அளவில் இந்தப் போராட்டத்தைக் குறித்து அரசின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. குழந்தை தமிழரசன் அவர்கள் சொன்ன



1998 ஏப்ரல் 24] [திரு. சி. ஞானசேகரன்]

கருத்தை நானும் இங்கே வலியுறுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன். ஆசிரியர்கள், மாணவர்களுடைய எதிர்காலத்தோடு விளையாடுவது சரிதானா என்பதை அவர்கள் எண்ணிப்பார்க்க வேண்டும். ஏற்கெனவே, அவர்கள் மத்திய அரசினுடைய ஊதிய விகிதத்தைத் தங்களுக்கும் கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். அவர்கள், அரசோடு அவர்களுடைய எவ்வளவு கோரிக்கைகளை வைத்துப் போராடினாலும் தகும். ஆனால், மாணவர்கள் இப்போது வருகிற எம்.பி.பி.எஸ்., பி.ஈ. போன்ற தேர்வுகளுக்கெல்லாம் தயாராகி, உடனே Entrance Examination-லே அவர்கள் வெற்றிபெற்று, தங்களுடைய வாழ்க்கையை அமைத்துக்கொள்ள வேண்டிய ஒரு காலகட்டம். இந்த நேரத்திலே போய் இப்படிப்பட்ட ஒரு போராட்டத்தை அறிவிப்பது என்பது, சரிதானா? அவர்கள் தங்களுடைய நிலையைக் கொஞ்சம் மறுபரிசீலனை செய்ய வேண்டும். காரணம், மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களும் அழைத்துப் பேசி இருக்கிறார்கள். அதற்காக ஒரு குழுவையும் போட்டிருக்கிறார்கள். இப்படியெல்லாம் நடவடிக்கை எடுத்தும், எந்தவிதமான முன்னேற்றமும் இல்லாமல், தொடர்ந்து ஆசிரியர் பெருமக்கள் போராடிக் கொண்டிருக்கிறார்கள். அவர்களுடைய கருத்தை, அவர்களுடைய கோரிக்கையைக் கருணையோடு பரிசீலிக்க வேண்டும்; நான் இல்லை என்று சொல்லவில்லை. இப்போதுகூட, ஆந்திராவிலே பார்த்தால், எம்.எல்.ஏ.-க்களுக்கு 18 ஆயிரம் சம்பளம் என்று ஆக்கியிருக்கிறார்கள். நாங்கள் அதற்காகப் புறக்கணிக்கிறோம் என்று சொல்லமுடியாது.

முற்பகல் 10-40

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** தொடர்பில்லாத பேச்சாக இருந்தால் அவைக் குறிப்பிலிருந்து நீக்குவேன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உதாரணத்திற்காகச் சொல்கிறேன். இப்போது இருக்கக்கூடிய அரசு ஊழியர்கள், ஆசிரியர்களுக்கு எல்லாம் சம்பளம் கொடுக்க வேண்டும் என்பதற்காக நாங்கள் எல்லாம் இப்படி கடமையுணர்வோடு சட்டமன்றத்திற்கு வந்து அமர்ந்து Bill-ஐ பாஸ் செய்து அவர்களுக்கு சம்பளத்தைக் கொடுப்பதற்கு நாங்கள் காரணமாக இருந்து கொண்டிருக்கிறோம். மற்ற மாநிலங்களிலே சட்டமன்ற உறுப்பினர்களுக்கு அதிகமாகக் கொடுக்கிறார்கள் என்பதற்காக நாங்கள் புறக்கணிக்கிறோம் என்று சொல்லவில்லை. நாட்டுப் பிரச்சினையைத்தான் நாம் முதலில்

பார்க்க வேண்டும். அதுபோல மாணவர்களுடைய பிரச்சினைக்கு நாம் நிச்சயமாக . . . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உங்களைப் பொறுத்தவரையிலும் தினமும் பேப்பரில் உங்கள் பெயர் வரவில்லை என்றால் உங்களுக்கு தூக்கம் வராது. சரி, பேசுங்கள்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவர்கள் மீண்டும் மத்திய அரசுக்கு இணையான ஊதியத்தைக் கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இன்றுகூட அகவிலைப்படியை அறிவித்திருக்கிறார்கள். எனவே அவர்களை அழைத்துப் பேசி இது மாணவர்களுடைய எதிர்காலத்தைப் பாதிக்கின்ற பிரச்சினையாக இருப்பதால், இந்தப் பிரச்சினைக்கு முற்றுப்புள்ளியை நீங்கள் வைக்க வேண்டும். விரைவிலே அவர்கள் எல்லாம் பரீட்சை எழுதி, நுழைவுத் தேர்வுக்குச் சென்று அவர்கள் எல்லாம் பி.இ.-க்கோ, எம்.பி.பி.எஸ்-க்கோ போகக்கூடிய கால கட்டம். இந்த நேரத்தில் இந்தப் போராட்டத்தை நாம் எப்படியாவது முடிவுக்குக் கொண்டு வர வேண்டும். இதிலே அவர்கள் தங்களுடைய கோரிக்கையை வலியுறுத்தக் கூடாது என்று சொல்வதோ, அல்லது நாம் இறங்கிப் போய் அவர்களோடு பேசக்கூடாது என்று சொல்வதோ நன்றாக இருக்காது. இருவரும் கொஞ்சம் விட்டுக் கொடுத்துப் பேசி, இந்தப் பிரச்சினைக்கு முற்றுப்புள்ளி வைக்க வேண்டும். அதற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும், மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களும் ஆவன செய்வார்களா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வை. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பிளஸ்-2 விடைத்தாள்கள் திருத்தும் பணி மாநிலம் முழுவதும் தேக்கம் அடைந்திருக்கின்ற காரணத்தால் பல்வேறு பிரச்சினைகள் எழுந்திருக்கின்றன. குறிப்பாக தமிழகத்தைச் சேர்ந்த மாணவர்கள், பிற மாநிலங்களில் ஒதுக்கப்படும் இடங்களைப் பெறுவதற்கு காலதாமதம் ஏற்படும் என்ற அச்சம் வெளியிடப்பட்டிருக்கிறது. தமிழ்நாட்டிலும் தொழிற்படிப்பு சேர்க்கை பாதிக்கப்படலாம் என்று சொல்லப்படுகிறது. ஆக, போராட்டத்தின் மூலமாக இப்படிப்பட்ட பிரச்சினைகள் மாணவர்களுக்கு எழுந்திருக்கிறது. இந்தச் சங்கடங்களைப் போக்குகிற வகையில் அவர்களுடைய பிரச்சினைகளைப் பேசித் தீர்வு



காணுவதற்கு முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும். குறிப்பாக காய்த்த மரத்திலேதான் கல்லடி படும் என்பார்கள். அதுபோல, இந்தியாவிலேயே மத்திய அரசுக்கு இணையான ஊதியம் வழங்குகிற மாநிலங்களில் தென்னகத்திலே தமிழகம்தான் மிகச் சிறப்பாக விளங்குகிறது. இந்தியாவிலேயே தென்மாநிலங்களிலே இந்த ஊதிய உயர்வை முறையாக வழங்கியிருக்கிற இந்த மாநிலத்திலே இப்படிப்பட்ட பிரச்சினையும், சங்கடமும் இருக்கிறது என்பது சிரமத்திற்குரிய ஒன்றுதான். இருந்தாலும், ஆசிரியர்களுடைய கோரிக்கையைப் பரிசீலித்து மாணவர்களுடைய நலனைப் பாதுகாக்கத்தக்க வகையிலே உடனடியாக இதற்குத் தீர்வு கண்டு இந்த விடைத்தாள்களைத் திருத்தி மாணவர்களுக்கு உதவ வேண்டியது அவசியம் என்று இந்த நேரத்திலே குறிப்பிட்டு முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி. நிஜாமுதீன்.

*** திரு. ஜி. நிஜாமுதீன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு சமுதாயத்தை உருவாக்குகின்ற பொறுப்பு ஆசிரியர்களுக்கும், காவல் துறையினருக்கும் உண்டு. காவல் துறையினர் சமுதாயத்தைக் கட்டிக்காக்கின்ற பொறுப்பிலே உள்ளவர்கள் என்று சொன்னால், சமுதாயத்தின் அடித்தளத்தையே உருவாக்கக்கூடியவர்கள் ஆசிரியர்கள். அவ்வளவு பெரிய பொறுப்பைப் பெற்ற ஆசிரியர்களே இன்றைக்கு புறம்பான முறையில் போராடுகிறார்கள் என்று சொன்னால் அது முறையாகாது. மத்திய அரசின் ஊதிய உயர்வுக்கேற்ப இந்த மாநில அரசு முறையான ஊதிய விகிதங்களை அறிவித்து இருக்கிறது. இன்றைக்குக்கூட அகவிலைப் படியை உயர்த்தி அறிவித்திருக்கிறார்கள். இந்த நிலையிலே மத்திய அரசு அறிவித்திருக்கிற மேம்பட்ட ஊதியம் வேண்டுமென்று ஆசிரியர்கள் போராடுகிறார்கள். போராட்டத்திற்கு எத்தனையோ முறைகள் இருக்கின்றன. இதற்குப் பணயம் வைத்து நீ இதைத் தந்தால்தான் நான் அதைச் செய்வேன் என்று ஒரு முறையற்ற நிலையிலே, நாகரிகமற்ற முறையிலே ஆசிரியர்கள் நடந்துகொள்வார்கள் என்று சொன்னால் அது இந்த நாட்டினுடைய சமுதாய நலனையே மிகவும் பாதிக்கும்; கேலிக்கூத்தாக்கிவிடும். ஆசிரியர்கள் ஒழுங்காக நடந்துகொள்ள வேண்டும். மற்ற துறையினரைவிட ஆசிரியர்களுக்கு அதிகமான சம்பளத்தைத் தமிழகத்திலே வழங்குகிறார்கள்;

அதுமட்டுமல்ல, அதிகமான விடுமுறைகளும் வழங்கப்படுகின்றன. ஒரு நாளைக்கு 5 மணிநேரம் தான் அவர்கள் வேலை செய்கிறார்கள். இப்படி ஒரு அருமையான சந்தர்ப்பத்திலே இருந்து கொண்டு, இந்தமாதிரி பணயம் வைத்துப் போராடுகிற முறையை அவர்கள் மேற்கொண்டால் அது இந்த நாட்டினுடைய கல்வியை மட்டுமல்ல, இந்த நாட்டினுடைய கட்டமைப்பையே பாதிக்கும். எனவே பொறுப்புள்ள ஆசிரியர்கள் இதை உணர்ந்து போராட்டத்தைக் கைவிட்டு முறையான பேச்சுவார்த்தை நடத்தி தீர்வுக்கு வழிகாண முன்வரவேண்டும் என்று கேட்டுக்கொண்டு, அதற்கு இந்த அரசு ஆவன செய்யவேண்டும், இல்லையென்றால் முறையான நடவடிக்கை எடுத்து பிளஸ்-2 விடைத்தாள்களைத் திருத்துவதற்கு இந்த அரசு ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டு அமர்கின்றேன். நன்றி.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. இரா. தாமரைக்கனி.

***திரு. இரா. தாமரைக்கனி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மத்திய அரசு ஆசிரியர்களுக்கு வழங்கும் ஊதியத்தைப்போல மாநில அரசு ஆசிரியர்களுக்கும் ஊதியம் வழங்க வேண்டுமென்று ஆசிரியர்கள் நடத்தும் போராட்டம் நியாயமான போராட்டம்தான். மத்திய, மாநில அரசுப் பள்ளிக்கூட அமைப்பு வெவ்வேறாக இருந்தாலும், கல்வித் தகுதி ஒன்றாக இருக்கிற காரணத்தினால் தமிழக அரசு அந்த ஊதியத்தை உயர்த்துவதற்கு வேண்டிய நடவடிக்கை எடுக்க வேண்டும். அதுமட்டுமல்லாமல் இங்கே பிளஸ்-2 பரீட்சை பேப்பரை ஆசிரியர்கள் திருத்தவில்லை. ஏன் திருத்தவில்லை என்றால் கையிலிருந்து 1,500 ரூபாய், 2,000 ரூபாய் செலவழித்துத்தான் அவர்கள் பரீட்சைப் பேப்பரைத் திருத்த வேண்டிய நிலை இருக்கிறது. 15 நாட்களுக்கு பேப்பர் திருத்த ஒரு நகரத்திற்குப் போக வேண்டிய சூழ்நிலை வருகிறது. எப்படி கையிலிருந்து அவர்களால் போட முடியும்?

முற்பகல் 10-45

45 ரூபாய் கொடுக்கிறீர்கள். அதில் ஒரு நாள் படி என்று 30 ரூபாயும், சிற்றுண்டிக்கு என்று 15 ரூபாயும் கொடுக்கிறீர்கள். அந்த 45 ரூபாய் எப்படி அவர்களுக்குப் போதுமானதாக இருக்கும்? ஒரு டவுனுக்குப் போனால், அங்கே உள்ள பள்ளிக்கூடத்தில் தங்க முடியாது. ஏனென்றால் அங்கே நுழைவுத் தேர்வுகள் நடந்து கொண்டிருக்கின்றன. வெளியிலே, எங்காவது லாட்ஜில்தான் தங்க முடியும். மேலும் பள்ளிக்கூடங்களில் தண்ணீர் வசதி இருக்காது, மின்சார வசதி



இருக்காது. இதுபோன்ற நிலைமைகள் எல்லாம் இருக்கின்றன. நகரத்திலே தங்கி விடைத்தாள்களைத் திருத்த வேண்டுமென்றால், காலை டிபனுக்கு 15 ரூபாய், டீ, சிகரெட்டுக்கு 5 ரூபாய், மதிய சாப்பாட்டிற்கு குறைந்தது 20 ரூபாய், மாலை காப்பிக்கு 10 ரூபாய், இரவு டிபன் செலவுக்கு 15 ரூபாய், தங்கி இருக்கும் இடத்திற்குச் சென்று வர பேருந்துக் கட்டணமாக 5 ரூபாய், அறை வாடகை 50 ரூபாய் என்று வைத்துக்கொண்டால் மொத்தம் 120 ரூபாய் செலவாகும். அதிலே, நீங்கள் 100 ரூபாய் கொடுத்தால் அவர்கள் விடைத்தாள்களைத் திருத்துவார்கள். எனவே, அரசாங்கம் தாயுள்ளத்தோடு ஆசிரியர்களுடைய கோரிக்கையை நிறைவேற்றுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஐ. கணேசன்:

**திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பிளஸ்-2 விடைத்தாள்கள் திருத்தப்படாததன் காரணமாக மாணவர்களும் பெற்றோர்களும் உள்ளபடியே பதற்ற நிலையில் இருக்கிறார்கள் என்பதை, கல்வி அமைச்சர் உணர்ந்து ஆசிரியர் குழுவை அழைத்து நியாயமான பேச்சுவார்த்தை நடத்தி, அவர்களுக்குப் போதுமான அளவுக்கு, நியாயத்தின் அடிப்படையிலே ஊதிய உயர்வை வழங்க வேண்டும். எங்களுடைய கிராமங்களிலே ஒரு பழமொழி சொல்லுவார்கள். 'உள்ள மயிருக்குக் கொண்டை போட வேண்டும்' என்று சொல்லுவார்கள். ஆனால் இப்போது பெண்கள் இடுமயிரை வைத்துக்கொண்டு குதிகால் வரை தொங்க விட்டுக்கொண்டு நடப்பது ஒரு வாடிக்கையாக இருக்கிறது. அதைப்போலத்தான்—உண்மையை இந்த அவைக்கு சொல்லிக்கொள்கிறேன்—மின்கட்டண உயர்வாகட்டும், பஸ் கட்டண உயர்வாகட்டும் எதிர்க்கட்சிகள் சுட்டிக்காட்டும்போது ஆந்திராவைப் பாருங்கள், கர்நாடகத்தைப் பாருங்கள் என்று அரசு தரப்பிலே கூறப்படுகிறது. அதைப்போல ஆசிரியர்களும் நம்முடைய சம்பள விகிதத்திலே டெல்லியை உதாரணம் காட்டி மத்திய அரசு வழங்கக்கூடிய அளவுக்கு மாநில அரசு வழங்க வேண்டுமென்று சொல்லுகிறார்கள். அதையேதான் இவர்களும் கேட்கிறார்கள். மத்திய அரசு கொடுக்கக்கூடிய சம்பள விகிதத்தை எங்களுக்கும் தரவேண்டுமென்று கோரிக்கை வைத்திருக்கிறார்கள். பல்வேறு கோரிக்கைகளை வைத்து வாதாடுகிறார்கள். அவர்களுடைய நியாயமான உணர்வை மதித்து, பெற்றோர்களும் ஆசிரியர்களும் பதற்றமான சூழ்நிலையில் இருப்பதைத் தடுத்து, அரசும் ஆசிரியர்களும் ஒரு சுமுகமான சூழ்நிலைக்கு

வரவேண்டுமென்று கேட்டுக்கொண்டு, இது மாணவர்களுடைய மிக முக்கியமான பிரச்சினை என்பதை அரசு கவனத்தில் கொண்டு நல்ல தீர்வைக் கொடுக்க வேண்டுமென்று இந்த அவையிலே கேட்டு அமைகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. லா. சந்தானம்.

***திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மத்திய அரசு ஆசிரியர்களுக்கு இணையான சம்பளம் வழங்க வேண்டுமென்று கோரி, பிளஸ்-2 விடைத்தாள்களைத் திருத்தாமல் ஆசிரியர்கள் புறக்கணித்ததோடு, நேற்றையதினம் இயக்குநர் அலுவலகத்திற்கு முன்பாக தங்களுடைய கோரிக்கைகளை வலியுறுத்தி ஆர்ப்பாட்டம் செய்திருக்கிறார்கள். இந்த பிளஸ்-2 விடைத்தாள்களைப் போல வருகின்ற காலங்களில் எஸ்.எஸ்.எல்.சி. விடைத்தாள்களையும் திருத்தாது, அவர்களுடைய கோரிக்கைகளை வலியுறுத்துவது என்று பட்டதாரி ஆசிரியர்கள் திட்டமிட்டிருக்கிறார்கள் என்று அறிகிறேன். அவர்களுடைய கோரிக்கைகளை முழுமையாக ஏற்றுக்கொள்வதற்கு இன்றைக்கு அரசினுடைய நிதிநிலை ஏற்புடையதாக இல்லை என்று சொன்னாலும்கூட, கடந்த ஆண்டுகளில் அவர்களுடைய சம்பள விகிதாச்சாரம் வருவாய்த் துறை தாசில்தாருடைய அடிப்படைச் சம்பளத்திற்கும், காவல் துறை இன்ஸ்பெக்டர் என்று சொல்வார்களே, அந்த காவல் துறை ஆய்வாளர்களுடைய அடிப்படைச் சம்பள விகிதத்திற்கும் ஒத்ததாக இருந்தது என்றும், ஆனால் இப்போது அவர்களுடைய சம்பள விகிதத்திற்கும் இவர்களுடைய சம்பள விகிதத்திற்கும் மிகுந்த மாறுபாடு இருக்கிறது என்பதையும் அவர்கள் சுட்டிக்காட்டியிருக்கிறார்கள். ஆகவே, முடிந்த அளவிற்கு, எழுத்தறிவித்தவன் இறைவன் ஆவான் என்பதுபோல, நமக்கெல்லாம் கல்வியைத் தந்தவர்கள் அந்த ஆசிரியர்கள்தான் என்கின்ற முறையில் நமது கருணை உள்ளம் கொண்ட முதலமைச்சர் அவர்களும், கல்வியிலே சிறப்புறக் கற்று, அந்தக் கல்வியைக் கற்றுத்தந்த நமது பேராசிரியர் அவர்களும் கருணை உள்ளத்தோடு, அவர்களுடைய கோரிக்கையைப் பரிசீலித்து அவர்களிடம் பேச்சுவார்த்தை நடத்தி அதற்கு விரைவாக நல்லதொரு தீர்வைக் காணவேண்டுமென்று கூறி அமைகிறேன்.

முற்பகல் 10-50

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. டி. மணி.



***திரு. டி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பிளஸ்-2 மாணவ-மாணவியர் நான்கு இலட்சம் பேர்களுடைய விடைத்தாள்களைத் திருத்தும் முயற்சியில் ஈடுபடாமல் ஆசிரியர்கள் மத்திய அரசினுடைய ஊழியர்களுக்கு இணையான சம்பளம் தங்களுக்கும் வேண்டுமென்ற கோரிக்கையினை வைத்தும், ஒரு விடைத்தாளினைத் திருத்துவதற்கு ரூ.2.50-க்கு பதிலாக ரூ.5.00 வேண்டுமென்ற கோரிக்கையினையும் இணைத்தும் ஒரு போராட்டத்திலே இறங்கியுள்ளார்கள். மத்திய அரசு ஊழியர்களுக்கு இணையான சம்பளம் வேண்டுமென்ற கோரிக்கையை நான் ஏற்கெனவே இந்த மாமன்றத்தில் ஒருமுறை சொல்லியிருக்கிறேன். இருந்தாலும் இப்போது இருக்கின்ற பிரச்சினையைத் தீர்ப்பதற்கு ஆசிரியர் பெரு மக்களையும் அது போன்ற அவர்களுடைய இயக்கத்தைச் சேர்ந்தவர்களையும் ஏற்கெனவே பலமுறை அழைத்துப் பேசினாலும் இன்றைய காலகட்டத்தில் இந்தப் பிரச்சினை மேலும் நீட்டித்துப் போகாமல் இதில் ஒரு சுமுகமான தீர்வினைக் கொண்டு வருகின்ற வகையில் நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும், மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களும் இந்தப் பிரச்சினையை ஆழமாகப் பரிசீலித்து ஒரு தீர்வை ஏற்படுத்தி மாணவர்களுக்கும் அதுபோல ஆசிரியர்களுக்கும் பிரச்சினை எழாமல் இந்த விஷயத்தை முடிக்க உதவ வேண்டும் என்று கேட்டு அமைகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்.

**திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு மேல்நிலைப் பள்ளி மாணவர்களுடைய விடைத்தாள்களைத் திருத்தும் பணியினை முற்றிலுமாகப் புறக்கணித்து ஆசிரியர்கள் போராட்டத்தில் இறங்கியிருக்கின்றார்கள். மாதா, பிதா, குரு, தெய்வம் என்று சொல்வார்கள். அந்த அளவிற்கு உயர்வாகக் கருதப்படவேண்டியவர்கள் ஆசிரியர்கள். அதேபோல மற்றவர்களுக்கு எல்லாம் வழிகாட்டியாகத் திகழ வேண்டியவர்களும் ஆசிரியர்கள்தான். அப்படியிருந்தும்கூட. அந்த ஆசிரியர்கள், இந்த நேரத்தை அதாவது இந்த ஒரு நெருக்கடியான நேரத்தில் மாணவர்களுடைய விடைத்தாள்களைத் திருத்தும் இந்த நேரத்தை ஒரு கருவியாகப் பயன்படுத்தி அவர்கள் இந்தப் போராட்டத்தில் இறங்கியிருப்பது உண்மையிலேயே வருத்தம் அளிக்கின்றது. எந்தவிதமான ஊழியர்களுடைய கோரிக்கைகளாக இருந்தாலும் இந்த அரசு தாய்

[திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்][1998 ஏப்ரல் 24

உள்ளத்தோடு, பரிவோடு நிறைவேற்றக்கூடிய அரசாக இருக்கின்றது. இந்த அரசு கொடாக்கண்டனாக இருந்தால் அவர்கள் விடாக்கண்டனாக இருந்து போராடுவது சரியாக இருக்கும். ஆனால் கேட்பதை எல்லாம் தருகின்ற அரசாக இந்த அரசு இருக்கின்றபோது, இந்த நேரத்தை, மாணவர்களுடைய எதிர்காலத்தைப் பாழடிக்கின்ற வகையில் இந்த நேரத்தை அவர்கள் தேர்ந்தெடுத்திருப்பது முற்றிலும் வருத்தத்திற்குரியது.

இருந்தாலும்கூட நம்முடைய அரசானது இதில் அவர்களை உடனடியாக அழைத்துப் பேச வேண்டும். ஏற்கெனவே மத்திய ஊதிய விகிதம் முன்னர் வழங்கப்பட்டபோது, அதே ஊதிய விகிதம் அவர்களுக்கு வழங்கப்பட்டதாகக் கூறுகிறார்கள். ஆனால், இப்போது முதலமைச்சர் அவர்களும், மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களும் அவர்களிடம் பேசுகின்றபோது அதே ஊதியம் வழங்கப்படும் என்று தெரிவித்தார்கள் என்றும் ஆனால், அதிகாரிகள்தான் இந்த விஷயத்தில் இடையிலே புகுந்து அவை எல்லாம் தரப்பட வாய்ப்பில்லை என்று சொல்வதாகவும் அந்த அமைப்பைச் சார்ந்தவர்கள் சொன்னார்கள். ஆகவே, மத்திய அரசு ஆசிரியர்களுக்கு வழங்கப்படுகின்ற அதே ஊதிய விகிதத்தை மாநில அரசு ஆசிரியர்களுக்கும் வழங்கப்படுவதிலே என்ன சங்கடம் இருக்கின்றது என்பதையெல்லாம் அவர்களை அழைத்துப் பேசி ஒரு சுமுகமான சூழ்நிலையை உருவாக்குவதற்கு மாநில அரசு முன்வரவேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன். அதேபோல, விடைத்தாள்களைத் திருத்துவதற்குரிய கட்டணத்தையும் சற்று உயர்த்தி வழங்குவதற்கு அரசு ஆவன செய்ய வேண்டுமென்றும் நான் இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன். எனவே, உடனடியாக அவர்களை அழைத்துப் பேசி இந்தப் பிரச்சினைகளுக்கு முற்றுப்புள்ளி வைக்க வேண்டுமென்று கேட்டு அமருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** டாக்டர் க. கிருஷ்ணசாமி.

முற்பகல் 10-55

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேல்நிலைப்பள்ளி ஆசிரியர்கள், தேர்வுத்தாள்கள் திருத்துவதற்காக இப்போது கொடுக்கக்கூடிய கட்டணத்தை இரண்டு மடங்காகக் கொடுக்க வேண்டும் என்று வற்புறுத்தியும், அதேபோல, மத்திய அரசு



1998 ஏப்ரல் 24] [டாக்டர் க. கிருஷ்ணசாமி]

ஊழியர்களுக்கு இணையான சம்பளம் கொடுக்க வேண்டுமென்று வலியுறுத்தியும், தேர்வுத் தாள்கள் திருத்தும் பணியினை நிறுத்திவைத்து அவர்கள் நடத்துகின்ற போராட்டம் காரணமாக, இலட்சக் கணக்கான மாணவர்களுடைய எதிர்காலம் பாதிக்கப்படக்கூடிய நிலையில் இருக்கிறது. எனவே, அரசு உடனடியாக, முறையான நடவடிக்கை எடுத்து மாணவர்களுடைய எதிர்காலம் பாதிக்கப்படாத வகையிலும், ஆசிரியர்களுடைய கோரிக்கையை நிறைவேற்றுகின்ற வகையிலும் நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று இம்மாமன்றத்தின் வாயிலாகக் கேட்டுக்கொண்டு, அமைகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு கல்வி அமைச்சர்.

***மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர்கள் இந்தப் பிரச்சினையை அவசரப் பொது முக்கியத்துவம் உள்ள பிரச்சினையாக எழுப்பி அரசினுடைய கவனத்தை ஈர்க்க முன்வந்த நிலையில் எடுத்துச்சொன்ன அந்தக் கருத்துக்களினுடைய உணர்வுகளை நான் அறிந்திருக்கிறேன், அந்த உணர்வுகளை நான் வரவேற்கிறேன்.

நம்முடைய அரசு, மாநில அரசு ஊழியர்கள், ஆசிரியர்கள், இவர்கள் யாராக இருந்தாலும் அவர்களுடைய குறைகளைப் போக்குகின்ற முறையிலே ஒன்றாக, அவர்களுடைய ஊதியத்தையும், அகவிலைப் படியையும் எவ்வப்பொழுதெல்லாம் உயர்த்த வேண்டிய அவசியம் ஏற்படுகிறதோ அவ்வப்பொழுதெல்லாம் உயர்த்தி வழங்கி வருகின்ற அரசு என்பதை நாம் எல்லோரும் நன்றாக அறிவோம். அந்த முறையில், மத்திய அரசு ஊழியர்களுக்கு வழங்கப்பட்ட ஊதிய விகிதங்களை மாநில அரசு ஊழியர்களுக்கு வழங்குவது பற்றி, அதை அப்படியே எடுத்து நேரிடையாக, இன்னின்னார்க்கு இன்னின்ன படி நிலை என்று வழங்க இயலாது. எனவே, அவற்றை முறைப்படுத்தி வழங்க, ஆறு நபர்களைக் கொண்ட அலுவலர் குழு ஒன்றை அரசு நியமித்தது. அக்குழுவின் பரிந்துரைகளுக்கேற்ப, 25 ஊதிய விகிதங்கள் மாநில அரசு ஊழியர்களுக்கு, ஆசிரியர்கள் உட்பட வழங்கலாம் என முடிவு எடுத்து அறிவிக்கப்பட்டது. அந்த அறிவிப்பைக்கூட, நம்முடைய தமிழக முதல்வர் அவர்கள், அரசு அலுவலர்கள், ஆசிரியர்கள் சங்கங்களைச் சேர்ந்தவர்களையெல்லாம் அழைத்து பல குழுக்களாக, ஒரே நிலையிலே உள்ள அந்தப் படி நிலையிலே உள்ளவர்களுடைய குழுக்களை அழைத்துப்பேசி, அவர்களிடம் இந்த அரசு எடுத்திருக்கிற முடிவை

அறிவித்து, அதை அவர்களும் ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொண்டுதான் அதற்குப் பின்னர் அறிவிக்கப்பட்டது அவர்களுடைய ஊதிய நிலை.

அப்படி அறிவிக்கப்பட்டும்கூட, தற்போது ஆசிரியர் சங்கங்கள் ஒரு பொதுவான கோரிக்கையை அரசு முன் வைத்துள்ளன. அதாவது, மத்திய அரசு ஆசிரியர்களுக்கென பல பிரிவுகள் உட்பட தனியான ஊதிய விகிதங்களை நிர்ணயித்துள்ளது. அதுபோல, மாநில ஆசிரியர்களுக்கும் தனியான ஊதிய விகிதங்கள் நிர்ணயிக்கப்பட வேண்டுமென்பது ஆசிரியர் சங்கங்களினுடைய பொதுவான, ஒருமித்த கோரிக்கையாகும்.

ஐந்தாவது ஊதியக் குழு நிர்ணயித்த ஊதிய விகிதங்களுக்கு முன்னர் இருந்தவாறு நடுநிலைப் பள்ளித் தலைமை ஆசிரியர்களுக்கேற்ப, பட்டதாரி ஆசிரியர்களுக்கும், தமிழாசிரியர்களுக்கும் ஊதிய விகிதம் நிர்ணயிக்கப்பட வேண்டும் என்பதும், உயர்நிலைப் பள்ளி தலைமையாசிரியர்களுக்கும், முதுநிலை ஆசிரியர்களுக்கும் சம ஊதியம் நிர்ணயிக்கப்பட வேண்டும் என்பதும் அவர்களுடைய முக்கியமான கோரிக்கைகளில் அடங்கும்.

குறிப்பாக, மத்திய அரசு, அனைத்து ஊழியர்களுக்கும் படி நிலைப்படி அமைத்த ஊதிய விகிதத்திலே இருந்து ஆசிரியர்களுக்கு மட்டும் அந்த ஒவ்வொரு படி நிலையிலேயும் அவர்களுடைய ஊதியத்தை மட்டும் அதிகப்படுத்தி அறிவித்து விட்டார்கள். மத்திய அரசிலே ஆசிரியர்களுடைய எண்ணிக்கையை விகிதாச்சார அடிப்படையிலே பார்த்தால், அது 2 விழுக்காடு அல்லது 3 விழுக்காடுதான் வரும். நம்முடைய மாநில அரசு ஊழியர்களுடைய அளவிலே பார்த்தால் 30 விழுக்காடு ஆசிரியர்கள் எண்ணிக்கை வரும். இங்கே 10 இலட்சம் பேர்களுக்கு 3 இலட்சம் பேர்கள் என்றால், அங்கே ஏறத்தாழ 70 இலட்சம், 80 இலட்சம் பேர்களுக்கு 2 இலட்சம் பேர்தான் ஆசிரியர்கள் வருவார்கள். அந்த எண்ணிக்கை குறைவு. ஆகவே, அவர்கள், அவர்களுக்கு மட்டும் ஒரு படி நிலையிலே அதிகப்படுத்தி அறிவித்து விட்டார்கள். எந்த ஒரு காலகட்டத்திலும், இன்னின்ன படிப்புக்கு, தகுதியும் பயிற்சியும் உள்ளவர்களுக்கு, சமச்சீர் ஊதியம் வழங்குவது என்பது அரசு ஏற்றுக் கொண்டிருக்கிற ஒரு முறையான கொள்கை.





முற்பகல் 11-00

அந்தக் கொள்கையின்படி ஏற்கெனவே தமிழக அரசு பழைய கமிஷன் ஊதிய விகித அறிவிப்பு வந்த போதெல்லாம் சமநிலைப்படுத்தக்கூடிய ஒரே நிலையில் உள்ளவர்களுக்கு—ஆசிரியராக இருந்தாலும், எழுத்தராக இருந்தாலும், ஜூனியர் என்ஜினியர் ஆக இருந்தாலும், எல்.டி. ஆசிரியராக இருந்தாலும், அந்த நிலையை ஒரு நிலையில் வைத்து ஊதியம் வழங்குவது தமிழக அரசு மேற்கொண்ட முறை; கடந்த காலத்திலே செயற்படுத்தப்பட்ட முறை. அந்த முறைப்படி இப்போதும் செயல்படுத்துவதற்கு அரசு முன்வந்து இருக்கிறது. ஆனால், மத்திய அரசு அதிகப்படுத்தி வழங்கிய அந்த ஊதியத்தை ஆசிரியர்களுக்கு வழங்க வேண்டும் என்பது அவர்களுடைய வேண்டுகோள். ஒரே ஒரு கருத்தை மட்டும் சொல்ல விரும்புகிறேன்.

மத்திய அரசு செய்கிற காரியத்தை எல்லாம் செய்வதற்கு ஒரு மாநில அரசால் முடியாது. பல தவறுகள்கூட அங்கே நடைபெறலாம். அதிலே, ஒரே நிலையிலே வைத்து வழங்கப்பட வேண்டிய ஊதியத்தை, ஒரு சாராருக்கு மட்டும், குறிப்பிட்ட எண்ணிக்கையிலே, குறைவான எண்ணிக்கையிலே உள்ளவர்களுக்கு அதிகப்படுத்தி அவர்கள் அறிவித்த காரணத்தால், அதேநிலையில் மாநில அரசு மேற்கொண்டு செய்யத் தலைப்படுமானால், இங்கே சமச்சீர்நிலை - parity என்ற முறையில், சம்பளம் பெற்ற மற்ற அலுவலர்கள் அதே ஊதியத்தை வழங்கச் சொல்லிக் கேட்கிற ஒரு நிலை ஏற்படுகிறது. அவர்களுடைய உரிமையை நாம் புறக்கணிக்க முடியாது. ஆகவே, இந்த அரசு மத்திய அரசு கொடுத்ததைவிட அதிகம் கொடுக்க வேண்டிய ஒரு இக்கட்டான நிலைக்கு ஆளாகிறது. ஆசிரியர்களிலே ஒரு பிரிவான 10 ஆயிரம் பேருக்கு ஊதியத்தை உயர்த்திக் கொடுத்துவிட்டு, மற்ற அலுவலர்களுக்கு, ஒரு இலட்சம் பேர்களுக்கு அந்த ஊதிய உயர்வைத் தரவேண்டி இருக்கிறது. மத்திய அரசு மற்ற ஊழியர்களுக்கு இல்லை என்று சொல்லிவிட்டு, ஆசிரியர்களுக்கு மட்டும் உயர்த்திக் கொடுத்து இருக்கிறது. தமிழக அரசு, மத்திய அரசு ஆசிரியர்களுக்கு மட்டும் உயர்த்திக் கொடுத்த அந்த முறையை ஏற்றுக்கொண்டு செயல்படுத்த முடியவில்லை என்பது ஏற்கெனவே ஆசிரியர்களிடத்திலே தெரிவிக்கப்பட்டு இருக்கிறது.

அதேபோல ஆசிரியர்களுக்கு 10 ஆண்டுகளுக்குமேல் தேர்வு நிலை, சிறப்பு நிலை என்று உயர்ந்த நிலையில் அவர்களுடைய ஊதியம் உயர்த்தப்படுகிறது, புரமோஷன் இல்லாத காரணத்தால், பதவி உயர்வு

இல்லாத காரணத்தால். அந்தத் தேர்வு நிலை எல்லாம்கூட மத்திய அரசு ஊதிய உயர்வு விகிதத்திலே இல்லை. சில வகையிலே பார்த்தால், குறிப்பிட்ட அலுவலர்களுக்கு மத்திய அரசு தருவதைவிட மாநில அரசு தருகிற ஊதியம் வாய்ப்பாக இருக்கிறது; வரவேற்கப்படுவதாக இருக்கிறது. மத்திய அரசு முறையைத்தான் கையாள வேண்டும் என்று சொல்லி, அதே முறையைக் கையாளுவதாக இருந்தாலும்கூட, மாநில அரசு மூலமாகப் பெறுகிற சில சலுகைகள், வாய்ப்புகள், தேர்வு நிலைகள்—இவைகளைக் கைவிடுவதற்கு ஆசிரியர்கள்கூடத் தயாராக இல்லை. இதையும் விடமுடியாது; அதையும் கொடுங்கள் என்பது அவர்களுடைய வேண்டுகோள். அதைக் கொடுக்க ஆரம்பித்தால், மற்றவர்களோடு நாங்கள் சமச்சீர்நிலை என்று சொல்லப்படுகின்ற நிலையைக் காப்பாற்ற முடியாத காரணத்தால், அது ஏற்றுக்கொள்ள முடியாது என்று கொள்கையளவில் திட்டவட்டமாக ஆசிரியர்களுக்குத் தெரிவிக்கப்பட்டு இருக்கிறது. எல்லா நிலையிலே உள்ள ஆசிரியர்களும்கூட தங்களுக்கு அதிக ஊதியத்தை மத்திய அரசிலே அந்தப் படி நிலையிலே உள்ளவர்களுக்கு வழங்கப்பட்டது எங்களுக்கு வழங்கப்பட வேண்டும் என்று கேட்க அவர்களுக்கு ஒரு இயல்பான நியாயம் இருக்கிறது. ஆனால், அரசு சில கொள்கைகளைப் பின்பற்றித்தான் செயல்பட முடியுமே தவிர, இல்லையானால் பல இலட்சக்கணக்கான ஊழியர்களுக்கு நாம் நடுநிலையில் நியாயமாக நடப்பதாக ஒரு தோற்றம் இருக்காது.

இரண்டாவது, ஏற்கெனவே இந்த முறையைத்தான் பின்பற்றி வருகிறோம். ஒரு தரத்தில் உள்ளவர்களுக்கு அந்த ஊதியம் குறைந்தால், அவர்களை 'அனாமலி' என்ற முறையில் உயர்த்துகிறோம். அந்தப் பகுதியிலே உள்ளவர்களுக்கு ஊதியம் குறைந்தாலும் 'அனாமலி' என்ற முறையில்—ஒரே படிப்பு, ஒரே தரம், ஒரே தகுதி என்று தீர்மானிக்கப்பட்டவர்கள் எந்தெந்தத் துறையிலே இருந்தாலும்—அவர்களுடைய சம்பளத்தை, ஊதியத்தைச் சமப்படுத்துகிற ஒரு முறையை தமிழக அரசு மேற்கொண்டு இருக்கிறது. அந்த முறையில் அந்த ஆசிரியர்களுக்கு இந்த விளக்கம் மிகப் பணிவோடு எடுத்துச் சொல்லப்பட்டு இருக்கிறது.

இதற்குமேல், கடந்த ஊதியக் குழு அறிவிக்கப்பட்டதற்கு முன்னால் இருந்து, மத்திய அரசு அறிவித்த கடந்த ஊதியக் குழுவால் அறிவிக்கப்பட்ட ஊதிய விகிதம் வழங்கப்பட்ட நேரத்தில் இங்கே



உள்ள பட்டதாரி ஆசிரியர்கள், நடுநிலைப்பள்ளி தலைமை ஆசிரியர்கள்—இரண்டு பேருக்கும் இடையில் ஒரு ஊதிய வேறுபாடு வந்துவிட்டது. ஒரு 'அனாமலி' வந்துவிட்டது. அதேபோல, போஸ்ட் கிராஜுவேட் ஆசிரியர்களுக்கும் உயர்நிலைப்பள்ளி தலைமை ஆசிரியர்களுக்கும் இடையில் ஒரு ஊதிய வேறுபாடு வந்துவிட்டது. அதிலே சில குறைபாடுகள் ஏற்பட்டது உண்மை. அது 7, 8 ஆண்டுகளுக்கு முன்னாலே கடந்த காலத்திலே ஏற்பட்ட குறைபாடு. அதை அவ்வப்போது நினைவூட்டிக் கொண்டு இருந்தார்கள். அந்தக் குறையைப் போக்க, இடைக்காலத்திலே நமக்கு வாய்ப்பு இல்லை. ஏனென்றால், இந்த ஊதியக் கமிஷன் வருகிறது; அதனுடைய அறிவிப்பு வருகிறபோது எல்லாம் சீர் ஆகிவிடும் என்று எதிர்பார்த்தோம்; அது ஆகவில்லை. அந்தக் குறையை எடுத்துச் சொன்னார்கள். அது காரணமாக அந்தக் குறைபாடுகளைப் போக்கலாம் என்பது அந்த ஆசிரியர்களுடைய சங்கப் பிரதிநிதிகளிடத்திலே தெளிவாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. ஆனால் ஆசிரியர்கட்கு மத்திய அரசு அறிவித்த ஊதியம் என்ற முறையில், ஊதியம் வழங்க இந்த அரசுக்கு கொள்கை அடிப்படையில் இயலாத நிலை இருக்கிறது.

முற்பகல் 11-05

இந்தக் குறைகளை, பட்டதாரி ஆசிரியர்களுக்கோ, முதுநிலைப் பட்டதாரி ஆசிரியர்களுக்கோ, தமிழாசிரியர்களுக்கோ, அவர்களுக்கு நியாயமாக இருந்திருக்கவேண்டிய அந்த ஊதியக் குறைபாடு, இடைக்காலத்திலே நிவர்த்திக்கப்படாத காரணத்தால், அவற்றை நிவர்த்திக்க அரசு முயற்சிக்கும் என்று தெரிவிக்கப்பட்டு, அது தொடர்பாக நானும் தொடக்கத்திலே பேசி, பின்னர் ஏறத்தாழ 2, 3 முறை கல்வித் துறை செயலாளர் அவர்களும், பள்ளிக் கல்வி இயக்குநரும் அந்தச் சங்க நிர்வாகிகளோடு பேசி, அந்தக் குறைகளைப் போக்குவதற்கு அரசு ஒத்துக்கொள்கிறது என்று அவர்களுக்குத் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. இந்தக் குறைகளைப் போக்கினாலே அவர்களுடைய பெரும்பகுதி குறைகள் நீங்கிவிடும் என்ற நம்பிக்கை ஏற்பட்டிருக்கிறது. அதற்கான உறுதிகள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. ஆனால் இடையில் ஒரு நபர் குழு ஒன்று இந்த 'அனாமலி'யைப் போக்குவதற்காக நியமிக்கப்பட்டிருக்கிறது. அதற்கிடையில் அரசாங்கமே ஒரு நீதிபதியை நியமித்துவிட்டபிறகு, ஒரு விசாரணைக் குழுவை நியமித்துவிட்டு, நாமே ஒரு முடிவை எடுத்து அறிவிக்க முடியாது.

[பேராசிரியர் க. அன்பழகன்] [1998 ஏப்ரல் 24

ஆனால் அரசு ஏற்றுக்கொண்ட அந்தக் கொள்கை அடிப்படையில் குறைகளை நிவர்த்திக்க வேண்டுமென்ற அடிப்படையில் அந்த ஒரு நபர் குழு மூலமாக—திரு. சிவசுப்ரமணியம் என்ற ஐ.ஏ.எஸ். அதிகாரி தலைமையில் நியமிக்கப்பட்ட அந்தக் குழு மூலமாக—இந்தக் குறைகள் நிவர்த்திக்கப்படுவதற்கு அரசு அவர்களுக்கு உறுதி கொடுத்திருக்கிறது. அந்த முறையில் பல்வேறு ஆசிரியர் பிரிவினருக்கு ஊதிய விகிதங்களில் ஏற்பட்டுள்ள ஊதிய விகித முரண்பாடுகளைக் களைய வேண்டுமென்பதை அரசு ஏற்றுக்கொண்டு, என்னென்ன குறைகள் இருக்கின்றன என்பதும்கூட அந்த ஒரு நபர் குழுவுக்குத் தெரிவிக்கப்பட்டு, அந்தக் குறைகள் களையப்படும் என்ற உறுதியையும் அவர்களுக்கு வழங்கியிருக்கிறோம்.

அந்த அடிப்படையிலே நிச்சயமாகக் குறைகள் களையப்படும் என்ற நம்பிக்கையோடு அவர்கள் தங்கள் போராட்டத்தைக் கைவிட்டு, விரைவில், வருகின்ற திங்கள்கிழமை முதல் தங்கள் பணியில் ஈடுபடக் கூடும் என்று நாங்கள் எதிர்பார்க்கிறோம். அவர்களும் ஏறத்தாழ ஒரு உடன்பாட்டு உணர்வோடுதான் சென்றிருக்கிறார்கள். இந்தக் குறைகள் தீர்ந்தாலே அவர்களுடைய பெரும் பகுதி குறைகள் தீர்ந்துவிடும் என்ற உணர்வு ஏற்பட்டிருக்கிறது.

மற்றும் ஒன்று, மத்திய அரசு ஊதிய விகிதம் இந்தியாவில் பல மாநிலங்களில் ஏற்றுக்கொள்ளப்படவில்லை, பின்பற்றப்படவில்லை. மூன்று, நான்கு மாநிலங்களில்தான் பின்பற்றப்பட்டிருக்கிறது. அந்த மாநிலங்களிலேகூட, ஆசிரியர்களுக்கு மத்திய அரசு இந்தமுறை அறிவித்த அந்த ஊதிய விகிதத்தை ஏற்கவில்லை. இன்னும் இரண்டொரு மாநிலங்களில் ஆசிரியர்களுக்கு இந்த ஊதிய விகித மாற்றமே தரப்படவில்லை. கடந்த காலத்தில் இருந்த ஊதிய விகிதம்தான். இப்போது நாம் அளித்த ஊதிய விகிதத்தின்படி, ஒவ்வொருவருக்கும் 1,000 ரூபாய், 1,500 ரூபாய், 2,000 ரூபாய் என்ற அளவுக்கு வேறுபாடு வரும். ஆனால் பல மாநிலங்களில் இது ஏற்கப்படவில்லை. அந்த விவரத்தைக் கூட நான் படித்துக்காட்ட வேண்டியவனாக இருக்கிறேன்.

இராஜஸ்தான், குஜராத், ஓரிசா, உத்திரப் பிரதேசம் போன்ற மாநிலங்களில் மைய அரசின் ஊதிய விகிதங்கள் மாநில அரசு ஊழியர்களுக்கு அளிக்கப்பட்டிருப்பதாகத் தெரிகிறது. அதாவது இந்த நான்கைந்து மாநிலங்களில் மட்டும்தான். தெற்கே உள்ள மாநிலங்களில் தமிழ்நாடு மாநிலம் தவிர வேறு எந்த மாநிலத்திலும் இது



1998 ஏப்ரல் 24] [பேராசிரியர் க. அன்பழகன்]

அறிவிக்கப்படவில்லை. மற்ற மாநிலங்களில் அதே முறை, அதாவது முன்னர் இருந்த ஊதிய விகிதத்திற்கு எவ்வித மாற்றமும் இன்றி ஊதிய விகிதம் செயல்படுத்தப்பட்டுள்ளது. ஆசிரியர்களுக்காகத் தரப்பட்ட அதிக ஊதியம் ஏற்றுக்கொள்ளப்படவில்லை. ஓரிசா மாநிலத்தில் இவ்வாறு செயல்படுத்தப்பட்ட ஊதிய விகிதங்களில் இடைநிலை ஆசிரியர்களுக்குத் தமிழக அரசு அளித்துள்ள ஊதிய விகிதங்களை விடக் குறைவாக இருப்பதும், மற்ற மாநிலங்களில் சமமாக இருப்பதும் இங்கே குறிப்பிடத்தக்கது என்று குறிப்பிட்டிருக்கிறார்கள்.

அதாவது தமிழ்நாட்டில்தான் இப்போதும்கூட ஆசிரியர்களைப் பொறுத்தவரையில் ஊதியங்களை வழங்குவதில் ஒரு முற்போக்கான அல்லது சற்றுத் தாராளமான முறையை மேற்கொண்டிருக்கிறோம் என்பதை நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

குறிப்பாக, அரசு ஊழியர்களிடையே ஒரு பிரிவைச் சார்ந்த அலுவலர்களுக்கு ஊதிய விகிதங்களை மாற்ற நேரிட்டால், அதன் விளைவாக அதே நிலையில் உள்ள மற்ற அரசு அலுவலர்களுக்கும் அத்தகைய ஊதிய விகிதத் திருத்தங்களை வழங்க நேரிடும் என்பதால், இதை மிகவும் கவனமாகப் பரிசீலித்து முடிவுகளை அரசு எடுக்கவேண்டும் என்பதையும் அரசின் சார்பிலே நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

அது மட்டுமல்ல, தேர்வுத்தாள் திருத்துவதற்கு, அவர்களுக்கு வழங்கப்பட்ட ஊதியம் குறைவாக இருக்கிறது என்று கடந்த இரண்டு ஆண்டுகளாகத் தெரிவித்து வந்தார்கள். கடந்த ஆண்டுகூட அதைப் பரிசீலனை செய்ய முயற்சித்தோம். அந்தப் பரிசீலனை காரணமாக இந்த ஆண்டு சில முடிவுகள் எடுக்கப்பட்டிருக்கின்றன. ஒவ்வொரு தாளுக்கும் இவ்வளவு ரூபாய் என்று வழங்கப்படுகிற முறையினால் மொத்தம் 50 தாள் 60 தாள் திருத்தப்படுகிறபோது, மொத்தத்தில் உயர்வு அதிகமாகும். எனவே அதை நான் தெரிவிக்க விரும்புகிறேன்.

முற்பகல் 11-10

எஸ்.எஸ்.எல்.சி., மெட்ரிக், மற்றும் இதரத் தேர்வுகளின் விடைத்தாள்களைத் திருத்துவதற்குத் தற்போது வழங்கிவரும் ஒரு விடைத்தாளுக்கு ரூ. 2-லேயிருந்து ரூ.2.75 ஆக உயர்த்தப்படுகிறது. மேல்நிலைத் தேர்வு மற்றும் ஆசிரியர் பயிற்சித் தேர்வு விடைத்

தாள்களைத் திருத்துவதற்கு தற்போது வழங்கிவரும் ஒரு விடைத் தாளுக்கு ரூ. 2.50-லிருந்து ரூ. 3.25 ஆக உயர்த்தப்பட்டுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி). இது ஒரு தாளுக்கு. அதேபோல, அரசுப் பொதுத் தேர்வுகளில் விடைத் தாள்களை மதிப்பீடு செய்வதற்காக மதிப்பீடு மையங்களுக்கு வரும் பணியாளர்கள் அடிப்படை ஊதிய விகிதம் ரூ. 3,000-மும் அதற்கு மேலே ரூ. 4,500-க்குக் கீழேயும் பெறுகிறவர்களுக்கு, சென்னையைப் பொறுத்தமட்டில் தற்போது வழங்கப்படும் தினப்படி ரூ. 100-லிருந்து ரூ.115 ஆக உயர்த்தப்படும். சென்னை அல்லாத மற்ற ஊர்களில் தற்போது வழங்கப்படும் ரூ. 60-லிருந்து ரூ. 75 ஆக உயர்த்தப்படுகிறது. அடிப்படை ஊதிய விகிதம் ரூ. 1,400-ம் அதற்கு மேலும், ரூ. 3,000-த்துக்குக் கீழேயும் உள்ளவர்களுக்கு சென்னையைப் பொறுத்தமட்டில் தற்போது வழங்கப்படும் தினப்படி ரூ. 80-லிருந்து ரூ. 95 ஆக உயர்த்தப்படுகிறது. சென்னை அல்லாத மற்ற ஊர்களில் தற்போது வழங்கப்படும் தினப்படி ரூ. 40-லிருந்து ரூ. 55 ஆக உயர்த்தப்படுகிறது.

தேர்வு முன் பணி மற்றும் தேர்வுப் பணிகள் காலங்களில் தலைமைக் கண்காணிப்பாளர், கூடுதல் கண்காணிப்பாளர் ஆகியோர் தற்போது பெற்றுவரும் மதிப்பூதியம் ரூ.12.50-லிருந்து ரூ. 15 ஆக உயர்த்தப்பட்டுள்ளது. தலைமை கஸ்டோடியன், உதவி கஸ்டோடியன், துறை அலுவலர், கூடுதல் துறை அலுவலர் ஆகியோர் தற்போது பெற்றுவரும் மதிப்பூதியம் ரூ. 10-லிருந்து ரூ. 12.50 ஆக உயர்த்தப்படுகிறது. உதவிக் கண்காணிப்பாளர்களுக்கு ரூ. 8-லிருந்து ரூ.10 ஆக உயர்த்தப்படுகிறது. எழுத்தாளர்களுக்கு ரூ. 7-லிருந்து ரூ. 9 ஆக உயர்த்தப்பட்டுள்ளது. அலுவலக உதவியாளர்கள், ஆய்வக உதவியாளர்கள் ஆகியோருக்கு ரூ. 5-லிருந்து 6 ரூபாயாக உயர்த்தப்படுகிறது. தண்ணீர் ஊற்றுபவர், துப்புரவாளர்கள் மற்றும் உள்ளவர்களுக்கு ரூ. 4-லிருந்து ரூ. 5 ஆக உயர்த்தப்படுகிறது. உள்ளூர் மற்றும் வெளியூர் தேர்வர்களுக்கு ரூ. 2-லிருந்து ரூ. 3 ஆக உயர்த்தப்படுகிறது. உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளித் தேர்வுக் கட்டணத்தை உயர்த்துவதன் மூலமாக மேற்கண்ட செலவுகள், ஏறத்தாழ ரூ. 1.5 கோடி, ரூ. 2 கோடி மதிப்புக்குச் செலவு ஆவதை ஈடு செய்ய வேண்டுமென்று தெரிவிக்கப்பட்டிருக்கிறது. ஆக இந்தவகையில், இதிலே ஆயிரக்கணக்கானவர்கள் ஈடுபடுகிற காரணத்தால் ஒவ்வொரு நிலையிலேயும் அதிகப்படுத்தித் தருவதன் மூலமாக அவர்களுடைய குறைகளை நீக்க அரசு தகுந்த முடிவெடுத்திருக்கிறது.



மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லாம் இங்கே எடுத்துச் சொன்னதன் அடிப்படையில், ஆசிரியர்களுடைய குறை என்பது மாணவர்களுடைய பெரும் குறையாக மாறுவதற்கு இடம் தரக்கூடாது என்ற கருத்தை அவர்கள் உணர்வார்கள் : உணர வேண்டும் என்று கேட்டுக்கொண்டு, அவர்கள் ஒத்துக்கொள்வார்கள் என்ற நம்பிக்கையோடு அரசு நியாயத்தின் அடிப்படையில் எப்போதும் கடமையாற்றும் என்பதைத் தெரிவித்து, இந்த வகையில் என்னுடைய விளக்கத்தைக் கூறி முடிக்கிறேன், வணக்கம்.

## (ஆ) மெட்ரிகுலேஷன் தேர்வுக்கான வினாத்தாள் தேர்வுக்கு முன்னரே வெளியானது

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்து, மெட்ரிகுலேஷன் தேர்வுக்கான வினாத்தாள் முன்கூட்டியே வெளிவந்தது குறித்து, திரு. பி.ஆர். சுந்தரம், திரு. சி. ஞானசேகரன், திரு. வை. சிவபுண்ணியம், திரு. நா. பெரியசாமி, திரு. ஜி.கே. மணி, திரு. ஜி. நிஜாமுதீன், திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன், டாக்டர் க. கிருஷ்ணசாமி, திரு. மு.அப்பாவு, டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன், திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன், திரு ஐ. கணேசன் ஆகியோர் சிறப்புக் கவன ஈர்ப்பாக எடுத்துக்கொள்ள அறிவிப்புக் கொடுத்திருக்கிறார்கள். கட்சிக்கு ஒருவர் என்கிற முறையில் முதலில் டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன் அவர்களைப் பேசுமாறு அழைக்கிறேன்.

**டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, . . .

**திரு. பி.ஆர். சுந்தரம்** : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முதலிலே நான்தான், அதாவது காலை 8 மணிக்கே நான் தீர்மானத்தைக் கொடுத்தேன். ஆகவே என்னைத்தானே நீங்கள் முதலில் கூப்பிட வேண்டும்......

**திரு. இரா. தாமரைக்கனி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முதலில் கொடுத்தவரைத்தானே முதலில் அழைக்க வேண்டும்.....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் உட்காருங்கள். நீங்கள் மூன்று பேரும் எழுந்து நிற்கின்றீர்களே, முதலில் நீங்கள் உட்காருங்கள். இதுவரையில் நான் கடைப்பிடிக்கின்ற மரபு—எண்ணிக்கையின்

அடிப்படையிலே முதலிலே எதிர்க்கட்சியிலே ஆரம்பித்து கொடுக்கப்படுகிறது. நான் நேற்றைக்கே ஒன்றை அறிவித்திருந்தேன். இத்தனை உறுப்பினர்கள் அறிவிப்புக் கொடுத்திருந்தாலும், அந்த வினாத்தாளின் நகலை திரு. பி.ஆர். சுந்தரம் அவர்கள்தான் இணைத்திருந்தார்கள் என்று நான் நேற்றைக்கே அறிவித்தேன். அதைத்தான் நான் செய்ய முடியும். டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தீர்மானத்தை நான்தானே முதலிலே கொடுத்தேன்.....

**திரு. இரா. தாமரைக்கனி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தீர்மானத்தை முதலில் கொடுத்தவரை அழைப்பதுதானே மரபு?.....

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பிரதான எதிர்க்கட்சியை முதலில் அழைப்பதுதான் மரபு.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அறிவிப்பை 10-30 மணிக்கு நீங்கள் கொடுத்தாலும், நான் அதைக் கேட்டுக்கொண்டு உங்களை அழைப்பேன். நீங்கள் உட்காருங்கள்.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது என்ன மரபு?.....

முற்பகல் 11-15

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இதுதான் மரபு.(குறுக்கீடு) இதுதான் மரபு. நான் சொல்லியாகி விட்டது. டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்.

**திரு. இரா. தாமரைக்கனி:** * *

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஆமாம். ** (குறுக்கீடு) பி.ஆர். சுந்தரம், நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடு) நீங்கள் ஆதாரபூர்வமாகக் கொடுத்தீர்கள். நேற்றைக்கே அறிவித்து விட்டேன். நீங்கள் இப்போது உட்காருங்கள். டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்.

**டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே..... (குறுக்கீடு)

---

**மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.





**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் உட்காருகிறீர்களா? இல்லையா?

**டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாணவப் பருவத்திலே முக்கிய பருவமாக இருக்கின்ற பள்ளி இறுதித் தேர்வுகளிலே...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. தாமரைக்கனி பேசியது அவைக்குறிப்பிலே இடம் பெறாது. (குறுக்கீடு) நீங்கள் உட்காருங்கள், இல்லையென்றால் அடுத்த நடவடிக்கை எடுப்பேன். (குறுக்கீடு) அது கிடையாது, இதுதான் என்னுடைய முடிவு. என்னுடைய தீர்ப்பை நீங்கள் விமர்சனம் செய்யக்கூடாது. டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்.

**டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பல இலட்சக்கணக்கான மாணவர்களுடைய தகுதியை நிர்ணயிப்பது தேர்வாகும். அந்தத் தேர்வுகளிலே கொடுக்கப்படுகின்ற வினாத்தாள்கள் தேர்வுக்கு முன்பாக வெளியாகி, பெற்றோர்கள் மற்றும் ஆசிரியர்கள் மத்தியில் பதற்றநிலை உருவாகியிருப்பதாகப் பத்திரிகைகளில் செய்திகள் வந்திருக்கின்றன. பொதுவாக, இத்தகைய வினாத்தாள்கள் தேர்வுக்கு முன்பாக வெளியாவது என்பது மிக விரும்பத்தகாத ஒன்றாகும். எப்படி அரசினுடைய நிதிநிலை அறிக்கை, அவைக்கு அளிக்கும் முன்னர் வெளியானால் ஒரு பதற்றநிலை உருவாகுமோ, அதேபோல ஒரு பதற்ற நிலை பொது மக்களிடையே உருவாகி இருக்கிறது. நேற்றைக்குக்கூட, இன்றைக்கு நடைபெறுகின்ற தேர்வான வரலாற்றுப் பாடத்தினுடைய வினாத்தாள் வெளியாகி இருப்பதாக செய்திகள் வெளியாகி இருக்கின்றன. இதிலே ஈடுபட்டிருக்கிற, நபர்கள் வெளியாவதற்கு காரணமாக இருக்கின்ற நபர்கள் யாராக இருந்தாலும், அவர்கள் அதிகாரிகளாக இருந்தாலும் அல்லது வேறு நபர்களாக இருந்தாலும் கடுமையாகத் தண்டிக்கப்பட வேண்டியவர்கள். இதிலே நான் ஒன்றைக் குறிப்பிட விரும்புகிறேன்.

இத்தகைய வினாத்தாள்களை வெளியிட்டு, ஒரு அரசுக்கு கெட்ட பெயர் உண்டாக்க வேண்டும் என்ற அரசியல் நோக்கத்தில் சிலர் செயல்படுகிறார்களோ என்ற சந்தேகம் எனக்கு ஏற்படுகிறது. நேற்றைக்குக்கூடக் நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.ஆர். சுந்தரம் ஒரு வினாத்தாளை எடுத்துக்கொண்டுவந்து, இந்த வினாத்தாள் உங்களுக்கு வேண்டுமா என்று எல்லா உறுப்பினர்களையும் கேட்டார். அவருக்கு அத்தகைய வினாத்தாள் எங்கிருந்து கிடைத்தது

என்பதை நான்.. (குறுக்கீடு) அதாவது தேர்வு நடைபெறுகின்றபோது அந்தத் தேர்வுக்குரிய வினாத்தாளை மாண்புமிகு உறுப்பினர் வைத்திருந்தார். ஆகவே அவர்களுக்கு வினாத்தாள் எங்கிருந்து கிடைத்தது என்பதை நான் அறிந்துகொள்ள விரும்புகிறேன். பொதுவாக இந்த அரசுக்கு எல்லா வகைகளிலும் இடையூறு விளைவிக்க வேண்டும். ஒரு கெட்ட பெயர் உண்டாக்க வேண்டும் என்றவொரு முயற்சி பல தரப்பிலே நடைபெறுகிறதா? என்பதை நான் ஐயுற்று கூற விரும்புகிறேன். நேற்றைக்குக்கூட மாலைப் பத்திரிகையிலே தமிழக முதல்வரைப் பற்றி ஒரு செய்தி, பதை பதைக்கும் வண்ணம் வந்திருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினாத்தாளைப்பற்றி மட்டும் பேசுங்கள். அதெல்லாம் தேவையில்லை, அதை அனுமதிக்க மாட்டேன். நீங்கள் வினாத்தாளைப்பற்றி மட்டும் பேசுங்கள்.

**டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்:** முக்கியமான செய்தி என்று நான் குறிப்பிட விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அதை நான் அனுமதிக்க முடியாது.

**டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்:** தமிழக முதல்வரை முற்றுகை இடுவதாக, தமிழ் அறிஞர்கள் எல்லாம் முற்றுகையிடுவதாக ஒரு செய்தி வந்திருக்கிறது. தமிழ் உணர்வுக்கு, தமிழை ஆட்சிமொழி ஆக்க வேண்டுமென்ற நோக்கத்திலே தமிழ் அறிஞர்கள் எல்லாம் தமிழக முதல்வரை இன்றைக்கு முற்றுகையிடுகிறார்கள் என்ற விதத்திலே ஒரு செய்தி வந்திருக்கிறது. தமிழ்ப் பற்றுக்கும், தமிழ் உணர்வுக்கும் இன்றைக்குத் தலையாக, தலைப்பாக இருக்கின்ற டாக்டர் கலைஞர் அவர்களை முற்றுகையிடுகின்ற இந்த நோக்கத்தை நான் குறை கூற விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) ஏனென்று சொன்னால் எந்த நோக்கத்திலும் எல்லா விதங்களிலுமே இந்தத் தமிழக அரசைக் களங்கப்படுத்த வேண்டும், தமிழக அரசின் நடவடிக்கைகளைக் குறை கூறவேண்டும், மக்களிடையே ஒரு அதிருப்தியை உண்டு பண்ண வேண்டும் என்ற வகையிலே பலபேர் செயல்பட்டு வருகிறார்கள் என்பதைக் கூறவே நான் அதைக குறிப்பிடுகிறேன். ஆகவே, இதிலே அரசியல் உள்நோக்கம் இருந்தால், சம்பந்தப்பட்ட நபர்களை, அதற்குத் துணை போகின்ற அதிகாரிகளைக் கடுமையாகத் தண்டிக்க வேண்டுமென்று அரசை கேட்டுக்கொண்டு உரையை நிறைவு செய்கிறேன். நன்றி, வணக்கம்.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. நா. பெரியசாமி.

***திரு. நா. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த 13 ஆம் தேதி தொடங்கி இன்றோடு முடிவு அடைய இருக்கிற 10 ஆம் வகுப்பு மற்றும் மெட்ரிகுலேஷன தேர்வுக்கான வினாத்தாள்கள்—ஒவ்வொரு நாளும், விதிமுறைகளுக்கு விரோதமாக, சட்டத்திற்கு விரோதமாக, வெளியாகிக் கொண்டு இருப்பதாகச் செய்திகள் வந்து கொண்டிருக்கின்றன. ஒருசில தினங்களுக்கு முன்பாகத்தான் இந்த அவையிலே இதுகுறித்து விவாதிக்கப்பட்டு தெளிவும் தரப்பட்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் திரு. இராமன் அவர்கள் குறிப்பிட்டதைப்போல, சில துறைகளிலே நெருக்கடி கொடுப்பதற்கான முயற்சிகளிலே சில கறுப்பு ஆடுகள் ஈடுபட்டிருக்கின்றன என்பதுதான் இந்தப் பிரச்சினையிலும் தெரியவருகிறது. அந்தக் கறுப்பு ஆடுகளைச் சில பேர்கள் ஊக்குவிக்கிறார்கள்' என்பதும், இந்தக் கல்வித் துறையிலே நடைபெறுவதாக நான் வலுவாகச் சந்தேகிக்கிறேன். அந்தக் கறுப்பு ஆடுகளினுடைய கழுத்துக்களை வெட்டக்கூடிய அளவுக்கு மிகச் சரியான, உறுதியான நடவடிக்கையை எடுக்க கல்வித் துறையை நாம் உஷார் படுத்தவேண்டிய கடமை நமக்கு இருக்கிறது என்பதை மிகவும் வற்புறுத்தி அமைகிறேன்.

முற்பகல் 11-20

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி. நிஜாமுதீன்.

**திரு. ஜி. நிஜாமுதீன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பத்தாம் வகுப்பு மற்றும் மெட்ரிகுலேஷன் தேர்வுக்கான வினாத்தாள்கள், தேர்வுக்கு முதல் நாளே, பேக்ஸ் மூலமும் மற்றும் கையால் எழுதப்பட்டும் வெளியாகின்றன என்ற செய்தி பத்திரிகையிலே வெளியாகி உள்ளது, மிகவும் கவலைதரக்கூடிய விஷயமாகும். 10 ஆண்டுகள் கஷ்டப்பட்டு, பயின்ற மாணவர்களின் நிலை இதுபோன்று குறுகிய வழியிலே முன்னேற வேண்டும் என்று நினைக்கும் மாணவர்களின் நிலையால் சேதப்படுத்தப்பட்டு இருக்கின்றது. இந்த வினாத்தாள்கள் எப்படி வெளியாகின்றன என்பதைக் கண்டுபிடிப்பது இன்றைய சூழ்நிலையிலே மிகவும் சுலபம். மாண்புமிகு உறுப்பினர் சுந்தரம் எவ்வாறு பெற்றார்களோ, அந்த வழியாகச் சென்றாலே, அந்தக் குற்றவாளி யார் என்பது தெரிந்து விடும். (மேசையைத் தட்டும் ஒலி) ஆகவே, அவரை

வைத்தே, அவர் யாரிடமிருந்து பெற்றார், அல்லது இதிலே உள்நோக்கம் கொண்டு பெற்றார்களா அல்லது உண்மையிலே இதுபோன்ற நிகழ்ச்சிகள் நடைபெறுகின்றனவா என்பதைக் கண்டறிந்து, எது எப்படி இருந்தாலும், தவறு, தவறுதான் என்பதைக் கண்டித்து, முறையாக நடவடிக்கை எடுத்து, தண்டனையையும் கடுமையாக்க வேண்டுமென்று கேட்டு அமைகிறேன். நன்றி.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பி.ஆர். சுந்தரம்.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே பேசிய எதிர்க்கட்சி உறுப்பினர்கள் அனைவருமே—நான் நேற்றைக்கு மெட்ரிகுலேஷன் தேர்விலே சயன்ஸ் 2 பேப்பர், அதாவது பாட்டனி, ஜுவாலஜி இரண்டும் வெளியாகிவிட்டது என்ற கருத்தை இந்த அவையிலே கூறினேன். அதனுடைய ஜெராக்ஸ் காப்பியையும் தங்களிடம் 8-00 மணிக்கே கொடுத்தேன். ஆனால், தற்போது பேசுகின்ற எதிர்க்கட்சி உறுப்பினர்கள், எப்போதுமே *ஒத்து ஊதுகின்ற விதத்திலே இந்த அரசு செய்த தவறைச் சுட்டிக்காட்டாமல், அந்த பேப்பர் எங்கேயிருந்து வந்தது...(குறுக்கீடு)

* **திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அவையிலே அங்கம் பெற்றிருக்கிற ஒவ்வொரு அரசியல் கட்சிக்கும் ஒவ்வொரு கொள்கை நிலை உண்டு. தங்கள் கொள்கை நிலையிலேயிருந்து பிரச்சினையை அணுகுவதை, **என்று சொல்வது என்பது பொறுப்பற்ற வார்த்தையாகும். ஆகவே, அதை அவர் திரும்பப் பெற வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** **என்பதை வேண்டுமானால் மாற்றிக் கொண்டு ஒத்து ஊதுவது என்றுகூட நீங்கள் அதைத் திருத்திக் கொள்ளுங்கள். அதிலே எனக்கு எந்தவிதமான மாறுபட்ட கருத்தும் இல்லை. நான் எதற்காகக் கூறுகிறேன் என்றால், ஒரு முக்கியமான பிரச்சினை, அதிமுக்கியமான பிரச்சினையைப் பற்றி நான் சபையிலே கூறும்போது, அதற்குரிய நபர்கள்மீது எப்படி நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று அரசுக்கு நான் ஆலோசனை கூறுகின்ற நேரத்தில், இப்படி நீங்கள் எல்லாம் கூறுவது எந்தவிதத்தில் நியாயம் என்று கேட்கிறேன்.

---

* உறுப்பினர் மாற்று வார்த்தை தெரிவித்ததால் திருத்தப்பெற்றது

**உறுப்பினர் மாற்று வார்த்தை தெரிவித்ததால் அகற்றப்பெற்றது.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் ஆலோசனை கூறுங்கள். அடுத்த உறுப்பினர்களுக்கும் உரிமை இருக்கிறது ஆலோசனை கூறுவதற்கு. அவர், ஒரு மாண்புமிகு உறுப்பினரே இந்த வினாத்தாளைக் கொடுத்திருக்கிறார், அதனாலே அவரிடம் கேட்கலாம், யாரிடமிருந்து வாங்கினார் என்று கேட்டால், அது துப்பறிவதற்கு உதவியாக இருக்கும் என்று சொன்னார். (குறுக்கீடு) அந்தக் கருத்தைத்தான் சொன்னார்.

**திரு. பி.ஆர் சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேற்றைக்குக் காலையிலே 8-00 மணிக்கு நான், அந்த வினாத்தாளினுடைய பிரதியைத் தங்களுடைய அறையிலே வந்து கொடுத்து விட்டேன். அதற்குப் பிறகு, கிட்டத்தட்ட 10-00 மணிக்குத்தான் அந்தத் தேர்வு நடைபெற இருந்தது. நீங்கள், இதிலே தனிக் கவனம் செலுத்தி இருந்தீர்களானால், கல்வி அமைச்சர் அவர்களும், இத்தகைய அக்கறை எடுத்திருப்பார்களேயானால், நேற்றைக்கு நடந்த தேர்வை நீங்கள் கண்டிப்பாக இரத்து செய்திருக்க முடியும்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** பேசி முடித்துவிடுங்கள், ஒரு தடவையாக பதில் சொல்லிவிடுகிறேன்.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** நீங்கள் நேற்று, 11-00 மணி வரையிலும், அரசு அதிகாரிகளிடமிருந்து அறிக்கை வரவில்லை என்று கூறியிருக்கிறீர்கள். இந்த அரசு செயல்படாத அரசு, தூங்குகின்ற அரசு என்பதற்கு இதைவிட என்ன உதாரணம் வேண்டும்? அன்றைக்குக் கல்வி அமைச்சர்...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள், உங்கள் கருத்தைச் சொல்வதிலே எனக்கு ஆட்சேபனை இல்லை. நான் உங்களுக்குத் தெளிவாக விளக்கம் சொன்னேன். நேற்றைக்கு கல்வி அமைச்சரைக் கேட்காமலே உங்களுக்கு விளக்கம் சொன்னேன். தேர்வு ஆரம்பிக்கின்ற நேரத்திலேதான் அந்தப் பையைப் பிரித்து, மாணவர்களுக்கு முன்னாலே அந்த வினாத்தாளை வெளியே எடுக்க முடியும். அந்த வினாத்தாளை எடுத்த பிறகுதான், அந்த வினாத்தாளும், நீங்கள் கொடுத்த வினாத் தாளும் ஒரே தாளாக உள்ளதா என்பதைத் தெரிந்துகொள்ள முடியும். ஆகையினாலே, 10-00 மணிக்கு முன்னால் அரசாங்கமே அந்த வினாத்தாள் இரண்டும் ஒன்றா என்று கேட்பதற்குரிய சூழ்நிலை கிடையாது. அதைத் தெரிந்துகொண்டு பேசுங்கள்.

[1998 ஏப்ரல் 24

**திரு. பி.ஆர். சுந்தரம்:** தலைவர் அவர்களே, அந்தக் கேள்வித் தாள்கள் எல்லாம் 8¼ மணியிலிருந்து டைரக்டர் ஆபீசிலிருந்து செல்வதாகவும், 9¾ மணிக்கு அங்கே பிரித்துப் பார்ப்பதாகவும் எனக்குத் தெரியும். ஆகவே, நீங்கள் 9¾ மணிக்குப் போன் மூலமாகவே கேட்டிருந்தால் தாராளமாக 9¾ மணிக்கே, அல்லது 10-00 மணிக்கே நான் கொடுத்த பேப்பரும், இந்தப் பேப்பரும் சரியாக இருக்கிறதா என்பதைக் கல்வி அமைச்சர் கண்டிப்பாக, தெரிந்து கொண்டிருக்க முடியும்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** தலைவர் அவர்களே, சட்டமன்றத்திற்கு என்று சில முறை உண்டு. எந்த ஒரு கேள்வியாக இருந்தாலும் அல்லது இப்படிப்பட்ட தீர்மானமாக இருந்தாலும் உடனே போலீஸ் வேலையை செய்யச் சட்டமன்றம் இல்லை. சட்டமன்றத்திலே எல்லாவற்றையும் தெரிந்து கொண்டு, விவரம் தெரிந்துதான் இவ்வளவு பெரிய மன்றத்திற்கு நாங்கள் பதில் சொல்ல வேண்டுமே தவிர, முழு விவரம் தெரியாமலே, அவ்வப்போது சுந்தரத்தைக் கூப்பிட்டு, பாதித்தாள் வந்திருக்கிறது. பாதித்தாள் வரவில்லை என்று நான் சொல்லிக் கொண்டிருக்க முடியாது. ஆகவே, அப்படி எல்லாம் விளக்கம் கேட்பதற்கு அவசியமும் இல்லை, தேவையும் இல்லை.

முற்பகல் 11-25

**திரு. பி.ஆர். சுந்தரம்:** கடந்த வாரம் எஸ்.எஸ்.எல்.சி. ஆங்கிலத் தேர்வு, அதிலே அந்தக் கேள்வித்தாள் முன்பே வெளியாகி விட்டது என்று இங்கே பேசினோம். அப்போதே அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுத்திருக்கின்றோம். உயர் அதிகாரிகள் யாராவது தவறு செய்திருந்தால் கண்டிப்பாக நடவடிக்கை எடுப்போம் என்று கூறியிருந்தார்கள். அவர்கள் உண்மையிலேயே நடவடிக்கை எடுத்து இருந்தார்களேயானால், கண்டிப்பாக இதுபோன்ற சூழ்நிலை ஏற்பட்டு இருக்காது. அதேபோல் இன்றைக்கும் வரலாறு-நான் நேற்றைக்குப் பேசினேன்-வரலாறு என்ற பாடப் புத்தகத்தில் இன்றைக்குத் தேர்வு நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. அதிலேயும் கேள்வித்தாள் முன்கூட்டியே வெளிவந்துவிட்டது என்று கூறி இருக்கிறார்கள். அமைச்சரவர்கள் பதிலுரையில் வேண்டுமானால் இல்லையென்று மறுக்கலாம். என்னிடம் இரவு 12-00 மணிக்கு அந்தக் கேள்வித் தாள் விவரங்களைப் பற்றி யாரோ [illegible] ஒருவர் பேசுகின்றார் உங்களுக்கு அந்தக் கேள்வித்தாள்



1998 ஏப்ரல் 24] [திரு. பி. ஆர். சுந்தரம்]

வேண்டுமென்றால் நீங்கள் என்னிடம் ரூ.10,000 கொடுங்கள் என்று கூறுகின்றார் எனக்கு அந்த அளவிற்கு வசதியில்லை, என்னால் முடியாது என்று கூறிவிட்டேன். என்னிடம் ரூ.10,000 பணம் இருந்தது என்றால் அதை வாங்கி இந்தச் சட்டமன்றத்திலே கண்டிப்பாக அதைக் காட்டியிருப்பேன் என்று சொல்லக் கடமைபட்டிருக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அப்படியென்றால், நேற்றைக்கும் பணம் கொடுத்துத்தான் வாங்கினீர்களா? (சிரிப்பு) அதற்கு விளக்கம் நீங்கள் சொல்ல வேண்டுமில்லையா? இன்றைக்கு ரூ.10,000 இல்லை என்கிறீர்கள். அதனால் வாங்கவில்லை என்று சொன்னீர்கள். அப்படி என்றால் நேற்றைக்குப் பணம் கொடுத்துத்தான் வாங்கினீர்கள் என்று சொல்கிறீர்களா?

**திரு. பி.ஆர். சுந்தரம்:** நேற்றை பொறுத்தவரையில் அந்தக் கேள்வித்தாளை நான் பணம் கொடுத்து வாங்கவில்லை. இன்றுதான் அவர்கள் என்னுடைய முகவரியைத் தெரிந்துகொண்டு, என்னைக் கூப்பிடுகிறார்கள், இப்போது கேள்வித்தாள் இருக்கிறதென்று. இதை எதற்காகத் தெரிவிக்கிறேன் என்றால்—முன்கூட்டியே ஒவ்வொரு கேள்வித்தாளும் வெளிவருவதால்—ஒரு செட் அதாவது எஸ்.எஸ்.எல்.சி. என்றால், அனைத்து கேள்வித்தாள்களும், அது பாட்டனி, ஜுவாலஜி, கெமிஸ்ட்ரி, எதுவாக இருந்தாலும் ரூ.10,000, ரூ.15,000 என்ற விலைக்கு முன்கூட்டியே விற்றுவிடப்பட்டு, முதல் நாள் இரவே அவை வெளிவருகின்றன என்று நாங்கள் சந்தேகிக்கின்றோம் என்று சொல்லக் கடமைப்பட்டிருக்கின்றேன். அமைச்சரவர்கள் பதிலுரையில் கூறலாம், தேர்வை இரத்து செய்கிறோம் என்று கூறலாம். ஸ்ட்ரிக்ட் வேல்யுவேஷன் என்று, கூறலாம், எது வேண்டுமானாலும் கூறலாம். என்னைப் பொறுத்தவரையில் ஸ்ட்ரிக்ட் வேல்யுவேஷன் என்று கூறினால் அங்கே கிராமப்புறத்திலே இருக்கிற மாணவர்களுக்கு அது எப்படி பயன்படமுடியும்? இந்தக் கேள்வித்தாள்களைப் பொறுத்தவரையில் சென்னையிலே மட்டும் அவர்களுக்குக் கிடைப்பதாகக் கேள்விப்படுகிறேன். சென்னையிலே இருக்கின்ற மாணவர்கள் சிறந்த முறையிலே மார்க் வாங்கி விட்டால் கிராம புறத்திலே இருக்கின்ற மாணவர்கள் எப்படி இவர்களோடு போட்டி போடமுடியும் என்று அமைச்சர் அவர்களைக் கேட்க விரும்புகிறேன். ஆகவே இதை யாரோ கறுப்பு ஆடு என்று கூறினார்கள். இதிலே [illegible] சியல்

219088

சம்பந்தம் இருக்கிறது என்று கூறினார்கள். இதில் கண்டிப்பாக அரசியல் சம்பந்தப்படவில்லை. இது மாணவர்கள் சம்பந்தப்பட்ட பிரச்சினை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சரி. சீக்கிரம் பேசி முடியுங்கள்.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதைப் பொறுத்தவரையில் உயர் கல்வி அதிகாரிகளின்மீது நடவடிக்கை எடுத்திருந்தீர்களானால் கண்டிப்பாக இந்தப் பிரச்சினையைத் தீர்த்து வைத்திருக்க முடியும். ஆகவே, நீங்கள் உடனடியாக கல்வித் துறை இயக்குநர்களை சஸ்பெண்ட் செய்யவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். தேர்வாணைக் குழு இயக்குநர்களை சஸ்பெண்ட் செய்யவேண்டும். அப்போதுதான் அவர்களுக்கு ஒரு பயம் இருக்கும். இதேபோல் நடந்துகொண்டேயிருந்தால் மறுபடியும் இதேபோன்ற பிரச்சினைகள் வரும். இப்போது இருக்கிற ** என்பது எனக்கு நன்றாகத் தெரியும். அதேபோல் சட்டமன்ற உறுப்பினர்கள் சென்றாலும்கூட அவர்கள் ஒரு பதிலும் கூறுவதில்லை. ஆகவே ஒரு அமைச்சரை...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் தொடர்புள்ள அதிகாரிகள் மேலே நடவடிக்கை எடுங்கள் என்று சொல்லுங்கள். எனக்கு ஆட்சேபனை இல்லை. (குறுக்கீடு) நீங்கள் முதலில உட்காருங்கள். நான் தீர்ப்பு சொல்லிக் கொண்டிருக்கிறேன். இடையிலே எல்லோரும் கை தூக்கினால் என்ன அர்த்தம்? தொடர்புள்ள அதிகாரிகள்மீது நடவடிக்கை எடுங்கள் என்று பேசுங்கள். ** என்று பெயர் சொல்ல வேண்டிய அவசியமில்லை. அந்த வார்த்தையை நீங்கள் திரும்பப் பெறவேண்டும். இல்லையென்றால் நான் அவைக் குறிப்பிலிருந்து நீக்குவேன்.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** பேரவைத் தலைவர் அவர்களே, அரசாங்கம் இதுபோன்ற செயல்களை—நான் எதற்காக இதைக் கூறுகிறேன் என்றால்...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் எல்லாவற்றையும் கூறுங்கள். சீக்கிரம் சொல்லி முடியுங்கள்.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** பேரவைத் தலைவர் அவர்களே, நான் பர்சனலாக உங்களிடம் வந்து சொன்னேன். நீங்கள் சிறிய

**மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.





பிரச்சினையாக, இரண்டாவது கவன ஈர்ப்பாக இதை எடுத்துக்கொண்டு, முதலில் கொடுத்தவனைக் கடைசியாகக் கூப்பிட்டுக்கொண்டு...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உள்நோக்கம் கற்பித்தால் நான் கண்டிப்பாக நடவடிக்கை எடுப்பேன்.

(திரு. பி.ஆர். சுந்தரம் தொடர்ந்து பேசிக்கொண்டேயிருந்தார்)

பி.ஆர். சுந்தரம் உட்காரவேண்டும். நீங்கள் பேசுவது எதுவும் அவைக்குறிப்பில் ஏறாது. இப்போது நீங்கள் உட்காராவிட்டால் நான் அடுத்த நடவடிக்கை எடுப்பேன். நீங்கள் இப்போது உட்காருகிறீர்களா? இல்லையா? (குறுக்கீடு) உங்கள் உரையை முடித்தாகிவிட்டது. இனிமேல் நான் உங்களைப் பேசவிட மாட்டேன். அடுத்து, திரு ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேற்றையதினம் நடைபெற இருந்த தேர்வுக்குரிய வினாத்தாள் ஒரு நாள் முன்பாகவே வெளியாகிவிட்டது. இந்த வினாத்தாள் வெளியாகின்ற நேரத்திலே பத்திரிகைகள்கூட எழுதியிருக்கின்றன. ரூ.10,000, 10,000 வினாத்தாள் என்று சொல்லி எல்லோரும் விலைபேசி விற்கக்கூடிய அவலநிலை இந்தத் தேர்வுத் துறையின் மூலமாக நடைபெற்றுக்கொண்டிருக்கிறது.

முற்பகல் 11-30

நேற்றைய தேர்வுத்தாள் மட்டும் அல்லாமல், இதற்கு முன்பேகூட சில வினாத்தாள்கள் விற்பனை செய்யப்பட்டதாக, வெளிவந்ததாகப் பத்திரிகையிலே சொல்லப்பட்டு இருக்கிறது. மற்றவர்கள் எல்லாம் சொல்லுகிறார்கள். ஆகவே, இப்படிப்பட்ட வினாத்தாள்கள் வெளிவருதன் மூலமாக இந்த அரசின் தேர்வுத் துறைக்கு களங்கம் கற்பிப்பதோடு மட்டுமல்லாமல், மாணவர்களுடைய கல்வித் தரமும் பாதிக்கப்படுகின்றது. கிராமங்களிலே சொல்லுகிறமாதிரி, குறுக்கு வழியிலே செல்கிறவன் முன்னேறி விடுகிறான். நியாயமாக, நேர்மையாக இருக்கக் கூடியவர்கள் வாழ்விலே முன்னேறுவதில்லை என்பதைப்போல இப்படிப்பட்ட மாணவர்கள், பள்ளிகளிலே, வகுப்புகளிலே படிக்காமல் இருந்து குறுக்கு வழியிலே, செல்வாக்குப் படைத்தவர்கள், பண பலம் படைத்தவர்கள் எல்லாம் இப்படி வினாத்தாள்களைப் பெற்று, வேகமாக விடை எழுதி, மதிப்பெண்களைப் பெற்று டாக்டர் அல்லது என்ஜினியர் போன்ற

பட்டப் படிப்புகளுக்குச் செல்வதற்கு வாய்ப்பாக இருக்கிறது. அதிலும், குறிப்பாக இப்படிப்பட்ட நிகழ்வுகள் எல்லாம் சென்னை மாநகரிலே, இதற்கு முன்னாலேகூட நடந்திருக்கிறது. ஆனால், கிராமப்புறங்களிலே இருக்கின்ற மாணவர்களுக்கு இந்த வாய்ப்புகள் கிடைப்பதில்லை. அவர்கள் கஷ்டப்பட்டுப் படித்தாலும்கூட, அவர்கள் மதிப்பெண்களைப் பெற்று, உயர்ந்த படிப்பிற்குச் செல்ல முடியாத அவலநிலை இருந்துகொண்டிருக்கிறது. ஆகவே, நம்முடைய தமிழக அரசு இதை முன்னுதாரணமாக வைத்து தொடர்ந்து இப்படிப்பட்ட சம்பவம் நடக்கக்கூடாது, அப்படி இந்தச் சம்பவம் நடந்ததற்கு மாவட்ட கல்வி அதிகாரி அல்லது முதன்மைக் கல்வி அதிகாரி யாராவது அதிகாரிகளாகத்தான் இருந்திருக்க முடியும்; இல்லாமல் இந்த வினாத்தாள் வெளியே வரமுடியாது.ஆகவே, அப்படிப்பட்ட அதிகாரிகள்மீது தகுந்த நடவடிக்கை எடுக்க வேண்டும். அதேநேரத்திலே, வினாத்தாள்களை திருத்துகின்றபோது, மாண்புமிகு உறுப்பினர்கள் கூறியதுமாதிரி 'ஸ்டிரிக்ட் வேல்யுவேஷன்' என்று சொல்லக்கூடிய வகையிலே இங்கே மட்டும் ஸ்டிரிக்ட்டாக வேல்யுவேஷன் செய்தால்கூட கிராமப்புறங்களிலே எழுதிய மாணவர்களுக்கு அந்த ஸ்டிரிக்ட் வேல்யுவேஷன் இல்லாமல், அதையும் கவனத்திலேகொண்டு, நடவடிக்கை மேற்கொண்டு இப்படிப்பட்ட சம்பவம் தொடர்ந்து நடக்காமல் இருக்க அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டு அமைகின்றேன்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு போவைத் தலைவர் அவர்களே, ..........

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் உட்காருங்கள், திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்.

**திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மெட்ரிகுலேஷன் தேர்வினுடைய வினாத்தாள் வெளியாகியிருப்பது உண்மையிலேயே மிகவும் கண்டிக்கத்தக்கது. இதற்கு யார் பொறுப்பாக இருந்தாலும் அவர்களை உடனடியாகக் கண்டறிந்து தண்டிக்க வேணடும். ஆனால், இந்த நேரத்திலே மாண்புமிகு உறுப்பினர் சுந்தரம் அவர்கள் இங்கே பேசுகிறபோது குறிப்பிட்டுச் சொன்னார்கள். 10,000 ரூபாய் கொடுத்தால் அந்த வினாத்தாளை தான் தருவதற்குத் தயாராக இருப்பதாக ஒருவர் அவரிடம் தொடர்பு கொண்டதாகச் சொன்னார்கள். இந்த மாமன்றத்திலே 235 உறுப்பினர்கள் இருக்கிறபோது,



அவர்களிலே யாரையும் தொடர்புகொள்ளாமல், அவரை மட்டும் தொடர்பு கொண்டு இருப்பதற்கு என்ன காரணம் என்பது எங்களுக்குத் தெரியவில்லை. ஒரு வேளை 'பாம்பின் கால் பாம்பு அறியும்' என்று சொல்வார்களே (மேசையைத் தட்டும் ஒலி) இந்தமாதிரிப் பிரச்சினைகளில் இவர் அக்கறை எடுத்துக் கொள்வார் என்று கருதி ஒருவேளை இந்தப் பணியை அவர் செய்திருக்கலாம்.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ..

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** முதலில் அவர் பேசி முடிக்கட்டும்.

**திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இருந்தாலும்கூட நான் கேட்கின்ற கேள்வி என்ன என்று சொன்னால், ஒரு பொறுப்பான சட்டமன்ற உறுப்பினராக இருக்கக்கூடிய ஒருவர், தன்னிடம் 10,000 ரூபாய் தந்தால் இன்றைக்கும்கூட வினாத்தாளைத் தருவதற்குத் தயாராக இருக்கிறேன் என்று ஒரு நபர் சொல்லுகிறார் என்றால், அவரைப் பற்றி உடனடியாக காவல் துறையிடம் புகார் செய்திருந்தால் இவர் உண்மையிலேயே நாட்டு நலனின்மீது அக்கறை உள்ளவர் என்று நாம் எடுத்துக்கொள்ளலாம். (மேசையைத் தட்டும் ஒலி) ஏதோ சில குறைபாடுகள் நடக்க...

**திரு. பி.ஆர். சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் உட்காருங்கள், அவர் பேசியதற்குப் பிறகு கூப்பிடுகிறேன்.

**திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்:** ஏதோ சில குறைபாடுகள் நடக்கிறபோது, தமிழகத்திலே மின்சாரத் தட்டுப்பாடு, மின்சாரப் பற்றாக்குறை என்றால் நான்தான், என்னால்தான் வந்தது என்று ஒரு சமுதாயத்தின்மீது, ஒரு பெரிய அக்கறை உள்ளவர்களைப்போல, காட்டிக்கொள்கிறவர்கள் அவர்கள் என்கிற காரணத்தினாலே, நான் இதைக் குறிப்பிட்டுச் சொல்ல விரும்புகிறேன். இப்படிப்பட்ட தவறுகளைச் செய்தவர்கள் தங்களோடு தொடர்புகொள்கிறபோது அவர்களைப்பற்றி காவல்துறைக்கு முறையாக புகார் சொன்னால்தான் சரியான முறையாக இருக்கும் என்பது என்னுடைய தாழ்மையான

[திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்] [1998 ஏப்ரல் 24

கருத்து. ஆகவே, இந்தக் கேள்வித்தாள் வெளியாகிற சூழ்நிலையிலே 'அக்கவுண்டபிலிட்டி'யே இல்லாமல் பலபேர் நடந்து கொண்டிருக்கிறார்கள். எனவே, பொறுப்பாக்கும் தன்மை, அது தேர்வு வினாத்தாள்களைக் குறிப்பவர்களாக இருந்தாலும் சரி, அல்லது அதனை அச்சிடுபவர்களாக இருந்தாலும் சரி, அவர்களுக்கெல்லாம் ஒரு பொறுப்பாக்கும் தன்மையை வைத்து கடுமையான தண்டனையை தந்தால்தான் இந்தமாதிரியான சம்பவங்கள் எல்லாம் எதிர்காலத்திலே நிகழாமல் இருக்கும் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்து, இதற்கு விசாரணைக் கமிஷனேகூட வைத்து இப்படியெல்லாம் செய்வதற்கு என்ன காரணம், இந்த அரசுமீது குறை சுட்டிக்காட்டுவதோடு மட்டும் அல்லாமல், ஏதேனும் ஒரு காரணத்தைக் சுட்டிக்காட்டி சில அசம்பாவிதங்களை ஏற்படுத்தலாம் என்று நினைக்கின்றவர்கள் இதன் பின்னணியிலே இருப்பார்களோ என்பதைக் கண்டறிவதற்காவது ஒரு விசாரணைக் கமிஷனை அமைத்து, அதை அரசு கண்டறிந்து, இந்த நாட்டு மக்களுக்கு அதைத் தெரியப்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

முற்பகல் 11-35

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** டாக்டர் க. கிருஷ்ணசாமி.

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பத்தாம் வகுப்பு மற்றும் 12 ஆம் வகுப்பு வினாத்தாள்கள் முன்கூட்டியே வெளியான செய்தி மிகவும் வன்மையாகக் கண்டிக்கத்தக்கது. இப்பொழுது மெட்ரிகுலேஷன் 10 ஆவது வகுப்பு வினாத்தாள்கள் வெளியானதே அதேபோல பிளஸ்-2 வினாத்தாள்கள் வெளியாகிய செய்திகள் ஏற்கெனவே வந்துள்ளன. குறிப்பாக வில்லிவாக்கத்திலே ஆல்ஃபா மெட்ரிகுலேஷன் பள்ளியில் தேர்வு எழுதுகின்ற பிளஸ்-2 மாணவர்கள் இங்கிலீஷ் தேர்வு எழுதுகின்ற நாள் அன்று காலையிலே அந்தப் பள்ளி ஆசிரியரிடத்திலே சென்று சில கேள்வித்தாள்களை வைத்துக்கொண்டு சந்தேகம் கேட்டு இருக்கிறார்கள். ஆசிரியர்கள்கூட இந்த கேள்வித்தாள்கள் எல்லாம் உண்மையானதா என்று அவர்கள் ஒரு சந்தேகத்தில் இருந்தார்கள். ஆனால் வினாத்தாள் கொடுத்த உடனே அந்த ஆசிரியர்களுக்குப் பெரிய சந்தேகம். எப்படி அந்த வினாத்தாள் இருந்ததோ அதேபோல முறையாக கொடுக்கப்படக்கூடிய வினாத்தாளும் இருந்திருக்கிறது. இதிலே எனக்கு ஒரு தகவல் என்னவென்றால் தேர்வுத் தாளை தயார் செய்யக்கூடிய ஆசிரியர்களே



1998 ஏப்ரல் 24] [டாக்டர் க. கிருஷ்ணசாமி]

சில சுய இலாபங்களுக்கு வெளியிடுகின்ற சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது என்பதுதான். எனவே இப்படி பல்லாயிரக்கணக்கான இலட்சக்கணக்கான மாணவர்கள் இரவு பகல் என்று பாராமல் படித்து அவர்கள் நல்ல மதிப்பெண்களைப் பெற்று முன்னிலையில் வரக்கூடிய செயலை முறியடிக்கக்கூடிய வண்ணம் இதற்கு ஊறு விளைவிக்கக்கூடிய வகையிலே 4,000, 5,000 ரூபாய்க்கு என்றுத் தேர்வுத்தாள்களை விற்று பணம் சம்பாதிக்கக்கூடிய கும்பல் இப்படி மாணவர்களுடைய வாழ்க்கையிலே விளையாடுகிறார்கள். இது ஏதோ இந்த ஆண்டு மட்டுமல்ல, பல ஆண்டு காலத்தில் பல நேரங்களிலே இப்படியெல்லாம் நடந்திருக்கிறது. எனவே இது மாணவர்கள் மத்தியில் மட்டும் அல்ல, இதை நாட்டிலே நடக்கக்கூடிய மிகப் பெரிய வியாதி என்ற ஒரு கோணத்திலே அணுகி நிரந்தரமாக முற்றுப்புள்ளி வைப்பதற்கு, குறிப்பாக ஒரே வினாத்தாள் தயாரிக்காமல் இரண்டோ, மூன்றோ, நான்கோ தயாரித்து எதிர்காலத்திலே இந்த வினாத்தாள் தேர்வுக்கு முன்கூட்டியே வெளியாகக்கூடிய நிலையே உருவாகாத நிலைக்கு ஒரு நடவடிக்கையை இந்த அரசு மேற்கொள்ள வேண்டும் என்று வற்புறுத்தி விடைபெறுகிறேன், வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு கல்வி அமைச்சர்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உறுப்பினர்கள் எழுப்பிய இந்தப் பிரச்சினை அரசினுடைய முழுக் கவனத்தில் இருக்கிறது என்பதையும், எவ்வளவு சுறுசுறுப்பாக விரைவாக அந்தத் துறை செயல்பட வேண்டுமோ அல்லது காவல் துறை மூலமாக நடவடிக்கை எடுக்க, வேண்டுமோ, அவ்வளவும் எடுக்கப்பட்டு வருகிறது என்பதையும், இந்தப் பிரச்சினை அரசால் அலட்சியப்படுத்தப்படவில்லை; துறையினாலும் ஏதோ இவை எப்படி நடைபெற்றால் என்ன என்று ஒதுக்கப்படவில்லை என்பதை நான் முதலில் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். நம்முடைய மாண்புமிகு திரு. சுந்தரம் அவர்கள் நேற்று ஒரு கேள்வித்தாளை தங்களிடத்திலே தந்து, தாங்கள் அதற்குப் பின்னால் நான் இங்கே 9.30 மணியளவில் வந்தபோது எனக்கு அனுப்பி வைத்து, அது உண்மையான கேள்வித்தாள்தானா என்பதை அறிந்துகொள்வதற்கு அந்தத் துறையினர் அவர்கள் வெளியிடுகிற கேள்வித்தாளோடு இதை ஒப்பிட்டுப் பார்க்க வேண்டும் என்று கல்விச் செயலர் மூலமாகத் தெரிவித்து, 10.30 மணி,

11-00 மணி அளவில் அது உண்மையானதுதான், அந்தக் கேள்வித்தாள் அச்சிட்டதாளை கையால் எழுதிய தாளாகத்தான் திரு. சுந்தரம் அவர்கள் இங்கே தந்திருக்கிறார்கள். அது உண்மைதான். அந்தக் கேள்வித் தாள்தான் என்பது அரசுக்குத் தெரிவிக்கப்பட்டது. அது உண்மைதான் என்று சொல்வது அரசாங்கத்தினுடைய பெரிய கடமையை நிறைவேற்றியது ஆகாது. அப்படியானால் எப்படி எங்கே தவறு நடைபெற்றது என்பதை எல்லாம் காணவேண்டும். ஆகவே அதை மட்டும் தெரிவிக்க நேற்றையதினம் நான் தயங்கி இன்றைக்குத் தெரிவிப்பதாகத் தங்கள் மூலமாகத் தெரிவித்துக்கொண்டேன். இன்றைக்கு அந்த வாய்ப்பைப் பெற்றிருக்கிறேன். கேள்வித்தாள் வெளியானது என்பதிலே 2, 3 விதமான வழிமுறைகள், தவறு செய்வதற்கான வாய்ப்புகள் உண்டு.

முற்பகல் 11-40

ஒன்று கேள்வியைத் தயாரிக்கிற ஆசிரியர், திரு. கிருஷ்ணசாமி அவர்கள் சொன்னதுபோல் அவர் ஏதேனும் பிரதியைக் கையில் வைத்திருந்து பின்னர் வெளியிட்டுவிடக்கூடிய ஏதேனும் சில அசந்தர்ப்பங்கள் உண்டு. அச்சிடுகிற இடத்திலே தவறு நேர்ந்திட சில வாய்ப்புகள் உண்டு. துறையின் மூலமாக அந்த அந்தப் பள்ளிக்கூடத்திற்கு என்று உள்ள சென்டர்களில் கொண்டு வந்து—சீல்டு கவர், அதை யாரும் அன்று காலை 8-00 மணி, 9-00 மணிக்கு முன்னால் பிரிக்கக்கூடாது; பிரித்தாலும் கேள்வித்தாளை எடுத்துப் பார்க்கக்கூடாது; அந்த நிலையில் பாதுகாக்கப்படுகிற இடத்திலே ஏதேனும் தவறு நடக்கலாம். இப்படி எந்த இடத்திலே நடைபெற்றது என்பதை முழு அளவிலே ஆய்வு செய்துதான் கண்டுபிடிக்க வேண்டும். ஒரு தாள் வெளியே வந்தவுடன் அந்தத்தாள் வெளியே வந்துவிட்ட காரணத்தால் கேள்வித்தாள் தமிழ்நாடு முழுவதும் பரவி மாணவர்களில் பல பேர் அதைப் பயன்படுத்துகின்ற நிலைமை ஏற்பட்டுவிட்டது என்று சொல்லிவிட முடியாது.

இன்னும் ஒன்று, ஒரு கேள்வித்தாள் வெளியே வருகிறது என்றால் அந்த முதல் கட்டத்திலே அந்தக் கேள்வித்தாள் வெளியே வந்தது தெரிந்தவுடன் கண்டுபிடிக்கலாம். அன்றையதினம் நான் இங்கே தெரிவித்ததுபோல ஒரு ஜெராக்ஸ் இன்ஸ்டிடியூட்டில் அதை டைப் செய்வதற்கு வந்தவரிடமிருந்து ஒருவர் அதை கையில் வைத்துக்





கொண்டு அதை மறு காப்பி செய்து அந்த நிலையில் கண்டுபிடிக்கப்பட்ட காரணத்தால் அது பரவுதற்கான வாய்ப்பு இல்லை.

இரண்டாவது இப்படிக் கேள்வித்தாள் வெளியே வந்து விடைகள் எழுதுகிற இடத்திலே 10 மாணவர்கள், 15 மாணவர்கள் எழுதுகிற இடத்திலே ஒரே மாதிரியான விடைகளை எழுதுகிற ஒரு நிலை ஏற்படும். அல்லது அதிலே ஏதேனும் ஒரு தவறு, ஒரே மாதிரியான தவறு நிகழும். இதை வைத்துத்தான், பெரும்பாலும் விடைத்தாள்களை வைத்துத்தான், கேள்வித்தாள் வெளியே வந்திருக்கிறது என்பதைக் கண்டுபிடிப்பார்கள். அந்த முதல் கட்டத்தில் அன்றையதினம் நான் இங்கே விடை அளித்தபோது அந்தக் கேள்வித்தாள் வெளியே பரவுகிற வாய்ப்பு இல்லாத நிலையில் கண்டுபிடிக்கப் பட்டிருக்கிறது. இருந்தாலும் அந்தக் குற்றவாளி கைது செய்யப்பட்டிருக்கிறார். அவரும், அவருக்கு யார் கொடுத்தார்கள் என்பதை அவரால் தெரிவிக்க முடியவில்லை. என்னிடத்திலே டைப் செய்ய வந்தார், நான் ஒரு பிரதியை எடுத்து வைத்துக் கொண்டேன் என்று சொல்லுகிறார். அவரே இதுவரையில் இன்னார்தான் என்னிடத்திலே வந்தார் என்று தெரிவிக்காத காரணத்தால் காவல் துறை மேலும் ஆய்வு நடத்திக்கொண்டிருக்கிறது.

நேற்றையதினம் திரு. சுந்தரம் அவர்கள் இங்கே கொடுத்த அந்தக் கேள்வித்தாள் அதேமாதிரி இருக்கிறது. அப்படி அதேமாதிரி இருக்கிற கேள்வித்தாள் திரு. சுந்தரம் அவர்களுக்குக் கையால் எழுதித் தரப்பட்டிருக்கிறது என்றால் முதல் நாள் அவர்களுக்குக் கிடைத்து இருக்கக்கூடும். அப்படிக் கிடைத்துதான் திரு. சுந்தரம் அவர்களுக்குத் தந்திருக்கவேண்டும். ஒரு பெரிய பாதுகாப்பு இருப்பதாகத் திரு. சுந்தரம் அவர்கள் கருதக் கூடாது. அதாவது இரகசியமாக அரசாங்கத்தினுடைய எந்த ரெக்கார்டையும் இரகசியம் என்று மறைத்து வைக்கப்படுகிற இரகசியத்தை ஒரு சட்டமன்ற உறுப்பினர் பெறுவாரானால், பெற்று அதை வெளிப்படுத்துவாரானால் அவர் மீது குற்றம் சொல்ல முடியாது என்பது ஒரு நியாயம். அது ஏற்றுக்கொள்ளப்பட்டு, அதாவது அரசாங்கம் மறைத்து விடுகிற உண்மைகளை வெளியிலே கொண்டு வருவதற்குச் சட்டமன்ற உறுப்பினர்களுக்கு, நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு இருக்கிற ஒரு சட்டமுறைப் பாதுகாப்பு. இந்தக் கேள்வித்தாள் என்பது பொது இரகசியம். இது அரசாங்கத்தினுடைய இரகசியம் அல்ல. அதை மூடிவைத்து இருப்பது என்பது பொதுச் சொத்து

மூடிவைக்கப்பட்டிருக்கிறது. என்று பொருள். அந்தச் சொத்து யாருக்காவது கிடைக்குமானால் அல்லது முன்கூட்டிக் கிடைக்குமானால் அது யாரிடமிருந்து தங்களுக்குக் கிடைத்தது என்று சொல்லவேண்டும். கோவிலில் இருக்கிற நகையை ஒருவேளை திரு. சுந்தரத்திடம் கொண்டுவந்து கொடுக்கிறார்கள் என்று வைத்துக்கொள்ளுங்கள் : கொடுத்தால் யாரோ கொடுத்தார்கள் என்றும், நான் வைத்து இருக்கிறேன் என்றும், அவர் சொல்ல முடியாது. அந்தமாதிரி இது பொதுச் சொத்து, மாணவர்களுக்காக, சமூகத்திற்காக, பாதுகாத்து வைத்து, அந்த நேரத்தில் காலை 9.00 மணிக்கு எடுத்து மாணவர்களுக்கு வழங்குவதற்கு முறைப்படுத்தப்பட்டிருக்கிற ஒன்று. ஒன்று, அதிலே சம்பந்தப்பட்ட யாராவது ஒருவர் இதிலே இந்தப் பாதுகாப்பை உடைத்து அந்த சீல் வைக்கப்பட்ட உறையை உடைத்து அல்லது உடைக்காமலே வெளியிலே எடுக்கிறபோது எடுத்து, அந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி வெளியிலே கொண்டு வந்திருக்கவேண்டும். இதிலே இரகசியப் பாதுகாப்பு என்ற முறையில் திரு. சுந்தரம் அவர்கள்மீது எந்தக் குற்றமும் இல்லை. ஆனால் திரு. சுந்தரம் அவர்கள் கண்ணியமான ஒரு முறையைப பின்பற்றி இப்படிப்பட்ட அக்கிரமங்கள் செய்கிறவர்களை நாட்டுக்குக் காட்டித் தரவேண்டும் என்று கருதுவார்களானால் அவர்கள் தன்னிடத்திலே கொண்டு வந்து கொடுத்தது யார் என்பதை இந்த அவைக்கு அறிவிக்க வேண்டும். (மேசையைத் தட்டும் ஒலி)

வெளிப்படையாக அறிவிக்காவிட்டாலும்கூட ஒருவேளை அன்பழகன்கூட திரு. சுந்தரத்திற்குக் கொடுத்து இருக்கலாம் அல்லவா; அதை அவர் சொல்லலாம் அல்லவா; அல்லது பெரிய அதிகாரிகள் யாராவது கொடுத்து இருந்தால் சொல்லலாம் அல்லவா; அப்படிச் சொல்லுவதன் மூலமாக அவர் நாட்டுக்கு ஒரு பெரிய கடமையைச் செய்கிறார். அவர் சொன்னதை எல்லாம் உண்மை என்று நான் சொல்லுகிறேன். இந்த ஒரு உண்மையை ஏன் அவர் சொல்லக்கூடாது? அப்படித் தெரிவிப்பது அவர்கள் உரிமையைப் பறிப்பது ஆகாது. நீங்கள் அப்படித் தெரிவிக்கவில்லை என்றாலகூட ஏன் தெரிவிக்கவில்லை என்று கேட்க எனக்கு ஒன்றும் உரிமை இல்லை. நீங்கள் அவையிலே கொண்டுவந்து கொடுத்ததற்கு உங்களுக்கு நன்றி, பாராட்டுகள். அப்படி நீங்கள் செய்ததன் மூலமாக இது எந்த அளவு பரவியிருக்கிறது என்பதை இந்தத் துறை ஆராய்ந்துகொண்டு இருக்கிறது. கல்வித் துறை



சார்ந்த அலுவலரில் யாரேனும் ஒருவர் இதிலே ஈடுபட்டு இருக்கக்கூடும் என்று ஐயப்பட்டு அவரைப் பற்றி விசாரணை நடைபெறக்கூடிய அளவிற்கு ஒரு நிலைமை இருக்கிறது. நிச்சயமாக நடைபெறும்.

முற்பகல் 11-45

பொதுவாக, கேள்வித்தாள் வெளியிலே வந்து மாணவர்களிலே ஒரு சாரார் பயன்பெற்று விட்டார்கள் என்ற அளவுக்கு நாங்கள் அறிந்து கொள்ளக்கூடிய அளவுக்கு, நாங்கள் உசாவுகிறபோது, விசாரிக்கிறபோது, விவரங்கள் கிடைக்குமானால், மறுதேர்வு வைக்கப்படும். யாரும் பாதிக்கப்படுவதற்கு இந்த அரசு இடம் தராது. கல்வித் துறையும் இடம் தர விரும்பவில்லை. ஆனால், இந்தக் கேள்வித்தாள் பரவலாக மாணவர்களிடத்திலே 100-க்கு 5 சி 10 விழுக்காட்டிலேகூடப் போய்ச் சேராமல், ஏதோவொரு இடத்திலே, வெளிப்பட்டவுடன் அதை ஒரு பிரச்சாரத்திற்குப் பயன்படுத்துவதற்குச் சிலபேர் விரும்பியோ அல்லது உண்மையைச் சொல்ல விரும்பியோ வெளியிலே வந்து, கேள்வித்தாள் வெளி வந்தது என்ற பேச்சு மட்டும் இருந்து, மாணவர்கள் பயன்படுத்திக்கொள்கிற நிலைமை இல்லாவிட்டால் அப்பொழுது இந்தத் தேர்வை மறுபடியும் வைக்க வேண்டிய அவசியமில்லை. எனவே, இதில் ஆய்வு செய்துதான் முடிவெடுக்கப்படும். இதுவொன்றும் அமைச்சருடைய விருப்பம் அல்ல. முறையான முடிவு காணப்படும்.

1994 ஆவது ஆண்டு, இப்படிக் கேள்வித்தாள் வெளி வந்ததாக ஒரு பிரச்சினை ஏற்பட்டு அப்படி வெளிவந்தது காரணமாக மாணவர்கள் சிலபேர் பயன்பெற்றிருப்பார்கள் என்ற காரணத்தால், பிளஸ்-2 தேர்வில் வேதியியல் பாடத்தில் வினாத்தாள் முன்னரே வெளியாகிய காரணத்தால், மறு தேர்வு நடத்தப்பட்டது. இது 1994 ஆவது ஆண்டில்.

அந்த ஆட்சியிலேயும் இப்படி நடைபெற்றிருக்கிறது. இந்த ஆட்சி தான் தூங்குகிறது என்றார். நாங்கள் தூங்குகிற காரணத்தாலே சிலபேர் திரித்த வரைக்கும் இலாபம் என்று எதிர்பார்க்கிறார்கள் என்பதும் எங்களுக்குத் தெரியும். நாங்கள் தூங்குவது தூங்க வேண்டிய நேரத்திலேதான். ஆனால் மற்றவர்களையெல்லாம் ஏமாற்றுவதற்காக நாங்கள் தூங்க மாட்டோம். 94 ஆவது ஆண்டும் அப்படி பிளஸ்-2 தேர்விலே கேள்வித்தாள் வெளிவந்து, அதற்காக மறுதேர்வு வைக்கப்பட்டிருக்கிறது.

இப்பொழுது பேசப்படுவது, குறிப்பாக, இது 10-ஆவது வகுப்புத் தேர்வு, மெட்ரிகுலேஷன் தேர்வு, பிளஸ்-2 தேர்வெல்லாம் முடிந்துவிட்டன; அவர்களுடைய தேர்வுத்தாள் திருத்தப்படுகிறது.

இரண்டாவது, ஏடுகளிலே வருகிறபொழுது ஒரு இடத்திலே வெளியானால்கூட நாடெல்லாம் வெளியானது போலத்தான் அந்தப் பத்திரிகையினுடைய செய்தியினால் நமக்கு அந்த விவரங்கள் புலப்படும். ஆனால் எனக்குத் தெரிந்தவரையில் இது மிகப்பெரிய அளவிலேயோ அல்லது குறிப்பிடத்தக்க அளவுக்கோ மாணவர்களால் தவறாகப் பயன்படுத்தப்பட்டு விட்டதாக அறியப்படுமானால் மறுதேர்வு நிச்சயமாக நடத்தப்படும்.

இந்தத் தேர்வுகளைப் பொறுத்தவரையில் இது தொழில் கல்விக்குச் செல்கிற மாணவர்களுக்கு, என்ஜினியரிங், மெடிக்கல் செல்கிற மாணவர்களுக்கு உள்ள தேர்வு அல்ல; அதனால் அந்த மாணவர்களைப் பாதிக்காது.

இரண்டாவது, மெட்ரிகுலேஷன் தேர்வு என்பது ஏறத்தாழ 50 ஆயிரம் பேருக்குத்தான். அதிலே ஏதேனும் தவறு ஏற்படுமானால் மறுதேர்வு நிச்சயமாக நடத்த முடியும். ஆகவே இவற்றை அரசு கூர்ந்து கவனிக்கிறது.

எல்லாவற்றையும்விட, இந்தத் தேர்வுத்தாளை - தேர்வுக்கான வினாத்தாளை வெளியிலே கொண்டு போவதற்கு அரசு அலுவலர்களில், கல்வித்துறை அலுவலர்களில், பணியாளர்களில் யாரேனும் முறைகேடாக நடந்தவர் இருக்கிறார் என்று கண்டுபிடிக்கப்படுமானால் நிச்சயமாக அவர் பணியைவிட்டு விலக்கப்பட்டு, மேலும் நடவடிக்கை எடுக்கப்படுவார் என்ற உறுதியை நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சுந்தரம் அவர்கள் அந்தக் குற்றவாளியைக் கண்டுபிடிக்க உதவக்கூடுமானால் அவருக்கு இந்த அரசு ஒரு பாராட்டுத்



தெரிவிக்கும்.

மேலும், இந்தக் குற்றச்சாட்டை இப்பொழுது காவல் துறையினர், இந்த விவரங்களை வைத்து விசாரித்துக் கொண்டிருக்கிறார்கள். இனி CB-CID (Crime Branch) அந்தத் துறைக்கு இந்த வழக்கைப்பற்றி. இந்தக் குற்றச்சாட்டைப் பற்றி முழு அளவில் விசாரிக்க அ... அனுப்பும் என்றும் நான் தெரிவித்துக்கொள்கிறேன். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** என்ன நீங்கள் கையை நீட்டுகிறீர்கள்?

**திரு. இரா. தாமரைக்கனி:** Point of information, Point of order எது வேண்டுமானாலும் வைத்துக் கொள்ளுங்கள். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டமன்ற உறுப்பினர் இந்தமாதிரி எஸ்.எஸ்.எல்.சி. கேள்வித்தாள் அவுட் ஆயிற்று, பிளஸ்-2 கேள்வித்தாள் அவுட் ஆயிற்று என்று சொல்லி, அவருக்குக் கிடைத்த தகவல் - உண்மை - அதை சபாநாயகரிடத்திலே கொடுத்து, அரசு கவனத்திற்குத் தெரியப்படுத்தியிருக்கிறார். இது அவருடைய கடமை. இப்பொழுதுகூட உதாரணத்திற்கு, பால் கமிஷன் அறிக்கை வந்தது, மாண்புமிகு எம்.ஜி.ஆர். அவர்கள் முதலமைச்சராக இருந்தபோது. அப்பொழுது அந்த அறிக்கை நம்முடைய டாக்டர் கலைஞருக்கு எப்போது கிடைத்தது, எப்படிக் கிடைத்தது? ஏன் என்றால் இந்தமாதிரியெல்லாம் இருக்கிறது நம்ம ஊர்லே.....

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** பேரவைத் தலைவர் அவர்களே, பால் கமிஷன் அறிக்கையை நான் வெளியிட்டபொழுது எம்.ஜி.ஆர். எடுத்த நடவடிக்கையை இப்பொழுது திரு. சுந்தரத்தின்மீது எடுக்கலாமா? (மேசையைத் தட்டும் ஒலி) பால் கமிஷன் அறிக்கையை வெளியிட்ட பொழுது எம்.ஜி.ஆர். அதற்காக என்னைக் கைது செய்தார். அது மாத்திரம் அல்ல. என்னுடைய உதவியாளர் சண்முகநாதன்— அவரையும் கைது செய்தார். அது மாத்திரம் அல்ல. என்னுடைய மருமகன் செல்வத்தையும் கைது செய்தார். அது மாத்திரம் அல்ல. ஒரு அலுவலரையும் - அரசு அலுவலரையும் கைது செய்தார். அதை

எல்லாம் இப்பொழுது செய்யலாமா? அதை விரும்பித்தான், நம்முடைய திரு. தாமரைக்கனி அவர்கள் (மேசையைத் தட்டும் ஒலி) நண்பர் திரு. சுந்தரத்தை சிக்க வைப்பதற்காக இந்தக் கேள்வியை எழுப்புகிறார் என்று கருதுகின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

முற்பகல் 11-50

**திரு. இரா. தாமரைக்கனி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அது ஒரு அரசாங்க இரகசியம். ஏதோ ஒரு அரசாங்க ஊழியரோ அல்லது யாரோ திருடி வந்திருக்கிறது. இது குய்யோ, முறையோ என்று கத்தரிக்காய் விற்கின்றமாதிரி விற்கப்பட்டிருக்கிறது. இது எல்லோருக்கும் தெரியும். தினமலர் பத்திரிகையிலேகூடப் போடப்பட்டிருக்கிறது. 10 ஆயிரம், 15 ஆயிரம் ரூபாய் என்று விற்கப்பட்டிருக்கிறது. இது உங்கள் ஆட்சியினுடைய அவல நிலையைக் காட்டாதா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அப்படித் தெருவிலே குய்யோ, முறையோ என்று விற்றால், சாராயம் விற்றால் அங்கேயே கைது பண்ணலாம், அதுபோல, கேள்வித்தாள் விற்பதாகச் சொல்லுங்கள், நான் அங்கேயே கைது செய்யச் சொல்கிறேன், நடவடிக்கை எடுக்கிறேன்.

**திரு. இரா. தாமரைக்கனி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,.....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இது பட்டிமன்றம் அல்ல. நான் அனுமதிக்கவில்லை.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,.....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் உட்காருங்கள். இந்தப் பிரச்சினையிலே நான் பேசுகின்றேன், நீங்கள் உட்காருங்கள். இந்தப் பிரச்சினையிலே அ.இ.அ.தி.மு.க. சார்பிலே எடுத்த நடவடிக்கையை நான் பேரவைத் தலைவர் என்ற முறையிலே கண்டிப்பாகக் கண்டிக்கிறேன். இரண்டு ஆண்டுகளாக எந்த முறையிலே ஒத்திவைப்புத் தீர்மானங்களை சிறப்புக் கவன ஈர்ப்பாகக் கையாளுகின்றேனோ அதே முறையிலேதான் இப்போதும் கையாளுகிறேன். இன்று திடீரென்று



எழுந்து, எந்த நேரத்திலே யார் கொடுத்தார்களோ அவர்களைத்தான் கூப்பிட வேண்டுமென்று சொல்வது முறையற்றது.

இரண்டாவது மாண்புமிகு உறுப்பினர் திரு. சுந்தரம் அவர்கள் வினாத்தாளைக் கொடுத்திருக்கிறார் என்பதை நான் ஏற்றுக்கொண்டு—நேற்றையதினம் அவைக்குறிப்பிலே பார்த்தால்கூடத் தெரியும், சுந்தரம் ஒருவர் பெயரைத்தான் சொன்னேன்; மற்றும் பல உறுப்பினர்கள் என்று சொன்னேன். வினாத்தாளைக் கொண்டுவந்து கொடுத்திருக்கிறார் என்று நேற்றைக்கு நான் அந்த உண்மையைத்தான் சொன்னேன். அப்படிச் சொன்ன பிறகும் நான் நடுநிலையாக இல்லையென்று சொன்னால், உங்களுடைய நிலைபற்றியோ, உங்களுடைய கருத்து பற்றியோ எனக்குக் கவலையில்லை. கண்டிப்பாக நான் நடவடிக்கை எடுப்பேன் என்று உங்களுக்கு எச்சரிக்கை செய்கிறேன். இந்தப் பிரச்சினையை இத்தோடு முடியுங்கள்.

**திரு. இரா. தாமரைக்கனி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விதிமுறைப்படி நடத்துகிறேன் என்று சொல்லிவிட்டு உங்கள் இஷ்டத்திற்கு நடத்துகிறீர்களே?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** என் இஷ்டப்படிதான் நடத்துவேன். இரண்டு வருடங்களாக நடத்துகிறேன். நீங்கள் உட்காருங்கள், நான் அனுமதிக்க முடியாது.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரே ஒரு கிளாரிபிகேஷன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நான் அனுமதிக்க முடியாது, நீங்கள் உட்காருங்கள். நான் அனுமதிக்கவில்லை.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒன்றே ஒன்று.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் உட்காருகிறீர்களா, இல்லையென்றால் நான் வெளியேற்றவா?

**திரு. இரா. தாமரைக்கனி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாங்கள் கேட்டால் மைக் கொடுக்கமாட்டேன் என்கிறீர்கள். மற்றவர்களுக்கு மைக் கொடுக்கிறீர்கள், இது நியாயமா?

[1998 ஏப்ரல் 24

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஆம். அதுதான் நியாயம். நீங்கள் முறைகேடாக நடக்கிறீர்கள்.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,......

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் உட்காருங்கள், நான் அனுமதிக்க முடியாது. பேரவை விதி 55-ன்கீழ் கொடுக்கப்பட்டு இருக்கின்ற கவன ஈர்ப்பு அறிவிப்புகளை....

**திரு. பி.ஆர். சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு வரலாறு வினாத்தாள் அவுட் ஆகி இருக்கிறதா, இல்லையா?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அது வந்தால் பார்க்கலாம்.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** வரலாறு வினாத்தாள் அவுட் ஆகி இருக்கிறதா, இல்லையா? அது தெரிய வேண்டும்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அப்படி எதுவும் அவுட் ஆனதாக இதுவரையில் எந்த விவரமும் எனக்குக் கிடைக்கவில்லை. எந்த ஒரு உறுப்பினரோ அல்லது பொது மக்களோ அப்படியொரு தாளை எனக்குத் தரவில்லை. விவரம் அப்படி எதுவும் கிடைக்காத காரணத்தினால் எந்தக் கேள்வித்தாளும் அவுட் ஆகவில்லை.

## 4. அறிவிப்புகள்

**(அ) நிகழ்ச்சி நிரலில் உள்ள கவன ஈர்ப்பு ஒத்திவைக்கப் பெறுதல்.**

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** விதி 55-ன்கீழ் கொடுக்கப்பட்டுள்ள கவன ஈர்ப்பு அறிவிப்புகளை ஒத்திவைக்கின்றேன்.

## 5. மானியக் கோரிக்கைகள், 1998-99, விவாதமும் வாக்கெடுப்பும்—தொடர்ச்சி

**கோரிக்கை எண் 28—தொழிலாளர் நலனும் தொழிற்சாலைகளும்**

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 1998-99 ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கைகள்மீது விவாதமும் வாக்கெடுப்பும். மானியக் கோரிக்கை எண் 28—தொழிலாளர் நலனும் தொழிற்சாலைகளும், மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர்.



1998 ஏப்ரல் 24]

**மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"தொழிலாளர் நலனும் தொழிற்சாலைகளும் பற்றிய 28 ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ரூ. 99,13,59,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானங்கள். வெட்டுத் தீர்மானம் எண் 2672, திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "வேலூர் மாவட்டத்தில் உள்ள அரியூர் கூட்டுறவு நூற்பாலை, அரக்கோணம் அரசு எஃகு ஆலை மற்றும் வேலூர் மாவட்டம் முழுவதும் மூடப்பட்டுள்ள தோல் தொழிற்சாலைகளில் தொழிலாளர்களுக்கு நிவாரணம் வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தொழிலாளர் நலனும் தொழிற்சாலைகளும் பற்றிய 28 ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 99,13,59,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 222, திரு. கே. சுப்பராயன்.

**திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தொழிலாளர் நலனும் தொழிற்சாலைகளும் பற்றிய 28 ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 99,13,59,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1624, திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தில் பணியாற்றும் தொழிலாளர்களைப் பணி நிரந்தரம் செய்ய வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தொழிலாளர் நலனும் தொழிற்சாலைகளும் பற்றிய 28 ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 99,13,59,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 252, திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்.

**திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"ஆண்டிமடம் தொகுதியில், மாத்தூரில் சிமெண்ட் தொழிற்சாலைகள் இருப்பதால் துணைத் தொழில்கள் உருவாக, மாத்தூரில் தொழிற்பேட்டை அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தொழிலாளர் நலனும் தொழிற்சாலைகளும் பற்றிய 28 ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 99,13,59,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2992, திரு. ஐ. கணேசன்.

**திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "நுகர்பொருள் வாணிபக் கழகத்தில் நீண்ட நாட்களாகத் தற்காலிகப் பணியாளர்களாகப் பணிபுரியும் பணியாளர்களின் பணியினை நிரந்தரமாக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தொழிலாளர் நலனும் தொழிற்சாலைகளும் பற்றிய 28 ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 99,13,59,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்."



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1024, திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்.

**திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"விவசாயத் தொழிலாளர்களுக்கென தனி ஆணையர் அலுவலகம் தொழிலாளர் நலத்துறையின் மூலம் அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தொழிலாளர் நலனும் தொழிற்சாலைகளும் பற்றிய 28 ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 99,13,59,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2254, திரு. டி. மணி.

**திரு. டி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "முந்திரி ஆலைத் தொழிலாளர்களுக்கும் இஎஸ்ஐ. திட்டம் நீட்டிக்க உரிய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தொழிலாளர் நலனும் தொழிற்சாலைகளும் பற்றிய 28 ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 99,13,59,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3913, திரு. பி.ஆர். சுந்தரம்.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தீப்பெட்டித் தொழிற்சாலைகளில் இளம் சிறுவர்களை வேலைக்கு அமர்த்துவதைத் தடுக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தொழிலாளர் நலனும் தொழிற்சாலைகளும் பற்றிய 28 ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 99,13,59,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

[1998 ஏப்ரல் 24

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2518, திரு. ஜி. நிஜாமுதீன்.

**திரு. ஜி. நிஜாமுதீன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "உணவகத் தொழிலாளர்களுக்கென தனியாகத் தொழிலாளர் நல வாரியம் அமைக்கப்பட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தொழிலாளர் நலனும் தொழிற்சாலைகளும் பற்றிய 28 ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 99,13,59,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்".

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3268, திரு. அ.வ. அப்துல் நாசர்.

**திரு. அ.வ. அப்துல் நாசர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"சென்னை டன்லப் தொழிற்சாலையை மீண்டும் திறந்து தொழிலாளர்களின் வாழ்வை மேன்மையுறச் செய்ய வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தொழிலாளர் நலனும் தொழிற்சாலைகளும் பற்றிய 28 ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 99,13,59,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2597, திரு. வை. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"விவசாயத் தொழிலாளர்கள் நலனுக்காக அரசு அமைத்த திரு. கோலப்பன் தலைமையிலான குழுவின் பரிந்துரையை அமல்படுத்த வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தொழிலாளர் நலனும் தொழிற்சாலைகளும் பற்றிய 28 ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 99,13,59,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்."



1998 ஏப்ரல் 24]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3612, திரு. வி.கே. லட்சுமணன்.

**திரு. வி.கே. லட்சுமணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "மூடப்பட்டுள்ள தொழிற்சாலைகளுக்குச் சொந்தமான நிலங்களை விற்று தொழிலாளர்களுக்குச் சேர வேண்டிய நிலுவைத் தொகையை அளிக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தொழிலாளர் நலனும் தொழிற்சாலைகளும் பற்றிய 28 ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 99,13,59,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

முற்பகல் 11-55

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கைகளும் வெட்டுத் தீர்மானங்களும் பேரவைமுன் விவாதத்திற்கு வைக்கப்பட்டுள்ளன. மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் முன்னுரையாக ஏதாவது கூற விரும்பினால் கூறலாம்.

**மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொழிலாளர் நலனும் தொழிற்சாலைகளும் குறித்த கொள்கை விளக்கக் குறிப்புகள் தமிழிலும், ஆங்கிலத்திலும் அச்சடிக்கப்பட்டு உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன. அவற்றில் தமிழிலுள்ள கொள்கை விளக்கக் குறிப்பினை@ நான் இந்தப் பேரவையில் படித்ததாகக் கருதி சட்டப் பேரவையினுடைய பதிவேட்டில் பதித்து கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொண்டு, மாண்புமிகு உறுப்பினர்கள் தங்களுடைய அரிய கருத்துக்களைத் தெரிவித்த பின்னர் என்னுடைய பதிலுரையில் அவற்றுக்கான விளக்கத்தை அளிக்கிறேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** விவாதம் தொடங்குகிறது. திரு. ப. ரங்கநாதன்.

---

@ 395 முதல் 482 வரை உள்ள பக்கங்களில் இணைப்பாக அச்சிடப் பெற்றுள்ளது.

**திரு. ப. ரங்கநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மானியக் கோரிக்கை எண் 28, தொழிலாளர் நலன் தொழிற்சாலைகள் மற்றும் பயிற்சி பற்றிய இந்த மானியக் கோரிக்கைகளின்மீது தமிழ் மாநில காங்கிரஸ் கட்சியின் சார்பாக.....

## 4. அறிவிப்புகள்—தொடர்ச்சி

### (ஆ) போக்குவரத்துத் துறை அமைச்சர் அளித்த துணை வினாவிற்கான பதிலில் திருத்தம்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சிற்றுந்து தொடர்பான கேள்விக்கு மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் பதில் சொன்ன நேரத்தில் ஒரு கருத்தைச் சொன்னார்கள். சிறு பேருந்துகளை இயக்குவது குறித்த வினாவிற்கான விடையை அளிக்கையில், உயர்ந்தபட்ச தூரம் 16 கிலோமீட்டர் என்றும், அதில் பேருந்துகள் ஓடும் தூரம் 2 கிலோமீட்டருக்கு மிகாமலும் இருக்க வேண்டும் என்றும் குறிப்பிட்டிருந்தார்கள். அதில், 2 கிலோமீட்டர் என்பதை 1 கிலோமீட்டர் என்று திருத்திக்கொள்ள ஆணையிடுகின்றேன்.

## 5. மானியக் கோரிக்கைகள், 1998-99, விவாதமும் வாக்கெடுப்பும்—தொடர்ச்சி

### கோரிக்கை எண் 28—தொழிலாளர் நலனும் தொழிற்சாலைகளும்—தொடர்ச்சி

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ப. ரங்கநாதன், தொடர்ந்து பேசுங்கள்.

**திரு. ப. ரங்கநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ் மாநில காங்கிரஸ் கட்சியின் சார்பாக ஒருசில கருத்துக்களை எடுத்துவைக்க வாய்ப்பளித்ததற்காக மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கு நன்றி கூறிக்கொள்கிறேன்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

கடந்த 1997-லே தமிழகத்திலே தொழிற் தகராறுகள் ஏற்பட்டதன் காரணமாக முக்கிய ஒப்பந்தங்கள் ஏற்பட்டன. 12,962 தகராறுகளில் 10,104 தகராறுகளுக்கு அரசு அதிகாரிகளும், தொழிற்சாலையின்



அதிபர்களும், தொழிலாளர்களும் ஆகிய இந்த மூன்று பேரும் சேர்ந்து தீர்வு கண்டதன் மூலமாக செய்யப்பட்ட ஒப்பந்தங்களில் ஊதிய உயர்வு, படிகள், ஊதிய ஏற்றமுறை மற்றும் பணிநிலை குறித்த ஒப்பந்தங்கள் ஏற்படுத்தப்பட்டன. இதிலே குறிப்பிடத்தக்க வகையில் 28 தொழிற்சாலைகள் இங்கே குறிப்பிட்டு கோடிட்டுக் காட்டப்பட்டுள்ளன. கடந்த ஓர் ஆண்டில் மட்டும் சுமார் 10,000 தொழிற்தகராறுகளை இவ்வரசு தீர்த்து வைத்துள்ளதை நினைக்கின்றபோது இது ஒரு பெருமைக்குரிய விஷயமாக இருக்கிறது. இதை தமிழ் மாநில காங்கிரஸ் கட்சி வரவேற்கின்றது.

நண்பகல் 12-00

அதேபோல, சென்னை நகரிலே புகழ்பெற்ற பி அண்டு சி தொழிற்சாலை இருக்கிறது. அது ஏறத்தாழ 122 ஆண்டுகளாக சென்னையிலே இயங்கிக் கொண்டிருக்கிறது. இந்தத் தொழிற்சாலை சென்னை மாநகரிலே இருக்கின்ற சட்டமன்ற உறுப்பினர்களுக்கு ஒரு சவாலாக இருந்தது; ஒரு பிரச்சினையாகவும் இருந்தது. குறிப்பாக, பெரம்பூர் தொகுதி, எழும்பூர் தொகுதி, புரசைவாக்கம் தொகுதி, ஆயிரம் விளக்கு தொகுதி, அண்ணா நகர் தொகுதி, பூங்கா நகர் தொகுதி ஆகிய தொகுதிகளிலேதான் இந்தத் தொழிற்சாலையிலே பணியாற்றுகின்ற தொழிலாளர்கள் குடியிருக்கின்றார்கள். ஏறத்தாழ 5,000 தொழிலாளர்கள் இருக்கின்றார்கள். இந்தத் தொழிற்சாலையை, 1996 ஆம் ஆண்டு பெய்த மழையின் காரணமாக வெள்ளப் பெருக்கெடுத்ததனால் தொழிற்சாலையினுடைய நிர்வாகம் மூடிவிட்டது. இந்தத் தொழிற்சாலையை மீண்டும் திறப்பதற்கு தமிழகத்தினுடைய மாண்புமிகு முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களுடைய தலைமையில் முத்தரப்புப் பேச்சுவார்த்தை தொடங்கப்பட்டது. இன்றைக்கு அந்தத் தொழிற்சாலையில் பணிபுரிகின்ற தொழிலாளர்களுக்கு ஒரு நல்ல நிலை, அவர்கள் ஏற்றுக்கொள்கின்ற வகையில் ஒரு ஒப்பந்தமானது 28-3-1998 அன்று மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களுடைய முன்னிலையில் ஏற்பட்டது. ஆனால், அந்த ஒப்பந்தத்தில் கண்டுள்ள ஷரத்துக்களின்படி அந்த நிர்வாகம் நடக்கவில்லை என்று இப்பொழுது அந்தத் தொழிற்சங்கத்தினுடைய நிர்வாகிகள் எங்களிடத்திலே சொல்லி ஒரு மனுவைக் கொடுத்துள்ளார்கள். அந்த மனுவை இங்கே நான் படித்துக் காண்பிக்கிறேன். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இதிலே கவனம் செலுத்த வேண்டும். "பணியை விட்டு விலகிச் செல்லும்

நிரந்தரத் தொழிலாளர்களுக்கு நஷ்ட ஈட்டுத் தொகை ரூபாய் 1.25 இலட்சம் மற்றும் பணிக்கொடை சட்டரீதியாகக் கணக்கிடப்பட்டு வழங்கப்படும் என்று ஒப்புக்கொள்ளப்பட்டுள்ளது" என்பதைத் தங்கள் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். ஆனால் மேற்படி 28-3-1998 ஒப்பந்தத்தை அமல்படுத்துவது சம்பந்தமாக நிர்வாகத்துடனும் 8-4-1998 மற்றும் 13-4-1998 அன்று அந்த ஆலையினுடைய அதிபர் திரு. எத்திராஜ் அவர்களுடனும் பேச்சுவார்த்தை நடைபெற்றது. பேச்சுவார்த்தையில் சேர்மன் அவர்கள், பணிக்கொடையைக் கணக்கிடும்பொழுது ஜுன் 1996-இல் இருந்த பஞ்சப்படியின் அடிப்படையில்தான் கணக்கிடப்படும் என்று தெரிவித்தார்கள். இதனால் ஒவ்வொரு தொழிலாளிக்கும் ரூபாய் 10 ஆயிரம் முதல் 20 ஆயிரம் வரை இழப்பு ஏற்படும். இப்படி நிர்வாகம் தெரிவிப்பது முற்றிலும் சட்டம் மற்றும் ஒப்பந்தத்திற்கு முரணானது என்று தொழிற்சங்கத்தின் நிர்வாகிகள் ஒரு மனுவை எங்களிடத்திலே தந்திருக்கிறார்கள். அன்றைக்கு ஒப்பந்தம் ஏற்பட்ட தினத்தில் 8-4-1998 அன்றைய ஒப்பந்தத்தின்படி தொழிலாளர்களுக்கு வழங்கப்பட்ட கருணைத் தொகை, 15 நாட்கள் ஊதியம் இப்பொழுதுள்ள பஞ்சப்படியின் அடிப்படையில்தான் வழங்கப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. ஆகவே, அமைச்சர் அவர்கள் இந்தப் பிரச்சினையிலே தலையிட்டு ஒரு சுமுகமான முறையில் எங்களுடைய பி அண்டு சி ஆலைப் பிரச்சினையை நீங்கள் தீர்த்து வைக்க வேண்டுமென்று நான் உங்களை அன்போடு கேட்டுக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் திரு. ரங்கநாதன் அவர்கள், தலைவர் கலைஞர் அவர்கள் முன்னால் போடப்பட்டுள்ள ஒப்பந்தத்தின் ஷரத்துக்களை நிர்வாகம் அமல்படுத்தவில்லை என்று குறை கூறினார். நான் அவருடைய கவனத்திற்குக் கொண்டுவர விரும்புவது, ஷரத்துக்களை அவர் முழுமையாகப் படித்திருப்பார் என்று நான் நம்புகிறேன். 9-ஆவது ஒப்பந்தத்தின், 6 ஆவது ஷரத்தின்படி கருணைத் தொகையாக 15 நாள் சம்பளம் அனைத்துப் பணியாளர்களுக்கும், தொழிலாளர்களுக்கும் வழங்கப்படவேண்டும். 8-4-1998 அன்று அது வழங்கப்பட்டுள்ளது.



விருப்ப ஓய்வு, திட்டத்தின்படி அறிவிப்பு வெளியிடுவது குறித்து நிர்வாகமும், தொழிற்சங்கமும் கலந்து பேசி வருகின்றன. நிர்வாகம் 27-4-1998 அன்று அதையொட்டி அறிவிப்பு விடுவதாகத் தெரிவித்து இருந்தது. அதுமட்டுமல்லாமல், இன்னொன்றையும் இங்கே நான் தெரிவிக்க விரும்புகிறேன். இந்த நஷ்ட ஈட்டுத் தொகையில் 50%-ஐ 27-4-1998-ல் தான் தரவேண்டும். இரண்டாவது தவணை 15-5-1998-ல் தரவேண்டும். இப்படி சொல்லிக் கொண்டே போகலாம். ஆகையால், ஷரத்துக்கள் மீறப்பட்டன, ஒப்பந்தம் நிறைவேற்றப்படவில்லை என்ற குற்றச்சாட்டுக்கு இடமில்லை. காலம் இருக்கிறது.

**திரு. ப. ரங்கநாதன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அம்பத்தூரிலுள்ள டன்லப் தொழிற்சாலை பிரச்சினை. இன்று இந்தியாவிலே உள்ள அனைத்து டயர் தொழிற்சாலைகளும் இயங்கிக் கொண்டிருக்கின்றன. அம்பத்தூரிலுள்ள டன்லப் தொழிற்சாலையின் தலைமை அலுவலகம் கல்கத்தாவில் செயல்பட்டுக் கொண்டு இருக்கிறது. அந்தத் தொழிற்சாலை நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. ஆனால், அம்பத்தூரில் இருக்கிற டன்லப் தொழிற்சாலை மட்டும் கடந்த சில மாதங்களாகக் கதவடைப்பு செய்யப்பட்டுள்ளது. இந்தப் பிரச்சினையை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பரிவுடன் கவனித்து அந்த டன்லப் தொழிலாளர்களுக்கு வாழ்வளிக்க வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, வண்டலூரில் உள்ள ஸ்டாண்டர்டு மோட்டார்ஸ் தொழிற்சாலை. இது நீண்டநாளைய, பழைய பிரச்சினை. கடந்த ஆட்சியின்போது தமிழகத்திலே ஒரு தொழில் அதிபர் இந்தத் தொழிற்சாலையை நடத்துவதற்கு முன்வந்தபோது, தமிழக அரசினுடைய ஒரு பொதுத் துறை நிறுவனத்திடமிருந்து 6 கோடி ரூபாயை ஸ்டாண்டர்டு மோட்டார்ஸ் தொழிற்சாலைக்கு அரசு வழங்கியது. அப்படி வழங்கப்பட்ட பின்பு, அந்தத் தொழிற்சாலை திறக்கப்பட்டு, இரண்டு மூன்று மாதங்கள் மட்டுமே இயங்கியது. அதன்பின்பு, மீண்டும் அந்தத் தொழிற்சாலையை மூடிவிட்டார்கள். இன்றைக்கு அந்தத் தொழிற்சாலையிலே பணியாற்றிய தொழிலாளர்களின் ஒருசில குடும்பங்கள் வாழ்க்கையிலே விரக்தி அடைந்து தற்கொலை செய்து கொண்டுள்ள சூழ்நிலையெல்லாம் ஏற்பட்டுள்ளது. ஆகவே, இந்த

ஸ்டாண்டர்டு மோட்டார்ஸ் தொழிற்சாலையைத் திறப்பதற்கான முயற்சியை வெகுவிரைவில் எடுக்க வேண்டுமென்று நான் இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 12-05

அதேபோன்று, 10 வருட காலத்திற்கும் மேலாக மூடப்பட்டுள்ளது மெட்டல் பாக்ஸ் தொழிற்சாலை. இந்தப் பிரச்சினையும் ஏறத்தாழ 10 ஆண்டுகளுக்கும் மேலாக இருக்கின்றது. இன்றைக்கு அந்தத் தொழிற்சாலையினுடைய சொத்துக்களை விற்றாலும்கூட, அங்கே பணியாற்றிய தொழிலாளர்களுக்கு ஒரு கணிசமான தொகையைத் தரமுடியும். ஆகவே, இந்தத் தொழிற்சாலைப் பிரச்சினை குறித்தும் அமைச்சர் அவர்கள் முழுக் கவனத்தைச் செலுத்த வேண்டுமென்று நான் இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோன்று, மாசு ஏற்படுகின்ற சூழ்நிலையின் காரணமாக, இன்றைக்குத் தமிழகத்திலே, நீதிமன்றம் தலையிட்டு, அதனுடைய உத்தரவுப்படி தோல் தொழிற்சாலைகளையும், சாயப்பட்டறைகளையும் மூடியிருக்கிறார்கள். இது ஒரு சமூகப் பிரச்சினை. அந்தத் தொழிற்சாலைகளிலே பணியாற்றிய தொழிலாளர்களெல்லாம் பல மாதங்களாக, வருமானம் இல்லாமல், திண்டாடிக் கொண்டிருக்கிறார்கள். இலட்சக்கணக்கான ஏழைத் தொழிலாளர்கள். சமுதாயத்திலே அடித்தளத்தில் இருக்கின்ற தொழிலாளர்கள் பிரச்சினை என்பதால் அந்தப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு அரசு நல்லதொரு முடிவினை எடுப்பதற்கான ஏற்பாட்டினைச் செய்யவேண்டும். ஏனென்றால், தோல் தொழிற்சாலைகளிலும், சாயப்பட்டறைகளிலும் பணியாற்றிய இலட்சக்கணக்கான தொழிலாளர்கள் இன்றைக்கு வேலை இல்லாமல் இருக்கின்ற நிலை என்பது, ஒரு மனவேதனை தருகின்ற நிலையாக இருக்கின்றது. எனவே, தமிழக அரசின் சார்பில், தொழிற்சாலை அதிபர்களோடு கூடிப்பேசி முயற்சி எடுத்து, நீதிமன்றத்தில் ஒரு வக்காலத்து பதிவு செய்து, குறுகிய காலத்தில், அதாவது ஒரு ஆண்டு காலத்தில் அல்லது இரண்டு ஆண்டு காலத்தில் மாசு பரவாமல் தடுப்பதற்கு நாங்கள் முயற்சி செய்கிறோம் என்று 'கவுண்டர் கேரண்டி' கொடுத்து அந்தத் தொழிற்சாலைகளைத் திறப்பதற்குத் தேவையான வழிமுறைகளை அரசு மேற்கொள்ள வேண்டுமென்று நான் இந்த நேரத்திலே கேட்டுக் கொள்கிறேன்.



அதேபோன்று, தொழிலாளர்கள் அரசு ஈட்டுறுதி மருத்துவமனைகள் இருக்கின்றன. இந்த ஈ.எஸ்.ஐ. மருத்துவமனைகளிலே பணிபுரிகின்ற டாக்டர்கள், நர்ஸ்கள், செவிலியர்கள் மற்றும் அதற்குக் கீழே பணியாற்றுகின்றவர்கள் குறைவாக இருக்கின்ற காரணத்தினால், மருத்துவ வசதிகளைப் பெறுவதற்குத் தொழிலாளர்கள் மிகவும் சிரமப்படுகின்ற ஒரு சூழ்நிலை இருக்கின்றது. அதிலும், குறிப்பாக என்னுடைய தொகுதியிலே இருக்கின்ற செம்பியம் ஈ.எஸ்.ஐ. மருத்துவமனை மிகவும் கேவலமான ஒரு நிலையிலே, பல ஆண்டுகளாகப் பராமரிப்பே இல்லாமல் காட்சியளிக்கின்றது. எனவே, செம்பியம், ஈ.எஸ்.ஐ. மருத்துவமனையில் உள்ள பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று நான் இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது)

ஒரேயொரு விஷயத்தை மட்டும் சொல்லிக்கொண்டு முடித்துக் கொள்கிறேன். அதாவது, அமைப்பு ரீதியற்ற தொழிலாளர்களது பிரச்சினை. சற்றுமுன்புகூட முதலமைச்சர் அவர்கள், அமைப்பு ரீதியிலுள்ள தொழிலாளர்கள், அரசுத் தொழிலாளர்கள், அரசு சார்ந்துள்ள தொழிலாளர்கள் என்று இருக்கின்ற 12½ இலட்சம் தொழிலாளர்களுக்கு பஞ்சப்படி உயர்வு அளித்திருக்கிறார்கள். ஆனால், அமைப்பு ரீதி இல்லாத தொழிலாளர்களுக்கு — இன்றைக்கு தமிழ்நாட்டிலே அப்படிப்பட்ட கோடிக்கணக்கான தொழிலாளர்கள் இருக்கின்றார்கள் — தனிச் சட்டமோ, பாதுகாப்போ இல்லை. அதற்காக நமது அரசு மூன்று குழுக்களை நியமித்திருக்கிறது. அந்தக் குழுக்கள் அண்டை மாநிலங்களுக்கெல்லாம் சென்று, பல்வேறு பரிந்துரைகளைக் கொடுத்திருக்கிறார்கள். அந்தக் குழுக்களை அமைக்கின்றபோது, அதிலே சட்டமன்ற உறுப்பினர்களையும் இணைத்து, அதன்பின்பு அந்தக் குழு அண்டை மாநிலங்களுக்குச் சென்று வந்தால், அதனால் பல நன்மைகள் ஏற்படும்; சட்டமன்ற உறுப்பினர்களும் தங்கள் கருத்துக்களை எடுத்துச் சொல்வதற்கு நலமாக இருக்கும் என்பதை நான் இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதேபோன்று, பீடித் தொழிலாளர்கள் பிரச்சினை. இது ஆண்டாண்டுக் காலமாக இருக்கின்றது. இந்தக் கொள்கை விளக்கக் குறிப்பிலேகூட சில விவரங்களைக் குறிப்பிட்டிருக்கிறீர்கள். திருநெல்வேலி மாவட்டத்தில் மேலப்பாளையத்தில் 433 வீடுகளும், முக்கூடலில் 533 வீடுகளும் இந்தத் தொழிலாளர்களுக்காகக் கட்டப்படுகின்றன என்றும்,

வேலூர் மாவட்டத்தில் 588 வீடுகள் கட்டிக் கொடுக்கத் திட்டம் பரிசீலனையில் உள்ளது என்றும் குறிப்பிட்டுள்ளீர்கள். அவற்றை இன்னும் கூடுதலாக்கி, சென்னை மாவட்டத்திலும், சென்னையின் புறநகர்ப் பகுதிகளிலும் பீடித் தொழிலாளர்களுக்கு வீடுகளைக் கட்டித்தர வேண்டுமென்று நான் இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன். ஏனென்றால், இவை மத்திய அரசு நிதி உதவியுடன் கட்டப்படும் வீடுகள். கடந்த ஆண்டு, இந்த வீடுகளைக் குறைவாகக் கட்டியுள்ளார்கள். இன்னும் அதிகமாகக் கட்டலாம். ஏனென்றால், மத்திய அரசினுடைய நிதி உதவி இதற்குக் கிடைக்கிறது. ஆதலால், 'ஹட்கோ'-வினுடைய கடனைப் பெற்றுக் கொண்டு, அதிக அளவில் இந்த வீடுகளைக் கட்ட வேண்டும்; அவர்களுடைய பிரச்சினையைத் தீர்க்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

பிற்பகல் 12-10

அடுத்து, குழந்தைத் தொழிலாளர் பிரச்சினை; இதையும் நீங்கள் கவனத்தோடு பரிசீலிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோன்று, ஒருகாலத்தில் வேலைவாய்ப்பு அலுவலகத்திலே பதிவு செய்து கொண்டவர்களுக்கு, கலைஞர் அரசு, 1972, 1973, 1974, 1975 ஆம் ஆண்டுகளிலே, பதிவு செய்து, வேலை கிடைக்காமல் இருந்தவர்களுக்கு மாதம் 'டோல்' (Dole) என்று சொல்வார்களே, அதாவது ரூ. 100, ரூ. 125 என்று அப்போது வழங்கினார்கள். அந்த முறையை மீண்டும் இந்த அரசு, கலைஞர் அரசு உருவாக்க வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக் கொண்டு, இறுதியாக.....

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. ஜி. சொக்கலிங்கம்.

**திரு. ப. ரங்கநாதன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 5 நிமிடம்தான் ஆகியிருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** ஐந்து நிமிடமா? உங்களுக்குத் தெரியுமா நீங்கள் எவ்வளவு நேரம் பேசினீர்கள் என்று? 16 நிமிடங்கள் பேசியிருக்கிறீர்கள், உட்காருங்கள். இன்னும் 5 பேர்கள் பேசி, அமைச்சர் பதில் சொல்லி, அதற்குப்பிறகு 3 பில்கள் ஆய்வு செய்யப்பட இருக்கின்றன. (குறுக்கீடு) இதில் ஜூனியர், சீனியர் எல்லாம் கிடையாது, எல்லோரும் ஒரே மாதிரிதான்.



**திரு. ப. ரங்கநாதன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இறுதியாக, தரக்கட்டுப்பாடு பற்றி மட்டும் பேசி முடித்துவிடுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** சரி, பேசுங்கள்.

**திரு. ப. ரங்கநாதன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தரக்கட்டுப்பாடு என்பது ஒரு மிகப் பெரிய துறை. தமிழ்நாட்டிலே இருக்கின்ற பல்பொருள் அங்காடிகள், சிறுதொழில் நிறுவனங்கள், ஓட்டல்கள் என்று இப்படி எல்லா வகையிலேயும், தரம் இல்லாத சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. அதை உடனடியாக அரசு கவனத்தோடு பரிசீலித்து — பொருள்களின் விலையை போர்டிலே எழுதி வைப்பார்கள்; 'ஹார்லிக்ஸ்' என்ன விலை, கடலைப் பருப்பு என்ன விலை, எண்ணெய் என்ன விலை என்று. 1975-ஆம் ஆண்டு அவசர நிலை அமலிலே இருந்தபோது, அனைத்துக் கடைக்காரர்களும், ஓட்டல் நிறுவனங்களும், அனைத்து சிறு கடை, பெரிய கடை முதலாளிகள் எல்லாம் அவ்வாறு போர்டில் எழுதி வைத்திருந்தார்கள் — அந்தப் பொருட்களின் விலையை போர்டின் மூலமாக, அனைத்துக் கடைகளிலும் எழுதிவைக்கவேண்டுமென்று வலியுறுத்த வேண்டுமென்று சொல்லி, எனக்கு இந்த வாய்ப்பு தந்த தங்களுக்கு நன்றி கூறி விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. ஜி. சொக்கலிங்கம்.

**திரு. ஜி. சொக்கலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இன்றையதினம் நம்முடைய தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கொண்டுவந்த, தொழிலாளர் நல மானியக் கோரிக்கையின்மீது எனக்குப் பேச வாய்ப்பு அளித்த பேரவைத் தலைவர் அவர்களுக்கும், நம்முடைய முதலமைச்சர் தலைவர் கலைஞர் அவர்களுக்கும், திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக நன்றி தெரிவித்துக் கொண்டு, ஒருசில கருத்துக்களை நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

நம்முடைய தலைவர் அவர்கள் பொறுப்பேற்று, ஏழையெளிய மக்கள் நல்வாழ்வு பெற, நம்முடைய முதல்வர் அவர்கள், நிதிநிலை அறிக்கையிலே, பல தொழிற்சாலைகளைக் கொண்டு வந்திருக்கிறார்கள். தொழில் வளம் பெருக, தொழிலாளர்கள் நலம் பெற, புதிய

தொழிற்சாலைகள் கொண்டு வந்து, அதுவும் குறிப்பாக, என்னுடைய திருப்போரூர் தொகுதியில், மறைமலை நகரில் ரூ. 24 கோடி மதிப்பீட்டில் தொலைத் தொடர்பு கம்பிகள் — கேபிள் — தயாரிக்கும் தொழிற்சாலை ஒன்றும், 150 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மோட்டார் தொழிற்சாலைக்கு உதிரி பாகங்கள் — ஸ்பேர் பார்ட்ஸ் — தயாரிக்கிற தொழிற்சாலையும், மகேந்திரா ஃபோர்ட் தொழிற்சாலையும் கொண்டுவர நடவடிக்கை எடுத்ததுடன், நேரடி வேலைவாய்ப்பின் மூலம் தொழிலாளர் நலம் பெற 2,500 நபர்களுக்கு வேலைவாய்ப்பும், 979 நபர்களுக்குத் தொழில் வேலைவாய்ப்பும் கிடைக்கும் அளவில் அமைத்ததோடு, பெண்கள் சுய வேலைவாய்ப்புக் கருதி, குறைந்த விலையில் பொருட்கள் தயாரிக்கும் பொருட்டு, என்னுடைய தொகுதியில் அடங்கிய கேளம்பாக்கத்தின் அருகில் சிறுசேரி கிராமத்தில் சுமார் 500 ஏக்கர் நிலத்தில் தொழில் பூங்கா அமைத்து, அங்குள்ள பகுதி மக்களுக்கு வேலைவாய்ப்பும், தமிழகத்தில் பொதுவாக அனைத்து மக்களுக்கும் வேலைவாய்ப்பு கிடைக்கவும், ஆதிதிராவிட, பழங்குடி மற்றும் பிற்படுத்தப்பட்ட மக்கள் வாழ்வு வளம்பெறவும், இந்தத் தொழிற்சாலைகளைக் கொண்டுவந்த, நமது முதல்வர், 'ஏழையின் சிரிப்பில் இறைவனைக் காண்போம்' என்று சொன்ன எனது தலைவர் கலைஞர் அவர்களுக்கு, எனது தொகுதி மக்களின் சார்பாக நன்றியையும், வணக்கத்தையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

தொழிற்சாலைகளில் பணிபுரியும் தொழிலாளர்களுக்கு உள்ளபடியே குறைந்தபட்ச ஊதியம் சில நேரங்களில் சரிவரக் கொடுப்பதில்லை. அதுவும் குறிப்பாக, எந்தத் தொழிற்சாலையாக இருந்தாலும், அது சிறிய தொழிற்சாலையாக இருந்தாலும் சரி, மிகப் பெரிய தொழிற்சாலையாக இருந்தாலும் சரி, அந்தத் தொழில் நிறுவனங்களில் வேலைபார்க்கும் தொழிலாளர்களுக்கு, குறைந்தபட்ச ஊதியமாக ரூ. 600 முதல் ரூ. 1,500 வரைதான் கொடுக்கிறார்கள். இன்றைக்கு இருக்கின்ற நிலையில், விலைவாசி ஏற்றத்தை வைத்து பார்க்கும்போது அந்தச் சம்பளம் அந்தத் தொழிலாளர்களுக்குப் போதுமா என்பதை நாம் ஒருகணம் சிந்தித்துப் பார்க்கவேண்டும்.

பிற்பகல் 12-15

நமது தலைவர் கலைஞர் அவர்கள் இதயசுத்தியோடு அரசு ஊழியர்களுக்கு இன்றைக்கு வாரி வழங்கியிருப்பது இந்திய வரலாற்றிலே



தனிச் சிறப்பாக அமைந்திருக்கிறது. இந்தத் தொழிற்சாலைகளில் உற்பத்தித் திறனைப் பெருக்க வேண்டுமென்பதற்காக கண்காணிப்புக் குழு ஒன்று அமைக்கப்பட்டிருக்கிறது. தொழிலாளர்களின் ஊதியத்தை உயர்த்த வேண்டுமென்பதற்காகவும், அதேநேரத்தில், உற்பத்தித் திறனைப் பெருக்க வேண்டுமென்பதற்காகவும்தான் தொழிற்சாலைகளில் இந்தக் குழு அமைக்கப்பட்டிருக்கிறது. ஆனால், தொழிற்சாலைகளில் அந்தக் குழு சொல்கின்ற அளவிற்குக்கூட முதலாளிகள் சரியாகச் செயல்படுவதில்லை. எனவே அரசு இதிலே தலையிட்டு இப்படிப்பட்ட குழுக்களை ஆங்காங்குள்ள தொழிற்சாலைகளுக்கு ஒழுங்காக அனுப்பி, அந்தத் தொழிற்சாலைகளில் பணிபுரிகின்ற ஏழைத் தொழிலாளர்களுக்கு நியாயமான ஊதியத்தை முடிந்தவரை பெற்றுத் தருவதற்கு முன்வர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அதேபோல, இப்போது வழங்கப்படுகிற மினிமம் போனஸ்....

**மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. சொக்கலிங்கம் கூறிய குறைந்தபட்ச ஊதியம் சம்பந்தமாக இந்த அரசு சரியான நடவடிக்கை எடுக்கின்றதா, எடுக்கவில்லையா என்ற பிரச்சினை ஒருபுறம் இருந்தாலும், சில குற்றச்சாட்டுக்களை அவர் குறிப்பிட்டிருக்கிறார். குறிப்பாக, சட்டத்தைப் பொறுத்தமட்டில் குறைந்தபட்ச ஊதியம் எங்காவது, எந்தத் துறையிலாவது கொடுக்கப்படவில்லை என்று சொன்னால் சட்டத்தின் மூலமாக நிவாரணம் காண்பதற்கு வழி இருக்கிறது. ஆக, குறிப்பிட்டு அவர்கள் சொல்வார்களேயானால் Claim Petition மூலமாக அவர்கள் அதைப் பெறலாம். இன்னொன்றையும் தெரிவித்துக்கொள்கிறேன். இந்தியாவிலேயே தமிழ்நாட்டில்தான் குறைந்தபட்ச ஊதியச் சட்டம் கறாராக அமல்நடத்தப்பட்டு, பல இடங்களில் 74 தொழில்களுக்கும் மேலே நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. ஜி. சொக்கலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்களுக்கு நான் விவரங்களைக் கண்டிப்பாகக் கொடுக்கிறேன்.

அதுபோல, போனஸ் பிரச்சினை உங்களுக்கெல்லாம் நன்றாகத் தெரியும். 8.33 சதவீதம் போனஸ் கொடுக்கிறார்கள். இப்போது இருக்கின்ற நிலைமையில், இன்றைக்கு இருக்கிற விலைவாசியில் தனியார்

நிறுவனங்களில் பணிபுரியும் தொழிலாளர்களுக்கு அந்த போனஸ் சரிப்படுமா என்பதை உற்றுக் கவனித்து, முடிந்த அளவிற்கு 20 சதவீதமாவது கொடுப்பதற்கு அரசு ஆவன செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அதுபோல, நமது முதல்வர் கலைஞர் அவர்கள் ஆட்சிப் பொறுப்பை ஏற்ற பிறகு—எனது தொகுதியில் இருக்கிற மறைமலைநகர் முதலில் ஒரு காடாக இருந்தது—அந்தக் காடு இன்றையதினம் நகரமாகியிருக்கிறது என்றால் அங்கே 20,000 தொழிலாளர்கள் பணிபுரிகிற அளவிற்கு தொழிற்சாலைகளை நமது முதல்வர் அவர்கள் உருவாக்கியிருப்பது தான் காரணம். ஆனால் அந்தப் பகுதியிலே இ.எஸ்.ஐ. மருத்துவமனை இல்லை. பக்கத்திலே இருக்கிற செங்கற்பட்டுக்குத்தான் செல்ல வேண்டியிருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** உறுப்பினர்கள் எல்லாம் அவரவர் இருக்கையில் போய் உட்கார வேண்டும். பேசிக் கொண்டிருக்கின்ற உறுப்பினருக்கும், பேரவைத் தலைவர் இருக்கைக்கும் இடையிலே செல்லக்கூடாது.

**திரு. ஜி. சொக்கலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பல தொழிலாளர்கள் பணிபுரிகின்ற பல பெரிய தொழிற்சாலைகள் இருக்கின்ற மறைமலைநகர் பகுதியில் இ.எஸ்.ஐ. மருத்துவமனையை நீங்கள் அமைத்துத் தரவேண்டும் என்று பேரவைத் துணைத் தலைவர் மூலமாக அமைச்சர் அவர்களை நான் கேட்டுக்கொள்கிறேன். அந்தத் தொழிற்பேட்டையில், இன்றைக்குப் பல தொழிற்சாலைகளில் பிரச்சினைகள் இருக்கின்றன. அந்தத் தொழிற்சாலைகளில் வேலை செய்பவர்களுக்கு அடிபட்டால், கை போனால், கால் போனால் சிகிச்சை செய்ய மருத்துவ வசதி இல்லை. First Aid கூடச் செய்ய வசதி இல்லாத தொழிற்சாலைகள் இருக்கின்றன. எனவே உடனடியாக அங்கு ஒரு மருத்துவமனையை அமைத்துத்தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதுபோல, அங்கே 5,6 கம்பெனிகள் மூடப்பட்டிருக்கின்றன. உற்பத்தித் திறன் குறைந்த காரணத்தினால் சில தொழிற்சாலைகள் மூடப்பட்டு பல தொழிலாளர்கள் வேலைவாய்ப்பை இழந்திருக்கிறார்கள். தொழில் தகராறுகள் ஏற்பட்டதன் காரணமாகவும், உற்பத்தித் திறன் குறைந்ததன் காரணமாகவும் அந்தத் தொழிற்சாலைகளை



மூடியிருக்கிறார்கள். அதிலே தார் தயாரிக்கும் தொழிற்சாலை, கேபிள் தயாரிக்கும் தொழிற்சாலை, தோல் தொழிற்சாலை இப்படி மூன்று தொழிற்சாலைகள் மூடப்பட்டிருக்கின்றன. பேரவைத் துணைத் தலைவர் மூலமாக நான் சொல்லிக்கொள்கிறேன். அமைச்சர் அவர்கள் அந்த முதலாளிகளை அழைத்து பேச்சு வார்த்தை நடத்தி, அந்தத் தொழிற்சாலைகளைத் தொடங்குவதற்கு ஆவன செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் **12-20**

என்னுடைய தொகுதியிலுள்ள தொழிலாளர் ஓய்வு விடுதியைப் பற்றி கொள்கை விளக்கக் குறிப்பிலே குறிப்பிடப்பட்டிருக்கிறது. அந்த ஓய்வு விடுதி மாமல்லபுரத்திலே பண்டித ஜவகர்லால் நேரு அவர்களுடைய பெயரிலே இருக்கிறது. அந்த விடுதியில் தங்குவதற்குத் தேவையான சாதாரண அடிப்படை வசதிகள்கூட இல்லாமல் இருக்கிறது. அந்த ஓய்வு விடுதியில் சுகாதாரக் கேடு ஏற்பட்டு, சரிவரப் பராமரிக்கப்படாமல் இருக்கிறது. எங்களுடைய காஞ்சிபுரம் மாவட்டத்தில் இருக்கின்ற அந்த ஒரு ஓய்வு விடுதியும் சரிவர இல்லாமல் இருக்கிறது. எனவே, தொழிலாளர்களின் நலன் கருதி அந்த ஓய்வு விடுதியைச் சரிபார்த்துக் கொடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, என்னுடைய தொகுதியில் உள்ள ஆலத்தூர் தொழிற்பேட்டை மிகவும் பிரசித்தி பெற்ற தொழிற்பேட்டையாகும். அந்தத் தொழிற்பேட்டையில் பணியாற்றுகின்ற தொழிலாளர்களுக்கு வீட்டு வசதி இல்லை. எனவே, அங்கு பணிபுரியும் தொழிலாளர்களுக்கு வீட்டு வசதி செய்து கொடுக்க வேண்டுமென்று நான் அமைச்சர் அவர்களை வேண்டி, விரும்பி கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, தொழில் தகராறு ஏற்பட்டு, வழக்கு மன்றத்தில் அதற்கான உத்தரவுகள் பிறப்பிக்கப்பட்டாலும், சில முதலாளிகள் அதைக் கடைப்பிடிப்பதில்லை. ஒரு தொழிலாளி தொழில் தகராறு தொடர்பாக வழக்குமன்றத்தின் தீர்வைப் பெற்று, அதற்கான உத்தரவை எடுத்துக்கொண்டு வேலைக்குச் செல்லுகிறார் என்றால், அந்தத் தொழிற்சாலையின் முதலாளி வழக்குமன்றத்தின் உத்தரவை மீறுகிறார். நான் பேரவைத் துணைத் தலைவர் மூலமாகக் கேட்டுக்கொள்வது என்னவென்றால், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இதில் தலையிட்டு,

வழக்குமன்றத்தின் தீர்ப்பை மீறுகின்ற தொழிற்சாலை முதலாளிகள் மீது நடவடிக்கை எடுத்து, பாதிக்கப்பட்ட தொழிலாளர்கள் வேலைக்குச் செல்வதற்கு ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, வாய்ப்புக்கு நன்றி கூறி அமைகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. கே. சுப்பராயன்.

***திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 'எல்லாக் காலங்களிலும் பிறரது காலடிகளில் மிதிபட்டுத் துயருறுகின்ற இந்திய உழைப்பாளிகளே, உங்களை நான் வணங்குகிறேன்' என்று விவேகானந்தர் வணங்கினார். இந்தியத் தொழிலாளர்களை, இந்தியத் தொழிலாளர்களை வணங்கிய விவேகானந்தரை வணங்குகின்ற பி.ஜே.பி-யினுடைய ஆட்சியில் அறிவிக்கப்பட்டிருக்கின்ற தேசிய திட்டத்தில் ஒரு வரிகூடத் தொழிலாளர்களைப் பற்றி இல்லை என்பது வேதனைக்குரியதாகும். தேசியத் திட்டம் அறிவித்திருக்கின்ற பி.ஜே.பி. ஏதோ விவரம் இல்லாமல், விடுபட்டுப்போன நிலையில் தேசியத் திட்டத்தில் தொழிலாளர்களைப் பற்றிக் குறிப்பிடவில்லை. இந்தியத் தொழிலாளர் வர்க்கத்தை மதத்தின் பெயரால், சாதியின் பெயரால் பிரித்து, பிளந்து, பெரும்பான்மை மத உணர்வுகளைக் கிளறிவிட்டு, அதிகாரத்தைக் கைப்பற்றிக்கொண்ட பி.ஜே.பி. இந்தியத் தொழிலாளர் வர்க்கத்தையும், இந்தியத் தொழிற் சங்க உரிமையையும் பறிக்கின்ற உள்நோக்கத்தோடுதான் இத்தகைய மௌனத்தைத் தேசியச் செயல் திட்டத்திலே காட்டியிருக்கிறது என்பதை நான் இந்தப் பேரவையின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். எனவே, இந்தத் தேசியச் சூழலில் நம்முடைய தமிழ்நாட்டினுடைய தொழிலாளர்களின் நிலை, அவர்களுடைய எதிர்கால நிலை போன்றவற்றை எல்லாம் நாம் கவனிக்க வேண்டியிருக்கிறது.

நம்முடைய கொள்கை விளக்கக் குறிப்பிலே, "தமிழ்நாட்டில் தொழில் அமைதி நிலவுகிறது" என்று சொல்லப்பட்டிருக்கிறது. தொழில் அமைதி வேண்டும் என்பதிலே, தொழில் அமைதி காப்பாற்றப்பட வேண்டும் என்பதிலே எங்களுக்கு இரண்டு விதமான கருத்துக்கள் இல்லை. தமிழ்நாட்டில் தொழில் அமைதி நிலவுகிறது என்று சொல்கின்ற அதே கொள்கை விளக்கக் குறிப்புதான் 1997 ஆம் ஆண்டில் மட்டும் 20,97,000 வேலை நாட்கள் இழப்பு ஏற்பட்டிருக்கிறது என்பதையும் குறிப்பிட்டிருக்கிறது. தொழில் அமைதி நிலவுகிறது. ஆனால் தொழில் அமைதி நிலவுகின்ற ஒரு மாநிலத்தில் 20,97,000 வேலை நாட்கள்



வீணாகி இருக்கின்றன என்றால் அதற்கு என்ன காரணம் என்றும் கொள்கை விளக்கக் குறிப்பிலே கூறப்பட்டிருக்கிறது. இந்த வேலை நாட்கள் இழப்பிற்கு, மனித நாட்கள் இழப்பிற்கு தொழிலாளர் பிரச்சினை காரணமாக எந்த நிறுவனமும் மூடப்படவில்லை என்றும், கொள்கை விளக்கக் குறிப்பிலே கூறப்பட்டிருக்கிறது. இதிலிருந்து என்ன தெரிகிறது என்றால், ஒரு விசித்திரமான உண்மை, ஆச்சரியமான உண்மை, மனித வேலை நாட்கள் இழப்புக்குக் காரணம் தொழிலாளர்கள் அல்ல, முதலாளிகள்தான் காரணம், முதலாளிகள் தொழிற்சாலைகளை மூடியிருக்கிறார்கள் என்றும் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. அவர்கள் ஏன் மூடினார்கள் என்பதற்கு இந்தக் கொள்கை விளக்கக் குறிப்பிலே சொல்லியிருக்கின்ற விஷயத்தை நான் ஒத்துக்கொள்ளவில்லை. வெறுமனே நிதிப் பற்றாக்குறையினாலோ அல்லது கடன் ஏற்பட்டுவிட்ட காரணத்தாலோ அல்லது அவர்கள் சொல்லுகின்ற வேறு காரணங்களினாலோ அந்தத் தொழிற்சாலைகள் மூடப்படவில்லை. தாராளமயக் கொள்கை நிலவுகின்ற இன்றைய காலத்தில் அரசாங்கத்தினுடைய பல்வேறு சலுகைகளை அனுபவிக்கின்ற உள்நோக்கத்தோடு நல்ல தொழிற்சாலைகளைத் திட்டமிட்டு நலிவடையச் செய்து, கொன்றுவிட்டு, வேறு பல பகுதிகளில், வேறு பல துறை சார்ந்த தொழில்களைத் தொடங்கிக் கொள்கின்ற ஒரு உத்தியை இந்திய முதலாளிகள் கடைப்பிடித்து வருகிறார்கள். அதனுடைய விளைவுதான் தமிழ்நாட்டிலும் இத்தகைய நிலைமைகளை முதலாளிகள் மேற்கொள்வதற்கான காரணம் என்பதை இங்கே நான் குறிப்பிட விரும்புகிறேன். இவர்களுக்கு சமூக நியாயங்களைப் பற்றியோ, சட்டங்களைப் பற்றியோ கொஞ்சமும் கவலை இல்லை.

பிற்பகல் 12-25

அதனால்தான் எதைப் பற்றியும் கவலைப்படாமல் தொழிற்சாலைகளை மூடி, தொழிலாளிகளைப் பட்டினி போட்டு தொடர்ச்சியாகத் தமிழ்நாட்டினுடைய பொருளாதார வளர்ச்சிக்கு நெருக்கடியை ஏற்படுத்தி வருகிறார்கள். இதிலே ஒரு வேதனையான விஷயம் என்னவென்றால், 1978-ஆம் ஆண்டு முதல் ஒரு பரிசு அளிப்புத் திட்டம், நல்லுறவைப் பேணிப் பாதுகாப்பதற்கு ஒரு பரிசு— தயவு செய்து நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன், ஒரு கேலிக் கூத்து நிலவிய காலத்தில் கொண்டு வரப்பட்ட அந்தத் திட்டத்தைக் கைவிட்டு விடுங்கள். அது பயனற்றது, பிரயோஜனம் அற்றது. எங்கே

தொழில் உறவு நிலவுகிறது? உண்மையில் நீங்கள் தொழில் உறவு நிலவ வேண்டுமென்று பரிசு அளிக்க வேண்டுமானால், தொழிற்சாலைகளை மூடுகின்றவர்களைக் கைது செய்து சிறையில் அடைத்தால்தான் தொழிற்சாலைகள் மூடப்படுவது தடுக்கப்படும். உண்மையிலே தொழில் நல்லுறவுக்கு இந்த மாநில அரசு பரிசு அளிக்க விரும்பினால், தொழிற்சாலைகளை மூடுகின்ற நிர்வாகத்தைக் கைது செய்ய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். அப்படி நடவடிக்கை மேற்கொள்வதுதான் உண்மையிலே தொழில் உறவைக் காப்பதற்கான பரிசாக அமையும் என்பதை நான் இங்கே தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

ஓர் உதாரணத்தைக் குறிப்பிட விரும்புகிறேன். இதனை நான் தொடர்ந்து நான்கு, ஐந்து முறை குறிப்பிட்டுக்கொண்டே இருக்கிறேன். ஆனால், தீர்வு இல்லை. கிராமப்புறத்திலே பழமொழி சொல்வார்கள், கோழி அடைகாத்துப் பிரயோஜனம் இல்லை. கோழி முட்டையை அடைகாத்து என்ன பிரயோஜனம்? அடைகாத்ததற்கு இறுதியிலே குஞ்சு பொரிக்க வேண்டும், ஆனால் குஞ்சு பொரிப்பதே இல்லை, அடைகாத்துக் கொண்டேயிருந்தால் என்ன பிரயோஜனம்? இந்தத் தனியார் மோட்டார் முதலாளிகள் பற்றிக் குறிப்பிட்டு ஏற்கெனவே சொல்லியிருக்கிறேன். தனியார் மோட்டார் முதலாளிகள் மாதிரி இன்றைய நிலையில் தொழிலாளர் வர்க்க விரோதத் தாக்குதலைத் தொடுத்த துறை வேறு எதுவும் இல்லை என்று சொல்லலாம். அந்தத் தாக்குதல் இன்றைக்கு தமிழ்நாட்டில் இந்தத் தனியார் போக்குவரத்துத் துறையால் நடத்தப்பட்டு இருக்கிறது. என்ன காரணம்? என்ன தவறு செய்தார்கள் தொழிலாளர்கள்? சட்ட ரீதியிலான உரிமையை வலியுறுத்தினார்கள். சங்கம் சேருகின்ற உரிமையை வலியுறுத்தினார்கள். மினிமம் வேஜஸ் சட்டத்தின்படி சம்பளத்தைக் கொடுக்க வேண்டுமென்று வலியுறுத்தினார்கள். அப்படி வலியுறுத்தி, நான் இந்த மாநில அரசைக் கேட்டுக்கொள்கிறேன். மூன்று மூத்த அமைச்சர்கள் பேச்சுவார்த்தை நடத்தினார்கள். அந்தத் தனியார் பஸ் முதலாளிகளிடம் தொழிலாளர் துறை பேச்சுவார்த்தை நடத்தி வலியுறுத்தியது. முதலமைச்சர் வழிகாட்டினார். நிறுத்தப்பட்ட 520 தொழிலாளர்கள் வேலைக்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டுமென்று சொல்லப்பட்டதே, இந்த நிமிடம்வரை எடுத்துக்கொள்ளப்படவில்லை. யார் தொழில் உறவைச் சீர் குலைப்பது? மாநில அரசு தொழில் உறவைச் சீர்குலைத்த இந்தத் தனியார் பஸ் முதலாளிகள்மீது என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது? ஆனால்; இன்றைக்கு என்ன நடந்திருக்கிறது தெரியுமா?





Fundamental right to Trade Union, அந்த Trade Union அமைத்ததற்காக டிஸ்மிஸ் செய்யப்பட்டு விட்டார்கள். டிஸ்மிஸ் செய்யப்பட்டுவிட்ட அந்தத் தொழிலாளிகள், அந்த பஸ் கம்பெனிக்கு முன்னால் ஈரோட்டில் மறியல் செய்கிறார்கள். மறியல் செய்தவர்கள் இன்றைக்கு 184 பேர் கோவை மத்திய சிறைச்சாலையில் அடைக்கப்பட்டிருக்கிறார்கள். சட்டத்தை நிறைவேற்றாமல், தொழிற்சங்க உரிமையையும் பறித்து, குறைந்தபட்சக் கூலிச் சட்டத்தையும் நிறைவேற்ற மறுத்து, மாநில அரசு சொன்னதையும் நிறைவேற்ற மறுத்து அடம்பிடிக்கின்றவர்களுக்கு எதிராக, சட்டத்தை நிறைவேற்ற மறுக்கின்ற முதலாளிகளை எதிர்த்துப் போராடுவது குற்றமா? சட்டத்தை நிறைவேற்றவில்லையென்று எதிர்த்துப் போராடியதற்காகத் தனியார் தொழிலாளர்கள் கைது செய்யப்படலாமா, கைது செய்யப்பட்டு மத்தியச் சிறைச்சாலையில் வைத்துத் தண்டிக்கப்படலாமா? நான் கேட்கிறேன். இது என்ன முறை? இது முறையல்ல, தொழிலாளர்களைக் காப்பாற்றுகின்ற முறையல்ல இது என்பதை நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

ஒரு விஷயத்தையும் இங்கு நான் சொல்ல விரும்புகிறேன். இன்று தமிழ்நாட்டிலே அவர்கள் வயலன்ஸ் செய்யவில்லை. எந்த முறைகேடும் செய்யவில்லை. முறைகேடு செய்யாமலேயே அவர்களுக்கு இந்த நிலை ஏற்பட்டிருக்கிறது. வழக்குகளும் தொடுக்கப்பட்டு இருக்கின்றன. ஆனால் அதே நேரத்தில் ஒரு துரதிருஷ்டம்—நம்முடைய திராவிட முன்னேற்றக் கழகம் பொதுவுடைமை இயக்கத்தோடு தன்னை ஒப்பிட்டுக் கொண்ட ஒரு இயக்கம். மாசேதுங்குடனும், கார்ல் மார்க்ஸ்சுடனும் தன்னை இணைப்படுத்தி மகிழ்ந்து கொண்ட ஒரு இயக்கம் திராவிட முன்னேற்றக் கழகம்—இந்தத் திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய பொதுக் குழு 1959 ஆம் ஆண்டு மாயவரத்திலே கூடியபோது, தமிழ்நாட்டிலே தனியார் மோட்டார் முதலாளிகளிடமிருந்து பஸ் ரூட் முழுவதையும் டேக்-ஓவர் செய்ய வேண்டுமென்று தீர்மானம் போட்டது அன்றைக்கு அண்ணாவின் தலைமையில். இன்று அண்ணாவின் மானசீகத் தலைமையில், அவருடைய தம்பியான கலைஞர் தலைமையில் அமைச்சரவையிலே பொறுப்பேற்றிருக்கின்ற ஒரு அமைச்சர் ஈரோட்டிலே பங்கு பெற்ற ஒரு விழாவில், தனியார் பஸ் ரூட்கள் ஒன்றும் அரசுடைமையாக்கப்படாது; நீங்கள் அதைப்பற்றிக் கவலைப்பட வேண்டியதில்லை; உங்களுக்கு எந்தக் குறையிருந்தாலும் நாங்கள் போக்குவரத்துத் துறை அமைச்சரிடம் பேசி முடித்துத் தருகிறோம் என்று சொன்னால், நான் தங்கள் மூலம் மாநில அரசைக்

கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்—மோட்டார் முதலாளிகள் குறைந்தபட்ச கூலிச் சட்டத்தை அமலாக்கவில்லை; மோட்டார் முதலாளிகள் டிரேட் யூனியனைச் சேர்ந்த தொழிலாளர்களைத் தண்டித்தார்கள்; மோட்டார் முதலாளிகள் எந்தச் சட்டத்தையும் அமலாக்கவில்லை; அப்படிப்பட்ட அவர்களின் குறைகளைத் தீர்த்து வைக்கிறேன் என்று சொல்கிற அமைச்சர், தொழிலாளிகளின் குறைகளைத் தீர்த்து வைக்கிறேன் என்று சொல்ல வேண்டாமா? அதுபற்றி நடவடிக்கை எடுக்க வேண்டாமா? ஏன் அந்த முதலாளிகள் அப்படி தைரியம் அடைந்திருக்கிறார்கள் என்றால், பரமசிவன் கழுத்திலே அந்தப் பாம்பு இருக்கின்ற காரணத்தினாலேதான்; அது தொழிலாளிகளைக் கொத்திக் கொண்டிருக்கிறது. ஏன் அந்தப் பாம்புக்கு பரமசிவன் இடம் தரவேண்டும்? ஏன் அத்தகைய நிலையை ஈரோட்டிலே மேற்கொள்கிறார்கள்? (குறுக்கீடு).

பிற்பகல் **12-30**

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு மக்கள்-நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. சுப்பராயன் அவர்கள் இவ்வளவு ஆத்திரத்தோடு பேசுவதற்கான காரணங்களை இந்த அரசு புரிந்து கொள்ளாமல் இல்லை. அவர் குறிப்பிட்டதைப்போல, மூன்று அமைச்சர்கள் தலைமையில் ஒரு கூட்டத்தைக் கூட்டி, அதில் தொழிலாளர் பிரதிநிதிகளும், பஸ் உரிமையாளர்களுடைய பிரதிநிதிகளும் பேச்சுவார்த்தை நடத்தி, அன்றையதினம், வேலை நிறுத்தத்திலே ஈடுபட்டதனால் வேலையிலிருந்து நீக்கப்பட்ட தொழிலாளர்களை நாங்கள் வேலைக்குத் திரும்ப எடுத்துக் கொள்கிறோம் என்று வாக்குறுதியைத் தந்தார்கள். ஆனால், அந்த வாக்குறுதியை அந்த பஸ் உரிமையாளர்கள் இதுவரையிலே நிறைவேற்றவில்லை என்பது உண்மை. அது சம்பந்தமாக, தொழிலாளர் நலத் துறை அமைச்சர் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று இரண்டு, மூன்று முறை நினைவுபடுத்தியிருக்கிறார்கள். இருந்தாலும், இன்றையதினம், மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிட்டதைப்போல பஸ் உரிமையாளர்களுக்கு எதிராகப் போராடிய தொழிலாளர்களை அரசு கைது செய்து, சிறைச்சாலையிலே அடைத்திருக்கிறது என்ற புகார் சொல்லப்பட்டவுடன், முதலமைச்சர் அலுவலகம் மூலம் அந்தத் தொழிலாளர்களை விடுதலை செய்வதற்கான





ஏற்பாடுகளைச் செய்யும்படியும் கேட்டுக்கொள்ளப்பட்டிருக்கிறது. இந்த அரசாங்கத்தைப் பொறுத்தவரையிலே, பரமசிவன் கழுத்திலே இருக்கிற பாம்பு எதுவாக இருந்தாலும், பரமசிவன் தொழிலாளர் பக்கம்தான் இருக்கிறார் என்பதை நான் நினைவுபடுத்த விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே. மாண்புமிகு மக்கள்-நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கொடுத்த விளக்கத்திற்கு நன்றி.

அவர்களுக்கு ஏன் அந்த தைரியம் என்றால், பி.ஜே.பி. அதிகாரத்திற்கு வந்துவிட்டதால், மாநில அரசின் அமைச்சர்கள் சொன்னபடி, நிறுத்தப்பட்ட தொழிலாளிகளை நாம் மீண்டும் வேலைக்கு எடுத்துக்கொள்ள வேண்டியதில்லை. ஏனென்றால், மிக விரைவில் இந்த அரசு 'டிஸ்மிஸ்' செய்யப்பட்டு விடும். அப்படி டிஸ்மிஸ் செய்யப்பட்டுவிட்டால் தனக்குச் சாதகமான ஓர் அரசு வரும் என்று பகிரங்கமாகச் சொல்லித்தான் இத்தகைய பேயாட்டத்தை நடத்திக் கொண்டிருக்கிறார்கள். எனவே, நான் மாநில அரசைக் கேட்டுக்கொள்வது என்னவென்றால், தமிழகத்தில் இன்றும் — கேபினட்டில் உள்ள ஏதோ ஒரு அமைச்சர் ஈரோட்டில் அந்த மாதிரி சொல்லியிருக்கிறார். அவர் தன்னுடைய விருப்பத்தைச் சொல்லியிருக்கலாம்—தமிழ்நாடு கேபினட் தனியார் தடங்களை அரசுடைமையாக்கமாட்டோம் என்று கொள்கை முடிவு எடுத்து விட்டதாகத் தெரியவில்லை. அப்படி ஒரு கொள்கை முடிவை, கலைஞர் தலைமையில் இருக்கிற இந்த அமைச்சரவை எடுக்காது என்று நான் நம்புகிறேன். ஆக, இந்த நிலையில், யாரோ ஒருவர் சொன்னதை எடுத்துக்கொள்ளாமல், நீங்கள் தயவுசெய்து அறிவிக்க வேண்டும். இந்த சட்ட ரீதியான உரிமைகளை அமலாக்கவில்லை என்றால், மாநிலத்தில் இருக்கக்கூடிய தனியார் தடங்கள் முழுவதையும் அரசாங்கம் எடுத்துக் கொள்ளும் என்ற அறிவிப்பை வெளியிட வேண்டுமென்றும் கேட்டுக்கொள்வதோடு—(மணியடிக்கப்பெற்றது). இப்போதுதான் தொடங்கியிருக்கிறேன்—அந்தத் தொழிலாளர்கள் மீது போடப்பட்டிருக்கக்கூடிய வழக்குகளை எல்லாம் வாபஸ் பெறுவதோடு, அந்தத் தொழிலாளர்களுக்கு வேலை அளிப்பதற்கு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டுமென்றும் கேட்டுக்கொள்கிறேன்...

**மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, குறுக்கிடுவதற்கு மன்னிக்கவும். ஒரேயொரு விஷயம்.

இப்போது சொல்லவில்லை என்றால் பிறகு விடுபட்டுப் போகும். மாண்புமிகு உறுப்பினர் திரு. சுப்பராயன் அவர்கள் இங்கு தன்னுடைய கருத்தை எடுத்துச் சொன்னார்கள். நம்முடைய மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களும் அதற்குரிய விளக்கத்தைக் கொடுத்துவிட்டார்கள். ஆனால், ஒன்றை மட்டும் உங்களுடைய கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

பஸ் முதலாளிகள், தொழிலாளர்கள் சம்பந்தமாக இந்த அரசு உரிய நடவடிக்கை எடுத்துவருகிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர் ஒப்புக்கொள்வார் என்று நான் நம்புகிறேன். பணி நீக்கம் செய்யப்பட்ட தொழிலாளர்கள் 456 பேர். அதில், 48 பேரை அவர்கள் வேலைக்கு எடுத்துக்கொள்வதாக ஒப்புக் கொண்டார்கள். இதிலே என்ன பிரச்சினை என்றால், பேச்சுவார்த்தைக்குப் பின்னர் எடுத்துக்கொள்ளப்படுவதாகச் சொன்ன சில தொழிலாளர்களை அவர்கள் வேலைக்கு எடுத்துக் கொள்ளாத நிலையிலே, அவர்களையும் வேலைக்கு எடுத்துக்கொள்ள வேண்டுமென்று நாங்கள் வலியுறுத்தினோம். மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் சொன்னதைப்போல, முதலமைச்சர் அவர்களின் உத்தரவுப்படி மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களும், நானும், போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களும் பேசினோம். துறையின் சார்பாகவும் பேசினோம். எங்கள் துறையின் ஆணையர் அவர்கள் தமிழ்நாடு முழுவதும் எல்லா மண்டலங்களுக்கும் சென்று பேச்சுவார்த்தையை முறையாக நடத்தியிருக்கிறார். ஆனால், இப்போது இதிலே இருக்கிற பிரச்சினை என்னவென்றால், குற்ற வழக்கில் சம்பந்தப்பட்ட தொழிலாளர்களை வேலைக்கு எடுத்துக்கொள்வதாக யாரும் ஒப்புக்கொள்ளவில்லை. ஒழுங்கு நடவடிக்கைக்கு உள்ளாக்கப்பட்டவர்களை வேலைக்கு எடுத்துக்கொள்வதாக யாரும் ஒப்புக்கொள்ளவில்லை. அதேபோல, இராஜினாமா செய்தவர்களைப் பற்றி என்ன நிலை என்பதில் பிரச்சினை இருக்கிறது. Whereabouts—எங்கே அவர்கள் வேலை பார்க்கிறார்கள் என்பதைப் பற்றி பிரச்சினை இருக்கிறது.

பிற்பகல் 12-35

அதுமட்டுமல்ல, வேறு இடங்களுக்கு வேலைக்குப் போய்விட்டார்கள் என்றால் என்ன நிலை? இவைகளை எல்லாம் முறைப்படி துறையின் சார்பாக ஆய்ந்து கொண்டு இருக்கிறோம். எங்களுடைய கடமையைச்



செய்யாமல் இல்லை. டிரேட் யூனியன் சம்பந்தமாக—அது தொழிலாளர்களுடைய உரிமை; ஃபண்டமென்ட்டல் ரைட்ஸ், அதற்கு என்று சட்டம் இருக்கிறது. அது மீறப்படுமேயானால் உரிய நடவடிக்கை எடுக்க அரசு தயாராக இருக்கிறது. இங்கே unfair practice இருக்கிறது என்று குற்றம் சுமத்துகிற சுப்பராயன், அதுபற்றித் துறையிடம் கேள்வி எழுப்பி இருக்கிறாரா என்று நான் தெரிய விரும்புகிறேன். குறைந்தபட்ச ஊதியச் சட்டம் அமல்படுத்தப்படவில்லை என்று குற்றச்சாட்டு இருக்குமேயானால், எந்த டிரான்ஸ்போர்ட்டிலே, எந்த பஸ் நிறுவனத்திலே அது அமல்நடத்தப்படவில்லை? அதற்கான துறையும், வழியும் இருக்கிறபோது, சட்டபூர்வமாக என்ன முயற்சி எடுத்து இருக்கிறார் என்று சொன்னால், அதைக் களைவதற்கு நாங்கள் தயாராக இருக்கிறோம். கலைஞர் அவர்கள் பாட்டாளியின் பாதுகாவலர்; உழைக்கும் வர்க்கத்தின் உற்ற நண்பர்; அவர் எந்த பஸ் முதலாளிக்கும் சொந்தக்காரர் அல்ல என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கிளப்பாத சில விஷயங்களுக்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொல்லி இருக்கிறார்கள். அதனால் நான் அந்த விஷயத்திற்குள் போக விரும்பவில்லை. நான் இங்கே தெரிவிக்க விரும்புவது, தமிழ்நாட்டில் தொழிற்சாலைகள் இருக்கின்றன; தொழிலாளர்கள் இருக்கிறார்கள்; தொழிற்சாலை சட்டங்கள் இருக்கின்றன. அந்தச் சட்டங்களை நிறைவேற்ற Enforcement Wing இருக்கிறது. ஆனால் சட்டங்கள் நிறைவேற்றப்படுவது இல்லை. அது ஏன் என்று எனக்குத் தெரியவில்லை. திரும்பவும் நினைவுபடுத்த விரும்புகிறேன்....(குறுக்கீடு)

**திரு. க. மணிவர்மா:** பாயிண்ட் ஆஃப் ஆர்டர்...

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. க. மணிவர்மா.

**திரு. க. மணிவர்மா:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பரமசிவன் கழுத்திலே இருக்கிற பாம்பு என்று 3 முறை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னார்கள். பரமசிவன் கழுத்தில் பாம்பாக இருக்கிற அமைச்சர் யார் என்று தெரிந்தால் நலமாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** பரமசிவன் கழுத்தில் இருப்பது ஆதிசேஷன்.

**திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இங்கே நான் குறிப்பிட விரும்புவது, தமிழ்நாட்டில் தொழிற்சாலை சட்டங்கள் இருக்கின்றன. தொழிற்சாலை சட்டங்களை நிறைவேற்றுகிற 'Enforcement Wing' இருக்கிறது. ஆனாலும், தொழிற்சாலைகளில் சட்டங்கள் ஏன் நிறைவேற்றப்படவில்லை என்று அரசாங்கம்தான் பதில் சொல்ல வேண்டும். இதை நிறைவேற்றுவதற்கு ஒரு துறை இருக்கிறது. அப்படி நிறைவேற்றுகிற ஒரு துறை இருந்தும், அது நிறைவேற்றப்படவில்லை என்றால் ஏன்? இந்தக் கேள்விக்கு எனக்கு நேரம் இல்லை. இப்போது பட்டியல் ஒன்று என்னிடம் இருக்கிறது. நான் அதுபற்றிய விவரத்திற்குள் போக விரும்பவில்லை. ஆனாலும் இது ஒரு சிக்கலான பிரச்சினை. இந்த விஷயத்தைக் கவனிக்க வேண்டும்.

இன்னொரு முக்கியமான விஷயம். அரசாணைகள், சட்டங்கள் இவற்றை முதலாளிகள் நிறைவேற்றவில்லை என்றால் நமக்கு சங்கடம்தான். ஆனால் அரசாங்கமே நிறைவேற்றாமல் இருக்கலாமா? அரசாணைகளை அரசாங்கமே நிறைவேற்றாமல் இருக்கிற சம்பவம் நடைபெற்று இருக்கிறது. குறிப்பாக, 1977 ஆம் ஆண்டு ஆணை—தமிழ்நாட்டில் ஊராட்சிகளில் குடிநீர்த் திட்டங்கள் மற்றும் குடிநீர்த் தொட்டி தொழிலாளர்களுக்கும், துப்புரவுத் தொழிலாளர்களுக்கும் இன்றைக்கு வரை அமலாக்கப்படவில்லை. இது முறையல்ல. அதேபோல 480 நாட்கள் 2 வருடங்களில் தொடர்ந்து வேலை செய்து இருக்கிற ஒரு தொழிலாளி பெர்மனென்ட் செய்யப்படவேண்டும். ஆனால், அரசுத் துறையில் தொழிலாளிகள் பெர்மனென்ட் செய்யப்படவில்லை. இந்த முறையை அரசாங்கமே செய்வது சரியல்ல என்பதை நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

அதேபோல, இன்னொரு முக்கியமான விஷயத்தை நான் குறிப்பிட விரும்புகிறேன். கட்டடத் தொழிலாளர்கள் பிரச்சினை. கட்டடத் தொழிலாளர்கள் பிரச்சினையைப் பொறுத்தவரையிலே, உடல் உழைப்பு தொழிலாளர்கள் சட்டத்தின் அடிப்படையில் ஒரு வாரியம் அமைக்கப்பட்டு, இன்றைக்கு கட்டடத் தொழிலாளர்களுக்காக 0.3%



சந்தாவாகப் பிடிக்கப்படுகிறது. அதை 2 சதவீதமாக உயர்த்த வேண்டுமென்று நான் இங்கே நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். அதில் இன்னொரு விஷயம், இந்த கொள்கைக் குறிப்பிலே சொல்லப்பட்டு இருக்கிறது; எப்போதுமே அரசு சில விஷயங்களை முறையாகக் கடைப்பிடிக்க வேண்டும். அரசுத் துறை, பொதுத் துறை நிறுவனங்கள் ஒட்டுமொத்தமாக 11,48,456 ரூபாய் சந்தா செலுத்தி இருப்பதாக இந்தப் பட்டியலில் சொல்லப்பட்டு இருக்கிறது. ஆனால் அதிலே ஒரு விஷயம் ஒட்டுமொத்தமாக மறைக்கப்பட்டுவிட்டது. அது என்ன என்றால், பொதுப் பணித் துறைதான் அதிகமாகக் கட்டடங்கள் கட்டுகிற ஒரு துறை; கட்டடங்கள் கட்டுகிற அந்தத் துறை இதில் சந்தாவாகச் செலுத்தி இருப்பது வெறும் 719 ரூபாய்தான். அப்படியானால் ஏன் அரசாங்கம் நியமித்து இருக்கிற அந்த வாரியத்திற்குச் செலுத்த வேண்டிய சந்தாத் தொகையை பொதுப் பணித் துறை செலுத்தவில்லை என்பதை அரசு கவனிக்க வேண்டும்.

அதேபோல் மூடிய ஆலைகள். ஏன் மூடப்பட்டு இன்னும் திறக்கப்படாமல் இருக்கின்றன என்பது குறித்து தொழிற்சங்கங்கள் உள்ளடக்கப்பட்ட ஒரு குழு அமைத்து குறுகிய காலவரம்பு தீர்மானித்து பரிசீலிப்பது பொருத்தமாக இருக்கும். நிறைய பட்டியல் இருக்கிறது. ஒரே ஒரு உதாரணத்தை நான் குறிப்பிட விரும்புகிறேன். உடுமலைப்பேட்டையிலே கொங்குரார் மில்ஸ் என்று ஒரு மில் இருக்கிறது; அது கிருஷ்ணாபுரத்திலே இருக்கிறது. அந்த மில்லை திடீரென்று லாக்-அவுட் செய்துவிட்டார்கள். ஒரு மிக முக்கியமான அரசியல் சம்பந்தப்பட்ட பிரமுகருக்கு நெருக்கமானவரின் மில் அது. அவரது செல்வாக்கைப் பயன்படுத்திக்கொள்ளும் வாய்ப்புள்ளது. அங்கு சட்டவிரோத லாக்-அவுட் செய்ததால் 750 தொழிலாளிகள் தெருவிலே நிற்கிறார்கள். கோரிக்கை என்ன தெரியுமா? இரண்டாண்டு கால போனஸ் நிலுவையைக் கொடுக்கவேண்டும் என்ற ஒரே கோரிக்கைதான். அதைக் கேட்டதால் தெருவிலே தொழிலாளி நிறுத்தப்பட்டுவிட்டான். இத்தகைய முறைகேடுகள் தமிழ்நாட்டில் முதலாளிகளால் நடத்தப்படுகின்றன. இத்தகைய முறைகேடுகளைத் தடுப்பதற்கு வலிமையான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென்று தெரிவித்துக்கொள்கிறேன்.

[திரு. கே. சுப்பராயன்] [1998 ஏப்ரல் 24

பிற்பகல் 12-40

தொழிலாளர் நீதிமன்றங்களில் பல பிரச்சினைகள் இருக்கின்றன. தோட்டத் தொழிலாளர்களுக்குக் கேரளாவில் வழங்கப்பட்ட ஊதியத்தை வழங்குவதாகச் சொல்லியும் இன்னும் வழங்காமல் இருக்கிறார்கள். அந்தப் பிரச்சினையிலும் நாம் தீர்வு காண பேச்சுவார்த்தைக்கு நடவடிக்கை எடுக்கவேண்டும். தமிழ்நாட்டில் ஈ.எஸ்.ஐ., பி.எஃப். மற்றும் லேபர் வெல்பேர் பண்ட் ஆகியவற்றில் போடப்பட்ட பணத்தை இன்றுவரைக்கும் செலுத்தாமல் இருக்கிற முதலாளிகள் மீது நடவடிக்கை எடுக்கவேண்டும்.

நிறைவாக, தீப்பெட்டித் தொழிலைப் பொறுத்தவரையில் சொல்லவேண்டுமானால், அது ஒரு அபாயகரமான தொழில். அந்தத் தொழிலில் ஒன்றே முக்கால் இலட்சம் தொழிலாளர்கள் பணியாற்றுகிறார்கள். அந்தத் தொழிலாளர்களுக்கு ஈ.எஸ்.ஐ. இல்லை, பி.எஃப். இல்லை, சட்டம் சொல்கிற சம்பளம் இல்லை. ஃபேக்டரிகள் ஆக்ட் சொல்கிற எந்த நடைமுறையும் அங்கே அமலாக்கப்படவில்லை. ஆகவே தொழிலாளர் நலத்துறை இதைத் தீவிர கவனத்தில் கொண்டு அவைகளைச் செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

ஒரே ஒரு விஷயம். இது நீண்ட காலப் பிரச்சினை. புகளூர் சர்க்கரை ஆலைத் தொழிலாளர்கள்மீது அண்ணா தி.மு.க. ஆட்சிக் காலத்தில் போடப்பட்ட அந்த வழக்கு பற்றி இன்றைக்கு வரைக்கும் இந்த தொழிலாளர் நல மானியக் கோரிக்கையில் பேசிக்கொண்டே இருக்கிறோம். அண்ணா தி.மு.க. ஆட்சி திட்டமிட்டு, அந்தத் தொழிலாளர் வர்க்க விரோதப் போக்கை மேற்கொண்டு, துப்பாக்கிச் சூடு நடத்தி, 3 பேரைக் கொன்று, 90 பேருக்கு மேல் வழக்குப் போட்டிருக்கிறது. அந்த வழக்கு 1992-லிருந்து இன்றுவரை நடக்கிறது. இன்றைக்கு எத்தனை ஆண்டுகள் போய்விட்டன என்று பாருங்கள். 6 வருடமாக நாய் படாத பாடு படுகிறார்கள் அந்தத் தொழிலாளர்கள். ஆகவே அவர்கள் மீது இருக்கிற வழக்கையாவது வாபஸ் பெறுங்கள் என்று கேட்டுக் கொள்கிறேன்.

மாதவரம் பால் பண்ணைத் தொழிலாளர்கள் பிரச்சினையில், மாண்புமிகு முதல்வர் அவர்கள் மகிழத்தக்க முடிவை தொழிலாளர் மானியத்தில் அறிவிக்கப்படும் என்று அறிவித்திருக்கிறார்கள். அவர்கள் 17 ஆண்டு காலம் பல்வேறு தீவினைகளுக்கு ஆட்பட்டிருக்கிறார்கள்.



1998 ஏப்ரல் 24] [திரு. கே. சுப்பராயன்]

அந்த மகிழத்தக்க முடிவு என்னவாக இருக்கும் என்றால், சர்வீஸ் தொடர்ச்சிதான். சர்வீஸ் தொடர்ச்சி என்பது தொடர்ந்து அவர்கள் 1980-லிருந்து வேலையில் இருந்திருந்தால் ஒவ்வொரு சம்பள உயர்விலேயும், ஒவ்வொரு பதவி உயர்விலேயும் இருந்திருந்தால் அதனால் எத்தகைய பணி மற்றும் பண அனுகூலங்களையெல்லாம் பெற்றிருப்பார்களோ, அவற்றை மீண்டும் மறு மதிப்பீடு செய்து, சர்வீசில் பிரேக் இல்லாமல் இருந்தால் இன்றைக்கு என்ன சம்பளத்தைப் பெறுவார்களோ அந்தச் சம்பளத்தைத் தீர்மானித்து ஆணையிட்டால், அதுதான் மகிழத்தக்க முடிவாக இருக்கும் என்று தெரிவித்து, அத்தகைய ஒரு மகிழத்தக்க முடிவை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவிக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். நிறைய விஷயங்கள் இருந்தாலும், நேரமில்லாததால் இத்துடன் முடித்துக்கொள்கிறேன், வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. ஆ. நடராசன்.

* **திரு. ஆ. நடராசன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 'சித்திரச் சோலைகளே, என்னைத் திருத்த இப்பாரினிலே எத்தனை தோழர்கள் இரத்தம் சிந்தினரோ' என்ற பாவேந்தர் பாரதிதாசன் வரிகளுக்கேற்ப, சமுதாயத்தைத் திருத்த இரத்தமும் வேர்வையும் சிந்துகின்ற தொழிலாளர்கள் சம்பந்தப்பட்ட இந்தத் தொழிலாளர் நல மானியக் கோரிக்கையில் என்னுடைய கருத்துக்களை எடுத்து வைப்பதில் நான் பெருமையடைகிறேன்.

1986 ஆம் ஆண்டு மே தின விழாவில் நம்முடைய தமிழக முதல்வர் கலைஞர் அவர்கள் அமைப்பு ரீதியற்ற அனைத்துப் பிரிவுத் தொழிலாளர்களுக்கும் குறைந்தபட்ச ஊதியம் கிடைக்கப் பாடுபடுவோம் எனக் கூறினார்கள். சொன்னதைச் செய்வோம் என்ற அடிப்படையில் தொழிலாளர்களின் பாதுகாவலர், தன்னிகரில்லா முதல்வர் கலைஞர் அவர்கள் ஆட்சிப் பொறுப்பை ஏற்றவுடன், மாநில அளவிலான அமைப்பு ரீதியற்றவர்களுக்கான தொழிலாளர் நல வாரியம் அமைக்கப்பட்டு, பல்வேறு சங்கங்களைச் சேர்ந்தவர்களையெல்லாம் அந்தக் குழுவிலே நியமித்து, அனைத்து மாவட்டங்களுக்கும் அந்தக் குழு சென்று, சுற்றுப் பயணம் மேற்கொண்டு, கேரளா உட்பட பல மாநிலங்களுக்குச் சென்று அதற்கான ஆய்வு அறிக்கையைச் சமர்ப்பித்திருக்கிறார்கள்.

அதைப்போல, விவசாயத் தொழிலாளர்களுக்கும் தனி வாரியம் அமைக்க உத்தரவிட்டிருக்கிறார்கள். இப்படி தொழிலாளர்களின் பல்வேறு பிரிவினரான, முடி திருத்துவோர், சலவைத் தொழிலாளர்கள், மண் பாண்டம் தயாரிப்போர், அச்சுத் தொழிலாளர்கள், சமையல் மற்றும் ஓட்டல் தொழிலாளர்கள், ஆட்டோ ரிக்ஷா, சைக்கிள் ரிக்ஷா தொழிலாளர்கள், வாடகைக் கார் ஓட்டுபவர்கள், செங்கல் தயாரிப்பில் ஈடுபட்டோர், தனியார் டெலிபோன் தொழிலாளர்கள் உட்பட 84 தொழில்களில் ஈடுபட்ட தொழிலாளர்கள் எல்லாம் நோய்க்கால உதவிக் காப்பீடு, பேறுகால உதவித் தொகை, ஓய்வூதியம் ஆகியவை பெற நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. அதைப்போல, பல்வேறு தொழிலாளர் நல உதவித் திட்டங்கள் வழங்க அரசு முன்வந்துள்ளதையும் நான் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

பிற்பகல் 12-45

நாட்டில் அதைப்போல, கட்டடத் தொழிலாளர்களுக்கு வாரியம் அமைத்து தமிழ் நாட்டில் எந்தப் பகுதியிலேயிருந்தாலும் அந்தத் தொழிலாளர்கள் பாதிக்கப்பட்டால், விபத்திலே இறந்துவிட்டால் ரூபாய் 50,000 தரப்பட்டு வருகிறது. நான் அதைப் பாராட்டுகிறேன். அந்த உதவித் தொகையை ரூ. 75,000 ஆக உயர்த்தித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தமிழகத்திலே சத்துணவு ஊழியர்கள் நிரந்தரமற்ற ஊழியர்களாக இருந்து வந்தார்கள். 1989-91-ஆம் ஆண்டுகளில் ஆட்சியில் இருந்தபோது அவர்களைப் பகுதிநேர நிரந்தர ஊழியர்களாக நம்முடைய தலைவர் தமிழக முதல்வர் அவர்கள், நியமித்தார்கள். இன்றையதினம் 2 இலட்சம் ஊழியர்களுக்குச் சம்பள உயர்வு அளித்து, அவர்களுடைய வாழ்க்கையிலே ஒரு வளத்தை உருவாக்கியது உள்ளபடியே பாராட்டுக்குரிய ஒரு காரியம் ஆகும்.

அதைப்போல நெடுஞ்சாலை ஊழியர்கள் ஏறத்தாழ 2,000 பேர் 10, 15 ஆண்டுகாலமாகப் பணியாற்றி, நீதிமன்றத்திலே தீர்ப்பு வழங்கப்பட்டதற்குப் பின்னாலேயும், கடந்த காலத்திலே நிரந்தரம் செய்யப்படாமல் இருந்தார்கள். இந்த ஆட்சியிலே அவர்கள் அத்தனைபேரும் நிரந்தரம் செய்யப்பட்டிக்கிறார்கள் என்பது உள்ளபடியே நன்றியுணர்வோடு வாழ்த்தப்பட வேண்டிய ஒரு செய்தி ஆகும்.



1972 ஆம் ஆண்டு முதல் உள்ளாட்சித் துறையில் பணியாற்றி ஓய்வு பெற்ற துப்புரவுத் தொழிலாளர்களுக்கு ஓய்வூதியம் கொடுக்க ஆணை பிறப்பித்து, இன்றையதினம் பல்லாயிரக்கணக்கான கடைநிலை ஊழியர்கள் பயன் பெற்றிருப்பது ஒரு சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த முடிவாகும்.

மாதவரம் பால்பண்ணைத் தொழிலாளர்கள் ஒரு நாள் வேலை நிறுத்தப் போராட்டம் செய்ததற்காக 1,500 பேர் கடந்த ஆட்சியிலே வேலைநீக்கம் செய்யப்பட்டார்கள். நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. சுப்பராயன் அவர்கள் கூட எடுத்துச் சொன்னார்கள். இன்றையதினம் அந்த ஊழியர்களில் பல பேர் இறந்துவிட்டார்கள், சிலபேர் காணாமல் போய்விட்டார்கள். இருந்தாலும் நம்முடைய தமிழக முதல்வர், டாக்டர் கலைஞர் அவர்கள் 1989 ஆம் ஆண்டு 370 பேர்களுக்கு வேலைவாய்ப்புத் தந்தார்கள். தற்போது 316 பேர்களை வேலைக்கு எடுத்திருக்கிறார்கள். இது இந்தியாவிலே எந்த மாநிலத்திலேயும், கடந்த 18 ஆண்டுகாலத்திலே நடந்திருக்க முடியாது. நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. சுப்பராயன் அவர்களுடைய வேண்டுகோளுக்காக கோடிக்கணக்கான ரூபாயை அள்ளித் தந்தவர் (மேசையைத் தட்டும் ஒலி) நம்முடைய தலைவர் டாக்டர் கலைஞர் என்பதை நான் இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

சாலைப் பணியாளர்கள் 10,000 பேர், இடைநிலை ஆசிரியர்கள் 12,000 பேர், பெண் போலீசார் 5,000 பேர். சப்—இன்ஸ்பெக்டர்கள் ஓராசிரியர் பள்ளியிலே 1,385 கூடுதல் ஆசிரியர்கள், அதாவது இரண்டு ஆசிரியர்கள் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள்.

அதைப்போல பள்ளிகளிலே, சிறுபான்மை மக்கள் நடத்துகின்ற பள்ளிகளிலே 1:40 என்கிற விகிதத்தில் ஏறத்தாழ 1,300 ஆசிரியர்களுக்கு வேலைவாய்ப்பு வழங்கியிருக்கிறார்கள்.

கோவையிலே இருக்கின்ற சிந்தாமணி பற்றி—திரு. கே. சுப்பராயன் அவர்கள் மறந்து விட்டார்கள் என்று கருதுகிறேன்.....

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. கே. சுப்பராயன்.

**திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சிந்தாமணி, கூட்டுறவு மானியத்திலே வருகிறதேதவிர, தொழிலாளர் மானியத்திலே வரவில்லை.

**திரு. ஆ. நடராசன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அங்கேயும் தொழிலாளர்கள் பணியாற்றுகின்றார்கள். அவருக்கு நிச்சயமாக அதிலேயும் அக்கறை உள்ளது என்கிற வகையிலே (மேசையைத் தட்டும் ஒலி) சிந்தாமணியைக் காப்பாற்றுவதிலே அன்புள்ளம் கொண்ட .....

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. பி. ஆர். சுந்தரம்.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சிந்தாமணியில் தொழிலாளர்கள் பணியாற்றுகிறார்களா, இல்லையா என்பதைத் திரு. கே. சுப்பராயன் அவர்கள் விளக்க வேண்டும்.....

**திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சிந்தாமணியிலே தொழிலாளர்கள் பணியாற்ற முடியாத அளவிலே அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்திலே அது கொள்ளையடிக்கப்பட்டுவிட்டது. (மேசையைத் தட்டும்ஒலி)

**திரு. ஆ. நடராசன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சிந்தாமணி கூட்டுறவு மொத்தப் பண்டகசாலையை இன்றையதினம் நம்முடைய மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களின் அனுமதியோடு காப்பாற்றி இருக்கிறார்கள் என்பதற்கு உள்ளபடியே அந்தத் தொழிலாளர்கள் சார்பாக எனது உளமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். கூட்டுறவுத் துறையிலே பணியாற்றுகிற தொழிலாளர்களுக்குக் குறைந்தபட்ச ஊதியம் வழங்க கூட்டுறவுத் துறை அதிகாரிகள் மறுத்து வருவதைத் தவிர்க்க வேண்டுமென்று இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, என்னுடைய தொகுதிபற்றி நீண்டகாலமாக, 20 ஆண்டுகாலமாக, நான் இந்த அவையிலேயும் பல நேரங்களில் கேட்டிருக்கிறேன். நீலாம்பூர் புறவழிச் சாலையை 90 கோடியிலே இன்றையதினம் கட்டுவதற்கு நம்முடைய தமிழக முதல்வர் அவர்கள் ஆணையிட்டு அந்தப் பணிகள் நடைபெற்று வருகின்றன. அதைப்போல பாலக்காடு பாதையிலே மற்றும் மதுரையிலேயிருந்து வரக்கூடிய பாதையிலே ஆற்றுப்பாலம் பகுதியில் ஒரு பாலத்தைக் கட்டுவதற்கு



அனுமதித்து பாதையை அகலப்படுத்த புயல் போன்று அசுர வேகத்தில் பணிகள் நடைபெற்று வருகின்றன. 25 ஆண்டுகாலமாக இல்லாததை சாதித்துக் கொடுத்தவர் கழகத் தலைவர் டாக்டர் கலைஞர் அவர்கள். அவர்களுக்கு நான் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். அதைப் போல பேரூர் சாலைப் பகுதியிலே ஒரு கோடியே 25 இலட்சத்திலே ஒரு புதிய பாலம் அனுமதித்ததற்கும் நான் இந்த நேரத்திலே பாராட்டுகளையும், வாழ்த்துகளையும், நன்றியையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

பிற்பகல் 12-50

இன்றையதினம் ஊராட்சிகளில் ஏராளமான பணிகள் நடக்கிற காரணத்தினால், இதிலேயெல்லாம் தொழிலாளர்களுக்கு என்ன சம்பந்தம் என்றுகூட கேட்க முடியும். வேலை நடப்பது என்றால் தொழிலாளிகள் செய்துதான் தீர வேண்டும். கடந்த காலத்தில் கோடிக்கணக்கான ரூபாய்க்கு வேலைகள் நடந்ததாக, கொள்ளை அடித்துக் கொண்டிருந்த நிலைமையை மாற்றி, ஆயிரக்கணக்கான கோடி ரூபாய்களை—இன்னும் இரண்டு ஆண்டு காலத்திலே, உள்ளாட்சித் துறையிலே வேலைகள் நடந்தால், பணி செய்வதற்கே இடமில்லை என்ற அளவிற்கு, அசுர வேகத்திலே கலைஞருடைய ஆட்சியிலே நேர்மையாக நடைபெற்று வருகிறது என்பதை இந்த நேரத்திலே நான் குறிப்பிட விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) கடந்த கால ஆட்சிப் பொறுப்பிலே இருந்தபோது, திராவிட முன்னேற்றக் கழகம் குறிச்சியிலே ஒரு 'சிட்கோ' தொழிற்பேட்டையை உருவாக்கி, ஆயிரக்கணக்கான தொழிலாளர்களுக்கு வேலைவாய்ப்பை தந்தது. அதேபோல, மலுமச்சம்பட்டியிலே, ஒரு தொழிற்பேட்டையை அமைத்து, 1989 ஆம் ஆண்டிலிருந்து அங்கே தொழிற்பேட்டை நடைபெற்று வருகிறது. 50 தொழிற்பேட்டைகள் தொடங்க இருப்பதாக நம்முடைய ஊரகத் தொழில் துறை அமைச்சரவர்கள் அறிவித்திருக்கிறார்கள். என்னுடைய தொகுதியிலே நாச்சிபாளையம், மைலேறிபாளையம் ஆகிய இரண்டு பகுதிகளிலேயும் தொழிற்பேட்டையை அமைக்க வேண்டுமென்று அன்போடு நான் கேட்டுக்கொள்கிறேன்.

சிப்காட் தொழிற்பேட்டை என்னுடைய தொகுதியில் அமைவதற்கு எல்லா முயற்சிகளும் நடைபெற்று, அதிகாரிகள் எல்லாம் நியமிக்கப்பட்டு விட்டார்கள். ஆனால் அதற்கு விவசாயிகள் எதிர்ப்புத் தெரிவிக்கிறார்கள்.

[திரு. ஆ. நடராசன்] [1998 ஏப்ரல் 24

மதிப்பிற்குரிய கோவை செழியன் அவர்களுடைய தலைமையிலே முதலமைச்சரை சந்தித்து விவசாயிகள் தங்களுடைய பிரச்சினையை எடுத்துச் சொன்னார்கள். அந்தப் பிரச்சினைகளைத் தீர்வு செய்து, அங்கே இலட்சக்கணக்கான தொழிலாளர்களுக்கு வேலைவாய்ப்பை ஏற்படுத்துவதற்கு. பெரிய தொழில்களை உருவாக்க இந்த அரசாங்கம் முன்வர வேண்டுமென்று அன்போடு நான் கேட்டுக்கொள்கிறேன். என்னுடைய தொகுதியிலே ஒரு ஐ.டி.ஐ.-யை தொடங்க அனுமதித்ததற்காக என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஒன்றியத்திற்கு ஒன்று என கடந்த ஆண்டு மானியத்திலே தெரிவிக்கப்பட்டது. ஒன்றியத்திற்கு இரண்டு வேண்டும் என்று கடந்த மானியத்திலே கேட்டேன். இரண்டு அல்ல, தேவைக்கேற்ற அளவிற்கு ஐடிஐ அமைக்க அரசாங்கம் அனுமதி அளிக்க வேண்டும். காரணம், ஐ.டி.ஐ. ஆரம்பித்தால்தான் மாணவர்கள் வேலைவாய்ப்பைப் பெற முடியும் என்ற அளவிற்கு தொழிற்சாலைகளிலே ஐ.டி.ஐ படித்தவர்கள்தான் இன்றையதினம் தேர்வு பெறுகிறார்கள். எனவே தேவையான அளவிற்கு ஐடிஐ-யை தனியார்கள் தொடங்குவதற்கு அனுமதி அளிக்க வேண்டுமென்று இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்கிறேன்.

பஞ்சாலைகளைப்பற்றி எடுத்துச் சொன்னார்கள். மத்திய அரசினுடைய பஞ்சாலைக் கொள்கையின் காரணமாக நாட்டிலே பஞ்சாலைத் தொழில் சீரழிந்திருக்கிறது. அதேபோல இன்ஜினியரிங் தொழில்களும் சீரழிந்திருக்கின்றன. ரங்கவிலாஸ் மில்ஸ், ஜெயலட்சுமி மில்ஸ், மது ஸ்பின்னிங் மில்ஸ், ஸ்ரீஹரி மில்ஸ், ராஜலட்சுமி மில்ஸ், எஸ்.ஆர்.சி. மில்ஸ், தனலட்சுமி மில்ஸ் எஸ்.ஆர்.எஸ்.ஐ., டான்-இண்டியா போன்ற ஆலைகள் எல்லாம் மூடப்பட்டு பல ஆயிரக்கணக்கான தொழிலாளர்கள் வாடிக் கொண்டிருக்கிறார்கள். நம்முடைய தலைவர் அவர்களும், நம்முடைய தொழிலாளர் நல அமைச்சர் அவர்களும் அதிலே கவனம் செலுத்தி, அவற்றை திறப்பதற்கு ஏற்பாடு செய்ய வேண்டுமென்று அன்போடு நான் கேட்டுக் கொள்கிறேன்.

சென்னையில் உள்ள பின்னி பஞ்சாலை, பல ஆண்டுகாலமாக, 3,500 தொழிலாளிகள் பணியாற்றக்கூடிய அந்தத் தொழிற்சாலையை-நம்முடைய தலைவர் கலைஞர் அவர்கள் 8 முறை பேச்சுவார்த்தை நடத்தி இன்றையதினம் ஆலையை திறக்கச் செய்ததற்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.



1998 ஏப்ரல் 24] [திரு. ஆ. நடராசன்]

அதேபோல ராயல் என்பீல்டு, விஸ்கோஸ் ஆலைகளையும் திறப்பதற்கு ஏற்பாடு செய்ததற்கு நன்றியுணர்வோடு இந்த நேரத்திலே சுட்டிக்காட்ட விரும்புகிறேன். கடந்த ஆட்சிக் காலத்திலே, முதலமைச்சரைப் பார்க்க முடியாது. ஆனால் கலைஞர் அவர்கள் 8 முறை பேச்சுவார்த்தை நடத்தியிருக்கிறார் என்று சொன்னால், இந்த அரசாங்கம் தொழிலாளர்களுடைய அரசாங்கம் என்பதிலே கொஞ்சம்கூட ஐயப்பாடு இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாசுக் கட்டுப்பாட்டு வாரியத்தைப் பொறுத்தவரையில், பல ஆலைகள், இன்றையதினம் பத்திரிகையிலே பார்த்தால் 300, 400 என்று பல தொழிற்சாலைகள் வழக்கு மன்றங்களிலே இயங்கக்கூடாது என்று உத்தரவுகளைப் பிறப்பித்து வருகிறார்கள். அதற்கு நம்முடைய அரசாங்கம் உதவித் தொகைகளை வழங்கி டிரிட்மென்ட் பிளான்ட்டுகள் கொடுப்பதற்கான முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும். கல் குவாரிகள் 'டையிங்' தொழில்கள் எல்லாம் இன்றையதினம் தடை செய்யப்பட்டு வருகிறது. அவர்களுக்குத் தேவையான உதவிகளை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாவட்டந்தோறும் தொழிலாளர் நீதிமன்றங்களை அமைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஓசூர், இராணிப்பேட்டையில், தொழிலாளர் வளாகத்தில் சுமார் 80 ஆயிரம் தொழிலாளர்கள் பணிபுரிகிறார்கள். தொழிலாளர் நல அலுவலங்கள் அமைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். தொழிற்சாலை அதிகாரிகளை தேர்வாணைக்குழு மூலம் தேர்வு செய்ய அரசு முடிவு எடுத்து இருப்பதை வரவேற்கிறேன். தொழிற்சாலை ஆய்வாளர்களுக்கு தகுந்த வாகனங்களை வழங்க வேண்டுகிறேன். கோவையில் தொழிலாளர் துறை அலுவலகத்தில் இரண்டாம் தளம் கட்ட, 25 இலட்சம் ரூபாய் அனுமதித்ததற்காக நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். தமிழ்நாடு தேர்வாணையம் மூலம் அரசு இளநிலைப் பணியாளர்கள், தட்டச்சர்கள், சுருக்கெழுத்தர்கள் தேர்வு செய்வதை மாற்றி வேலை வாய்ப்பகங்கள் மூலம் தேர்வு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அரசு அலுவலகங்களில் அலுவலக உதவியாளர்களை நியமிக்கக் கடந்த அரசாங்கம் தடையாணை பிறப்பித்து இருக்கிறது. ஓய்வு பெற்றவர்களின் இடங்களில் ஊழியர்களை நியமித்து, பலருக்கு வேலைவாய்ப்புகளை உருவாக்க வேண்டும் என்று அன்போடு நான் கேட்டுக்கொள்கிறேன்.

219088

[திரு. ஆ. நடராசன்] [1998 ஏப்ரல் 24

தமிழ்நாடு தொழிலாளர் கல்வி நிலையத்திற்கு கட்டடம் கட்டப்படவேண்டும். 220 பேர்கள் கல்வி பயில்கிறார்கள். விரிவுரையாளர்களுக்கு வீடு ஒதுக்கித் தரவேண்டும். தேவையான விரிவுரையாளர்களை நியமிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். நன்றி, வணக்கம்.

*பிற்பகல் 12-55*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. டி. மணி.

***திரு. டி. மணி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த விவாதத்திலே பேசுவதற்கு முன்னாலே என்னுடைய வேண்டுகோள் என்னவென்று கேட்டால், இந்த மானியத்தைப் பொறுத்தவரையில் குறைந்தபட்சம் இரண்டு அல்லது இரண்டரை மணி வரையிலுமாவது விவாதத்திற்கு இடம் தந்து இருக்க வேண்டும். ஏனென்றால், கன்னியாகுமரியிலேயிருந்து ஆரம்பித்து, சென்னையினுடைய முக்கியமான பகுதியிலே வரக்கூடிய நூற்றுக்கணக்கான ஆலைகள் சம்பந்தப்பட்ட தொழிலாளர்கள், பிரச்சினை இந்த மானியத்திலே வருகிறது. ஆனால், தந்திருக்கக்கூடிய நேரம் ரொம்பக் குறைவானது. ஆகவே, என்னுடைய பணிவான வேண்டுகோள் என்னவென்றால், இதிலே குறைந்தபட்சம் 10 நிமிடமாவது தரவில்லை என்றால்; இதிலுள்ள பிரச்சினையைப் பற்றி ஒன்றும் தொட முடியாது. ஆகவே, இந்த மானியத்திலே நான் ஒன்றைச் சொல்ல விரும்புவது என்னவென்றால், இப்போது முதலாளிகள் எல்லாம் ஒரு கொள்கையைக் கையாண்டு வருகிறார்கள். என்ன கொள்கை என்று சொன்னால், தொழிலாளர்கள் தங்களுடைய நியாயமான கோரிக்கைகளை வைத்துக் கொண்டு, வேலைநிறுத்தம் என்று ஒரு முடிவுக்கு வந்துவிட்டார்கள் என்றால், அதை இழுத்தடித்து, 6 மாதம் அல்லது ஒரு வருடம் கிடப்பிலே போட்டு, அவர்களைப் பணிய வைக்கக்கூடிய ஒரு சம்பிரதாயத்தை இந்தியத் திருநாட்டிலே உள்ள எல்லா மாநிலங்களிலும் உள்ள முதலாளிகள் இன்று கையாண்டு வருகிறார்கள். நான் தெரிவித்துக் கொள்ள விரும்புவது இது தொழிலாளர்களுடைய நலனைப் பாதுகாக்காது; இதைத் தடுத்து நிறுத்துவதற்காக அரசு உரிய நடவடிக்கையை மேற்கொள்ளவேண்டும்.



1998 ஏப்ரல் 24] [திரு. டி. மணி]

அதேபோன்று நம்முடைய அரசினுடைய புதிய அணுகுமுறையின் காரணமாக தொழிற்சாலைகள் பல்வேறு மட்டங்களிலே இங்கே வருகின்றன. இதனால், ஆயிரக்கணக்கான தொழிலாளர்களுக்கு நாம் வேலை வழங்குவதற்காக இந்த ஏற்பாடுகளைச் செய்கிறோம். ஆனால் அதேநேரத்தில் இருக்கக்கூடிய ஆலைகளுக்கு மூடுவிழா என்பது ஒரு வாடிக்கையான நிகழ்ச்சியாக நடைபெறுகின்றது. அதிலே ஒன்றுதான் இப்போது வந்திருக்கக்கூடிய சமாச்சாரம். 9-2-1998 முதல் 2,100 தொழிலாளர்கள் வேலை செய்து வந்த டன்லப் நிறுவனம் மூடப்பட்டுள்ளது. 3 மாதங்களாக அவர்களுக்கு வழங்க வேண்டிய சம்பளம் வழங்கப்படவில்லை. அந்த முதலாளி எங்கே இருக்கிறார் என்றால், வெளிநாட்டிலே இருக்கிறார். அவருடைய ஆஸ்தி 1,200 கோடி ரூபாய். ஆனால், இதே நிறுவனம் குறித்து மேற்கு வங்கத்திலே இருக்கின்ற அந்த அரசு என்ன நடவடிக்கை மேற்கொண்டிருக்கிறது என்றால், அந்த முதலாளி, இனி அந்த தொழிற்சாலையை வேறுவிதமாக ஹேண்டில் பண்ண முடியாத அளவிற்கு அதைத் தடுத்து நிறுத்தக்கூடிய ஒரு நடவடிக்கையை எடுத்து 8-4-1998 முதல் மேற்கு வங்க அரசு அந்த டன்லப் தொழிற்சாலையை கையகப்படுத்தி உள்ளது என்பதை அரசினுடைய மேலான கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

அதேபோல் மாதவரத்தைப் பற்றிச் சொல்ல விரும்புகிறேன். இந்த பால் பண்ணை என்பது எனக்குத் தெரிந்தவரையில், 1980-81-லேயிருந்து நான் சட்டமன்ற உறுப்பினராக இருந்த காலத்திலிருந்து இந்தப் பிரச்சினை உருவாகி எத்தனையோ வருடமும் போய், முழுக்க தொழிலாளர்கள் பழிவாங்கப்பட்டு, நீதிமன்றமும், ஒரு நல்ல தீர்ப்பைத் தந்திருக்கிறது. ஆனால் நீதிமன்றத்தினுடைய தீர்ப்பு முழுமையாக அமலாக்கப்படுகின்றபோது, பல கோடி ரூபாய்கள் வேண்டும் என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இங்கே சொல்லியிருக்கிறார்கள். இருந்தாலும்கூட, அதனுடைய சாதக பாதக விளைவுகளை எல்லாம் புரிந்து கொண்டு, இன்னும் 300 தொழிலாளர்கள் வெளியிலே இருக்கிறார்கள். அவர்களுக்கு பெரிய இழப்பு ஏற்படாமல் அவர்களுடைய சர்வீஸ் அவர்களுக்குக் கிடைக்கக்கூடிய வகையிலே மாதவரம் பால் பண்ணைத் தொழிலாளர்களுடைய உரிமைகளை பாதுகாக்க வேண்டும் என்பது என்னுடைய வேண்டுகோள்.

[திரு. டி. மணி] [1998 ஏப்ரல் 24

அடுத்து அரக்கோணம். அடுத்த மூடுவிழா. அரசாங்கத்தினுடைய இரும்பு ஆலை. அதில் 530 நிரந்தரத் தொழிலாளர்கள். 300 ஒப்பந்தத் தொழிலாளர்கள் இருக்கிறார்கள். அது 3.4 மாதங்களாக மூடியாகிவிட்டது. சம்பளமும் கொடுக்கப்படவில்லை. என்ன நடவடிக்கையை நாம் மேற்கொள்ளப் போகிறோம்? ஒரு பக்கத்திலே தொழிற்சாலைகளைக் கொண்டு வருகிறோம், ஒரு பக்கத்திலே மூடுவிழா என்ற நிலைக்கு நாம் செல்கிறோம். அதேபோல் மெட்டல் பாக்ஸ் மூடப்பட்டுள்ளது. ஸ்டாண்டர்டு மோட்டார்ஸ் மூடப்பட்டுள்ளது. கூட்டுறவு பஞ்சாலைகள் பல மூடப்பட்டுள்ளன. அவற்றைத் திறப்பதற்கான உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவேண்டும்.

அதேபோல் நம்முடைய இரப்பர் தோட்டங்களிலே காபி, டீ, மற்றும் சின்கோனா போன்றவைகளிலே வேலை செய்யக்கூடிய தொழிலாளர்களுக்குக் குறைந்தபட்ச சம்பளச் சட்டம் என்று பல ஆண்டுகளுக்கு முன்னாலே வந்தது. இன்றைக்குத் தொழிலாளர்கள் என்ன கேட்கிறார்கள் என்றால், விலைவாசி ஏறிப்போய்விட்டது. குறைந்தபட்சம் எங்களுக்கு ஒரு நாளைக்கு 100 ரூபாய் சம்பளம் வேண்டும். இல்லை என்று சொன்னால், வேலைநிறுத்தம் செய்ய நேரிடும் என்று அரசு இரப்பர் தோட்டத்தில் கன்னியாகுமரியிலே இருக்கிற தொழிலாளர்கள் இந்தக் கோரிக்கையை முன் வைத்திருக்கிறார்கள். தனியார் தோட்டங்களிலே இருக்கின்ற தொழிலாளர்களும் இந்தக் கோரிக்கையை முன் வைத்திருக்கிறார்கள். அதேபோல் நீலகிரியிலே இருக்கக்கூடிய தேயிலை, திண்டுக்கல்லிலே இருக்கக்கூடிய காபி, சின்கோனா அதிலே இருக்கக்கூடிய தொழிலாளர்களுடைய பிரச்சினை என்ன என்பதை அரசு அணுகி, அவர்களுடைய குறைந்தபட்ச சம்பளச் சட்டத்தை இன்றைய காலகட்டத்தினுடைய விலைவாசிக்கு ஏற்ப உயர்த்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 1-00

அதேபோல் கட்டுமானத் தொழிலாளர்களுக்கு நாம் வாரியம் உண்டாக்கி இருக்கிறோம், நல்லது. ஆனால் அந்த வாரியத்திற்குத் தேவையான ஊழியர்களையும், அதிகாரிகளையும் நியமித்து செயல்முறையில் அது வந்துள்ளதா என்பதை அரசு பரிசீலனை



1998 ஏப்ரல் 24] [திரு. டி. மணி]

செய்ய வேண்டும். அதைச் செயல்படுத்துவதற்கான நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டும்.

இதிலே எல்லாம் துரதிருஷ்டவசமாக இன்னொன்றும் இருக்கிறது. நம்முடைய பீடித் தொழிலாளர்கள். ஸ்தாபனங்கள் இல்லாத செக்டாரிலே இருப்பவர்களுக்கு, அவர்களுக்குக் கிடைக்கக்கூடிய சம்பளம் என்பது மிகக் குறைவான சம்பளம். ஒரு தொழிலாளிக்கு வர வேண்டிய எந்தப் பாதுகாப்பும் இல்லை. சமீபத்தில்கூட நெல்லை மாவட்டத்திலே 2,000 தொழிலாளர்கள் சேர்ந்து ஒருநாள் அடையாள சத்தியாகிரகம் எல்லாம் செய்தார்கள். அதற்கு மேலே தொழிலாளர்களிடமிருந்து 'சதிஷயர் பைனான்ஸ்' என்ற பெயரிலே ரூ. 6 பிடித்தம் செய்து வருகின்றார்கள். அந்தத் தொழிலாளர்கள் இன்றைக்கு எதை முன்னே வைத்திருக்கிறார்கள் என்றால் பிடித்த காசையும் அதனுடைய வட்டியையும்கூட சேர்த்துத் தர வேண்டும். அவர்களுக்கு ஏற்பட வேண்டிய சமூகப் பாதுகாப்பு பூராவையும் வழங்கவேண்டும், பினாமி ஒப்பந்தக்காரர்களை ஒழிக்க வேண்டுமென்ற கோரிக்கைகளை வைத்திருக்கின்றார்கள். அதேபோல தையல் தொழிலாளர்கள் சம்பந்தமாக தனி வாரியம் வேண்டுமென்று கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். அதற்கு வேண்டிய ஏற்பாடுகளை அரசு செய்ய வேண்டும். அவர்களுடைய சமூகப் பாதுகாப்பு நிலைகளை, பாதுகாப்பதற்கு உரிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டும்.

அதற்கு அடுத்தபடியாக நம்முடைய முந்திரித் தொழிலாளர்கள். தமிழ்நாட்டிலே 50,000 தொழிலாளர்கள் வேலை செய்கின்ற பெரிய ஆலைகள் இருக்கிறது என்றால், அது முந்திரித் தொழில் ஆலைகள்தான். அது கன்னியாகுமரியில் ஆரம்பித்து இப்போது திருச்சி மாவட்டத்திலே போய், புதுக்கோட்டையிலே போய் பல்வேறு இடங்களிலே ஆரம்பித்திருக்கிறார்கள். அதனுடைய பெரிய முதலாளிகள் பூராவும் கேரளாவைச் சேர்ந்தவர்கள். அந்தத் தொழிலாளர்களுடைய சம்பளம் என்னவென்று சொன்னால், ரூ.18, ரூ.20தான். குறைந்தபட்சம் இன்றைய காலகட்டத்திலே அதிலே வேலை செய்யக்கூடிய ஒரு தொழிலாளிக்கு ரூ.50 என்று சம்பளம் தரக்கூடிய ஏற்பாடு என்ற முறையில் அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இதிலே இருக்கக்கூடிய இன்னொரு துரதிருஷ்டவசமான நிலை என்னவென்று சொன்னால், அந்தத் தொழிலாளி இன்று நோய்வாய்பட்டால் எந்த உதவியும் செய்வதில்லை. ஏற்கெனவே இரண்டு

ஆண்டுகளுக்கு முன்னால் மத்திய அரசு இ.எஸ்.ஐ. திட்டத்தைக் கொண்டு வருவதாகச் சொல்லி நடவடிக்கை மேற்கொண்டு, அதற்கு சில ஏற்பாடுகளை மாநில அரசு செய்தும்கூட, இன்றைக்கு என்ன சொல்கின்றார்கள் என்று சொன்னால் அந்த இ.எஸ்.ஐ. திட்டத்தை இந்தத் துறைக்கு மட்டும், நம்முடைய முந்திரித் தொழிலாளர்களுடைய துறைக்கு மட்டும் அமல்படுத்தமுடியாது என்ற ஒரு கருத்தைச் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே இந்த மாநில அரசை நான் பணிவோடு கேட்டுக்கொள்வதெல்லாம் அந்தத் தொழிலாளர்கள் நோய்வாய்பட்டால் வேலை செய்கின்ற தொழிலாளர்களுக்காவது இந்த இ.எஸ்.ஐ. திட்டம் இல்லையென்றாலும், அந்த முதலாளிகள் அதற்கான வசதிகளைச் செய்து கொடுப்பதற்குரிய உரிய நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து ஒரேயொரு வார்த்தையைச் சொல்லி முடிக்கின்றேன். நம்முடைய அரசுப் பேருந்துபற்றியது. அதிலே இருக்கக்கூடிய ஊழியர்களுக்கு பல்வேறு விதமான பென்ஷன் போன்றவை வழங்கப்படுவது இல்லை என்ற கோளாறு இருக்கின்றது. அதிலே ஒரு முக்கியமான பிரச்சினை என்னவென்று சொன்னால் பழைய, முன்னாலே இருக்கக்கூடிய தொழிலாளர்கள் அவர்களுடைய வாரிசுகளுக்கு என்று கொஞ்சம் பேருக்கு வேலை கொடுத்தார்கள். ஒரு கொத்தடிமை சம்பிரதாயத்தைப் பற்றியெல்லாம் நாம் பேசிக் கொண்டிருக்கிறோம். ஆனால் வாரிசுகளுக்கு வேலை என்று ஏறத்தாழ 30 தொழிலாளிகள் 2, 3 செக்‌ஷன்களிலே வேலை செய்கிறார்கள். 11 வருட சர்வீஸ் ஆகிவிட்டது. 11 வருட சர்வீஸ் ஆனாலும் அவன் பதிலியாகத்தான் இருக்கிறான். தற்காலிகமான தொழிலாளியாகத்தான் இருக்கிறான். அவர்களுக்குக் கொடுக்கக்கூடிய சம்பளம் என்பது ரூ.300 மட்டுமே, அதிலே ரூ.50 பிடித்தம் செய்கின்றார்கள். அவன் கையில் கிடைக்கக்கூடிய மாதச் சம்பளமே ரூ. 250. ஆகவே, நான் நம்முடைய தொழிலாளர் நலத்துறை அமைச்சர் அவர்களைக்கேட்டுக் கொள்வதெல்லாம் இந்தத் தொழிலாளிக்குக் கொடுக்க வேண்டிய நியாயமான சம்பளமும், அவனை நிரந்தரத் தொழிலாளியாக்கி, ஒரு தொழிலாளி என்ற முறையிலே அவனைப் பார்க்க வேண்டுமென்று என்னுடைய கோரிக்கையை நான் வைத்துக் கொள்கிறேன்.

அடுத்து, நம்முடைய பின்னியிலே ஏற்கெனவே மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தலையிட்டு, 1,000 பேருக்கு அடுத்த ஆண்டு



வேலை கொடுப்பதற்கு சில ஏற்பாடுகளையும் செய்திருக்கிறார்கள், பாராட்டுகின்றோம். ஆனால் இன்னும் 2,000 பேர் வெளியே நிற்கின்றார்கள். இந்த 2,000 பேர், வெளியே நிற்கின்றவர்களுக்கு என்ன நடவடிக்கை, நாம் என்ன செய்யப் போகின்றோம் என்பதையெல்லாம் ஆராய்ந்து அந்தத் தொழிலாளர்களுக்குக்கூட பாதுகாப்பு தருகின்ற வகையிலே காரியங்களைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, நம்முடைய இந்தத் துறையிலே ஏற்கெனவே சென்னை உர ஆலை, தூத்துக்குடி மின் நிலையம், திருச்செங்கோடு விசைத்தறிப் பகுதிகளிலே, தொழிலாளர்கள் சங்கத்திலே சேர்ந்தார்கள், கோரிக்கை வைத்தார்கள். அதன் அடிப்படையிலே ஏற்பட்ட சில பிரச்சினைகளின் காரணமாக சில வழக்குகள் அவர்கள் மேலே தொடுக்கப்பட்டு, இன்னும் நீதிமன்றங்களுக்குச் சென்று கொண்டிருக்கிறார்கள். ஆகவே இந்த வழக்குகளை வாபஸ் வாங்குவதற்கான உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டு, இந்த மூடிய ஆலைகளைத் திறப்பதற்கு இந்தக் காலகட்டத்திலே உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். ஏற்கெனவே நான் குறிப்பிட்டிருக்கின்ற முந்திரி ஆலைத் தொழிலாளர்களுடைய பிரச்சினையில் மினிமம் ரூ.50 என்று சம்பளம் கிடைக்கக்கூடிய ஒரு வாய்ப்பினை இந்த அரசு ஏற்படுத்திக் கொடுக்க வேண்டுமென்று கேட்டு, வாய்ப்பிற்கு நன்றி கூறி முடிக்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. வி. பி. சிங்காரவேலு.

**திரு. வி.பி. சிங்காரவேலு:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தொழிலாளர் நலனுக்காக மட்டுமல்லாமல் தமிழ்நாட்டிலே இருக்கக்கூடிய அனைத்துத் தரப்பு மக்களுடைய நலனுக்காகவும், அன்றாடம் பல்வேறு நலத் திட்டங்களை அறிவித்து, அந்தத் திட்டங்களை எல்லாம் செம்மையாகவும், சீராகவும் நிறைவேற்றுவதற்காக அயராது பாடுபடுகின்ற நம்முடைய நெஞ்சம் நிறைந்த தலைவர், தமிழகத்தினுடைய முதல்வர் அவர்களுடைய சீரிய தலைமையில் தொழிலாளர் நலத் துறை அமைச்சராகப் பொறுப்பேற்று இன்றையதினம் துடிப்போடும், சிறப்போடும் பணியாற்றுகின்ற நம்முடைய அமைச்சரவர்கள் தாக்கல் செய்திருக்கின்ற தொழிலாளர் நலன் மற்றும்

[திரு. வி.பி. சிங்காரவேலு] [1998 ஏப்ரல் 24

வேலைவாய்ப்புப் பயிற்சித் துறை மானியக் கோரிக்கைகளை வரவேற்று என்னுடைய கருத்துக்களை இங்கே கூற விரும்புகிறேன்.

பிற்பகல் 1-05

நம்முடைய அரசு பொறுப்பேற்றதற்குப் பின்னால், தமிழகத்திலே தொழில் அமைதி ஏற்பட்டு, தொழிலாளர் நல்லுறவு ஏற்பட்டு, சிறப்பான முறையில் இந்தத் துறை இயங்கி வருகிறது என்பதற்கு உதாரணமாகத்தான் நம்முடைய தலைவர் அவர்கள் பலமுறை முறையான பேச்சுவார்த்தையில் தானே நேரடியாகக் கலந்து கொண்டு இப்போது பி. அண்டு சி. மில் திறந்து வைக்கப்படவிருக்கிறது. அதுபோல மூடிக்கிடக்கின்ற நிறுவனங்களில் அனைவருக்கும் சலுகைகளை அளித்து, அவர்களது நிதிநிலை மோசமாக இருக்கின்ற காரணத்தினால், அந்த நிறுவனங்களுக்கெல்லாம் மின் கட்டணம் செலுத்துவதற்கு, அவர்களுக்குச் சலுகைகளை அளித்து அதுபோல் வரி செலுத்துவதற்கும் பல்வேறு சலுகைகளை அளித்து, இப்போது அந்த நிறுவனங்கள் எல்லாம் திறக்கப்பட்டிருக்கின்றன என்று உண்மையிலேயே இந்த மானியக் கோரிக்கைக் குறிப்பில் அறிவிக்க முடிகிறது. இந்த நேரத்தில் எனக்கு நேரமின்மையால் இந்தத் துறையிலே நடைபெற்றுக் கொண்டிருக்கிற பல்வேறு நல்ல காரியங்களை எல்லாம் பாராட்ட வேண்டுமென்று நினைத்தாலும்கூட, என்னுடைய வால்பாறை தொகுதியிலே தோட்டத் தொழிலாளர்கள் நிரம்பிய அந்தப்பகுதியில் இருக்கக்கூடிய சில பிரச்சினைகளை, இன்றைக்கு தமிழகத்திலே இருக்கக்கூடிய தோட்டத் தொழிலாளர்களுக்கு ஏற்பட்டிருக்கக்கூடிய பிரச்சினைகளை இங்கே நான் குறிப்பிட்டுக் காட்ட விரும்புகிறேன்.

உலகமெங்கிலும் தோட்டத் தொழிலிலே இருப்பவர்கள்தான் கொத்தடிமைகளாக வாழ்ந்து கொண்டிருக்கின்றார்கள். அதிலும் குறிப்பாக தோட்டத் தொழிலில் ஈடுபட்டிருப்பவர்கள் தாழ்த்தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள்தான் அதிகமாக இருக்கின்றார்கள். ஆனால், கடுமையான வெள்ளம், பனி, கொட்டுகின்ற மழையிலும், மலைச்சரிவுகளில் பணி ஆற்றக் கூடிய அந்த ஏழைத் தொழிலாளர்களுக்கு இப்போது கிடைக்கின்ற ஊதியம் தமிழகத்திலே நாளொன்றுக்கு ரூ. 51.01 பைசாதான். ஆனால் அருகிலே இருக்கக்கூடிய கேரளாவிலேகூட ஒரு தொழிலாளிக்கு ரூ.58.37 பைசா வழங்கப்படுகிறது. கடந்த பேச்சுவார்த்தையின்போது தமிழகத்திலேயிருந்த தோட்ட நிறுவன அதிபர்கள் இங்கே இருக்கக்கூடிய தொழிலாளர்களுக்கு, அடுத்த முறை



1998 ஏப்ரல் 24] [திரு. வி. பி. சிங்காரவேலு]

கேரளாவிலே நாளொன்றுக்கு வழங்கக்கூடியதற்கு இணையான சம்பளம் வழங்குகிறோம் என்று சொன்னார்கள். ஒரு நாளைக்கு ரூ.58.37 பைசா கூலி கொடுப்பதற்கு மறுத்துவிட்டு, ரூ.51.01 பைசாவிலிருந்து ரூ. 2.50 பைசா மட்டும் கூடுதலாகத் தருவதற்கு அவர்கள் முன் வந்திருக்கிறார்கள். நாங்கள் மாண்புமிகு அமைச்சரிடத்திலே நேரிடையாக தொழிற்சங்கத் தலைவர்களை அழைத்து வந்து கேட்டுக் கொண்டிருக்கிறோம். மாண்புமிகு அமைச்சர் பெருமகனார் இதிலே நல்ல முயற்சி எடுத்து, எப்படி நீங்கள் என்னுடைய கருமலை எஸ்டேட் போனஸ் பேச்சுவார்த்தையில் நல்ல முயற்சிகளை எடுத்து, அதிகாரிகளை, ஆணையாளரை அழைத்து, நம்முடைய மாண்புமிகு வனத்துறை அமைச்சர் அவர்களுடைய ஒத்துழைப்போடு விரிவாக பேச்சுவார்த்தை நடத்தி, அந்த போனஸ் பிரச்சினைக்கு நல்ல முடிவினைத் தந்தீர்களோ அதைப்போல் இந்தப் பேச்சுவார்த்தையிலும் நீங்கள் விரைவாக ஈடுபட்டு நம்முடைய தமிழ்நாட்டிலே இருக்கக்கூடிய தோட்டத் தொழிலாளர்களுக்கு, கேரளாவிலே வழங்கக்கூடியதற்கு இணையான சம்பளத்தை வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

இன்னொன்றையும் நான் இங்கே சுட்டிக்காட்ட விரும்புகிறேன். தோட்டத் தொழிலாளர்கள், அவர்கள்தான் நம்முடைய தலைவர் டாக்டர் கலைஞர் அவர்கள்மீது என்றென்றும் பற்றும், பாசமும், அவர்கள் ஆற்றுகின்ற நல்ல பல பணிகளுக்கு நன்றி உணர்ச்சியும் உள்ளவர்கள் என்பதற்கு எடுத்துக்காட்டாகத்தான் கோவையிலே குண்டு வெடித்ததற்குப் பின்னரும் கோவை மாவட்டத்திலே இருக்கக்கூடிய என்னுடைய வால்பாறை தொகுதியிலும், நீலகிரி மாவட்டத்திலே இருக்கக்கூடிய ஊட்டி, குன்னூர், கூடலூர் ஆகிய 4 மலைத் தொகுதிகளிலும் தோட்டத் தொழிலாளர்கள் அதிகமாக இருந்த காரணத்தால், அவர்கள் என்றென்றும் நம்முடைய தலைவர் அவர்கள் மீது பாசமாக இருக்கிறார்கள் என்பதற்கு உதாரணமாகத்தான் அந்த 4 சட்டமன்றத் தொகுதிகளிலும் அந்த மலைவாழ் மக்கள்தான் அதிக வாக்குகளை அளித்திருக்கிறார்கள் என்பதை நம்முடைய அமைச்சர் அவர்களுக்கு இங்கே தெரிவித்துக்கொள்கிறேன். அப்படிப்பட்ட தோட்டத் தொழிலாளர்களுக்கு, நீங்கள் ஆதரவாக இருந்து நிச்சயமாகக் கேரளாவிற்கு இணையான சம்பளத்தை பெற்றுத்தர வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

[திரு. வி.பி. சிங்காரவேலு] [1998 ஏப்ரல் 24

அதேபோல, தொழிலாளர் நலனுக்காக என்றென்றும் குரல் கொடுக்கும் நம்முடைய அரசுத் தலைமைக் கொறடா திரு. முபாரக் அவர்கள்கூட கேட்டுள்ளபடி, நம்முடைய கூட்டுறவு பால் இணையத்தின்கீழ் இருக்கக்கூடிய உதகமண்டலத்திலுள்ள கருவூல ஜெர்சி பண்ணையிலே ஏறக்குறைய 20 ஆண்டுகளாக தற்காலிகமாக பணியாற்றுகின்ற 41 தொழிலாளர்களுடைய கோரிக்கையினை ஏற்று, எங்களுடைய கோரிக்கையினையும் ஏற்று, அவர்களை நிரந்தரமாக்க வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல இன்றைக்கு பல்வேறு பேச்சுவார்த்தைகளையெல்லாம் நடத்திய பிறகும் மூடிக்கிடக்கின்ற நிறுவனங்களையெல்லாம். நம்முடைய அரசாங்கம் அவற்றிற்கு உற்ற துணையாக இருந்து அந்த நிறுவனங்களைத் திறந்து தொழிலாளர்களுக்குப் பாதுகாப்பு அளிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். நானும், நம்முடைய மேட்டுப்பாளையம் சட்டமன்ற உறுப்பினர் திரு. அருண்குமார் அவர்களும் நம்முடைய அமைச்சரிடத்தில் நேரிடையாகக் கேட்டிருக்கிறோம். காரமடை எஸ்.ஆர்.எஸ்.ஐ., காரமடை ராஜலட்சுமி மில், காரமடை போர்ஜிஸ் நிறுவனம், டேன் இண்டியா நிறுவனம் ஆகியவற்றிலே பணியாற்றக்கூடிய அந்த 4,000 தொழிலாளர்களுக்கும் வாழ்வு அளிக்கக்கூடிய வகையில் அந்த நிறுவனங்களைத் தொடங்குவதற்கு பேச்சுவார்த்தை மூலம் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று இந்த நோத்திலே கேட்டுக் கொள்கிறேன். இந்த 'நேரத்திலே நான் நம்முடைய அமைச்சரைக் கேட்டுக்கொள்வதெல்லாம் தோட்டத் தொழிலாளர்களுடைய சட்டதிலும் ('Plantation Labour Act') மற்றும் இருக்கக்கூடிய 'Minimum Wages Act', 'Bonus Act', 'Payment of Wages Act' போன்ற சட்டங்களிலும் நீங்கள் நிச்சயமாக திருத்தங்களைச் செய்து, அந்தச் சட்டத்திலே தவறு செய்யக்கூடிய அதிபர்களை, நிர்வாகிகளை சிறைக்கு அனுப்ப, அவர்களுக்கு மினிமம் இம்பிரிசன்மெண்ட் என்று சொல்லக்கூடிய அளவில் சட்டத் திருத்தங்களைச் செய்தால்தான், அவர்கள் நிச்சயமாக பல்வேறு தொழிலாளர்களுக்கு நலம் பயக்கக்கூடிய திட்டங்களைச் செய்வார்கள். ஒரு தவறு செயதிருக்கிறார்கள் என்றால் அவர்கள்மீது வழக்குத் தொடர்ந்து அவர்கள் வெறும் 100 ரூபாய், 200 ரூபாய் அபராதம் கட்டிவிட்டுச் செல்கின்றபோது மீண்டும் அவர்க்ள் தொழிலாளர்களுக்குச் செய்ய வேண்டிய அடிப்படை வசதிகளை செய்து தருவதில்லை என்பதை இந்த நேரத்திலே சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.



1998 ஏப்ரல் 24] [திரு. வி.பி. சிங்காரவேலு]

பிற்பகல் 1-10

அதைப்போல வால்பாறை பகுதி ஏறத்தாழ 1 இலட்சம் ஏக்கர் நிலப்பரப்பில் தோட்டப் பயிர்கள் பயிர் செய்யக்கூடிய பகுதி. அந்தப் பகுதியிலே ஓரே ஒரு தோட்ட நிபுணர். ஆய்வாளர்தான் இருக்கிறார். அது மலைப் பகுதியாக இருப்பதால் அவரும் நீண்டகாலத்திற்கு விடுமுறையில் சென்றுவிடுகிறார். ஆகவே அங்கே இரண்டு தோட்ட நிபுண ஆய்வாளர்களையாவது நீங்கள் கண்டிப்பாக போட வேண்டும் என்று நான் அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

அதைப்போல குன்னூரிலிருந்துதான் தோட்ட மருத்துவ அலுவலர் வருகிறார். அவர் வால்பாறைக்கு வருவதில்லை. ஆகவே வால்பாறையிலே ஒரு தோட்ட மருத்துவ அலுவலரை நியமனம் செய்ய வேண்டும். அதிகமாக மகளிர்கள் பணியாற்றக்கூடிய தேயிலைத் தொழிலிலே அங்கே மகளிர் ஆய்வாளர்கள் வந்து ஆய்வு செய்வதில்லை. அவர்களும் வந்து ஆய்வு செய்யக்கூடிய நிலைமையை நீங்கள் உருவாக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். நம்முடைய தொழிலாளர் நல வாரியத்தில் இன்றைக்கு ஏறத்தாழ 100 பணியாளர்கள் அதிக அளவிலே இருக்கிறார்கள். நம்முடைய தலைவர் அவர்கள் நிதிநிலை அறிக்கையிலே அறிவித்தபடி புதிதாக ஏற்படுத்தக்கூடிய வாரியத்தில், அமைப்பு ரீதி இல்லாத தொழிலாளர்களுக்கு ஏற்படக்கூடிய வாரியத்தில் அந்தத் தொழிலாளர்களை இப்போது இருக்கக்கூடிய சீனியாரிட்டி அடிப்படையிலே பணி மாற்றம் செய்தால் நம்முடைய வாரியத்திற்கு நிச்சயமாக இழப்பு ஏதும் ஏற்படாது என்பதையும் இந்த நேரத்திலே நான் தெரிவித்துக்கொள்கிறேன். கட்டுமானத் தொழிலாளர்கள் நலத் திட்டத்திலே நம்முடைய 3 மாநகராட்சிகள்தான் தொகையைச் செலுத்தி இருக்கின்றன. அந்த 0.3% கட்டுமானப் பணித் தொகையில் அங்கே பிடித்தம் செய்து அனுப்ப வேண்டிய நிதியை 6 மாநகராட்சிகளில் 3 மாநகராட்சிகள்தான் இங்கே செலுத்தியதாக கூறப்பட்டிருக்கிறது. அதைப்போல 636 நகரப் பஞ்சாயத்துகள் இருந்தும் 2 நகரப் பஞ்சாயத்துகளிலிருந்துதான் பணம் வந்திருக்கிறது. அதைப்போல 102 நகராடசிகள் இருந்தும் 4 நகராட்சிகளிலிருந்துதான் அந்த நிதி வந்திருக்கிறது. ஆகவே, இவற்றையெல்லாம் கவனத்திலே கொண்டு அந்த நலத்திட்டத்திற்கு நிதியைச் சேர்க்கின்ற வகையில் மீண்டும் நம்முடைய நகரப் பஞ்சாயத்துகளுக்கும் மாநகராட்சிகளுக்கும் நகராட்சிகளுக்கும் தாங்கள் நினைவூட்டுக் கடிதங்களை அனுப்பி

இவற்றையெல்லாம் சரி செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதைப்போல அனைத்துச் சட்டங்களையும்....

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. வி.கே. லட்சுமணன்.

*** திரு. வி.கே. லட்சுமணன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

'அரும்பும் வேர்வை உதிர்த்து புவிமேல்
ஆயிரம் தொழில் செய்திடுவீரே
பெரும்புகழ் உமக்கே இசைக்கின்றேன்
பிரமதேவன் கலை இங்குநீரே'

என்று பாரதி சொன்ன அந்த நவீன பிரம்மாக்களைப் பற்றி பேசுகிற இந்த மானியக் கோரிக்கையிலே பங்கு கொள்கிற அரிய வாய்ப்பு கிடைத்தமைக்கு நான் என்னுடைய மகிழ்ச்சியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

பாரத நாட்டின் பொருளாதாரம் என்பது 3 விவசாயப் பொருட்களை நம்பியிருப்பதாக பொருளாதார நிபுணர்கள் சொல்கின்றார்கள். ஒன்று பருத்தி, இன்னொன்று கரும்பு, இன்னொன்று எண்ணெய்வித்து. இந்த பருத்தியை விவசாயத் தொழிலாளிகள் உற்பத்தி செய்தால்தான் இந்த நூற்பாலைகளிலே தொழிலாளர்கள் பணியாற்ற முடியும். கரும்பை விவசாயத் தொழிலாளிகள் உற்பத்தி செய்தால்தான் சர்க்கரை ஆலையினுடைய சக்கரங்கள் ஓடும். அதேபோல எண்ணெய்வித்துக்களை விவசாயத் தொழிலாளிகள் உற்பத்தி செய்தால்தான் வனஸ்பதி சக்கரங்கள் சுழலும். ஆக, இந்தப் பெரிய தொழிற்சாலைகள் எல்லாம் நடைபெற வேண்டும் என்று சொன்னால் அதற்கு ஆதாரமாக இருப்பது விவசாயத் தொழிலாளிகள் என்பதை நாம் மறந்துவிடலாகாது. ஆகவே, அந்த விவசாயத் தொழிலாளிகளுக்கு அவர்கள் அமைப்பு ரீதியாக இல்லாததன் காரணமாக அவர்களுக்கு இந்தத் தொழிற்சங்கங்கள். அதனால் ஏற்படும் பயன்கள் எதுவும் கிட்டுவது இல்லை. சாதாரணமாக ஒரு தொழிற்சங்கம் என்று சொன்னால் அதற்கு எவ்வளவு பாதுகாப்பு ? தொழிலாளர்களைக் காப்பாற்றுவதற்காக ஐ.பி.ஆக்ட் இருக்கிறது. ஈ.எஸ்.ஐ. ஆக்ட் இருக்கிறது. மினிமம் வேஜஸ் ஆக்ட் இருக்கிறது. பேமெண்ட்



ஆஃப் வேஜஸ் ஆக்ட் இருக்கிறது, பேக்டரி ஆக்ட் இருக்கிறது, ஸ்டாண்டிங் ஆர்டர் இருக்கிறது, பேமென்ட் ஆஃப் பி.எப். ஆக்ட் இருக்கிறது, போனஸ் ஆக்ட் இருக்கிறது. பேமெண்ட் ஆஃப் கிராஜுவெட்டி ஆக்ட் இருக்கிறது, ஃபேமிலி பென்ஷன் ஆக்ட் இருக்கிறது. 10 சட்டங்கள் அவர்களுக்குப் பாதுகாப்பாக இருக்கின்றன. ஆனால் விவசாயத் தொழிலாளிக்கு என்ன இருக்கிறது? ஆகவே நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இந்த விவசாயத் தொழிலாளிகளுக்கு ஏதாவது ஒரு திட்டத்தை உருவாக்கி அவர்களுக்குக் கிராமத்திலே வைத்திய வசதியாவது செய்து கொடுப்பதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும். குறைந்தபட்சம் இன்சூரன்ஸாவது செய்வதற்கு ஏற்பாடு செய்து தரவேண்டுமென்று உங்களை கேட்டுக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

பிற்பகல் 1-15

இந்தக் கொள்கைக் குறிப்பில் சொல்லப்பட்டிருக்கிறது 40 இலட்சம் பேர் லைவ் ரெஜிஸ்தரில் இருக்கிறார்கள் என்று. லைவ் ரெஜிஸ்தருக்கு உயிருள்ள பதிவேடு என்று சொல்கிறார்கள் அந்தத் தமிழ் ஆக்கம் எப்படி என்று எனக்குப் புரியவில்லை. லைவ் ரெஜிஸ்தரில் 40 இலட்சம் பேர் பதிவு செய்திருக்கிறார்கள் என்று சொல்கிறார்கள். இது மிகப்பெரிய எண்ணிக்கை என்று நான் கருதுகிறேன். இதைக் குறைப்பதற்கு அரசு முயற்சி செய்ய வேண்டும். இப்போது எல்லாம் பொதுவாக எல்.பி.ஜி. என்று பேசிக் கொள்கிறார்கள். எல்.பி.ஜி. காலம் என்று சொல்கிறார்கள். எல்.பி.ஜி. என்று சொன்னால் 'Liquified Petroleum Gas' என்று அல்ல. எல்.பி.ஜி. என்று சொன்னால் liberalise, privatise and globalise. அதற்கு என்ன சான்று என்று நீங்கள் கேட்கலாம். நேற்றைய முன்தினம் ஆந்திராவிலிருந்து ஆந்திர அரசு ஒரு பெரிய உயர்மட்டக் குழுவை கோவைக்கு அனுப்பியிருக்கிறது. எதற்கு என்று சொன்னால் ஆந்திராவில் இருக்கிற 11 கூட்டுறவு நூற்பாலைகளை அவர்கள் விற்று விடப் போகிறார்கள். அதை வாங்குவதற்கு கோவையில் ஆள் இருக்கிறார்களா என்று பார்ப்பதற்காக அந்தக் குழு கோவைக்கு வந்திருக்கிறது ஆக, இந்த அளவுக்கு இன்றைக்கு இந்த பிரைவேட்டைசேஷன் என்பது ஒத்துக்கொள்ளப்பட்ட வாதம் என்பதை நாம் இங்கே மறந்து விடலாகாது. தமிழ்நாட்டில்கூட நட்டம் ஈட்டுகிற பொது நிறுவனங்களை நாம் மூடி விடுவது தவறு இல்லை. அந்த முயற்சியை அரசு மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மைய அரசு இன்றைக்கு ஒரு Disinvestment

Commission அமைத்து இருக்கிறது. நாமும் அதேபோல் ஒரு கமிஷனை அமைத்து அதன் மூலமாக நிலைமைகளை எல்லாம் தெரிந்து தக்க நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

கொள்கைக் குறிப்பில் 44 நிறுவனங்கள்தான் மூடப்பட்டிருக்கின்றன என்று சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால் நேற்றையதினம் பத்திரிகையைப் புரட்டினால் கரூரில் 424 சாயத் தொழிற்சாலைகள் மூடப்பட்டிருப்பதாகச் சொல்லப்பட்டிருக்கிறது. உயர்நீதிமன்றத்தின் உத்தரவுப்படி மூடப்பட்டிருக்கிறது. யார் உத்தரவிட்டாலும் தொழிலாளர்களுக்கு வேலை இருக்காது. ஆக, இந்த நிலைமைகளிலிருந்து அவர்களைக் காப்பாற்ற வேண்டுமென்றும் அதற்கு நாம் தக்க நடவடிக்கை மேற்கொள்ளவேண்டுமென்றும் கேட்டுக்கொள்கிறேன். அதற்காக அந்த Common Effluent Treatment Plants-ஐப் போடுவதற்குக் கொஞ்சம் காலம் அளித்து அவர்கள் அதைப் போடுவதற்கு வழி செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

அடுத்து, தமிழ்நாட்டிலுள்ள பஞ்சாலைகள் நிலைமை. கோவையில் பஞ்சாலைகள் நாள்தோறும் மூடப்பட்டு வருகின்றன. அதில் என்ன பிரச்சினை என்று சொன்னால் அப்பரண்டிஸ் தொழிலாளர்களுக்கு வேலையில்லை. பதிலி தொழிலாளர்களுக்கு வேலையில்லை. நிரந்தரத் தொழிலாளர்களுக்கு 'லே ஆப்' கொடுப்பதால் வேலை இழப்பு மட்டும் அல்ல, ஊதிய இழப்பும் ஏற்படுகிறது. இந்த ஊதிய இழப்பு ஏற்பட்டால் அதனுடைய விளைவு என்னவென்று சொன்னால் தொழிலாளர்கள் தங்கள் வாழ்க்கையை நடத்த வழியின்றி அல்லல்படுகிறார்கள்.

இந்த பி.எப். பணம் கட்டாததால் ஓய்வு பெற்ற தொழிலாளர்களுக்கு பிற்கால வாழ்வு இன்றி போவதோடு.... (மணியடிக்கப்பெற்றது) 5 நிமிடங்களில் என் உரையை முடித்து விடுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இல்லை, ஒரு நிமிடத்தில் உங்களுடைய உரையை முடித்துக் கொள்ளுங்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதிலுரை சொல்லி, அதன் பிறகு 3 சட்டமுன்வடிவுகள் நிறைவேற்றப்படவேண்டும்.

**திரு. வி.கே. லட்சுமணன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஆக, அந்தத் தொழிலாளர்களுடைய நிலைமையை நாம்



கொஞ்சம் கருத்தில் கொண்டு அவர்களுக்காக தக்க நடவடிக்கையை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

நான் ஏற்கெனவே சொன்னேன். 1990-க்குப் பின் மூடப்பட்ட தொழிற்சாலைத் தொழிலாளர்களுக்குத்தான் நிவாரணம் என்று சொல்லுவது தவறு. 1990-க்கு முன்னால் மூடப்பட்ட தொழிற்சாலைத் தொழிலாளர்களுக்கும் ஆண்டு ஒன்றுக்கு பொங்கல், தீபாவளிக்கு நிவாரணம் அளிக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அரக்கோணத்தில் உள்ள தமிழக அரசுக்குச் சொந்தமான ஸ்டீல் தொழிற்சாலை கடந்த 8 மாத காலமாக மூடப்பட்டிருக்கின்றது. அதையும் அரசு கவனத்தில் எடுத்துக்கொண்டு தாங்கள் தக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மதுரை கல்வி மாவட்டத்தில் உள்ள அரசு உதவிபெறும் பள்ளிகளில் பணிபுரிந்து வரும் ஓய்வு பெற்ற ஆசிரியர்கள் மற்றும் அலுவலர்களுக்குச் சேர வேண்டிய ஸ்பெசல் பிராவிடெண்ட் பண்டு வழங்கிட அரசு நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கட்டுமானத் தொழிலாளர்களுக்கு நாம் இன்று வாரியம் ஏற்படுத்தியிருக்கிறோம். அவர்களுக்கு வீட்டினுடைய மொத்த மதிப்பீட்டில் 0.3 சதவீதம் அவர்கள் சந்தா தொகை கட்டவேண்டுமென்று கேட்டிருக்கிறோம். அதை மாநகராட்சிக்கு மட்டும் அல்ல; ஏனைய நகராட்சிகளுக்கும் விரிவுபடுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 1-20

அவர்கள் செலுத்துகின்ற அந்தப் பதிவுக் கட்டணமெல்லாம் சேர்ந்து மொத்தமாக 1 கோடியே 56 இலட்சத்து 50 ஆயிரத்து 527 ரூபாய் வந்திருக்கிறது. பதிவுக் கட்டணம் 14 இலட்சத்து 48 ஆயிரத்து 50 ரூபாய் கிடைத்திருக்கிறது. ஆனால் அவர்களுக்கெல்லாம் இன்றைக்குக் கொடுத்திருக்கிற பணம் இன்சூரன்ஸுக்காக 1 இலட்சத்து 61 ஆயிரத்து 250, ஈமச் சடங்குக்காகவும் ஒரு தொகை. அவ்வளவுதான். அதனாலே அந்தப் பணத்தை உரிய முறையிலே பயன்படுத்துவதற்கு அரசு முயற்சியை மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுகொள்கிறேன்.

தமிழ்நாடு தொழிலாளர் நல வாரியத்திலே நாம் இன்றைக்குத் தொழிலாளர்களுடைய குழந்தைகள் படிப்பதற்காக உதவி செய்கிறோம். அதுமட்டுமல்லாது, தொழிலாளர்களுடைய குழந்தைகள் தங்கிப் படிப்பதற்காக விடுதி ஒன்றை ஏற்பாடு செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சரவர்கள். (குறுக்கிடு) மணி 1-21. 1-30-க்குள் அமைச்சர் பதில் சொல்லி முடிக்க வேண்டும், உட்காருங்கள்.

**திரு. வி.கே. லட்சுமணன்:** ஒரு நிமிஷம் கொடுங்கள் சார்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** சரி, சீக்கிரம் பேசி முடியுங்கள்.

**திரு. வி.கே. லட்சுமணன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தொழிலாளர் குழந்தைகள், குறிப்பாகக் கல்லூரியிலே படிக்கின்றவர்கள், பள்ளியிலே படிக்கின்றவர்கள் தங்கிப் படிப்பதற்காக விடுதி கட்டித்தர வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

சிறு தொழில்கள், சிறு தொழில்கள் செய்கின்ற அவர்கள் ஸ்கில்டு லேபராக இருந்து முதலாளி ஆனார்கள். தொழில் நடக்கவில்லை என்றால் திரும்பவும் ஸ்கில்டு லேபர்தான். எப்படி பண்ணையார் எல்லாம், மழை பெய்யவில்லை என்றால் பண்ணை ஆளாகி விடுவார்களோ, அதைப்போல இவர்களும் தொழிலாளியாக ஆகி விடுவார்கள். ஆகவே, இவர்களை நம்முடைய பேக்டரி இன்ஸ்பெக்டர்கள் கொஞ்சம் அனுதாபத்தோடு பார்க்க வேண்டும். சட்டங்களை அமல்படுத்துகிறபொழுது கொஞ்சம் பரிவோடு பார்க்க வேண்டும். குறள் எல்லாம் சொன்னால் நேரம் அதிகமாகிவிடும். கடிதோச்சி மெல்ல எறிய வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

ஒரேயொரு சான்றை மட்டும் சொல்லி நான் முடித்துக்கொள்கிறேன். 23 ஆண்டுகளாக நான் ஒரு கூட்டுறவு நிறுவனத்தில், பெரிய கூட்டுறவு நிறுவனத்திலே பொறுப்பிலே இருந்தேன். நிர்வாகப் பொறுப்பிலே, அப்பொழுது ஒரு தொழிற்சாலை கட்டினோம். அந்தத்



தொழிற்சாலையைப் பார்க்க வந்த ஒரு பேக்டரி இன்ஸ்பெக்டர் ஏதோ எழுதிவிட்டுப் போனார், என்னவென்று தெரியாது. கொஞ்சநாள் கழித்து எனக்கு ஒரு ப்ராசிகியூஷன் நோட்டீஸ் வந்தது. எனக்கு ஆச்சரியமாகப் போய்விட்டது. எப்படி ப்ராசிகியூட் செய்யலாம் என்று என்னால் அதைப் புரிந்துகொள்ள முடியவில்லை. அது என்னவென்று கேட்டால், அந்தத் தொழிற்சாலையிலே ஒரு ஆஸ்பெஸ்டாஸ் ஷீட் இரண்டு அடி அந்தச் சுவற்றை விட்டு விலகி இருக்கிறது. அவ்வளவுதான். இதற்காக நான் கோர்ட்டுக்குப் போய் தப்பித்து வந்தேன். இல்லையென்று சொன்னால் சிறைக்குப் போயிருக்க வேண்டும். ஆகையினால்தான் அதற்குப் பின்னால் நாங்கள் கொஞ்சம் பை-லாவைத் திருத்தினோம். To sue and be sued. செக்ரட்டரிதான், பிரசிடெண்ட் அல்ல என்று திருத்தினோம். நல்ல வேளை. இப்பொழுது M.D. வந்து விட்டார்கள், கவலை இல்லை; இல்லையென்று சொன்னால் அன்றைக்கு நான் சிறைக்குப் போய் இருக்க வேண்டும். ஆகவே, நம்முடைய பேக்டரி இன்ஸ்பெக்டர்கள் இந்தச் சிறுதொழில் அதிபர்களைக் கொஞ்சம் பரிவோடு கவனிக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். சிந்தாமணி...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நேரமாகி விட்டது, இன்னும் ஒரே நிமிஷத்தில் பேசி முடியுங்கள்.

**திரு. வி.கே. லட்சுமணன்:** கோவை சிந்தாமணியிலே நிறைய நிறுவனங்கள் இருக்கின்றன. சன் ஃப்ளவர் ஆயில் பிளான்ட் இருக்கிறது, பனியன் தொழிற்சாலை இருக்கிறது. ஒன்றுமே நடக்கிறது இல்லை. அங்கே தொழிலாளர்களுக்குச் சம்பளம் கொடுத்து 3 மாதங்கள் ஆகிவிட்டன. இவற்றையெல்லாம் அரசு கவனித்துத் தக்க நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தது, ஒரேயொரு வேண்டுகோள். கோவையிலே வரதராஜபுரத்திலே நீண்டகாலமாக ஒரு மிகப்பெரிய ஈ.எஸ்.ஐ. மருத்துவமனை இருக்கிறது. அதற்கு மறைந்த தொழிற்சங்கத் தலைவர் தியாகி செஞ்சி இராமசாமி பெயரை வைக்க வேண்டுமென்று நாங்கள் பலமுறை கேட்டிருக்கிறோம். இந்த முறையாவது அரசு அந்தப் பெயரை வைக்க வேண்டுமென்று நான் அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

அந்த மருத்துவமனையிலே ஒரு 'கார்டியாலஜி டிபார்ட்மென்ட்' வேண்டும்; ஒரு எமர்ஜென்ஸி வார்டு இருக்க வேண்டும்; மைக்ரோ

சர்ஜரிக்கு ஏற்பாடு இருக்க வேண்டும். அதைப்போலவே ஒரு சிடி. ஸ்கேனும் அங்கே நீங்கள் அளிக்க வேண்டும். அது தொழிலாளர்களுக்கு மிகத் தேவையாக இருக்கிறது. சைக்ளோஸ்கோரின் உட்பட பல மருந்துகளும் நீங்கள் அவர்களுக்கு அளிக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, அளித்த வாய்ப்புக்கு நன்றி கூறி அமர்கிறேன். வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொழிலாளர் நலன், தொழிற்சாலை, வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சி பற்றிய மானியக் கோரிக்கைமீது நடைபெற்ற இந்த விவாதத்திலே நம்முடைய மரியாதைக்குரிய சட்டமன்ற உறுப்பினர்கள் திரு. ரங்கநாதன் அவர்களும், திரு. மணி அவர்களும், திரு. சுப்பராயன் அவர்களும், திரு. சொக்கலிங்கம் அவர்களும், திரு. நடராஜன் அவர்களும், திரு. சிங்காரவேலு அவர்களும், நம்முடைய திரு. லட்சுமணன் அவர்களும் பல அரிய கருத்துக்களை எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். இந்த அரசு ஜனநாயக ரீதியான அரசு. எனவே, ஆளும் கட்சியா, எதிர்க்கட்சியா என்று வேறுபாடு பாராமல் அவர்கள் சொல்லியிருக்கக்கூடிய நல்ல கருத்துக்களை ஆராய்ந்து உறுதியாக நன்றாக செயல்படுத்தக்கூடிய திட்டங்களைப் பரிசீலித்து செயல்படுத்தும் என்பதை நான் அவர்களுக்கு மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

பிற்பகல் 1-25

நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் லட்சுமணன் அவர்கள் இங்கே சில பிரச்சினைகளை எழுப்பியிருக்கிறார்கள். சாயப்பட்டறைகள் மூடிக் கிடப்பதாகச் சொன்னார்கள். இதற்குக் கழக அரசு காரணமல்ல. Pollution Board உயர்நீதிமன்ற உத்தரவின்படி மூடியிருக்கிறது. உங்களுக்கெல்லாம் தெரியும். அமராவதி ஆற்றில் சாயப்பட்டறைகளின் கழிவுநீர் கலந்த காரணத்தினாலே. விவசாயமும், குடிநீரும் பாதித்து, பாதிக்கப்பட்டவர்கள் நீதிமன்றத்திற்குப் போக, அவர்கள் ஆலையை மூட உத்தரவிட, எங்களுக்கு அவகாசம் கொடுங்கள், நாங்கள் சுத்திகரிப்பு நிலையம் வைக்கிறோம் என்று அவர்கள் கேட்டு மீண்டும் திறக்க, பிறகு அந்த அவகாசம் 21-4-1998 அன்றோடு முடிவடைந்துவிட்ட



காரணத்தினாலே மீண்டும் மூடவேண்டிய நிலை. ஒருபுறத்திலே சுகாதாரப் பாதிப்பு, குடிநீர் பாதிப்பு, இன்னொரு புறத்திலே தொழிலாளர்கள் வேலையில்லாமல் இருக்கக்கூடிய சூழ்நிலை. இருந்தாலும், அரசு அதுகுறித்து சிந்திக்கும், எண்ணும் என்பதைப் பணிவோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

ஸ்டாண்டர்டு மோட்டார் தொழிற்சாலை பற்றி இங்கு எல்லா உறுப்பினர்களும் கருத்துக்களை எடுத்துச் சொன்னார்கள். நம்முடைய திரு. ரங்கநாதன் அவர்களும் இங்கே அதுபற்றிப் பேசினார்கள். ஸ்டாண்டர்டு மோட்டார் விவகாரம் குறித்து எல்லோருக்கும் தெரியும். நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அந்தத் தொழிற்சாலை எப்படியும் திறக்கப்பட வேண்டும் என்பதில் எல்லா முயற்சிகளும் எடுத்துக்கொண்டார்கள். ஒரு கட்டத்திலே வி.ஆர்.எஸ். திட்டத்திற்கு 3 கோடி ரூபாய் கஜானாவிலேயிருந்து அள்ளி வழங்கினார். ஆனால், துரதிருஷ்டவசமாக அதைச் சரியாகச் செயல்படுத்த முடியாத ஒரு சூழ்நிலை ஏற்பட்டுவிட்டது. ஒரு செயற்கையான நிதி நெருக்கடி உருவாக்கப்பெற்றது. பிஐ.எப்.ஆர். இனி அது நடைபெறாது, அதற்கு வாய்ப்பில்லை என்று சொல்லிவிட்டது. அதற்குப் பிறகு - liquidation- அதைக் கலைத்துவிட்டு கடன்காரர்களுக்கும், தொழிலாளர்களுக்கும் பணத்தை செட்டில் பண்ண வேண்டியதுதான் என்று சொல்லி, இப்போது அந்த வழக்கு நீதிமன்றத்திலேயிருக்கிறது. liquidation-ஆக. ஆகையினாலே, இந்தக் கட்டத்திலே அப்படியிருந்தாலும்கூட, நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அந்தத் தொழிற்சாலை திறக்கப்பட வேண்டும் என்பதிலே ஆர்வம் காட்டி, புரமோட்டர் வருவார்களேயானால், நாங்கள் அதுபற்றி பரிசீலிக்கத் தயாராக இருக்கிறோம் என்று இந்தச் சபையில் சொன்னார்கள். எதிர்க்கட்சித் தலைவர் புரமோட்டரை கொண்டு வருகிறேன் என்று சொன்னார். அதுபோலவே அந்தச் சங்கத்தின் தலைவராக இருந்த பாண்டியன் அவர்களும் பேசினார்கள். ஆனால், புரமோட்டர் கிடைக்கவில்லை. நிச்சயமாக, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இதுகுறித்து, ஏற்கெனவே இந்தச் சபையிலே புரமோட்டர் வந்தால் தொடங்கலாம் என்று சொல்லியிருக்கிறார்கள்.

அதைப்போலவே இன்னொன்றைப் பற்றியும், மெட்டல் பாக்ஸ் பற்றியும் பேசினார்கள். பலமுறை அதிகாரிகளோடு நானும், மற்றவர்களும் கலந்து பேசியிருக்கிறோம். மூடப்பட்ட மொத்த தொழிற்சாலைகளோடு இணைந்து அதுவும் மூடப்பட்டிருக்கிறது. மகாராஷ்டிராவிலே அந்த

உரிமையாளருக்கு சொத்து இருக்கிறது. அதை விற்று மீண்டும் ஆலையைத் திறக்கிறேன் என்று சொல்லியிருக்கிறார். அதிலே சட்டச் சிக்கல்கள் இருக்கின்றன. ஆகையினாலே, டெல்லி உயர்நீதிமன்றத்திலே அது சம்பந்தமான வழக்கு இருக்கிறது. எனவே, இதிலே அரசு இப்போது பேச்சுவார்த்தை மூலம் முயற்சிகள் செய்யும் என்பதை மட்டும் நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதைப்போலவே, ஒட்டுமொத்தமாக பேசிய மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவருக்கும் நினைவூட்ட விரும்புகிறேன். நம்முடைய திரு. ரங்கநாதன் அவர்கள் பி. அண்டு சி. பற்றியும், டன்லப் பற்றியும், மெட்டல் பாக்ஸ் பற்றியும், சாயப்பட்டறைகள் பற்றியும் பேசினார்கள். திரு. நடராஜன் அவர்கள் அமைப்பு ரீதியற்ற தொழிற்சாலைகளைப் பற்றிப் பேசினார்கள்; சிலவற்றைக் கோடிட்டுக் காட்டினார்கள். திரு. சுப்பராயன் அவர்கள் மாதவரம் பால் பண்ணை பற்றி இங்கே கருத்துத் தெரிவித்தார்கள். அவருக்கு முதலாளித்துவத்தின்மீது இருக்கும் கோபம் காரணமாக முதலாளிகளுடைய தொழிலாளர் விரோதப் போக்கின் காரணமாகக் கூறுகிறார். ஆனால், ஒட்டுமொத்தமாகத் தொழிலாளர்களும், முதலாளிகளும் உள்ளடங்கிய ஒரு நிருவாக அமைப்பே — அந்த உறவு பூக்க வேண்டாம் என்று சொன்னால் — பாதிக்கப்படும். தொழில் அமைதி கெட்டுப் போகும். ஒரு தொழிற்சாலை மூடப்படுகிறது என்று சொன்னால், அது தொழிலாளி, முதலாளி சம்பந்தப்பட்ட பிரச்சினையல்ல. அது சமுதாயம் சம்பந்தப்பட்ட பிரச்சினை. இலட்சோப இலட்சம் தொழிலாளர்கள் சம்பந்தப்பட்ட பிரச்சினை, சமுதாயப் பிரச்சினை. எனவே, ஒருபுறத்திலே தொழில் வளம் பெருக வேண்டும். தொழில் உற்பத்தி பெருக வேண்டும். மனித உழைப்பு நாட்கள் வீணாகக்கூடாது, தொழில் திறன் வளர்க்கப்பட வேண்டும். ஆனால், அதேநேரத்திலே தொழிலாளருடைய நலத் திட்டங்கள் பின்பற்றப்பட்டு தொழிலாளர் நல உரிமை பாதுகாக்கப்பட வேண்டும். இரண்டு இரயில் தண்டவாளங்கள் இருந்தால்தான் இரயில் போக முடியும். எனவே, அந்தத் தொழில் உறவு என்பது, சிறந்த நிருவாகம் என்பது, தொழில் அமைதி என்பது, முதலாளி, தொழிலாளி உறவு கொண்டிருந்தால்தான். ஆகையினாலேதான் தொழில் நல்லுறவுப் பரிசை நம்முடைய முதலமைச்சர் அவர்கள், அவர்களை ஊக்கப்படுத்த கொடுத்திருக்கிறார்கள்.



பிற்பகல் 1-30

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவையின் முன்னனுமதியோடு பேரவையின் அலுவல் நேரம் நீட்டிக்கப்பெறுகிறது.

**மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தக் கோபத்தின் காரணமாக தவறு, செய்கிற முதலாளிகள்மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பது வேறு, ஆனால் தொழில் உறவு அவசியமானது. எனவே, மாண்புமிகு உறுப்பினர் திரு. சுப்பராயன் அவர்கள் தன் கோபத்தை மாற்றிக் கொண்டு இந்த உன்னதமான திட்டத்தை ஏற்றுக்கொள்ள முயற்சிப்பார்கள் என்று நான் நம்புகிறேன்.

அதைப்போலவே இன்னொன்றைச் சொல்ல விரும்புகிறேன். நம்முடைய திரு. சிவபுண்ணியம் தோட்டத் தொழிலாளர்கள் பற்றிப் பேசினார்கள். திரு. டி. மணி அவர்கள் பேசினார்கள், அதைப்போலவே மற்றவர்களும் இங்கே பேசியிருக்கிறார்கள். இந்த வெட்டுப் பிரேரணைகள், ஏறத்தாழ 38-க்கு மேலே கொடுக்கப்பட்டிருக்கின்றன. நேரம் அதிகமாகிக் கொண்டிருக்கிறது. எனவே நான் சுருக்கமாகவே பேச வேண்டிய ஒரு நிலையிலே இருக்கின்றேன்.

labour policy - தொழிலாளர் கொள்கை இந்த அரசினுடைய — எல்லோருக்கும் தெரிந்தது தான். ஆனாலும் ஒவ்வொரு சட்டமன்றக் கூட்டத் தொடரிலும் வெட்டுப் பிரேரணைகள் கொடுக்கப்படுகின்றன. தொழிலாளர்களுக்காக நான் ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். அரும்பாடுபட்டு வருகிற நம்முடைய ஒப்பற்ற மாண்புமிகு முதலமைச்சர், தலைவர் டாக்டர் கலைஞர் அவர்கள் என்றைக்கும் தொழிலாளர்களுடைய நலனிற்காகப் பாடுபட்டுக் கொண்டிருப்பவர்கள். ஆக, தொழிலாளர் வர்க்கத்தினுடைய முன்னேற்றத்திற்காக, தொழில் நல்லுறவுக்காக, தொழில் அமைதிக்காக இருக்கக்கூடிய இந்தக் கொள்கைகள் என்றென்றைக்கும் ஒரு 'நிறம் மாறாத பூ' என்பதை இந்த நேரத்திலே நான் பணிவோடு தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

தமிழகத்திலே தொழில் வளம் பெருக வேண்டும். தொழிலாளர்கள் உரிமைகள் சுரண்டப்படக்கூடாது; அச்சுறுத்தப்படக்கூடாது; பாதுகாக்கப்பட வேண்டும். தொழிலாளர்களுக்குச் சேர வேண்டிய சலுகைகள், உரிமைகள், பயன்கள் உடனடியாக அவர்களுக்குப் போய்ச் சேர வேண்டும். தொழிலாளர் நலச் சட்டங்கள், நீதிமன்றத் தீர்ப்புகள், அவார்டுகள் கண்டிப்பாக அமல் நடத்தப்பட வேண்டும். இவற்றை

மீறுபவர்கள் யாராக இருந்தாலும் அவர்கள்மீது நடவடிக்கை எடுக்கப்படும். தொழிலாளர்கள் சம்பந்தப்பட்ட பிரச்சினைகளில், தொழிலாளர்களுக்கும் நிர்வாகத்திற்கும் - அவர்கள் நேரிடையாகக் கலந்துரையாடி - இரு தரப்பினருக்கும் நன்மை பயக்கும் விதத்தில் நல்லதொரு கூட்டுமுயற்சி இங்கே நடைபெற வேண்டும். தொழிலாளர்களுக்கும் நிர்வாகத்திற்குமிடையே நல்ல உறவும், நம்பிக்கையும், பரஸ்பர நல்லெண்ணமும் உள்ள சூழ்நிலை இருக்க வேண்டும் - **mutual trust and confidence**-இருக்க வேண்டும். இன்னும் சொல்லப்போனால் தொழிற்சாலை மூடப்படாத ஒரு நிலை உருவாக வேண்டும். வேலை நிறுத்தம் மூலமும், கதவடைப்பின் மூலமும் உற்பத்தி பாதிக்கப்படுவதை இவ்வரசு விரும்பவில்லை. முன்கூட்டியே அதற்கான காரணங்களைக் கண்டறிந்து தொழிற்சாலைகள் மூடப்படுவதைத் தவிர்ப்பதற்காக இந்த அரசு எல்லா முயற்சிகளையும் எடுக்கும். தொழிலாளர்களின் ஜனநாயக ரீதியான தொழிற்சங்க உரிமைகளைப் பறிக்க இந்த அரசு அனுமதிக்காது இது மிக மிக முக்கியமானது தொழிலாளர் வரலாற்றிலேயே சரித்திரச் சாதனை படைத்த ஒரு கருத்து. அமைப்பு ரீதியான தொழிலாளர்கள், அமைப்பு ரீதியற்ற தொழிலாளர்கள் என்று இன்றைக்கு இருக்கிறார்கள். அந்த அமைப்பு ரீதியற்றத் தொழிலாளர்களுடைய உரிமைகளும் பாதுகாக்கப்பட வேண்டும். குறைந்தபட்ச ஊதியம் அவசியம் தரப்பட வேண்டும். தொழிற்சாலைகளில் தொழிலாளர்கள் பாதுகாப்புடனும், உடல் நலத்துடனும், பணிபுரிய சட்டத்திலுள்ளபடி நடவடிக்கைகள் கடுமையாகப் பின்பற்றப்பட வேண்டும். மொத்தத்தில் தொழில் வளம் பெருக வேண்டும்; தொழில் வளர வேண்டும்; தொழிலாளர் நலன் பெருக வேண்டும். இதுதான் இந்த அரசின், எங்களுடைய தொழிலாளர் நலத் துறையின் கொள்கையாக இருக்கிறதென்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இங்கே சட்டம் ஒழுங்கு சரியாக இருப்பதால்தான், இங்கே தொழில் அமைதி சரியாக இருப்பதால்தான், தமிழகம் அமைதிப் பூங்காவாக இருப்பதால்தான், வெளிநாட்டவரும், வெளிமாநிலத்தவரும் கோடிக் கணக்கிலே முதலீடு செய்து இங்கே தொழிற்சாலைகளைத் தொடங்குவதற்கு முன்வருகிறார்கள் என்பதை நான் நினைவூட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

அதுமட்டுமல்ல, அமைப்பு ரீதியற்றத் தொழிலாளர்களுக்காக நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் டாக்டர் கலைஞர் அவர்கள்





செய்திருக்கக்கூடிய காரியங்கள் சரித்திரச் சாதனைகளாகும். வரலாறு இருக்கின்ற வரைக்கும் வரலாற்றின் பொன் எழுத்துக்களில் இப்போது செய்திருக்கக்கூடிய காரியங்கள் நிச்சயமாக நிலைத்து நிற்கும். அதற்கான காரணத்தைச் சொல்ல விரும்புகிறேன். உங்களுக்குத் தெரியும். தொழிலாளர் சமுதாயத்திலே **Organised labourers, unorganised labourers** – அமைப்பு ரீதியான தொழிலாளர்கள், அமைப்பு ரீதியற்ற தொழிலாளர்கள் என்று இருக்கிறார்கள். 92 சதவீதம் அமைப்பு ரீதியற்ற தொழிலாளர்கள்தான். சாலையோரத்து மக்கள், மூட்டை சுமப்பவர்கள், வண்டி இழுப்பவர்கள் ஆகியவர்கள் இலட்சக்கணக்கிலே இருக்கிறார்கள். அமைப்பு ரீதியான தொழிலாளர்களுக்கு தொழிற் சங்க உரிமை இருக்கிறது. எல்லா சட்ட உரிமைகளும் இருக்கின்றன. ஆனால் இன்று அமைப்பு ரீதியற்றத் தொழிலாளர்களுக்கு எந்த வசதியும் சட்ட ரீதியாகக் கிடையாது. **Gratuity** உண்டா, இல்லை. **Provident Fund** இல்லை. **E.S.I.** வசதி இல்லை. இன்னும் சொல்லப்போனால் நோய்கால உதவிக் காப்பீடு இல்லை. பேறுகால உதவித்தொகை இல்லை. ஓய்வூதியம் இல்லை. அவர்கள் காலையிலிருந்து மாலைவரை கடுமையாக உழைக்கிறார்கள். உழைப்பும் கண்ணீரும்தான் மிச்சம். அவர்களுடைய இரவுகள் விடியாத இரவுகளாக இருக்கின்றன.

பிற்பகல் 1-35

இதனால்தான் பேரறிஞர் அண்ணா அவர்கள் ஒரு திரைப்படத்திலே இப்படி குறிப்பிட்டார்கள். 'சாலையோரத்திலே வேலையற்றதுகள், வேலையற்றதுகளின் உள்ளங்களில் விபரீத எண்ணங்கள், வேந்தே இதுதான் காலக்குறி' என்று குறிப்பிட்டார்கள். அண்ணாவின் மறு பதிப்பாக, அண்ணாவின் தம்பியாக, அண்ணாவின் உண்மையான வாரிசாக, அண்ணாவின் வழியில் அயராது பாடுபட்டுக் கொண்டிருக்கும் நம்முடைய முதல்வர் அவர்கள் இன்றைக்கு அண்ணா வழி நின்று, இலட்சக்கணக்கான அமைப்பு ரீதியற்ற தொழிலாளர்களின் கண்ணீரைத் துடைத்து, அவர்களின் வாழ்க்கையில் ஒளியேற்றும் விதத்தில், சென்ற நிதிநிலை அறிக்கையில் தொழிலாளர்களின் நலனைப் பேணும் விதத்தில், கட்டடத் தொழிலாளர்கள், விவசாயத் தொழிலாளர்கள் மற்றும் அமைப்பு ரீதியற்ற தொழிலாளர்களின் பிரச்சினைகளை ஆய்ந்து அதற்குரிய தீர்வைக் காண்பதற்கான பரிந்துரைகளை அரசுக்கு அறிவிக்க தனித்தனியே குழுக்கள் அமைக்கப்படும் என்று அறிவித்தார்கள். 'சொன்னதைச் செய்வோம், சொல்வதைச் செய்வோம்' என்ற விதத்திலே

[திரு. அ. இரகுமான்கான்] [1998 ஏப்ரல் 24

3 குழுக்கள் அமைக்கப்பட்டன. இந்தக் குழுக்கள் அனைத்து மாவட்டங்களுக்கும் சென்று தல ஆய்வு மேற்கொண்டு தொழிலாளர்கள் பிரச்சினையை ஆராய்ந்து தீர்வு காணும் விதத்திலே இன்றைக்கு அரசுக்கு அறிக்கையைச் சமர்ப்பித்துள்ளன. அந்த அறிக்கையின் அடிப்படையில் அமைப்பு ரீதியற்ற தொழிலாளர் நலன்களைப் பாதுகாக்கும் விதத்தில், தமிழகம் முழுவதையும் உள்ளடக்கி ஒட்டுமொத்தமாக "முதன்மைத் தொழிலாளர் நல வாரியம்" இன்றைக்கு இந்தத் தொழிலாளர்களுக்காக அமைக்கப்படும், அமைக்கப்பட வேண்டுமென்ற எண்ணத்துடன் இந்த ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையில் தெரிவித்தார்கள். இந்தியாவிலேயே முதன்முதலாக கலைஞர் ஆட்சியில்தான், இங்கேதான் இந்த அமைப்பு ரீதியற்ற தொழிலாளர்களுக்காக "முதன்மைத் தொழிலாளர் நல வாரியம்" அமைக்கப்படுகிறது என்ற செய்தியை அளவிலாத மகிழ்ச்சியோடு இந்தச் சபைக்கு நான் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

8.33% போனஸ் தொழிலாளர்களுக்காக வாங்கிக் கொடுத்தவர் முதல்வர் கலைஞர் அவர்கள்தான். மே தினத்தை அரசாங்க விடுமுறை தினமாக தமிழகம் மட்டுமல்லாது, டெல்லியிலும் விட ஏற்பாடு செய்தவர். இன்றைக்கு இந்தியா முழுவதும் பல தொழிலாளர் தலைவர்கள் இருக்கிறார்கள். ஆனால் இந்த ஸ்தாபனமற்ற தொழிலாளர்களுக்காக, அவர்களின் பிரச்சினைகளைக் கூர்ந்து கவனித்து, அவர்களுக்காக ஒரு வாரியத்தை இன்று அமைத்துக் கொடுத்திருக்கிறவர் கலைஞர் அவர்கள்தான் இன்னொன்றையும் நான் சொல்ல விரும்புகிறேன். இந்த அமைப்பு ரீதியற்ற தொழிலாளர்கள் இனி தொழிலாளர் நலச் சட்டத்தின் பலனை அனுபவிப்பார்கள். பணிபுரியும் காலத்தில் விபத்து நேரிட்டால், நஷ்ட ஈட்டை அளித்தல், ஓய்வூதியம், மருத்துவ வசதி, பேறுகால வசதி போன்ற பல நலத் திட்டங்கள் இந்த வாரியத்தின் மூலம் செயல்படுத்தப்படும். இந்த வாரியத்தில் அரசின் சார்பாகவும், தொழிலாளர்களின் சார்பாகவும், வேலையளிப்போர் சார்பாகவும் பிரதிநிதிகள் இருப்பார்கள். இதன் மூலம் சுமைதூக்கும் தொழிலாளி, தீப்பெட்டி தயாரிக்கும் தொழிலாளி, கூட்டுறவுச் சங்கங்களில் இல்லாத கைத்தறித் தொழிலாளி, விசைத்தறி, செங்கல் தயாரிப்பு, சாயப்பட்டறை ஆகியவற்றில் பணிபுரியும் தொழிலாளி, முந்திரி உடைப்போர், கயிறு திரிப்போர், பந்தல் கட்டுவோர், அப்பளம்



1998 ஏப்ரல் 24] [திரு. அ. இரகுமான்கான்]

தயாரிப்போர், செயற்கை வைரம் தீட்டுவோர் போன்ற தொழிலாளிகள் மற்றும் பொற்கொல்லர்கள், முடிதிருத்துவோர், சலவைத் தொழிலாளி, மட்பாண்டம் செய்வோர், அச்சுத் தொழிலாளி, சமையல் மற்றும் ஓட்டல் தொழிலாளி. தனியார் கடைகளில் பணிபுரிவோர், தையல் தொழிலாளி, சைக்கிள் ரிக்ஷா, ஆட்டோ ரிக்ஷா மற்றும் வாடகைக் கார் ஓட்டுபவர், உப்பளத் தொழிலாளி போன்ற 43 அமைப்பு ரீதியற்ற தொழில்களில் பணிபுரியும் சுமார் 25 இலட்சம் தொழிலாளர்கள் பல்வேறு நல உதவிகளைப் பெறுவார்கள். 43 தொழில்களில் ஈடுபட்டுள்ள அமைப்பு ரீதியற்ற தொழிலாளர்கள், தொழிலாளர் நலச் சட்டத்தின் பலனை அனுபவிக்க உரிமை பெற்றவர்கள் ஆகிறார்கள்.

Tamil Nadu Manual Workers' Act 1982 என்ற சட்டத்தின்கீழ், Scheduled Employment என்று இருக்கிறது. அந்தச் சட்டத்தில் நாம் எந்தெந்தத் தொழில்களுக்கெல்லாம் சட்டரீதியான உரிமைகள் வழங்க வேண்டுமென்று சொல்கிறோமோ அதைப் பட்டியலில் இணைத்தாக வேண்டும். கட்டுமானத் தொழிலாளர்களை அந்தப் பட்டியலில் இணைத்ததால்தான் அவர்களுக்கு வாரியம் அமைக்க முடிந்தது. சட்டங்களின் பயனை அவர்களுக்குத் தர முடிந்தது. Tamil Nadu Manual Workers' Act-ன்கீழ் கொடுக்கப்பட்டிருக்கிறது. அந்த எம்ப்ளாய்மென்ட் ஷெட்யூலிலே இப்போது நான் சொன்ன அத்தனை எம்ப்ளாய்மென்ட்களும் இணைக்கப்பட வேண்டும். அதிலே இணைக்கப்பட்டு, அரசு நோட்டிஃபிகேஷன் வழங்கிவிட்டால், அப்படி வழங்கியதற்குப் பிறகு மூன்று மாத காலம் கழித்துத்தான் இந்த வாரியத்தை அமைக்க வேண்டுமென்று சட்டம் சொல்கிறது. நான் இங்கே வாசித்துக் காட்டுகிறேன்.

பிற்பகல் 1-40

**"The Government, after giving by notification not less than 3 months, notice of its intention so to do, may, by like notification modify any item of the schedule or add to the schedule any employment in respect of which it is of opinion that the provisions of this Act should apply and the provisions of this Act shall thereupon apply to such employment as modified or added."**

இதனுடைய பொருள் உங்களுக்குத் தெரியும். அமைப்பு ரீதியற்ற தொழிலாளி வர்க்கத்தைப் பொறுத்தமட்டிலே, இந்தச் சட்டத்தின்படி

[திரு. அ. இரகுமான்கான்] [1998 ஏப்ரல் 24

மூன்று மாதம் கழித்து, இயற்கையாகவே அரசு இதற்கான முயற்சிகளை எடுத்துவிடும். எனவே, அமைப்பு ரீதியற்ற தொழிலாளர் வர்க்கத்திற்கு சட்டப் பாதுகாப்பையும், சட்டப் பலனையும் தேடித்தந்த முதலமைச்சர் அவர்களைத் தொழிலாளர் வர்க்கம் என்றும் நினைவுகூறும்; நன்றிக் கடன் ஆற்றும் என்பதை இங்கே மகிழ்ச்சியோடு நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

இங்கே பேசியவர்களெல்லாம் மூடிக்கிடக்கும் தொழிற்சாலைகளைப் பற்றிப் பேசினார்கள். திரு. சுப்பராயன் அவர்களுக்கு, நாங்கள் சொல்கின்ற கருத்துக்களில் உடன்பாடு இல்லாமல் இருக்க முடியாது. முதலாளிகள் தந்திரம் செய்கிறார்கள் என்பது வேறு விவகாரம். நான் கேட்க விரும்புவதெல்லாம், தமிழ்நாட்டில் ஏறத்தாழ 44 மில்கள் மூடிக் கிடக்கின்றன. ஆனால், வெளியிலே சில பேர் ஏதோ திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலேதான், கலைஞர் அவர்கள் முதலமைச்சராக ஆனதற்குப் பிறகுதான் இந்த மில்கள் மூடப்பட்டதைப்போல போராட்டம் என்று தெருவீதிகளிலே பொய்யான அறிக்கைகளை விட்டுக்கொண்டு, தமிழ்நாட்டு அரசியலிலே புழுதியைக் கிளப்பிக் கொண்டிருக்கிறார்கள். இவை, கழக ஆட்சி ஏற்பட்டதற்குப் பிறகு மூடப்பட்டவை அல்ல. அன்றைக்கு இருந்த ஜெயலலிதா ஆட்சியிலேயே இந்த மில்கள் மூடப்பட்டிருக்கின்றன. இன்னும் சொல்லப்போனால், நான் பெருமையோடு இந்தச் சபையிலே அறிவிக்கிறேன்; தொழில் தகராறு காரணமாக ஒரு மில்கூட, ஒரு தொழிற்சாலைகூட, திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலே மூடப்படவில்லை என்பதை நான் இங்கே தெரிவிக்க விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) அந்த அளவிற்கு தலைவர் கலைஞர் அவர்கள் நேரடியாக ஈடுபட்டு எங்களுக்கு அறிவுரை வழங்கி, துறையின் சார்பாக இன்றைக்கு நாங்கள் எங்களால் இயன்ற அளவிற்கு பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு உரிய முயற்சிகளை எடுத்து வருகிறோம்.

நான் உதாரணத்திற்குச் சொல்கிறேன்: இன்றைக்கு நிதி நெருக்கடியால், பல மில்கள் மூடப்பட்டிருக்கின்றன. கோவையிலே இராதாகிருஷ்ணா மில் இன்றைக்கு நிதி நெருக்கடியின் காரணமாக மூடப்பட்டிருக்கின்றது. இப்படி ஒவ்வொன்றாகச் சொல்லிக் கொண்டே போகலாம். விற்பனைச் சந்தையில் இடர்பாடுகள், நிர்வாகத் தகராறு, சொத்துக்களை ஏலம் விடும் நிலைமை, நீதிமன்ற வழக்குகள், பங்குதாரர்களுக்குள் கருத்து வேறுபாடு, தொழில் மற்றும் சீரமைப்பு வாரியத்தின் முன்னாள்



1998 ஏப்ரல் 24] [திரு. அ. இரகுமான்கான்]

வழக்குகள் - பி.ஐ.எஃப்.ஆர்., ஏ.ஏ.ஐ.எஃப்.ஆர்., அதைப்போலவே நீதிமன்றங்களிலே லிக்விடேஷன், கலைத்த ஸ்டாண்டர்டு மோட்டார்ஸ் போன்ற வழக்குகள், இந்தக் காரணங்களுக்காகத்தான் இவையெல்லாம் மூடப்பட்டுக் கிடக்கின்றன. அதற்கான பட்டியல்கள் இருக்கின்றன. நேரம் அதிகம் இல்லாத காரணத்தினால், அதை நான் அப்படியே விட்டுவிடுகிறேன். ஆனால், இப்படி மூடப்பட்டுள்ள நிறுவனங்களைத் திறக்க இன்றைக்குள்ள சாத்தியக்கூறுகளை ஆராய தமிழகத்திலே சில மண்டலங்கள் இருக்கின்றன. கோவை மண்டலம், மதுரை மண்டலம், அதைப்போலவே திருநெல்வேலி மண்டலம். இந்த மூன்று மண்டலங்களிலும் இந்த மூடிய மில்களைத் திறப்பதற்கு என்ன வழி என்பதை அறிய, துறையின் சார்பாக பலமுறை கூட்டங்களைக் கூட்டியிருக்கிறோம். இந்தத் துறையின் அமைச்சர் என்ற முறையில் எல்லாக் கூட்டங்களிலும் நான் கலந்து கொண்டிருக்கிறேன். நிர்வாகம், யூனியன் மற்றும் பிரதிநிதிகளுடைய ஆலோசனைகளையெல்லாம் நாங்கள் கேட்டிருக்கிறோம். அதைப்போல, மில்களைத் திறப்பதற்காக இந்த அரசு மின்சாரக் கட்டணச் சலுகை வழங்குகிறது. கன்சஷன் கொடுக்கிறது. அதுமட்டுமல்லாமல் விற்பனை வரியிலே சலுகை கொடுக்கிறது. இதேபோன்று, லேபர் அட்வைசரி கமிட்டியினுடைய கூட்டத்தினை திருச்சியிலே நாங்கள் நடத்தினோம். அதிலே ஒரு முடிவே எடுக்கப்பட்டது ; என்ன தீர்மானம் என்று கேட்டால், மீண்டும் திறக்க வாய்ப்பு இல்லாத நிறுவனங்கள் குறித்து பேச்சுவார்த்தை நடத்தி தொழிலாளர்களுக்கு இழப்பீட்டுத் தொகை பெற்றுக் கொடுப்பது.

பிற்பகல் 1-45

உதாரணமாக, மகாலட்சுமி மில் இருக்கிறது. அந்த மகாலட்சுமி மில்லிலே, கலீல் என்பவருக்கும், சோமசுந்தரம் செட்டியாருக்கும், யார் எம்.டி. என்பதிலே ஒரு தகராறு. சென்னை உயர்நீதிமன்றத்திலே வழக்கு இருக்கிறது. இந்தச் சூழ்நிலையிலே, அந்த மில்லைத் திறப்பதற்கான சாத்தியக்கூறுகள் பற்றி நாங்கள் பலமுறை பேசினோம். ஆனால், என்ன நிலைமை என்று கேட்டால், [illegible] கொடுக்கவில்லை; சம்பளம் கொடுக்கவில்லை; போனஸ் கொடுக்கவில்லை, இவற்றைப் பெறமுடியாமல், தொழிலாளர்கள் அவதியுறுகிறார்கள். மதுரையில். பலமுறை முறையிட்டார்கள். பேச்சுவார்த்தைகள் நடத்தினோம். 'ஃபெயில்யூர் ரிப்போர்ட்' கொடுக்க

வேண்டிய நிலைமை ஏற்பட்டுவிட்டது. சோமசுந்தரம் செட்டியார் என்னால் நடத்த முடியாது என்கிறார். வேறு புரமோட்டரும் இல்லை. அந்தத் தொழிலாளர்கள் நிலைமை என்ன? ஆகவே, அவற்றைப் பெற்றுத் தருவதற்காக துறை உரிய நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று அறிவுறுத்தப்பட்டிருக்கிறது. ஆகவேதான் இந்தத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டிருக்கிறது, இழப்புத் தொகையைத் தொழிலாளர்களுக்குப் பெற்று அளிக்கலாம் என்று.

அதைப்போலவே, இன்னொன்றையும் சொல்ல விரும்புகிறேன். புரமோட்டர்ஸ் வந்தால், நாங்கள் நடத்துவதற்குத் தயாராக இருக்கிறோம் என்று நம்முடைய முதலமைச்சர் அவர்கள் சட்டசபையில் குறிப்பிட்டிருக்கிறார்கள். அதுமட்டுமல்ல; முதலமைச்சர் நிவாரண நிதியிலிருந்து — உங்களுக்கு எல்லாம் தெரியும்; தீபாவளிக்குத்தான் எல்லோரும் கொடுப்பார்கள்; ஆனால் பொங்கலுக்கும் அள்ளிக் கொடுத்தார் நம்முடைய முதலமைச்சர் அவர்கள். தலா 400 ரூபாய் என்ற வீதத்திலே, 16,919 தொழிலாளர்களுக்கு ரூ. 67,67,600 என்று பொங்கலுக்கும் இந்தத் தொகை; தீபாவளிக்கும் இந்தத் தொகை கொடுக்கப்பட்டிருக்கிறது. இதுபோன்று பல காரியங்கள் நடத்தப்பட்டிருக்கின்றன.

நம்முடைய ரங்கநாதன் அவர்கள், பி அண்டு சி மில் விவகாரம் குறித்துச் சொன்னார்கள். பி அண்டு சி மில்லை மீண்டும் திறப்பதற்கு முயற்சி எடுத்துக்கொண்ட, நம்முடைய தலைவர் முதலமைச்சர் கலைஞர் அவர்களுக்குத் தலைவணங்கி, இந்தச் சபையில் நன்றி தெரிவிக்க நான் கடமைப்பட்டிருக்கிறேன். எட்டு முறை தன்னுடைய பொன்னான நேரத்தை ஒதுக்கி, பல்வேறு அலுவல்களுக்கு மத்தியிலேயும் எங்கள் எல்லோரையும் அழைத்து, அவர்கள் பேச்சுவார்த்தைகள் நடத்தினார்கள். இதுவரைக்கும் தமிழ்நாட்டினுடைய வரலாற்றில், எந்த முதலமைச்சரும் ஒரு தொழிற்சங்கத் தலைவராக மாறி, தொழிலாளர் பிரச்சினையை பல மணி நேரம், பல நாட்கள் பேசியதாக வரலாறு இல்லை. (மேசையைத் தட்டும் ஒலி) அதற்கு என்ன காரணம் என்று கேட்டால், தொழிலாளர்கள் நலத்திலே உண்மையான அக்கறை; அந்த ஆலை உண்மையிலேயே திறக்கப்பட வேண்டும் என்ற நோக்கம்தான். அந்தப் பேச்சுவார்த்தைகளிலே, நம்முடைய மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் ஆற்காட்டார் அவர்களும் கலந்து கொண்டார்கள். அவர்களுக்கும் என்னுடைய நன்றியை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.



அதைப்போலவே இன்னொன்றையும் நான் இங்கே சொல்ல விரும்புகிறேன். இங்கே நான் பழைய வரலாற்றுக்கெல்லாம் போக விரும்பவில்லை. காலம் ஆகிக் கொண்டிருக்கிறது. எல்லோருக்கும் தெரியும்; இந்த அவையிலேயும் விவாதித்திருக்கிறோம். விதி 110-இன்கீழ் இந்த அவையிலே, நாங்கள் போட்ட ஒப்பந்தத்தை எடுத்துச் சொல்லியிருக்கிறோம். திரு. ரங்கநாதன் அவர்கள், ஒப்பந்தம் மீறப்பட்டது என்று சொன்ன நேரத்திலே, நான் அவருக்குச் சொன்னேன். இரண்டு இன்ஸ்டால்மென்டாக, மே 27-இல் இன்னொரு தேதியில் தர வேண்டியிருக்கிறது; அடுத்து அவர்கள் அரை மாதச் சம்பளம் கொடுத்து விட்டார்கள்; வி.ஆர்.எஸ். நோட்டீஸ் போட வேண்டும் என்று. நேற்றுகூட நான் பேசும்போது, 'நாங்கள் பேசிக் கொண்டிருக்கிறோம்; 27ஆம் தேதிக்குள் போட்டு விடுகிறோம்' என்று சொன்னார்கள். ஆக, முதலமைச்சர் அவர்களின் தலையீட்டின் பேரில், அவர்கள் முன்னிலையில் 28-3-1998 அன்று உருவாக்கப்பட்ட அந்த ஒப்பந்தம் நிச்சயமாக நிறைவேறும் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன். இதையெல்லாம் வரவேற்கிறார்கள்; பாராட்டுகிறார்கள். ஆனால், வெளியிலே ஜெயலலிதா போன்றவர்கள், இந்த ஒப்பந்தத்திலே, 3 ஆயிரம் தொழிலாளர்கள் வேலையிழப்பார்கள் என்று சொல்கிறார்கள். அந்த ஷெட்யூலிலே, அதுபோன்ற வாசகம் எதுவும் இல்லை. ஆகையினால், எந்தத் தொழிலாளியும் நிச்சயமாக பாதிக்கப்பட மாட்டார் என்பதை இந்த நேரத்திலே நான் எடுத்துச் சொல்ல விரும்புகிறேன். நேரம் அதிகமாகிவிட்டது. ஆகையினால், கடைசியாக 'டன்லப்'-குறித்து மட்டும் எடுத்துச் சொல்லி என்னுடைய பேச்சை முடிக்கலாம் என்று நினைக்கிறேன். (குறுக்கீடு) நம்முடைய முதலமைச்சர் அவர்கள் மாதவரம் பிரச்சினையைப் பற்றிப் பேசச் சொல்கிறார்கள். எனவே, அதைப் பற்றிப் பேசி என்னுடைய உரையை நிறைவு செய்யலாம் என்று நினைக்கிறேன்.

மாதவரம் பிரச்சினையைப் பற்றிச் சொல்லும்போது, 'வாடிய பயிரைக் கண்டபோதெல்லாம் வாடினேன்' என்று வள்ளலார் சொன்னது நினைவிற்கு வருகிறது. நான் எதற்கு இதைக் குறிப்பிடுகிறேன் என்று சொன்னால், நீங்கள் கோரிக்கை வைத்தபோதெல்லாம், திரு. சுப்பராயன் அவர்கள் கோரிக்கை வைத்தபோதெல்லாம், தலைவர் அவர்கள் மனம் உருகி, அந்தத் தொழிலாளர்களுக்கு, 9 ஆண்டுகளுக்குப் பிறகு — 1980 ஆம் ஆண்டிலே ஸ்டிரைக்; 9 ஆண்டுகளுக்குப் பிறகு — அவர்களுக்கு

[திரு. அ. இரகுமான்கான்] [1998 ஏப்ரல் 24

வேலை கொடுத்தார். மொத்தம் 686 பேருக்கு. இடையிலே ஆட்சியைக் கலைத்தார்கள். சட்டசபைத் தேர்தலின்போது, கலைஞர் சொன்னார்; நான் ஆட்சிக்கு வந்தால், விட்டுப்போன தொழிலாளர்களுக்கு வேலை கொடுப்பேன் என்று சொன்னார். வந்தார்; செய்தார். இன்றைக்கு 686 தொழிலாளர்களுக்கும் வேலை கொடுக்கப்பட்டிருக்கிறது. 18(1) ஒப்பந்தம், அதன்படி வேலை கிடைத்தால் போதும்; நாங்கள் எதுவும் கேட்க மாட்டோம் என்று ஒப்பந்தம் போட்டார்கள். அந்த ஒப்பந்தத்தைக் காட்டினாலே போதும்; டிரிப்யூனலிலே எவ்வளவு பெரிய தீர்ப்பாக இருந்தாலும் சரி, அதைக் கட்டுப்படுத்தாது. 18(1) ஒப்பந்தம்தான் இறுதியானது. எந்தத் தீர்ப்பும் கட்டுப்படுத்தாது. ஆனாலும், இந்தச் சபையிலே நம்முடைய முதலமைச்சர் அவர்கள் பேசினார்கள். தொழிலாளர்களுக்கு விரோதமாக நீதிமன்றத்திற்குச் செல்கிற ஈனத்தனமான தலைவர் நான் அல்ல என்று பேசினார். (மேசையைத் தட்டும் ஒலி).

பிற்பகல் 1-50

அது மட்டுமல்லாமல் திரு. சுப்பராயன் அவர்கள் கிராஜுவட்டிக்காக கோரிக்கை வைத்த நேரத்திலே எல்லாம் அதற்காக continuous service தருகிறேன் என்று முதல்வர் அவர்கள் ஒப்புக் கொண்டார்கள். அதுபோல இப்போது அவர்களுக்கு வேலைவாய்ப்பும் கொடுத்தார்கள். நீங்கள் பலமுறை கோரிக்கை வைத்தீர்கள். ஒரு கோரிக்கையை, நீங்கள் சொன்ன கோரிக்கையை நான் வலியுறுத்தச் சொல்லி நீங்கள் இங்கே பேசவில்லை. நீங்களாகவே இந்தமுறை பேசினீர்கள்; எடுத்துச் சொன்னீர்கள். கலைஞர் அவர்கள் ஒரு அறிவிப்பு செய்யும்படி சொல்லியிருக்கிறார்கள், மாதவரம் சம்பந்தமாக. அதை முதலிலே சொல்லி, அடுத்து சில அறிவிப்புகளைச் சொல்லி, அதோடு விடைபெறலாம் என்று கருதுகிறேன்.

டன்லப் பற்றி மட்டும் சொல்லியாக வேண்டும். அது ஒரு முக்கியமான பிரச்சினையாக இருக்கின்ற காரணத்தினாலே 5 நிமிடத்திலே சொல்லி நான் முடித்துக் கொள்கிறேன். இந்த அம்பத்தூர் டன்லப் தொழிற்சாலை மிக முக்கியமான தொழிற்சாலை. 2,184 தொழிலாளர்கள் அதில் வேலை பார்க்கிறார்கள். சாப்ரியா என்ற ஒரு வடநாட்டுக்காரர் அதனுடைய உரிமையாளர். வங்கிகளுக்கும் அவருக்கும் ஏற்பட்ட பிரச்சினையாலே நிதிநெருக்கடி ஏற்பட்டு அவர் 'பிளாக் லிஸ்ட்டிலே' இருக்கிறார். அதனால் பணம் தர மறுக்கிறார் என்று கேள்வி. ஆக, நிதிநெருக்கடி ஏற்பட்டுவிட்டது. அதிலே நடைமுறை



1998 ஏப்ரல் 24] [திரு. அ. இரகுமான்கான்]

மூலதனம்- capital - வழங்கமுடியாத சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. உற்பத்தி குறைந்திருக்கிறது. 5-1-1998 இல் முழுமையாக உற்பத்தியை நிறுத்திவிட்டார்கள். 9-2-1998-இல் உற்பத்தி முழுவதுமாக முடக்கமாகிவிட்டது. இடையிலே நவம்பர் 1997-லிருந்து கொடுக்கப்பட வேண்டிய சம்பளம் பாக்கி இருக்கிறது. 1997-98 ஆம் ஆண்டிற்கு போனஸ் இன்னும் கொடுக்கப்படவில்லை. 90 இலட்சம் ரூபாயைத் தொழிலாளர்கள் சம்பளத்திலிருந்து பிடித்தம் செய்து கூட்டுறவு மற்றும் சிக்கனச் சங்கத்திற்கு அவர்கள் செலுத்தாமல் அவர்களே வைத்துக் கொண்டார்கள். இப்படியெல்லாம் நிலைமை இருக்கிறது.

இதற்கிடையிலே நம்முடைய முதலமைச்சர் அவர்கள் எனக்கு அறிவுரை கூறிய காரணத்தினால் கல்கத்தாவில் இருக்கக்கூடிய அந்தத் தொழிற்சாலையைச் சேர்ந்த நிருவாகத்தினரையும், அதுபோல தொழிற்சங்கத் தோழர்களையும் அழைத்து நாங்கள் இதுகுறித்து விவாதித்தோம். பலமுறை பேசினோம். இதிலே அவர்கள் தெளிவாகச் சொல்கிறார்கள். எங்களிடத்திலே இப்போது பணமில்லை. சொத்து இருக்கிறது. அந்தச் சொத்தை விற்றுத்தான் நாங்கள் ஏதாவது செய்யமுடியும். Financial resources இல்லாமல் எங்களால் எதுவும் செய்யமுடியாது என்று சொல்லி ஒரு revival plan-ஐ எங்களிடத்திலே கொடுத்தார்கள். மேற்கு வங்கத்திலே திரு. ஜோதிபாசு அவர்களிடத்திலேயும் அதைத்தான் செய்திருக்கிறார்கள். Consortium of Banks - அங்கேயும் அதைத்தான் அவர்கள் கொடுத்திருக்கிறார்கள். இதற்கிடையிலே அவர்களிடமிருந்து ஒரு கடிதம் வந்திருக்கிறது. B.I.F.R.-லே Rehabilitation Scheme என்றிருக்கிறது. அந்தப் புனரமைப்பு திட்டத்தோடு அவர்கள் அங்கே போயிருக்கிறார்கள். உடனே அந்த B.I.F.R. எந்த அளவுக்கு அது Sick Mill என்பதைக் கண்டறிவதற்காக I.D.B.I.-ஐ Operating Agent-ஆகப் போட்டிருக்கிறது. இந்த I.D.B.I. தான் எந்த அளவிற்கு அது நலிந்து போயிருக்கிறது. அதனுடைய பொருளாதார நிலைமை என்ன? மீண்டும் அதை நடத்த முடியுமா என்ற விவரங்களைச் சொல்ல வேண்டும். ஒரு மாதத்திற்குள் ரிப்போர்ட் கொடுத்துவிட வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். விரைவிலே அந்த ரிப்போர்ட் வரவிருக்கிறது. அதற்குப் பின்னாலேதான் அதுபற்றிய நிலைமைகளை நாம் புரிந்துகொள்ள முடியும். இதற்கு இடையிலே பத்திரிகையிலே ஒரு செய்தி வந்திருக்கிறது. மேற்கு வங்கத்திலே சகானி என்ற இடத்திலே உள்ள டன்லப் தொழிற்சாலையை மேற்கு வங்க அரசு தற்காலிகமாக Promoter-ஆக எடுத்து நடத்த உத்தேசித்திருப்பதாகப் பத்திரிகையிலே

செய்தி வந்திருக்கிறது. அதிகாரபூர்வமாக அதுபற்றி எனக்கு ஒன்றும் தெரியாது. எனக்கு எந்தச் செய்தியும் வரவில்லை.

ஒரு தகவலை நான் இங்கே சொல்ல விரும்புகிறேன். மாநில அரசு நேரடியாக எந்த நிர்வாகத்தையும் எடுத்து நடத்தமுடியாது. இன்னும் சொல்லப்போனால் Industrial Development and Regulation Act பல்வேறு சட்டங்கள், பல்வேறு பிரிவுகள் பல கருத்துகளைச் சொல்கின்றன. ஒரு Factory சட்டத்திற்கு புறம்பாக நடந்தால் மத்திய அரசு அதில் தலையிட்டு விசாரிக்கலாம். இன்னும் சொல்லப்போனால் அவர்களே எடுத்து நடத்தி பிறகு நிர்வாகத்திடம் கொடுக்கலாம் என்று சட்டத்தினுடைய பிரிவு 8 (ஏ) (ஏ) சொல்கிறது. ஆனாலும் அந்த ரிப்போர்ட் வரவேண்டும். மத்திய அரசு இது குறித்து என்ன கருதுகிறது என்று தெரியவில்லை. ரிப்போர்ட்டிலே என்ன இருக்கிறது என்று தெரியவில்லை. இருந்தாலும் இன்றைக்கு அந்தத் தொழிலாளர்கள் ஒரு மனுக் கொடுத்திருக்கிறார்கள். எங்களுக்குச் சேர வேண்டிய தொகையை இந்தத் துறை மூலமாகப் பெற்றுக் கொடுங்கள் என்று. சட்டத்திலே ஒரு வழி இருக்கிறது. மாவட்ட ஆட்சித் தலைவர் வரி பாக்கிக்காக எப்படி 'Revenue recovery' பண்ணுகிறார்களோ அதுபோல நாங்களும் அதை வசூல் செய்து கொடுக்கமுடியும், அந்த கலெக்டர் நடவடிக்கையின் மூலமாக, land recovery-யின் மூலமாக. அதற்கு அதிகாரிகள் விசாரித்து ஒரு நடவடிக்கை எடுப்பார்கள் என்று சொல்லி, இங்கே சில அறிவிப்புகளைச் சொல்ல விரும்புகிறேன்.

பிற்பகல் 1-55

(1) கட்டுமானத் தொழிலில் ஈடுபட்டிருக்கும், வாரியத்தில் பதிவு பெற்ற பெண் கட்டுமானத் தொழிலாளர்களின் பிரசவ காலத்தில் அவர்களுக்கு ஏற்படும் மருத்துவ மற்றும் இதர செலவுகளை ஓரளவாவது சரிக்கட்டும் விதத்தில் முதல் பேறு காலத்திற்கு ரூபாய் 1,000 பேறு கால உதவித் தொகையாகத் தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர் நல வாரியத்தால் வழங்கப்படும். இரண்டாவது குழந்தைப் பேறுக்கும் இவ்வாறு ரூ. 1,000 வழங்கப்படும்.

(2) கட்டுமானத் தொழிலாளியின் குடும்பத்தின் வாழ்க்கைத்தரம் உயர வேண்டும் என்பதில் இந்த அரசு மிகவும் ஆர்வம் காட்டி வருகிறது. வாழ்க்கைத்தரம் உயர்வதற்கு கல்வி மிகவும் அவசியம்.



கட்டுமானத் தொழிலாளர்கள் அவர்களின் பிள்ளைகளை பள்ளிக்கு அனுப்புவதை ஊக்குவிக்கும் வகையில், அவர்களின் முதல் இரண்டு பிள்ளைகளுக்கு 10 ஆம் வகுப்பில் தேர்ச்சி பெற்றால் ஊக்கத் தொகையாக ரூ. 750-ம், 12 ஆம் வகுப்பில் தேர்ச்சி பெற்றால் ஊக்கத் தொகையாக ரூ. 1,000-மும் தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர் நல வாரியத்தின் சார்பில் அளிக்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

(3) தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர் நல வாரியத்தில் பதிவு செய்து கொண்ட தொழிலாளர்களின் மகன் அல்லது மகள் திருமணத்தின்போது ரூ. 1,000 திருமண உதவித் தொகையாக வாரியத்தால் வழங்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். இந்த உதவி இரு பிள்ளைகளுக்கு வழங்கப்படும்.

(4) தொழிலாளர் நலனில் தீவிர அக்கறை காட்டிவரும் இந்த அரசு, வாரியத்தில் பதிவு செய்துகொண்ட கட்டுமானத் தொழிலாளர் விபத்தில் இறந்தால், அளிக்கப்படக்கூடிய காப்பீட்டுத் தொகையை ரூ. 50,000-த்திலிருந்து உயர்த்தி ரூ. 1,00,000-ஆக அளிக்க முடிவு செய்திருக்கின்றது என்பதையும் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

(5) குறைந்தபட்ச ஊதியச் சட்ட அட்டவணையில் மேலும் ஒரு தொழில் இனத்தினைச் சேர்த்தல். நான் ஏற்கெனவே குறிப்பிட்டதுபோல தமிழ்நாட்டில் 74 தொழில்களைக் குறைந்தபட்ச ஊதியச் சட்ட அட்டவணையிலே சேர்த்து இருக்கிற ஒரே அரசு நம்முடைய தலைவர் கலைஞர் அவர்களது தலைமையில் இருக்கிற தி.மு.க. அரசுதான் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன். இப்போது மேலும் ஒரு புதிய தொழில் இனத்தை அதில் சேர்த்திருக்கிறோம். தமிழகத்தில் பல்வேறு பகுதிகளில் உள்ள கிரானைட் தொழிலில் ஆயிரத்திற்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் பணியில் ஈடுபட்டு வருவதால், அந்தத் தொழிலாளர்களுக்கு குறைந்தபட்ச ஊதியம் வழங்கப்பட வேண்டும் என்ற உயரிய நோக்கத்துடன் இந்த அரசு கிரானைட் தொழிலினை குறைந்தபட்ச ஊதியச் சட்ட அட்டவணை பகுதி 1-இல் சேர்க்க முடிவு செய்துள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(6) தமிழக அரசின் சீரிய முயற்சியினாலும், தொழில் வளர்ச்சி நலனில் உள்ள ஈடுபாட்டினாலும் பல புதிய தொழிற்சாலைகள் உருவாகும் சூழ்நிலை தமிழகத்தில் உள்ளது. பெரிய தொழிற்சாலைகள்,

இரசாயனத் தொழிற்சாலைகள் போன்ற பல புதிய தொழிற்சாலைகள் வருங்காலத்தில் நிறுவப்படக்கூடிய வாய்ப்பு உள்ளது.

இதுபோன்ற தொழிற்சாலைகள் பாதுகாப்பாகச் செயல்பட வேண்டும் என்ற விழிப்புணர்வு மக்களிடையே உள்ளது. எனவே, இதுபோன்ற தொழில் பாதுகாப்பை உறுதிப்படுத்துவது அரசின் கடமையாகிறது. தமிழக அரசின் தொழிற்சாலைகள் ஆய்வகத் துறை இப்பணியில் ஈடுபட்டுள்ளது. அவர்கள் இப்பணியினை மேம்படுத்தவும், அவர்கள் நவீன தொழில் நுட்பத்துடனும் செயல்பட்டு தொழிற்சாலைகளில் பாதுகாப்பு ஏற்பாட்டினை ஊக்குவிக்க, பாதுகாப்பு பற்றிய புதிய விஞ்ஞானத் தொழில் நுட்பங்களை அறிந்துகொள்ள வேண்டிய கட்டாயம் ஏற்பட்டுள்ளது. இதற்கு செயல் வடிவம் கொடுக்க ஒரு தொழில் நுட்பப் பாதுகாப்பு மற்றும் ஆராய்ச்சி நிலையம் நிறுவப்பட இந்த நடப்பாண்டில் ஏற்பாடு செய்யப்படும்.

இத்தகைய செயல்பாட்டுத் திட்டங்களை ஆய்வு செய்து ஒரு திட்ட அறிக்கை - **Project Report** தயார் செய்யும் பொறுப்பினை இப்பணியில் திறமை பெற்ற ஒரு வல்லுநரிடம் ஒப்படைக்கவும் திட்டமிடப்பட்டுள்ளது.

(7) கடந்த ஆண்டு தொழிலாளர் துறை மானியக் கோரிக்கையின் போது மாண்புமிகு உறுப்பினர் திரு. சுப்பராயன் அவர்கள், மாதவரம் பால் பண்ணை தொழிலாளர் பிரச்சினையை மாண்புமிகு முதல்வர் தாயுள்ளத்தோடு பரிசீலிக்க வேண்டும் எனக் கூறினார்கள். மாண்புமிகு முதல்வர் அவர்கள், மேற்படி தொழிலாளர்களுக்கு வேலை அளிக்கப்படும் என அறிவித்ததோடு மட்டுமின்றி வேலை இல்லாத காலத்தை பணிக்கொடை வழங்கும் பொருட்டு தொடர் பணியாகக் கருதப்படும் எனவும் அறிவித்துள்ளார்கள்.

தற்போது இத் தொழிலாளர்களின் வேலை இல்லாத காலத்தையும் வேலையில் இருந்ததாகக் கருதி சம்பளத்தை உரிய முறையில் மறு நிர்ணயம் செய்ய வேண்டும் என்றும். உரிய பதவி உயர்வு தரவேண்டும் என்றும் கோரிக்கை விடுக்கப்பட்டு உள்ளது. தொழிலாளர்கள் தாமாகவே முன்வந்து புதிய தொழிலாளியாக ஏற்றுக்கொண்டு தொழிற்தகராறு சட்டப் பிரிவு 18(1)-ன்கீழ் ஒப்பந்தம் ஏற்படுத்திக் கொண்டிருந்தாலும், கருணை உள்ளம் கொண்ட இவ்வரசு இத்தொழிலாளர்களுக்கு வேலையில்லாத காலத்தையும் கணக்கில் கொண்டு சம்பளத்தை மறு



நிர்ணயம் செய்ய ஆவன செய்யும் என மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).அதோடு கடைசியாக ஒன்று.

பிற்பகல் 2-00

(8) வேலூர் மாவட்டம், அரக்கோணத்தில் உள்ள தமிழ்நாடு அரசுக்குச் சொந்தமான தமிழ்நாடு எஃகு நிறுவனத்தில்—இங்கு அரக்கோணம் பற்றி பேசினார்கள். பேச்சுவார்த்தை நடத்திக்கொண்டிருக்கிறோம்—நிதிநிலை காரணமாக உற்பத்தி நிறுத்தம் செய்யப்பட்டு தொழிலாளர்களுக்குக் கடந்த ஒரு சில மாதங்களாக சம்பளம் வழங்க இயலாத நிலை ஏற்பட்டுள்ளது. இங்கு பணிபுரியும் தொழிலாளர்களின் துயர் துடைக்க, அந்தத் தொழிலாளர்களுக்கு இரண்டு மாத ஊதியத்தை வழங்கிட மாண்புமிகு முதல்வர் அவர்கள் பரிந்துரை செய்துள்ளார்கள் என்பதை மிகுந்த மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர்கள் வெட்டுத் தீர்மானங்களைக் கொடுத்திருக்கிறீர்கள். உங்களுடைய கருத்துக்களை அதிலே வெளிப்படுத்தியிருக்கிறீர்கள். இந்த அரசு அவற்றை ஏற்று செயல்படும் என்று உறுதியளிக்கிறேன். எனவே, மாண்புமிகு உறுப்பினர்கள் கொடுத்த வெட்டுத் தீர்மானங்களைத் திரும்பப்பெற வேண்டுமென்று கேட்டு இந்த மானியக் கோரிக்கையினை நிறைவேற்றித் தரும்படி அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** விவாதம் முடிவுற்றது. இப்போது வாக்கெடுப்பு.

**மானியக் கோரிக்கை எண் 28- தொழிலாளர் நலனும் தொழிற்சாலைகளும், வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என அறிய விரும்புகிறேன். திரு. சி. ஞானசேகரன்.**

**திரு. சி. ஞானசேகரன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. ஞானசேகரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. கே. சுப்பராயன்.

**திரு. கே. சுப்பராயன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே. சுப்பராயன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி.கே. மணி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்.

**திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஐ. கணேசன்.

**திரு. ஐ. கணேசன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஐ. கணேசன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன், இருக்கையில் இல்லை. திரு எஸ். என். பாலசுப்பிரமணியன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பட்டதாகக் கருதப்படுகிறது. திரு. டி. மணி.

**திரு. டி. மணி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. டி. மணி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. பி.ஆர். சுந்தரம்.

**திரு. பி.ஆர் சுந்தரம்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பி.ஆர். சுந்தரம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஜி. நிஜாமுதீன்.

**திரு. ஜி. நிஜாமுதீன்:** இல்லை.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி. நிஜாமுதீன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

திரு. அ.வ. அப்துல் நாசர், இருக்கையில் இல்லை. திரு. அ.வ. அப்துல் நாசர் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பட்டதாகக் கருதப்படுகிறது. திரு. வை. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வை. சிவபுண்ணியம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. வி. கே. லட்சுமணன்.

**திரு. வி.கே. லட்சுமணன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வி.கே. லட்சுமணன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

"தொழிலாளர் நலனும் தொழிற்சாலைகளும் பற்றிய 28 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ரூ. 99,13,59,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" என்னும் மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)
மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)
ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.
ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.
அரசுக்குக் கோரிய தொகை வழங்கப்பெறுகிறது.

## 6. அரசினர் தீர்மானம்

### விதி 32 ஐத் தளர்த்தல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்து, வருகின்ற திங்கட்கிழமை 27-4-1998 அன்று ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை மானியக் கோரிக்கையிலே ஏராளமான உறுப்பினர்கள் பேச விருப்பத்தைத் தெரிவித்திருப்பதால், அன்று வினாக்கள்—விடைகள்

நேரத்தை ஒத்திவைக்கலாம் என்ற தீர்மானத்தை மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் பேரவை முன்னவர் சார்பிலே முன்மொழிவார்கள்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"சட்டப்பேரவையில் முதல் ஒரு மணி நேரம் வினாக்கள்-விடைகள் என்றுள்ள சட்டப் பேரவை விதி 32-ஐ 27-4-1998 திங்கட்கிழமை அன்று தளர்த்தி, அந்த நேரத்தை அரசினர் அலுவல்களுக்கு எடுத்துக்கொள்ள வேண்டும்." என்னும் தீர்மானத்தை மொழிகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க.

மறுப்போரே இல்லை என்று கருதுகிறேன்.

மறுப்போரே இல்லை, தீர்மானம் ஒருமனதாக நிறைவேறியது.

## 7. அரசினர் சட்டமுன்வடிவுகள் (ஆய்வு செய்தல்)

### (அ) தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் (திருத்தச்) சட்டமுன்வடிவு, 1998

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்து, அரசினர் சட்டமுன்வடிவுகள், (ஆய்வு செய்தல்). 1998 ஆம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 8/1998), மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"1998 ஆம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 8/1998) @ ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பெற வேண்டும்" எனக் கோருகிறேன்".

@ 2-4-1998 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப் பெற்றுள்ளது.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படுகிறது.

பிரிவுகள் 2 மற்றும் 3, திருத்தங்கள் இல்லை.

பிரிவுகள் 2 மற்றும் 3, சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க.(இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

[திரு. கோ.சி. மணி] [1998 ஏப்ரல் 24

"1998 ஆம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 8/1998) நிறைவேற்றப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

**(ஆ) தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் (இரண்டாம் திருத்த) சட்டமுன்வடிவு, 1998**

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்து, 1998 ஆம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் (இரண்டாம் திருத்த) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 10/1998), மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"1998 ஆம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் (இரண்டாம் திருத்த) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 10/1998)@ ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

@ 15-4-1998 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பெற்றுள்ளது.



1998 ஏப்ரல் 24] [பேரவைத் தலைவர்]

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

பிற்பகல் 2-05

சட்டமுன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படுகிறது.

**பிரிவுகள் 2 முதல் 9 முடிய திருத்தங்கள் இல்லை.**

பிரிவுகள் 2 முதல் 9 முடிய சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"1998-ஆம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் (இரண்டாம் திருத்த) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 10/1998) நிறைவேற்றப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

[1998 ஏப்ரல் 24

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

**(இ) தமிழ்நாடு வேளாண் விளைபொருள் வாணிக (முறைப்படுத்துதல்) திருத்தச் சட்டமுன்வடிவு, 1998**

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 1998 ஆம் ஆண்டு தமிழ்நாடு வேளாண் விளைபொருள் வாணிக (முறைப்படுத்துதல்) திருத்தச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 11/1998), மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர்.

***மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"1998 ஆம் ஆண்டு தமிழ்நாடு வேளாண் விளைபொருள் வாணிக (முறைப்படுத்துதல்) திருத்தச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 11/1998) @ ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

@ 22-4-1998 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப் பெற்றுள்ளது.



1998 ஏப்ரல் 24] [பேரவைத் தலைவர்]

சட்டமுன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படுகிறது.

பிரிவுகள் 2 மற்றும் 3, திருத்தங்கள் இல்லை.

பிரிவுகள் 2 மற்றும் 3, சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"1998 ஆம் ஆண்டு தமிழ்நாடு வேளாண் விளைபொருள் வாணிக (முறைப்படுத்துதல்) திருத்தச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 11/1998) நிறை வேற்றப் பெறவேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

[பேரவைத் தலைவர்] [1998 ஏப்ரல் 24

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் (27-4-1998) திங்கட்கிழமை காலை 9-30 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 2-07 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

## 8. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

### (அ) சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

138. 1996-97 ஆம் ஆண்டு தமிழ்நாடு தொழிலாளர் நல வாரியத்தின் செயல்முறை குறித்த ஆண்டறிக்கை. [1972ஆம் ஆண்டு தமிழ்நாடு தொழிலாளர் நல நிதிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 36/1972) 35 ஆம் பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது] (தமிழ், ஆங்கிலம்).

### (ஆ) அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

121. மானியக் கோரிக்கை எண் 28-தொழிலாளர், தொழிற்சாலை, வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சி பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 1998-99. (தமிழ், ஆங்கிலம்).

122. தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை பற்றிய வரவு-செலவுத் திட்டச் செயலாக்கம், 1998-99. (தமிழ், ஆங்கிலம்).



## இணைப்பு

(321 ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க)

### கோரிக்கை எண் 28

### தொழிலாளர், தொழிற்சாலை, வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சி பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 1998-99

நம் நாட்டில் வளர்ந்து வரும் பொருளாதாரத்தில் தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்புத் துறையின் செயல்பாடு மிகவும் இன்றியமையாததாகும். தீவிரமான தொழில் வளர்ச்சிக்கு நீடித்த தொழில் அமைதியும், தொழில் நல்லுறவும் உகந்த பின்னணியாக அமையும். பரந்து விரிந்த தொழில் நல்லுறவில் இலட்சக்கணக்கான அமைப்பு ரீதியற்ற தொழிலாளர் நலக் கொள்கைகளை பேணிக்காக்கும் வகையில் தொழிலுறவானது அமைய வேண்டுமென்பதே அரசின் தலையாய கொள்கையாகும். அதே போன்று, தொடர்ச்சியான விரைந்த தொழில் வளர்ச்சிக்குப் பொருத்தமான, நுட்பமான வேலைத்திறனை ஏற்படுத்துவதுடன் தேவையான வேலை வாய்ப்பினை உருவாக்குவது முக்கியமானதாகும். முற்போக்கான மாநிலமான தமிழ்நாடு அரசின் பல்வேறு நடவடிக்கைகளில் தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறையின் பங்கின் முக்கியத்துவத்தை அரசு நன்கு உணர்ந்துள்ளது. இத்துறை, தேவையான பல்வேறு தொழிலாளர் நலத் திட்டங்களை மேற்கொள்வதுடன் பல்வேறு சட்டங்களையும் அமல்படுத்துகிறது.

### அத்தியாயம் 1

### தொழில் உறவுகள்

தொழிலமைதி, தொழில் வளர்ச்சியைப் பேணிக்காத்து தொழில் மையத்திற்கும், தொழில் வளர்ச்சிக்கும் வழிகோலுவதுடன் தொழிலாளர் நலனை மேம்படுத்தும். (1) வருமுன் காத்தல் மற்றும் (2) தீர்வு காணுதல் ஆகிய இருவகையான அணுகுமுறைகள் மூலம் தொழிலமைதி காக்கப்படுகிறது. தொழில் நல்லுறவு தமிழ்நாட்டில் உறுதியாக நிலைநாட்டப்பட்டுள்ளது. பல பன்னாட்டு நிறுவனங்கள் தமிழ்நாட்டில் தொழில் தொடங்க ஆரம்பித்ததிலிருந்து இம்மாநிலத்தில் ஒப்புவமையற்ற தொழில் நல்லுறவு நிலவி வருவதை மெய்ப்பிப்பதாக உள்ளது.

[1998 ஏப்ரல் 24

இவ்வரசு தொழில் பூசல்களுக்கான காரணங்களைக் கண்டறிந்து அவற்றைக் களைவதோடு, அத்தகு பிரச்சினைகளை ஆரம்ப நிலையிலேயே இனங்கண்டு அவற்றைத் தீர்வு செய்வதற்கான நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. தொழிலாளர் சம்பந்தப்பட்ட பிரச்சினைகளில் தொழிலாளர்களும், நிர்வாகத்தினரும் நேரிடையாகக் கலந்துரையாடி இரு தரப்பிற்கும் நன்மை பயக்கும் நல்லதொரு முடிவெடுக்கும் கூட்டு முயற்சியையே இவ்வரசு ஊக்குவிக்கிறது. தொழிலாளர் துறை உதவி கோரி நாடி வருவோருக்கு இத்துறையின் சிறப்பறிவுத் திறம் கிடைக்கிறது.

உற்பத்தித் திறனைப் பெருக்க வேண்டும் என்பதில், இருவேறு கருத்துக்கள் இருக்க முடியாது. உற்பத்தியைப் பெருக்குவதில், தொழிலாளர்களின் பங்கு, தலைமைச் சான்றதாகவும் இன்றியமையாத கூறாகவும் அமைந்துள்ளது. உற்பத்தித் திறனுக்கு முக்கியத்துவம் கொடுக்கின்ற அதே நேரத்தில் உற்பத்தித் திறனின் பலன்களைத் தொழிலாளர்களுக்கும், நிர்வாகத்தினருக்கும் உரிய முறையில் பகிர்ந்தளிக்க வேண்டுமென்றும் உற்பத்தி திறன் நிர்ணயிக்கப்படுகையில் தொழிலாளர்களின் முழு ஈடுபாடு இருக்க வேண்டும் என்பதில் இந்த அரசு மிகவும் ஆர்வம் கொண்டுள்ளது. சட்ட அமலாக்கத்தைப் பொறுத்தவரை, சட்ட அமலாக்கம் பலனளிக்கும் வகையிலும், செயலுரமிக்க வகையிலும் இருக்கும் வண்ணம் தொழிலாளர் துறையின் அமலாக்க அமைப்பு செயல்நோக்கமளிக்கப்பட்டுள்ளது. நுகர்வோர் நலம் காக்கும் எடையளவுச் சட்டம் மற்றும் பொட்டலப் பொருள்கள் விதிகள் உட்பட, தொழிலாளர் சட்டங்கள் சரியான முறையில் அமலாவதை உத்திரவாதம் செய்ய சிறப்பு மற்றும் திடீர் ஆய்வுகள் மேற்கொள்ளப்படுகிறது.

1997 ஆம் ஆண்டில் பல்வேறு தொழிற்சாலைகளில் பல்வேறு கோரிக்கைகள் மற்றும் நிர்வாகக் காரணங்களால் ஏற்பட்ட வேலைநிறுத்தம் மற்றும் கதவடைப்பின் காரணமாக 20.97 இலட்சம் வேலை நாட்கள் இழப்பு ஏற்பட்டது. தொழிலாளர் அலுவலர்கள் வேலைநிறுத்தம் மற்றும் கதவடைப்பு போன்ற கடுமையான பிரச்சினைகளைக் கையாண்டதோடு தொழிற்தாவாக்கள் மற்றும் புகார்களைத் தீர்ப்பதிலும் ஈடுபட்டனர். இவைகளின் புள்ளி விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன:—



1998 ஏப்ரல் 24]

| வரிசை எண் | விவரம் | 1-1-1997 இல் நிலுவையில் இருந்தவை | 1987 இல் பெறப் பட்டவை | மொத்தம் | 1997 இல் தீர்வு காணப் பட்டவை | 31-12-97 நிலுவையில் இருந்தவை |
|---|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) |
| 1. | தொழிற்தகராறு சட்டத்தின் கீழ் அடங்கும் தொழில் தகராறுகள் | 2048 | 10914 | 12962 | 10104 | 2858 |
| 2. | ஏனைய தொழிலாளர் சட்டங்களின் கீழ் பெறப்பட்ட புகார்கள் | 1360 | 4689 | 6049 | 4125 | 1924 |
| | மொத்தம் | **3408** | **15603** | **19011** | **14229** | **4782** |

## தொழிற்தகராறுகளில் ஏற்படுத்தப்பட்ட முக்கிய ஒப்பந்தங்கள்

1997 ஆம் ஆண்டில் மொத்தமிருந்த 12,962 தொழிற் தகராறுகளில் 10,104 அரசு அலுவலர்களின் சமரசத்தால் தீர்வு காணப்பட்டது. தொழிலாளர் ஆணையர் மற்றும் தொழிலாளர் துறை மூத்த அதிகாரிகளின் மூலம் செய்யப்பட்ட முக்கிய ஒப்பந்தங்கள் இதில் அடங்கும். அவைகளில் ஊதிய உயர்வு, படிகள், ஊதிய ஏற்றமுறை மற்றும் பணிநிலை குறித்து ஒப்பந்தங்கள் ஏற்படுத்தப்பட்டன. சிலவற்றில் வேலைநிறுத்தம் திரும்பப் பெறப்பட்டன. சமரசத் தீர்வு ஏற்படுத்தப் பட்டவைகளில் முக்கியமானவை பின்வருமாறு:—

| வரிசை எண் (1) | தொழிற்சாலை/நிறுவனத்தின் பெயர் (2) | சமரச ஒப்பந்தம் ஏற்பட்ட தேதி (3) |
|---|---|---|
| 1. | அட்கோ (இந்தியா) லிமிடெட், மணப்பாக்கம், சென்னை. | 12-2-97 |
| 2. | தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம், சென்னை. | 30-1-97 |
| 3. | அட்கோ இந்தியா தொழிலாளர்களின் கூட்டுறவு உணவகம், சென்னை. | 16-4-97 |
| 4. | தூத்துக்குடி நூற்பாலை, தூத்துக்குடி. | 11-5-97 (வேலை நிறுத்தம் திரும்பப் பெறப்பட்டது) |

[1998 ஏப்ரல் 24

| (1) | (2) | (3) |
|---|---|---|
| 5. | அண்ணாமலையார் மில்ஸ் லிமிடெட், திண்டுக்கல். | 12-5-97 |
| 6. | ஃபால் இண்டஸ்ட்ரீஸ் லிமிடெட், சென்னை-96. | 16-5-97 |
| 7. | எஸ் அண்டு எஸ் சுவிட்ச்கியர் லிமிடெட், போரூர், சென்னை. | 25-7-97 |
| 8. | எல்.கே.பி. ஸ்பின்னிங், வேடசந்தூர் | 3-8-97 |
| 9. | மீனாட்சி மில்ஸ் லிமிடெட், மதுரை | 8-4-97 |
| 10. | மார்ஷல் சன்ஸ் அன் கோ (உற்பத்தி) லிமிடெட், சென்னை. | 17-10-97 |
| 11. | இந்துஸ்தான் பவர்ப்ளஸ் லிமிடெட், ஓசூர். | 14-10-97 |
| 12. | இந்தியன் ஆர்கானிக் கெமிக்கல்ஸ் லிமிடெட், (ஃபூச்சரா சிந்தடிக் பிரிவு), சென்னை. | 10-4-97 |
| 13. | ஆரோபுட், அரோவில்லா, விழுப்புரம் | 23-7-97 (வேலை நிறுத்தம் விலக்கிக் கொள்ளப்பட்டது) |
| 14. | மோகன் ப்ருவரிஸ் அண்ட் டிஸ்டிலரிஸ் லிமிடெட், செங்கல்பட்டு. | 22-5-97 |
| 15. | தமிழ்நாடு அல்கலிஸ் பேட்டரிஸ் லிமிடெட், சென்னை. | 8-1-97 |
| 16. | தமிழ்நாட்டிலுள்ள தோல் பதப்படுத்தும் தொழிற்சாலைகள் | 16-9-97 (வேலை நிறுத்தம் ஏற்படாமல் பார்த்துக்கொள்ளப்பட்டது. கூலி உயர்வால் 75,000 தொழிலாளர்கள் பயன் அடைந்தனர்.) |
| 17. | வி.ஆர். டபிள்யூ ரெப்ரேக்டரீஸ், விருகம்பாக்கம். | 1-10-97 |
| 18. | வி.ஆர். டபிள்யு. ரெப்ரோக்டரீஸ், வானகரம் | 12-9-97 |
| 19. | நைசர் இந்தியா லிமிடெட், வாலூர் | 14-12-97 |
| 20. | டி.டி.கே.எல்.ஐ.சி. லிமிடெட், யூனிட்-1, விருதுநகர். | 20-2-97 |
| 21. | ஸ்பிக் பார்மாசூடிகல்ஸ் பிரிவு, சென்னை. | 22-2-97 |
| 22. | சிவானந்தா ஸ்டீல்ஸ் லிமிடெட், அம்பத்தூர், சென்னை. | 21-2-97 |



1998 ஏப்ரல் 24]

| (1) | (2) | (3) |
|---|---|---|
| 23. | தமிழ்நாடு வெடிபொருள் தொழிற்சாலை, வேலூர். | 12-2-97 |
| 24. | டுராண்டல் ஃபுட்ஸ் (பி) லிமிடெட், செட்டிபாளையம். | 13-6-97 |
| 25. | பி.எஸ். எலக்ட்ரிகல்ஸ் (பி) லிமிடெட், சென்னை. | 29-7-97 |
| 26. | ஏ-பாண்ட் ஸ்ரானுஸ் (பி) லிமிடெட், பெருங்குடி, சென்னை. | 26-4-97 |
| 27. | ஸ்டோன்வேர் பைப்ஸ் (எம்) லிமிடெட், திருவள்ளூர். | 30-7-97 |
| 28. | ஆந்திர மகிளா சபா (எலும்பு பிரிவு), சென்னை. | 5-9-97 |

**மூடப்பட்ட நிறுவனங்கள் திறத்தல் தொடர்பாக எடுக்கப்பட்ட நடவடிக்கை**

தமிழ்நாட்டில் தற்போது 44 நிறுவனங்கள் மூடப்பட்டு உள்ளன. அவற்றில் தொழிலாளர் பிரச்சினை காரணமாக எந்த நிறுவனமும் மூடப்படவில்லை. பெரும்பான்மையான நிறுவனங்கள் நிதி நிலைமை மோசமடைந்ததாலும் அல்லது நிதியின்மை காரணமாகவும், சிலவற்றில் பங்குதாரர்களுக்கிடையே ஏற்பட்ட மனவேறுபாடு காரணமாகவும் மூடப்பட்டுள்ளன.

மூடப்பட்ட நிறுவனங்களைத் திறக்க உள்ள சாத்தியக்கூறுகளை ஆராய்ந்து அவற்றை மீண்டும் திறந்து நடத்திட இந்த அரசு பலவகைகளில் முயற்சிகள் எடுத்து வருகிறது.

மூடப்பட்ட நிறுவனங்களைத் திறந்து நடத்த உள்ள சாத்தியக்கூறுகளை ஆராய (என்னுடைய) தலைமையில் மண்டல வாரியாகக் கூட்டங்கள் நடத்தப்பட்டு அதில் சம்பந்தப்பட்ட நிறுவனங்களின் நிர்வாகத் தரப்பினரையும், தொழிற்சங்கத்தினரையும் அழைத்து, கலந்தாலோசித்து உரிய மேல் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. தமிழ்நாட்டில் மூடப்பட்டுள்ள தொழிற்சாலைகளைத் திறப்பதற்கான சாத்தியக்கூறுகளைக் கண்டறியும் நோக்கத்துடன் சென்னை மண்டலத்தில் 14-11-96 அன்றும், கோவை மண்டலத்தில் 27-11-96 மற்றும் 6-8-97 தேதிகளிலும், மதுரை மண்டலத்தில் 3-12-96 அன்று மதுரையிலும், 25-9-97 அன்று திருச்சியிலும் கூட்டங்கள் நடத்தப்பட்டு தொடர் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

இதுமட்டுமின்றி நிதி நிலைமை சரியின்றி மூடப்பட்ட ஆலைகளைத் திறந்து நடத்த அந்த ஆலைகளுக்கு அரசு மின்சாரக் கட்டணம் செலுத்தச் சலுகை, விற்பனை வரி செலுத்தச் சலுகை போன்ற பல சலுகைகள் அளித்து உதவி வருகிறது.

[1998 ஏப்ரல் 24

1990க்குப் பிறகு மூடப்பட்ட நிறுவனங்களில் பாதிக்கப்பட்ட தொழிலாளர்களுக்கு ஒவ்வொரு வருடமும் அரசு தலா ரூ. 400 வீதம் முதலமைச்சர் நிவாரண நிதியிலிருந்து உதவி வழங்கி வருகிறது.

**முதலமைச்சரின் பொது நிவாரண நிதி:**

தொழிலாளர் பிரச்சினைகளின் காரணமாகவோ அல்லது நிர்வாக நெருக்கடி காரணமாகவோ மூடப்பட்ட அல்லது கதவடைப்பு செய்ததால் பாதிக்கப்பட்ட தொழிலாளர்களுக்கு நிதி உதவி வழங்குவது தான் இத்திட்டத்தின் முக்கிய நோக்கமாகும். 1996 ஆம் ஆண்டு வரை, தீபாவளிப் பண்டிகைக்கு மட்டுமே இந்த நிதியிலிருந்து தொழிலாளர்களுக்கு நிதி உதவி வழங்கப்பட்டு வந்தது. 1997 ஆம் ஆண்டில் தீபாவளி மற்றும் பொங்கல் ஆகிய பண்டிகைகளுக்கும் பாதிக்கப்பட்ட தொழிலாளர்களுக்கு, தலா ரூ. 400 வீதம் நிதியுதவி அளிக்கப்பட்டது. 1997 ஆம் ஆண்டில் பொங்கல் பண்டிகையை முன்னிட்டு, 26 தொழில் நிறுவனங்களைச் சார்ந்த 16,919 தொழிலாளர்களுக்கு மொத்தம் ரூ. 67,67,600-ம், தீபாவளிப் பண்டிகையை முன்னிட்டு 36 தொழில் நிறுவனங்களைச் சார்ந்த 19,574 தொழிலாளர்களுக்கு மொத்தம் ரூ. 78,29,600-ம் இந்நிவாரண நிதியிலிருந்து நிதி உதவி அளிக்கப்பட்டது.

**தொழில் நல்லுறவுப் பரிசுத் திட்டம்:**

நலமார்ந்த தொழில் உறவை மேம்படுத்தும் முகத்தான், தொழில் நல்லுறவைப் பேணிப் பாதுகாக்கும் பணியில் சிறந்து விளங்கும் நிர்வாகத்தினர் மற்றும் தொழிற்சங்கங்களுக்குப் பரிசுகள் வழங்கும் வகையில் தொழில் நல்லுறவுப் பரிசு வழங்கும் திட்டத்தை அரசு உருவாக்கியது. பரிசுக்குரியவர்களைத் தேர்ந்தெடுக்க, ஓய்வு பெற்ற உயர்நீதிமன்ற நீதிபதி தலைமையில், நிர்வாகத்தினர் மற்றும் தொழில் சங்கப் பிரதிநிதிகள் முறையே நான்கு பேர் கொண்ட ஒரு முத்தரப்பு உயர்மட்டக் குழுவை அரசு அமைத்துள்ளது. இத்திட்டம் 1978ஆம் ஆண்டு முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

1988ஆம் ஆண்டு வரை இத்திட்டத்தின் கீழ் பரிசு பெற்றவர்களுக்குச் சுழல் கேடயமும், சான்றிதழும் வழங்கப்பட்டு வந்தன. 1989ஆம் ஆண்டு முதல் நிரந்தரக் கேடயம் மற்றும் சான்றிதழுடன் ரொக்கப் பரிசுத் தொகையாக முதல் பரிசு பெற்றவர்களுக்கு ரூ. 2,000-மும் இரண்டாம் பரிசு பெற்றவர்களுக்கு ரூ. 1,000-மும் வழங்கப்பட்டு வருகிறது.

மேற்படி தொழில் நல்லுறவு பரிசுக்குழு 1993 மற்றும் 1994ஆம் ஆண்டுகளுக்கான பரிசுக்குரியவர்களைத் தேர்வு செய்துள்ளது. ஒரு விழா ஏற்பாடு செய்யப்பட்டு பரிசுகள் வழங்கப்படும்.



1998 ஏப்ரல் 24]

**தொழிலாளர் நீதிமன்றங்கள் :**

இம் மாநிலத்தில் 10 தொழிலாளர் நீதிமன்றங்களும் ஒரு தொழில் தீர்ப்பாயமும் இயங்கி வருகின்றன. தொழிலாளர்கள், சட்டரீதியான பலனை விரைந்து பெற இவைகள் உதவுகின்றன. இவற்றின் ஆட்சி எல்லை கீழ்க்கண்டவாறு உள்ளது. (அரசாணை எண்.4, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை, நாள் 6.1.98)

| தொழில் நீதிமன்றங்கள் (1) | ஆட்சி எல்லை (2) |
|---|---|
| 1. முதன்மை தொழிலாளர் நீதிமன்றம், சென்னை | |
| 2. முதல் கூடுதல் தொழிலாளர் நீதிமன்றம், சென்னை | சென்னை, காஞ்சிபுரம் மற்றும் திருவள்ளூர் மாவட்டங்கள். |
| 3. இரண்டாம் கூடுதல் தொழிலாளர் நீதிமன்றம், சென்னை | |
| 4. தொழிலாளர் நீதிமன்றங்கள் வேலூர் | வேலூர் மற்றும் திருவண்ணாமலை மாவட்டங்கள் |
| 5. தொழிலாளர் நீதிமன்றம், சேலம் | சேலம், ஈரோடு, தர்மபுரி மற்றும் நாமக்கல் மாவட்டங்கள். |
| 6. தொழிலாளர் நீதிமன்றம் கோயம்புத்தூர் | கோயம்புத்தூர் மற்றும் நீலகிரி மாவட்டங்கள். |
| 7. தொழிலாளர் நீதிமன்றம், கடலூர் | கடலூர், விழுப்புரம், நாகப்பட்டினம், தஞ்சாவூர் மற்றும் திருவாரூர் மாவட்டங்கள் |
| 8. தொழிலாளர் நீதிமன்றம், திருச்சிராப்பள்ளி | திருச்சிராப்பள்ளி, கரூர், பெரம்பலூர், திண்டுக்கல், மற்றும் புதுக்கோட்டை மாவட்டங்கள். |
| 9. தொழிலாளர் நீதிமன்றம், மதுரை | மதுரை, விருதுநகர், சிவகங்கை, இராமநாதபுரம், மற்றும் தேனி மாவட்டங்கள். |
| 10. தொழிலாளர் நீதிமன்றம், திருநெல்வேலி | திருநெல்வேலி, தூத்துக்குடி மற்றும் கன்னியாகுமரி மாவட்டங்கள். |

நீதிமன்றத் தீர்ப்பிற்கு விடப்பட்ட தொழிற்தகராறுகள் பற்றிய விவரங்கள் செயலாக்க பட்ஜெட்டில் (Performance Budget) கொடுக்கப்பட்டுள்ளன.

**1998-99-ம் ஆண்டுக்கான பகுதி-2 திட்டங்கள்:**

கோயம்புத்தூரிலுள்ள 25 தொழிலாளர் துறை அலுவலகங்கள் மற்றும் ஏழு தொழிற்சாலைகள் ஆய்வகத்துறை அலுவலகங்கள் ஆகியவற்றிற்கு ஒரே கட்டடத்தில் இடமளிக்கும் பொருட்டு மூன்று தளங்கள் கொண்ட ஒரு மையக் கட்டடத்தை, கோயம்புத்தூரில் கட்ட, அரசாணை (2டி) எண் 52, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை, நாள் 10-10-1991-இல் அரசு ஒப்புதல் வழங்கியது. இம்மையக் கட்டடத்தின் முதல் தளம் 1994-ஆம் ஆண்டு கட்டி முடிக்கப்பட்டு, தொழிலாளர் துறையின் ஒன்பது அலுவலகங்கள் இக்கட்டடத்தில் 22-8-1994 முதல் இயங்கி வருகின்றன. மீதமுள்ள 16 தொழிலாளர் துறை அலுவலகங்களுக்கு இக்கட்டடத்தில் இடமளிக்கும் பொருட்டு இரண்டாம் தளம் கட்டுவது அவசியமாகிறது. இதற்கான மொத்தச் செலவு மதிப்பீடு ரூ. 25.00 இலட்சமாகும். 1998-99ஆம் ஆண்டில் இச்செலவினத்திற்கு ரூ. 10.00 இலட்சம் அரசு ஒப்புதல் அளித்துள்ளது.

மேலும் சென்னை, மதுரை, கோயம்புத்தூர் ஆகிய இடங்களிலுள்ள மண்டலத் தொழிலாளர் இணை ஆணையர் அலுவலகங்களில் கணினி அமைக்க 3.00 இலட்சமும், திருவள்ளூர், கரூர், பெரம்பலூர், திருவாரூர் மற்றும் தேனி ஆகிய மாவட்டங்களிலுள்ள தொழிலாளர் • ஆய்வாளர் அலுவலகங்களுக்கு ரூ. 3.05 இலட்சம் செலவில் 5 கிலோ திறனுள்ள 6 மின்னணு எடை இயந்திரங்கள் வாங்கவும், சென்னை, மதுரை மற்றும் கோயம்புத்தூரிலுள்ள மண்டல தொழிலாளர் இணை ஆணையர் அலுவலகங்கள் மற்றும் தலைமை அலுவலகத்திற்கும் ரூ. 4.00 இலட்சம் செலவில் 4 மின்னணு நகலெடுக்கும் சாதனங்கள் வாங்கவும் அரசு ஒப்புதல் அளித்துள்ளது.

## அத்தியாயம்-2

**அமலாக்கம்**

அமலாக்கத்தை நிர்வாகத்தின் ஒரு கருவியாக்கி உறுதிபடுத்திக் கொண்டு வருவதன் மூலம் வேலையளிப்போர் தாங்களாகவே முன்வந்து பல்வேறு தொழிலாளர் சட்டங்கள் மற்றும் விதிகளைப் பின்பற்றுவார்கள் என்று இவ்வரசு நம்புகிறது.தொழிற்சாலை நிர்வாகங்களில் சுய ஒழுங்கு இருக்க வேண்டுமென்பதே அரசின் விருப்பமாகும். ஆயினும், தொழிலாளர் சட்ட மீறல்கள் குறித்து வரும் புகார்கள் மீது உடனடி நடவடிக்கையினை இத்துறை எடுக்கின்றது. அமலாக்கம் திறம்பட இருக்க வேண்டுமென்பதே அரசின் குறிக்கோளாகும்.



**தரப்படுத்தப்பட்ட எடைகள் மற்றும் அளவைகள் (அமலாக்கம்) சட்டம், 1985:**

சென்னையில் உள்ள தொழிலாளர் துணை ஆணையர் (ஆய்வுகள்) மாநிலம் முழுமைக்கும் எடையளவுச் சட்டமுறை கட்டுப்பாடு அலுவலராக அறிவிக்கை செய்யப்பட்டுள்ளார். இவருக்கு உதவியாக துணை எடையளவுச் சட்டமுறைக் கட்டுப்பாடு அலுவலர்-நிர்வாக அலுவலர் (எடைகள் மற்றும் அளவைகள்) மற்றும் உதவி எடையளவுச் சட்டமுறைக் கட்டுப்பாடு அலுவலர்-தொழிலாளர், துணை ஆய்வர் (தலைமையிடம்) ஆகியோர் உள்ளனர். இவர் தொழிலாளர் ஆணையரின் நிர்வாகக் கட்டுப்பாட்டின் கீழ் பணிபுரிந்து வருகிறார். ஏழு வட்டாரத் தொழிலாளர் துணை ஆணையர்கள், கூடுதல் எடையளவுச் •சட்டமுறைக் கட்டுப்பாடு அலுவலர்களாக அறிவிக்கை செய்யப்பட்டுள்ளார்கள். அதேபோல் மாவட்ட அளவில் 29 தொழிலாளர் ஆய்வர்கள் துணை எடையளவுச் சட்டமுறைக் கட்டுப்பாடு அலுவலர்களாகவும், கோட்ட அளவில் பணிபுரியும் 67 தொழிலாளர் துணை ஆய்வர்கள் உதவி எடையளவுச் சட்டமுறைக் கட்டுப்பாடு அலுவலர்களாகவும் வட்ட அளவில் 218 தொழிலாளர் உதவி ஆய்வர்கள் எடையளவுச் சட்டமுறை ஆய்வர்களாகவும் அறிவிக்கை செய்யப்பட்டுள்ளனர்.

எடையளவுச் சட்டமுறைக் கட்டுப்பாடு அலுவலர் மற்றும் அவரது களப்பணியாளர்களுக்கு 1985 ஆம் ஆண்டு தரப்படுத்தப்பட்ட எடைகள் மற்றும் அளவைகள் (அமலாக்கம்) சட்டம் மற்றும் 1977ஆம் ஆண்டு தரப்படுத்தப்பட்ட எடைகள் மற்றும் அளவைகள் (பொட்டலப் பொருட்கள்) விதிகள் ஆகியவற்றை அமல்படுத்தும் பணி ஒப்படைக்கப்பட்டுள்ளது. தரப்படுத்தப்படாத எடைகள் மற்றும் அளவைகளையும் முத்திரையிடப்படாத எடைகள், மற்றும் அளவைகளையும் வியாபாரம் மற்றும் தொழிற்சாலைகளின் உற்பத்திப்பிரிவில் பயன்படுத்துதல் தடைப்படுத்தப்பட்டுள்ளது.

வியாபாரிகள் பயன்படுத்தும் எடைகள் மற்றும் அளவைகளைப் பரிசீலனை செய்து முத்திரையிட மாநிலம் முழுமையிலும் 101 முத்திரை ஆய்வாளர்கள் உள்ளனர்.

நுகர்வோர் நலனை காப்பதை அடிப்படையாகக் கொண்டுள்ள இச்சட்டம் திடீராய்வுகள் மற்றும் காலமுறைப்படி மேற்கொள்ளப்படும் கூட்டாய்வுகள் மூலம் அமல்படுத்தப்படுகிறது. இச்சட்டப் பிரிவுகளுக்கு முரணாகச் செயல்படும் வியாபாரிகள் மீது குற்ற நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. 1985ஆம் ஆண்டைய தரப்படுத்தப்பட்ட எடைகள் மற்றும் அளவைகள் (அமலாக்கம்) சட்டத்துடன் சேர்த்து 1977ஆம் ஆண்டைய தரப்படுத்தப்பட்ட எடைகள்

[1998 ஏப்ரல் 24

மற்றும் அளவைகள் (பொட்டலப் பொருட்கள்) விதிகளும் அமலாக்கப்பட்டு வருகின்றன. பொட்டலப் பொருட்களின் நிகர எடையைப் பொட்டலம் செய்யப்படும் உற்பத்தியாளர்களின் இடங்களில் சோதனை செய்யும் பொருட்டு துறையில் உள்ள மின்னணு எடைக்கருவிகள் போன்றவற்றை ஆய்வாளர்கள் பயன்படுத்தி வருகின்றனர். பல்வேறு வகையான பொருட்கள் விற்பனை செய்யப்படும் இன்றைய வியாபாரச் சந்தையில் பல்வேறு வணிகச் சின்னங்களைக் கொண்ட பொருட்கள் விற்பனைக்கு வரும் நிலையில் நுகர்வோர் நலன் காக்க இந்த எடை மற்றும் அளவைகள் சட்டம் பெரிதும் உதவுகிறது.

1997ஆம் ஆண்டில் பலதரப்பட்ட நிறுவனங்களில் மேற்கொள்ளப்பட்ட திடீராய்வுகள் மற்றும் கண்டுபிடிக்கப்பட்ட முரண்பாடுகளின் விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

| நிறுவனங்களின் பிரிவு (1) | ஆய்வு செய்யப்பட்ட நிறுவனங்களின் எண்ணிக்கை (2) | கண்டுபிடிக்கப் பட்ட முரண் பாடுகள் (3) |
|---|---|---|
| 1. நியாயவிலைக் கடைகள் | 37,338 | 5,942 |
| 2. பள்ளிக்கூட நோட்டுப் புத்தகங்கள் விற்பனை செய்யும் கடைகள் | 953 | 56 |
| 3. பெட்ரோலியப் பொருட்களை விற்பனை செய்யும் பங்க்குகள் | 24,245 | 948 |
| 4. பால் விற்பனை செய்யும் நிறுவனங்கள் | 2,702 | 422 |
| 5. மீன்/இறைச்சிக் கடைகள் | 4,778 | 561 |
| 6. சந்தைகள் | 8,905 | 320 |
| 7. எரிவாயு சிலிண்டர்கள் | 333 | 14 |
| 8. கெரோசின் விற்பனையாளர்கள் மற்றும் மற்றவர்கள் | 3,696 | 602 |
| 9. பொட்டலப் பொருட்கள் விதிகளின் கீழ் ஆய்வுகள் | 1,75,289 | 7,855 |
| 10. சிமெண்ட் | 463 | 6 |



1998 ஏப்ரல் 24]

**தோட்டத் தொழிலாளர்களும் அவர்களின் நலன்களும்:**

தோட்டத் தொழிலாளர்களின் பணி நிலைமை, 1951ஆம் ஆண்டைய தோட்டத் தொழிலாளர் சட்டத்தின்படி முறைப்படுத்தப்பட்டுள்ளது. இது பழமையான சட்டங்களில் ஒன்று. தேயிலை, காபி, ரப்பர் மற்றும் ஏலக்காய் ஆகியவை தமிழ்நாட்டில் அதிகமாகப் பயிரிடப்படும் தோட்டப் பயிர்கள் ஆகும். இவைகளில் தேயிலை அதிகப் பங்கு வகிக்கிறது. அடுத்ததுதான் காபி. தமிழ்நாட்டில் தோட்டப்பயிர்கள் அதிகமாகப் பயிரிடப்படும் பகுதிகள், நீலகிரி, ஆனைமலை (கோயம்புத்தூர்), மதுரை, திருநெல்வேலி, சேர்வராயன் மலைப்பகுதி (சேலம்), கன்னியாகுமரி மற்றும் திண்டுக்கல் மாவட்டங்கள் ஆகும். 1951ஆம் ஆண்டுத் தோட்டத் தொழிலாளர் சட்டத்தினை ஏழு தோட்ட நிறுவன ஆய்வாளர்கள் அமல் செய்து வருகிறார்கள். தோட்டத் தொழிலாளர் சட்டத்தின்படி தொழிலாளர்கட்கு இலவச வீட்டுவசதி, இலவச அடிப்படைக் கல்வி, வல்லுநர் சிகிச்சையுடன் இலவச மருத்துவ வசதி, குழந்தைகள் காப்பக வசதி, குழந்தைகளுக்கு இலவசப் பாலும், உணவும், பணியாளர்களின் இருப்பிடத்திற்குச் சுத்தப்படுத்தப்பட்ட தண்ணீர் வசதி, பலவித பொழுதுபோக்கு வசதிகள் மற்றும் குளிர்காலப் பாதுகாப்பு சாதனங்களாகிய கம்பளி முதலியவை வழங்குதல் ஆகியவைகள் உன்னிப்பாகக் கவனிக்கப்பட்டு வருகிறது. சட்ட அமலாக்கத்தை வலுப்படுத்த இரண்டு உதவி மருத்துவ அலுவலர்கள் (தோட்டத் தொழில்), தோட்டத் தொழிலாளர்களுக்கு உரிய மருத்துவ உதவி கிடைப்பதை உறுதிப்படுத்தும் பொருட்டு பணியாற்றுகின்றனர். தோட்ட நிறுவனங்களில் பணிபுரியும் பெண் தொழிலாளர்களுக்கு மகப்பேறு நலச்சட்டம் 1961, சம ஊதியச் சட்டம் 1976 போன்ற சட்டங்களின் பயன்கள் கிடைக்கின்றனவா என்பதை இரண்டு மகளிர் தொழிலாளர் ஆய்வர்கள் கண்காணித்து வருகின்றனர். தமிழ்நாட்டிலுள்ள தோட்டத் தொழிலில் உள்ள தொழிலாளர்களில் 98 சதவீதப் பணியாளர்களுக்கு வீட்டுவசதி வழங்கப்பட்டுள்ளதன் மூலம் இந்தியாவிலேயே தமிழ்நாடு முதலிடம் வகிக்கின்றது என்பது குறிப்பிடத்தக்கது. தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறையின் செயலாளர் தலைமையில் இயங்கி வரும் நிர்வாகம் மற்றும் தொழிலாளர் தரப்பு உள்ளிட்ட தொழிலாளர் அங்கத்தினர்கள் கொண்ட தோட்டத் தொழிலாளர் வீட்டுவசதி ஆலோசனை வாரியம் தொழிலாளர்களுக்கான வீட்டு வசதி தொடர்பான அனைத்து விஷயங்களிலும் விவாதம் மேற்கொண்டு வருகிறது. தொழிலாளர் ஆணையரைத் தலைவராகக் கொண்டு செயல்படும் தோட்டத் தொழிலாளர் ஆலோசனைக் குழு தொழிலாளர்களின் வீட்டுவசதி தவிர இதர விஷயங்களிலும் முத்தரப்புக்குழு மூலம் விவாதம் மேற்கொண்டு வருகிறது.

53/65—12a

இச்சட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகள் மற்றும் அவை தொடர்பான மேல் நடவடிக்கை விவரங்கள் வரவு செலவுத் திட்டச் செயலாக்கத்தில் கொடுக்கப்பட்டுள்ளன.

## அத்தியாயம்-3

### அமைப்பு ரீதியற்ற தொழிலாளர் பிரிவு :

**1) அமைப்பு ரீதியற்ற தொழிலாளர் பிரிவின் நலத் திட்டங்கள்:**

பொதுவாக, தொழிலாளர்களின் சார்பு நலத்திலும் அவர்தம் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்த வேண்டும் என்பதிலும் குறிப்பாக அமைப்பு ரீதியற்ற தொழிலாளர் சார்பு நலத்திலும், அவர்தம் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்தவும் இவ்வரசு உறுதி கொண்டுள்ளது. மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் சென்ற ஆண்டு நிதிநிலை அறிக்கை குறித்து உரை நிகழ்த்துகையில், விவசாயத் தொழிலாளர்கள் உள்ளிட்ட அமைப்பு ரீதியற்ற தொழிலாளர்களின் பணி நிலைமை மற்றும் வாழ்க்கைத் தரத்தை ஆராய்ந்து அவர்கள் நிலையை மேம்படுத்துவதற்கான வழிமுறைகளைப் பரிந்துரைக்கும் பொருட்டு மூன்று குழுக்களை அமைக்கவிருப்பதாக அறிவித்தார்கள். அவ்வாறே அரசாணை எண் (பல்வகை) 126, தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்புத் துறை, நாள் 27-8-97இல், தொழிலாளர் ஆணையர், நில சீர்திருத்தத் துறை இயக்குநர் மற்றும் தொழிலாளர் இணை ஆணையர் (சமரசம்) ஆகியோர் தலைமையில் மூன்று குழுக்குளை அமைத்து அரசு உத்தரவு பிறப்பித்தது. இம்மூன்று குழுக்களில் தொழிலாளர் ஆணையர் மற்றும் தொழிலாளர் இணை ஆணையர் (சமரசம்) ஆகியோர் தலைமையின் கீழ் அமைக்கப்பட்ட குழுக்கள் முறையே தொழிலாளர் நலச் சட்டங்களுக்குட்பட்ட மற்றும் உட்படாத அமைப்பு ரீதியற்ற தொழிலாளர்களின் பிரச்சினைகளை ஆராய்வதற்காக அமைக்கப்பட்டது. மற்றொரு குழு விவசாயத் தொழிலாளர்களுக்காக மட்டிலும் அமைக்கப்பட்டது.

இவ்விரு குழுக்களும் தமிழ்நாட்டிலுள்ள அனைத்து மாவட்டங்களிலும் சுற்றுப்பயணம் மேற்கொண்டு அமைப்பு ரீதியற்ற தொழில்களில் பணியாற்றும் தொழிலாளர்கள், தொழிற்சங்கங்கள் மற்றும் பொதுமக்கள் ஆகியோரை நேரில் சந்தித்து அவர்களது குறைகளைக் கேட்டறிந்தது. இவ்விரு குழுக்களும், கேரள மாநிலத்தில் அமைப்பு ரீதியற்ற தொழிலாளர்களின் நலன் பேண, அமலாக்கத்தில் உள்ள சமூகப் பாதுகாப்பு மற்றும் சமூக நிதி உதவித் திட்டங்கள் குறித்துக் கூர்ந்தாய்வு செய்வதற்கும், குறிப்பாக அவைகளின் அணுகுமுறை, சட்ட அடிப்படை, நோக்கம், உள்ளடக்கக் கூறு நிர்வாகம், நிதி உதவிக்கான ஆதாரம், பயனடைவோர் எண்ணிக்கை, திட்டங்களுக்கு அளிக்கப்படும் சந்தாத் தொகை கட்டண விவரம், அவைகளின் செயல்பாட்டின் திறம் மற்றும் இத்திட்டங்களின் செயல்பாட்டில் உள்ள இடர்ப்பாடுகள் ஆகியவைகளைக் கூர்ந்தாய்வதற்கும் கேரளா சென்றன. இக்குழுக்கள் தம் பரிந்துரைகளை அரசுக்குச் சமர்ப்பிப்பதற்கு முன்னர் மேற்படி கூர்ந்தாய்வின் விவரங்களைக் கருத்தில் கொள்ள முடிவு எடுக்கப்பட்டது.





அவ்வறிக்கையின் அடிப்படையில் அமைப்பு ரீதியற்ற தொழிலாளர்களுக்குப் பல்வேறு நலத்திட்டங்களை உருவாக்கி அமல்படுத்தும் பொருட்டு வேலையளிப்போர், தொழிலாளர் மற்றும் அரசின் பிரதிநிதிகளைக் கொண்ட மாநில அளவிலான அமைப்பு ரீதியற்ற தொழிலாளர் நல வாரியம் அமைக்கப்படுமென்று அரசு அறிவித்துள்ளது.

### 2. குறைந்தபட்ச ஊதியம் - "ஒரு பாதுகாப்பு வளையம்"

குறைந்தபட்ச ஊதியச் சட்டம் முக்கியமான ஒரு சட்டம் ஆகும். குறைந்தபட்ச ஊதியப் பட்டுவாடாவினை உறுதி செய்து கொள்வது என்பது நல்லதொரு மனித வாழ்க்கைத் தரத்தினை உறுதி செய்து கொள்வது என்பதே ஆகும். குறைந்தபட்ச ஊதியம் என்பது ஒருவர் உயிர் வாழத் தேவையான ஒரு தொகையே என்ற நிலையில் அதனையும் தொழிலாளர்களுக்கு வழங்காதிருப்பது மனித நேயமற்ற செயலாகும் என்று கூறலாம். 1948-ஆம் ஆண்டு குறைந்தபட்ச ஊதியச் சட்ட அட்டவணையில் பெரும்பாலும் அமைப்பு ரீதியற்ற 68 தொழில்கள் சேர்க்கப்பட்டுள்ளன. இத்தொழில்களுக்கு அரசால் ஏற்படுத்தப்பட்ட குழு மூலமோ அல்லது அறிவிக்கை மூலமோ குறைந்தபட்ச ஊதியம் நிர்ணயம் மற்றும் மறுநிர்ணயம் செய்யப்படுகிறது. ஒரு தொழிலுக்கு முதல் முறையாக ஊதியம் நிர்ணயம் செய்யப்படும்பொழுது தொழிலைப் பற்றி ஆழமான நுண்ணாய்வு மேற்கொள்ளப்பட வேண்டும் என்ற நிலையில் குழு முறை, கடைப்பிடிக்கப்படுகிறது. இக்குறிப்பிட்ட தொழிலில் பணிபுரியும் பல்வேறு வகையான தொழிலாளர்களின் பணி நிலைமையினைக் கருத்தில் கொண்டும், தொழிலின் தன்மையைக் கருத்தில் கொண்டும் குழுவின் பரிந்துரையின்படி ஊதியம் நிர்ணயம் செய்யப்படுகிறது. சட்டத்தில் 5 ஆண்டு இடைவெளி இருப்பினும் இது இரண்டு ஆண்டுகளுக்கொருமுறை செய்யப்படுகிறது. தொழிலாளர்களின் வாழ்க்கைச் செலவினத்தைச் சரிக்கட்டும் வகையில் குறைந்தபட்ச

ஊதிய விகிதங்களை நிர்ணயம்/மறு நிர்ணயம் செய்யும் தருணங்களில் அடிப்படை ஊதிய விகிதங்களைத் தவிர நுகர்வோர் விலைக் குறியீட்டு எண் அடிப்படையில் கணக்கிடப்படும் அகவிலைப்படியையும் நிர்ணயம் செய்வதை அரசு கொள்கையாகக் கொண்டுள்ளது.

அரசினால் பல்வேறு தொழில்களுக்குக் குறைந்தபட்ச ஊதியம் அறிவிக்கை செய்யப்படுவதை வேலையளிப்பவர்கள் உயர்நீதிமன்றத்தில் வழக்குகள் தொடர்ந்து தடை உத்தரவு பெற்றுவிடுகிறார்கள். இந்தத் தடையைக் கடக்க நீதிமன்றத் தீர்வினைக் கோரும் உரிமையைக் கோராத வகையில் இந்திய அரசியல் அமைப்பில் 9-ஆவது அட்டவணையில் குறைந்தபட்ச ஊதியச் சட்டத்தைச் சேர்க்கும்படி இந்திய தொழிலாளர் மாநாடு மற்றும் தொழிலாளர் அமைச்சர்கள் மாநாடு போன்ற தேசிய அளவிலான கூட்டங்களில் இவ்வரசு எடுத்துரைத்துள்ளது. இக்குறைந்தபட்ச ஊதியத்தை தொழிலாளர்களுக்கு அளிக்க முடியாத நிறுவனம் இருப்பதற்கே உரிமையில்லையென உச்சநீதிமன்றம் ஒரு வழக்கில் குறிப்பிட்டுள்ளதை இங்கே குறிப்பிடுவது பொருத்தமாகும்.

1996-ஆம் ஆண்டு அக்டோபர் 24 மற்றும் 25-ஆம் தேதிகளில் நடைபெற்ற 33-ஆவது இந்தியத் தொழிலாளர் அமைச்சர்கள் கருத்தரங்கில் எந்தத் தொழிலுக்கும் குறைந்தபட்சப் பிழைப்பூதியம் ரூ.35/-க்குக் குறையாமல் நிர்ணயிக்கப் படவேண்டும் என முடிவெடுக்கப்பட்டது.

கீழே கொடுக்கப்பட்டுள்ள தொழில் வகைகளை 1948-ஆம் ஆண்டைய குறைந்தபட்ச ஊதியச் சட்டத்தின் அட்டவணையில் சேர்க்க முதன்மை அறிவிக்கையை அரசு வெளியிட்டுள்ளது.

**அட்டவணையின் பகுதி-1**

1. இரசாயன உரத் தொழிற்சாலைகளில் வேலை
2. பாதுகாப்பு சம்மந்தப்பட்ட வேலை
3. மருத்துவம் மற்றும் விற்பனைப் பிரதிநிதிகள் வேலை

**அட்டவணையின் பகுதி-2**

4. தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகம் கீழுள்ள கல்லூரிகள் மற்றும் ஆராய்ச்சி நிலையங்கள் மற்றும் வேளாண்மைத் துறை, தோட்டக் கலைத்துறை மற்றும் இதர அரசுத் துறையிலுள்ள வேளாண் பண்ணைகளில் வேலை.

இந்த முதனிலை அறிவிக்கையை உறுதி செய்வதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.



கீழ்க்கண்ட வேலைகளுக்கான குறைந்தபட்சக் கூலியை அரசு **1997-98 ஆம் ஆண்டில் திருத்தியமைத்துள்ளது:-**

1. தச்சு மற்றும் கருமார் தொழில்
2. தீப்பெட்டித் தொழில்
3. வேளாண்மை மற்றும் அதன் துணைத் தொழில்கள்
4. பாலித்தீன், போம் முறைப்படுத்துதல் மற்றும் பிளாஸ்டிக் தயாரித்தல்
5. உணவு பதப்படுத்தும் தொழில்

**1997-98 ஆம் ஆண்டில் கீழ்க்கண்ட வேலைகளுக்கான குறைந்தபட்சக் கூலியைத் திருத்தியமைத்து முதனிலை அறிவிக்கை வெளியிடப்பட்டது:-**

1. மருத்துவமனை மற்றும் நர்சிங் ஹோம்களில் (அரசு மருத்துவமனை மற்றும் இ.எஸ்.ஐ. மருத்துவமனை அல்லாத இதர மருத்துவமனைகள் மற்றும் மருந்தகங்கள்)
2. பொன் மற்றும் வெள்ளியிலான பொருட்கள் தயாரிக்கும் தொழில்
3. மூக்குப்பொடி தயாரிக்கும் தொழில்

கீழ்க்கண்ட வேலைகளுக்கான குறைந்தபட்சக் கூலியைத் திருத்தியமைப்பதற்கான கருத்துரு அரசின் பரிசீலனையில் உள்ளது:-

1. கைத்தறி நெசவுத் தொழில்.
2. கைத்தறி பட்டு நெசவுத் தொழில்
3. காகிதம் மற்றும் இதர வகையறாக்கள்
4. பின்னலாடை தயாரிக்கும் தொழில்
5. தோல் பதனிடுதல் மற்றும் தயாரிக்கும் தொழில்
6. அரிசி மாவு ஆலை மற்றும் பருப்பு ஆலையில் வேலை செய்வோர்
7. துணி தைக்கும் தொழில்
8. கடல் உணவு பதப்படுத்தும் தொழில்
9. செங்கல் மற்றும் ஓடு தயாரிக்கும் தொழில்
10. ஆட்டோ மற்றும் டாக்சி தொழில்
11. கயிறு தயாரிக்கும் தொழில்
12. புகையிலை தயாரிக்கும் (பீடி தயாரிப்பு உட்பட) தொழில்

**(iii) பீடி மற்றும் சுருட்டுத் தொழிலாளர்கள் (வேலை நிலைமைகள்) சட்டம், 1966 மற்றும் அதன் விதிகள், 1968.**

[1998 ஏப்ரல் 24

பீடித் தொழிலாளர்களின் நலனில் அக்கறை கொண்டு, சட்டப்படியான சலுகைகள் அவர்களைச் சென்று அடையவேண்டும் என்ற சீரிய நோக்குடன் பீடி மற்றும் சுருட்டுத் தொழிலாளர்கள் (வேலை நிலைமைகள்) சட்டம், 1966 மற்றும் அதன் விதிகள், 1968 ஆகியவற்றையும் மற்றும் தொடர்புடைய ஏனைய தொழிலாளர் நலச் சட்டங்களையும் தீவிரமாக அமல்படுத்தும்படி இத்துறை அமலாக்க ஆய்வர்களுக்கு அவ்வப்போது அறிவுரைகள் வழங்கப்பட்டு வருகின்றன.

| வரிசை எண் | | புத்தகம் வழங்கப்பட்டது | வழங்கப்பட வேண்டியுள்ளது |
|---|---|---|---|
| 1. | வீட்டுத் தொழிலாளர்களுக்கான லாக் புத்தகம். | 2,06,954 | 6,040 |
| 2. | சர்வீஸ் கார்டுகள் | 2,01,456 | 20,148 |
| 3. | விடுப்புப் புத்தகம் | 1,93,920 | 21,174 |

சர்வீஸ் கார்டைப் பொறுத்தவரையில் வேலூர், திருச்சி மாவட்டங்களில் உள்ள பீடித் தயாரிப்பாளர்கள் சென்னை உயர் நீதிமன்றத்தில் ரிட் மனு தாக்கல் செய்து தடை உத்தரவு பெற்றுள்ளதால், அவ்விடங்களில் சர்வீஸ் புத்தகம் அதிக அளவில் வழங்கப்பட வேண்டியுள்ளது. உயர்நீதிமன்றத்தில் நிலுவையிலுள்ள ரிட் மனுக்களை முடிவிற்குக் கொண்டுவர அரசு வழக்கறிஞரை அணுகி உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

பீடித் தொழிலாளர்களுக்கு அடையாள அட்டை வழங்குதல்.

பீடித் தொழிலாளர்களுக்கு மத்திய அரசால் அமல்படுத்தப்படும், 1978ஆம் வருடத்திய பீடித் தொழிலாளர் நல நிதி விதிகளின்படி போட்டோவுடன் கூடிய அடையாள அட்டை வழங்கப்பட வேண்டும். இந்த அடையாள அட்டை பீடித் தொழிலாளர்கள் மற்றும் அவர்தம் குடும்பத்தினர் மருந்தகங்களில் மருத்துவ வசதி பெற்றுக்கொள்ள பெரிதும் உதவியாக இருக்கிறது. பீடித் தொழிலாளர்களுக்கு அடையாள அட்டை வழங்குவது, மாநில பீடித் தொழிலாளர்களின் விதிகளின்கீழ் வரவில்லை. எனினும், பீடித் தொழிலாளர்களின் நலனில் இந்த அரசு அக்கறை கொண்டு, அவர்களுக்கு அடையாள அட்டைகள் வழங்குவதில் தீவிர கவனம் செலுத்தி தேவையானப் பிரதிகளை மத்திய அரசின் நல அமைப்பு அலுவலகங்களிடமிருந்து பெற்று வழங்கி வருகிறது.

இந்த வகையில் சுமார் 60 ஆயிரம் அடையாள அட்டைகள் இத்துறை மூலம் வழங்கப்பட்டுள்ளன.



1998 ஏப்ரல் 24]

1997ஆம் ஆண்டு பீடித் தொழிலாளர்களுக்காக பல்வேறு சட்டங்களின்கீழ் தாக்கல் செய்யப்பட்ட கேட்பு மனுக்கள் முடிவுற்றவை, பயனடைந்ததொழிலாளர்கள் மற்றும் உத்தரவிடப்பட்ட தொகை பற்றிய விவரங்கள்:

| வ. எண் | சட்டத்தின் பெயர் | 1-11-1997 அன்று நிலுவை | 1997இல் தாக்கல் செய்யப் பட்டவை | மொத்தம் | முடிவு செய்யப் பட்டவை | தள்ளுபடி செய்யப் பட்டவை | உத்தரவு இடப் பட்டவை | பயனுற்ற தொழிலா ளர்களின் எண்ணிக்கை | உத்தரவிடப் பட்டத் தொகை | நிலுவை |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 | 11 |
| 1. | குறைந்தபட்ச ஊதியச் சட்டம் | 11 | 37 | 48 | 37 | 25 | 12 | 37 | 15,15,880.00 | 11 |
| 2. | சம்பளப் பட்டுவாடாச் சட்டம் | 7 | 23 | 30 | 8 | 2 | 6 | 127 | 1,11,925.87 | 22 |
| 3. | மகப்பேறு நலச் சட்டம் | - | 41 | 41 | 28 | 13 | 15 | 28 | 17,233.00 | 13 |
| 4. | பணிக்கொடை பட்டுவாடாச் சட்டம் | 33 | 148 | 181 | 48 | 27 | 21 | 21 | 8,01,264.00 | 133 |

**3. பீடித் தொழிலாளர்களுக்கான வீட்டு வசதித் திட்டம், மற்றும் நலத் திட்டங்கள் :**

மாநிலத்திலுள்ள பீடித் தொழிலாளர்களின் நலனை மேம்படுத்தும் வகையில் சென்ற ஆண்டு அறிவிக்கப்பட்ட கொள்கை அடிப்படையிலேயே இந்த ஆண்டும் அவர்களுக்கான வீடு கட்டும் திட்டம் தொடர்ந்து அமல்படுத்தப்பட்டு வருகிறது. இந்த அடிப்படையில், இந்த அரசு திருநெல்வேலி மாவட்டத்தில் மேலப்பாளையத்தில் 439 வீடுகளும் முக்கூடலில் 533 வீடுகளும் கட்டிக்கொடுக்கத் திட்டமிட்டு, மேலப்பாளையத்தில் கட்டுமானப் பணிகள் திருநெல்வேலி மாவட்ட ஆட்சித் தலைவர் கட்டுப்பாட்டில் இயங்கும் மாவட்ட கட்டட மையம் மூலம் மேற்கொள்ளப்பட்டு கிட்டத்தட்ட 148 வீடுகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன.

முக்கூடலைப் பொறுத்தவரையில் அங்கு வீடுகள் கட்டத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள இடம் களிமண் பகுதியாக இருப்பதால், இதனால் ஏற்படும் கூடுதல் கட்டுமானச் செலவினத்திற்கு, கூடுதல் கடன் தொகையை ஹட்கோ நிறுவனத்திடம் பெற உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. இவ்வீடுகள் வீடு ஒன்றுக்கு ரூ.22,000/- செலவினத்தில் கட்டப்படுகிறது. இதில் மத்திய அரசு மானியத் தொகையாக (அளிக்கும்) வீடு ஒன்றுக்கு ரூ.9,000/- வீதம் போக மீதித் தொகையான ரூ.13,000/- ஹட்கோ நிறுவனத்திடம் கடனாகத் தமிழ்நாடு கூட்டுறவு வீட்டு வசதி இணையம் மூலம் பெற்று வழங்கப்படுகிறது.

மத்திய அரசும் மேற்படி இரண்டு திட்டங்களுக்கும் பொதுவாக 50% மானியத் தொகையாக ரூ.45 இலட்சத்தை அனுமதித்து வழங்கியுள்ளது.

இத்தொகை (சென்னை) தமிழ்நாடு கூட்டுறவு வீட்டு வசதி இணையத்திடம் கட்டுமானப் பணிகளைத் தொடர்ந்து மேற்கொள்வதற்காக ஒப்படைக்கப்பட்டுள்ளது.

வேலூர் மாவட்டத்தில், 588 பீடித் தொழிலாளர்களுக்கு வீடுகள் கட்டிக் கொடுக்கும் திட்டம் பரிசீலனையில் இருந்து வருகிறது.

அதேபோன்று, இத்துறையின் முயற்சியால், ஈரோடு மாவட்டம், அந்தியூர் கிராமம், கரட்டுப்பாளையத்தில் வருவாய்த் துறை மூலம் 100 பீடித் தொழிலாளர்களுக்கு இலவச வீட்டுமனைப்பட்டா வழங்கப்பட்டது.



இவர்களில் 90 பீடித் தொழிலாளர்கள் இத்திட்டத்தின்கீழ் வீடுகள் கட்டிக்கொள்ள முன்வந்துள்ளனர். எனவே, இத்திட்டமும் பரிசீலனையில் இருந்து வருகிறது.

தமிழ்நாட்டில் பீடித் தொழிலில் ஈடுபட்டுள்ள தொழிலாளர்களுக்கு சட்டப்படியான சலுகைகள் அவர்களுக்குச் சென்றடைய வேண்டும் என்ற அரசின் கொள்கையை நடைமுறைப்படுத்தும் நோக்கில் இத்துறை அமலாக்க அலுவலர்கள் சட்ட விதிகளைத் தீவிரமாக அமல்படுத்த உரிய நடவடிக்கை எடுத்து வருகின்றனர்.

**(4) தமிழ்நாடு உடலுழைப்புத் தொழிலாளர் (கட்டுமானத் தொழிலாளர்கள்) நலத் திட்டம் 1994:**

தமிழ்நாட்டில் பணிபுரியும் உடலுழைப்புத் தொழிலாளர்களின் பணி நிபந்தனைகள் குறித்தும் அவர்கள் தொழில் சம்பந்தப்பட்ட வேறு சில விவரங்கள் குறித்தும் முறைப்படுத்தும் வகையில் 1982-ஆம் ஆண்டு தமிழ்நாடு உடலுழைப்புத் தொழிலாளர்கள் (வேலை முறைப்படுத்துதல் மற்றும் பணி நிபந்தனைகள்) சட்டத்தினை அரசு இயற்றியுள்ளது. கட்டுமானப் பணியில் ஈடுபட்டுள்ள தொழிலாளர்களின் நலனுக்காக மேற்படிச் சட்டத்தின் பிரிவு 3ன் படி 1994 ஆம் ஆண்டு தமிழ்நாடு உடல் உழைப்புத் தொழிலாளர்கள் (கட்டுமானத் தொழிலாளர்கள்) நலத் திட்டத்தினை அரசு உருவாக்கியுள்ளது. இத்திட்டம் 1-11-1994 முதல் ஆரம்பிக்கப்பட்டு, சென்னை, மதுரை மற்றும் கோவை மாநகராட்சிகளின் எல்லைகளுக்கு மட்டும் பொருந்துவதாக இருந்தது. இம்மூன்று மாநகராட்சி எல்லைகளுக்குள் பணிபுரியும் கட்டுமானத் தொழிலாளர்கள் இத்திட்டத்தின்கீழ் தங்களைப் பதிவு செய்து கொள்ளலாம். இம்மூன்று மாநகராட்சிகளிடம் கட்டடம் கட்ட அனுமதி கோரும் ஒவ்வொரு நபரும், கட்டடத்தின் மொத்த மதிப்பீட்டில் 0.1%-ஐ இவ்வாரியத்தால் நிர்வகிக்கப்படும் உடலுழைப்புத் தொழிலாளர்கள் பொது நல நிதிக்கு சந்தாவாகச் செலுத்தும் பொருட்டு இம்மாநகராட்சிகளிடம் அளிக்க வேண்டும். அவ்விதம் வசூலிக்கப்பட்ட தொகையைக் குறிப்பிட்ட காலக்கெடுவிற்குள் வாரியத்தில் செலுத்த வேண்டியது மாநகராட்சிகளின் சட்டபூர்வக் கடமையாகும்.

15-6-1997 முதல் அரசு ஆணை எண்.80, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை, நாள் 5-6-1997 மூலம் இத்திட்டம் தமிழ்நாடு

[1998 ஏப்ரல் 24

முழுவதும் அமலாக்கம் செய்யப்பட்டுள்ளது. இதன் விளைவாக 15-6-1997 முதல் தமிழ்நாடு முழுவதும் உள்ள கட்டுமானத் தொழிலாளர்கள் இவ்வாரியத்தில் பதிவு செய்துகொள்ளலாம். அரசாணை எண் 95, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை, நாள்:2-7-1997 மூலம் கட்டடம் அல்லது கட்டுமானப் பணி மேற்கொள்ளும் நபர் இவ்வாரியத்திற்குச் செலுத்த வேண்டிய சந்தா விகிதம் கட்டுமானப் பணியின் மதிப்பீட்டில் 0.1%-லிருந்து 0.3% ஆக நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. கட்டடம் கட்ட அனுமதி கோரும் நபர்களிடம் இந்தச் சந்தாத் தொகையினை வசூல் செய்து இவ்வாரியத்திற்குச் செலுத்தவேண்டியது ஒவ்வொரு உள்ளாட்சி நிறுவனத்தின் முக்கிய பணியாகும். அதன்படி இதுவரை மேற்படி நலத் திட்டத்திற்காக பின்வரும் உள்ளாட்சி அமைப்புகள் மற்றும் அரசுத் துறை/பொது நிறுவனங்களிடமிருந்து சந்தா பெறப்பட்டுள்ளது.

| வ. எண் | உள்ளாட்சி நிறுவனங்களின் விவரம் | 31-12-1996 வரை பெறப்பட்ட சந்தாவிவரம் ரூ. | 1-1-1997 முதல் 31-12-1997 முடிய பெறப்பட்ட சந்தாவிவரம் ரூ. | 31-12-1997முதல் முடிய பெறப்பட்ட மொத்த சந்தாவிவரம் ரூ. |
|---|---|---|---|---|
| 1. | மாநகராட்சிகள்: | | | |
| | அ) சென்னை | 76,99,345 | 40,00,000 | 1,16,99,345 |
| | ஆ) மதுரை | 7,41,352 | 3,50,049 | 10,91,401 |
| | இ) கோயம்புத்தூர் | 55,450 | 2,69,474 | 3,24,924 |
| 2. | நகராட்சிகள் | | | |
| | அ) அம்பத்தூர் | - | 10,39,118 | 10,39,118 |
| | ஆ) ஆலந்தூர் | - | 87,745 | 87,745 |
| | இ) செங்கல்பட்டு | - | 33,339 | 33,339 |
| | ஈ) தாம்பரம் | - | 2,18,880 | 2,18,880 |
| 3. | நகரப் பஞ்சாயத்துகள்: | | | |
| | அ) நாமகிரிப்பேட்டை | - | 805 | 805 |
| | ஆ) மீஞ்சூர் | - | 6,560 | 6,560 |
| 4. | இதர இனங்கள்: | | | |
| | அரசுத் துறைகள் மற்றும் பொது நிறுவனங்கள் | 4,42,379 | 7,06,077 | 11,48,456 |
| | **மொத்தம்** | **89,38,526** | **67,12,047** | **1,56,50,573** |



1998 ஏப்ரல் 24]

குறிப்பு: நகராட்சிகளும் நகரப் பஞ்சாயத்துகளும், 15-6-1997 முதல் சந்தாத் தொகையினை வசூல் செய்வதற்கு அரசாணை எண் 80 (தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை), நாள் 5-6-1997 மூலம் உத்தரவிடப்பட்டது.

31-12-1997 முடிய இவ்வாரியத்தில் கீழ்க்கண்ட எண்ணிக்கையில் கட்டுமானத் தொழிலாளர்கள் பதிவு செய்து கொண்டுள்ளார்கள்:-

| வ.எண் | பதிவு செய்யும் இடம் | 31-12-1996 முடிய பதிவு செய்து கொண்டவர்கள் எண்ணிக்கை | 1-1-1997 முதல் 31-12-1997 முடிய பதிவு செய்து கொண்டவர்கள் எண்ணிக்கை | 31-12-1997 முடிய பதிவு செய்து கொண்டவர்கள் மொத்த எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| 1. | சென்னை | 10,348 | 11,923 | 22,271 |
| 2. | கோவை மண்டலம் | 8,391 | 1,586 | 9,977 |
| 3. | மதுரை மண்டலம் | 6,121 | 1,923 | 8,044 |
| 4. | திருச்சி மண்டலம் | - | 2,989 | 2,989 |
| 5. | சேலம் மண்டலம் | - | 6,766 | 6,766 |
| 6. | திருநெல்வேலி மண்டலம் | - | 7,875 | 7,875 |
| | **மொத்தம்** .. | **24,860** | **33,062** | **57,922** |

*குறிப்பு:* அரசாணை எண்.80, தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்புத் துறை, நாள் 5-6-1997-இன்படி வரிசை எண் (4) முதல் (6) வரையில் உள்ள இடங்களில் தொழிலாளர்கள் பதிவு செய்யப்பட்ட பணி 15-6-1997 முதல் தொடங்கப்பட்டன.

31-12-1997 முடிய இவ்வாரியத்தில பதிவு செய்து கொண்ட 57,922 கட்டுமானத் தொழிலாளர்கள் தலா ரூ.25 வீதம் பதிவுக் கட்டணமாக ரூ.14,48,050-ஐ செலுத்தியுள்ளனர். பதிவுபெற்ற கட்டுமானத் தொழிலாளர்களுக்காக உருவாக்கப்பட்ட தொகுப்பு தனி நபர் விபத்துக் காப்பீடு திட்டத்தின்கீழ் பதிவு பெற்ற அனைத்து கட்டுமானத் தொழிலாளர்களுக்கும் காப்பீடு செய்யப்பட்டுள்ளது.

இத்தொழிலாளர்கள் அனைவரும் தங்கள் பதிவினை 2 வருடங்கள் முடிவதற்கு முன்பு ரூ.10 வீதம் செலுத்தி புதுப்பித்துக்கொள்ள வேண்டும். இவ்வாரியத்தில் பதிவு செய்து கொண்ட அனைத்துக் கட்டுமானத் தொழிலாளர்களுக்கும் அடையாள அட்டைகள் இலவசமாக இவ்வாரியத்தால் வழங்கப்பட்டுள்ளன.

இவ்வாரியத்தில் பதிவு செய்து கொண்ட கட்டுமானத் தொழிலாளர்களுக்கு 1997-ஆம் ஆண்டு ஏற்பட்ட மரண விபத்து/காயவிபத்து காரணமாக இன்சூரன்ஸ் நிறுவனத்திடமிருந்து கீழ்க்கண்டவாறு காப்பீட்டுத் தொகை பெறப்பட்டு வழங்கப்பட்டுள்ளது.

| வ. எண் | கட்டுமானத் தொழிலாளியின் பெயர் | விபத்தின் தன்மை மற்றும் நாள் | வழங்கப்பட்ட காப்பீட்டுத் தொகை ரூ. |
|---|---|---|---|
| 1. | திரு. கே. கண்ணதாசன் | காய விபத்து/7-11-1996 | ரூ. 12,500 |
| 2. | திரு. ரெங்கநாதன் | காய விபத்து/3-7-1996 | ரூ. 11,250 |
| 3. | திரு. ஆ. பூங்காவனம் | மரண விபத்து/2-7-1997 | ரூ. 50,000 |
| 4. | திரு. ஆ. நாகப்பன் | மரண விபத்து/11-8-1997 | ரூ. 50,000 |
| 5. | திரு. கே. அருணாசலம் | காய விபத்து/7-3-1997 | ரூ. 37,500 |
| | மொத்தம் .. | | ரூ. 1,61,250 |



1996-ஆம் ஆண்டினைப் பொறுத்தமட்டில் 4 பதிவு பெற்ற கட்டுமானத் தொழிலாளர்களுக்கு இன்சூரன்ஸ் ரூ.1,07,000 வழங்கப்பட்டது.

இவ்வாரியத்தில் பதிவு செய்து கொண்ட கட்டுமானத் தொழிலாளர்களுக்கு ஏற்பட்ட மரண விபத்து/இயற்கை மரணம் சம்பந்தமாக 1997-ஆம் ஆண்டில் கீழ்க்கண்டவாறு ஈமச்சடங்கு உதவிநிதி வாரியத்தால் வழங்கப்பட்டுள்ளது.

| வ.எண் | மரணம் அடைந்த கட்டுமானத் தொழிலாளியின் பெயர் | மரணம் அடைந்த இடம் & நாள் | நியமனதாரருக்கு வழங்கப்பட்ட ஈமச் சடங்கு தொகை |
|---|---|---|---|
| 1. | திரு. எம். தங்கராசு | தோத்தாக்குடி/16-6-1997 | ரூ. 500.00 |
| 2. | திரு. ஆ. பூங்காவனம் | மதுரை/2-7-1997 | ரூ. 500.00 |
| 3. | திரு. டி. ஜானகிராமன் | விழுப்புரம்/8-8-1997 | ரூ. 500.00 |
| 4. | திரு. வி. வேணுகோபால் | மாமல்லபுரம்/20-8-1997 | ரூ. 500.00 |
| 5. | திரு. அ. நாகப்பன் | சென்னை/11-8-1997 | ரூ. 500.00 |
| 6. | திரு. ஆர். ஆறுமுகம் | ஸ்ரீபெரும்புதூர்/7-8-1997 | ரூ. 500.00 |
| | | மொத்தம் .. | ரூ. 3,000.00 |

பதிவு பெற்ற கட்டுமானத் தொழிலாளர்களின் நலனை முன்னிட்டு அவர்கள் பணிபுரியும்/வசிக்கும் இடங்களில் குழந்தைகள் காப்பகம் அமைப்பது குறித்துப் பரிசிலனை செய்யப்பட்டு வருகிறது.

**(5) தொழிலாளர் துயர்த் துடைப்புநிதி**

தொழிலாளர்கள் பணி நேரத்தில் ஊனமுற்றாலோ அல்லது மரணம் அடைந்தாலோ, வேலையாள் இழப்பீடுச் சட்டத்தின்கீழ் தீர்ப்பளிக்கப்பட்ட நஷ்ட ஈட்டுத் தொகையைத் தொழிலாளர்கள் அல்லது அவரைச் சார்ந்தவர்கள் பெற இயலாத சூழ்நிலையில் பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரணம் வழங்க அரசு இந்த நிதியை ஏற்படுத்தியுள்ளது. 1997-ஆம் ஆண்டில் இந்த நிதியிலிருந்து 2 வழக்குகளில் ரூ.5,000 நிவாரணமாக வழங்கப்பட்டுள்ளது.

### ஒப்பந்தத் தொழிலாளர்கள்

1970-ஆம் ஆண்டு ஒப்பந்தத் தொழிலாளர் (வரன்முறைப்படுத்துதல் மற்றும் நீக்குதல்) சட்டம், சில தொழிலாளர்களின் ஒப்பந்தத் தொழிலாளர் பணியமர்த்தப்படுவதை வரைமுறைப்படுத்துவதற்கும், சில சந்தர்ப்பங்களில் முழுவதும் ஒழிப்பதற்கும் வழிவகை செய்கிறது. ஒரு நிறுவனத்தில் ஒப்பந்த அடிப்படையில் கடந்த 12 மாதங்களில் எந்த ஒரு நாளிலாவது 20 அல்லது அதற்கும் அதிகமான தொழிலாளர்கள் பணியமர்த்தப்பட்டிருந்தாலோ, அந்த நிறுவனத்திற்கு இச்சட்டம் பொருந்தும். மேலும், இதே போல், கடந்த 12 மாதங்களில் எந்த ஒரு நாளிலாவது 20 அல்லது அதற்கு அதிகமான தொழிலாளர்களைப் பணியில் அமர்த்தியிருந்த ஒப்பந்தக்காரர்களுக்கும் இச்சட்டம் பொருந்தும். இவர்கள் இச்சட்டத்தின்கீழ் உரிமம் பெற வேண்டும். தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறையின் செயலாளரைத் தலைவராகக் கொண்டு செயல்படும் மாநில (ஒப்பந்தத் தொழிலாளர்) ஆலோசனைக் குழு, ஆய்வுரைக்கு அனுப்பப்படும் பல்வேறு நிர்வாக மற்றும் இதர பொருள் குறித்து அரசுக்கு ஆலோசனை வழங்குவதோடு, சட்டப்படி வரையறுக்கப்பட்டுள்ள கடமைகளையும் ஆற்றி வருகிறது.

தொழிலாளர் துறை துணை ஆணையர்கள் அலுவலகங்களில் பணியாற்றும் தொழிலாளர் உதவி ஆணையர்கள், தொழிற்சாலைகள் நீங்கலாக இச்சட்டம் பொருந்தும் நிறுவனங்களின் முதன்மை வேலை அளிப்பவர்களைப் பதிவு செய்யும் பதிவுச் சான்று அலுவலர்களாக செயல்படுகிறார்கள். இவ்விதம் முதன்மை வேலையளிப்பவர்கள் சட்டப்படிப் பதிவு செய்து கொள்வதால் ஏற்படும் நன்மை யாதெனில், ஒப்பந்தக்காரர்கள் அவர்களதுகீழ் பணிபுரியும் ஒப்பந்தத் தொழிலாளர்களுக்கு உரிய சம்பளம் மற்றும் சட்டரீதியானச் சலுகைகளை வழங்கத் தவறினால் முதன்மை வேலையளிப்பவர்கள் சட்டப்படியான பொறுப்பாளிகளாகிறார்கள். இவ்வாறு சட்டத்தின் சரத்துக்கள் ஒப்பந்தத் தொழிலாளிகளின் நலன் பாதுகாக்கிறது.

இச்சட்டம், பின்குறிப்பிட்டுள்ள நலன்களை ஒப்பந்தத் தொழிலாளர்கள் பெற வழிவகை செய்கிறது:-

1. சிற்றுண்டிச் சாலை
2. ஓய்வு அறைகள்
3. நல்ல குடிநீர் வசதி



4. போதுமான கழிவறை வசதிகள்
5. சலவை வசதிகள்
6. முதலுதவி வசதிகள்

8-11-1996-ஆம் நாளிட்ட தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறையின் அரசாணை (டி) எண் 1014-இல் மாநில ஆலோசனை (ஒப்பந்தத் தொழிலாளர்கள்) வாரியம் திருத்தியமைக்கப்பட்டு 18-2-1997 மற்றும் 10-12-1997 ஆகிய இரு தினங்களில் கூடி ஒப்பந்தத் தொழிலாளர்கள் பிரச்சினை குறித்து விவாதித்தது.

## அத்தியாயம்-4

### குழந்தைத் தொழிலாளர் பணிக்கமர்த்துதலை ஒழித்தல்

அபாயகரமான தொழில்களில் ஈடுபடுத்தப்பட்டுள்ள குழந்தைத் தொழிலாளர்களின் அவல நிலையினை ராயல் கமிஷன் 1931 ஆம் வருடத்திய தனது இறுதி அறிக்கை வெளிக் கொணர்ந்து காட்டியது. 1933 ஆம் வருடத்தில் முதன் முறையாக (குழந்தைத் தொழிலாளர் அடகு வைத்தல்) சட்டத்தை நிறைவேற்றியது. அதன் பின்னர் குழந்தைத் தொழிலாளர்களுக்காக பல்வேறு சட்டங்கள் அதாவது.

1948ஆம் வருடத்திய தொழிற்சாலைகள் சட்டம், பிரிவு 67,

1951ஆம் வருடத்திய தோட்டத் தொழிலாளர் சட்டம், பிரிவு 64,

1952ஆம் வருடத்திய சுரங்கத் தொழில் சட்டம், பிரிவு 45,

1961ஆம் வருடத்திய தொழில் பழகுவோர் சட்டம், பிரிவு 31,

1991ஆம் வருடத்திய வணிகக் கப்பல் கட்டும் சட்டம், பிரிவு 107.

1961 ஆம் வருடத்திய மோட்டார் போக்குவரத்துத் தொழிலாளர்கள் சட்டம், பிரிவு 29, 1966-ம் வருடத்திய பீடி மற்றும் சுருட்டுத் தொழிலாளர்கள் (வேலை நிபந்தனை) சட்டம், பிரிவு 24, 1947ஆம் வருடத்திய கடைகள் நிறுவனங்கள் சட்டம், பிரிவு 17, 1958ஆம் வருடத்திய தமிழ்நாடு உணவு நிறுவனங்கள் சட்டம், பிரிவு 17 மற்றும் 1986ஆம் வருடத்திய குழந்தைத் தொழிலாளர் (நீக்குதல் மற்றும் முறைப்படுத்துதல்) சட்டம் இயற்றி, நிறைவேற்றப்பட்டது. மேற்படி

[1998 ஏப்ரல் 24

1986ஆம் வருடத்திய குழந்தைத் தொழிலாளர் சட்டத்தின் (ஒழித்தல் மற்றும் முறைப்படுத்துதல்) பிரிவு 3-ன்கீழ் அபாயகரமான தொழில்களில் குழந்தைகளைப் பணியில் அமர்த்துவது தடை செய்யப்பட்டுள்ளது. மேற்கண்ட சட்டத்தில் அட்டவணை III-இல் அபாயகரமற்றத் தொழில்களில் ஈடுபடுத்தப்பட்டுள்ளக் குழந்தைத் தொழிலாளர்களின் வேலையினை ஒழுங்குபடுத்தப்பட்டுள்ளது. அதாவது இரவு 7.00 மணிக்கு மேலும் காலை 8.00 மணிக்கு முன்னதாகவும் குழந்தைத் தொழிலாளர்கள் பணி செய்ய அனுமதிக்கப்படகூடாது என்றும் ஓய்வு நேரம் உட்பட ஒரு நாளைக்கு ஆறு மணி நேரத்திற்கு மேல் வேலை செய்ய அனுமதிக்கக்கூடாது என்றும், மேலும் மிகை நேரம் (O.T.) வேலை செய்ய அனுமதிக்கக்கூடாது என்றும், வேலை செய்யும் குழந்தைக்கு வாரத்திற்கு ஒரு நாள் வார விடுமுறை அளிக்க வேண்டும் என்றும் அந்தத் சட்டத்தில் வரன்முறைப்படுத்தப்பட்டுள்ளது.

குழந்தைத் தொழிலாளர்கள் வேலைகளில் ஈடுபடுத்தப்படுவதற்கான பல்வேறு காரணங்களாவன: (1) வறுமை, (2) வேலையில்லாத் திண்டாட்டம், (3) மிகவும் குறைந்த கூலியில் தொழிலாளர்கள் வேலை செய்தல், (4) நகரங்களுக்குக் குடியேறுதல், (5) கட்டாயக் கல்வி இல்லாமை, (6) பெற்றோர்களின் அறியாமை மற்றும் கல்வி இல்லாத தன்மை, (7) குழந்தைத் தொழிலாளர்களுக்காக தொழிற் சங்கங்கள் ஈடுபடாமை, (8) மரபு பழக்கவழக்கங்களைப் பின்பற்றுதல் (9) மக்கள் தொகைப் பெருக்கம்.

குழந்தைத் தொழிலாளர் முறையை நீக்குதல் குறித்து தொழிலாளர் ஆய்வாளர்கள் பல்வேறு சட்டங்களின்கீழ் நடவடிக்கை எடுத்து வருகின்றனர். அவையாவன:

(1) 1947ஆம் வருடத்திய கடைகள் நிறுவனங்கள் சட்டம்,

(2) 1958ஆம் வருடத்திய தமிழ்நாடு உணவு நிறுவனங்கள் சட்டம்,

(3) 1966ஆம் வருடத்திய பீடி மற்றும் சுருட்டுத் தொழிலாளர் சட்டம்,

(4) 1961ஆம் வருடத்திய மோட்டார் போக்குவரத்துச் சட்டம்,

(5) 1951ஆம் வருடத்திய தோட்டத் தொழிலாளர் சட்டம், மற்றும்

(6) 1986ஆம் வருடத்திய குழந்தைத் தொழிலாளர் சட்டம்.



1998 ஏப்ரல் 24]

மேலும் 10-12-1996 அன்று பிறப்பிக்கப்பட்ட வரலாற்றுச் சிறப்பு மிக்க இந்திய உச்ச நீதிமன்றத் தீர்ப்பில் அனைத்து மாநிலங்களுக்கும் பின்வரும் உத்தரவுகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன:-

1. இந்திய உச்ச நீதிமன்றத் தீர்ப்பு தேதியிலிருந்து 6 மாத காலத்திற்குள் குழந்தைத் தொழிலாளர் பற்றிய கணக்கெடுப்புப் பணி பூர்த்தி செய்யப்பட வேண்டும்.

2. அபாயகரமான தொழில்களில் ஈடுபடுத்தப்பட்டுள்ளக் குழந்தைத் தொழிலாளர்களைப் பணியிலிருந்து நீக்கியவுடன், அக்குழந்தையின் பெற்றோர் அல்லது அக்குடும்பத்தில் வயது வந்த ஒருவருக்கு அரசு வேலை அளித்து, குழந்தையை வேலையிலிருந்து நீக்கியதால் ஏற்பட்ட பண நஷ்டத்திற்கு ஈடு செய்ய வேண்டும்.

3. அபாயகரமான பணியில் குழந்தைத் தொழிலாளர்களை ஈடு படுத்திய வேலை அளிப்பவர், அந்தக் குழந்தைத் தொழிலாளர்களுக்காக ரூ.20,000 வைப்பீடு செய்யவேண்டும். அந்தத் தொகை அதிக வட்டித் தரும் தேசியமயமாக்கப்பட்ட வங்கிகளில் வைப்பீடு செய்யப்பட்டு, அதிலிருந்து வரும் வட்டித் தொகையை குழந்தையின் பெற்றோர்களுக்கு அளிக்க வேண்டும்.

4. அபாயகரமான பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ள குழந்தைத் தொழிலாளர்களின் பெற்றோர்களுக்கு அல்லது குடும்பத்தில் வயது வந்தவர்களுக்கு வேலை அளிக்க இயலவில்லையெனில் அக்குழந்தைக்கு ரூ.5,000 அரசு வைப்பீடு தொகையாக அளிக்க வேண்டும்.

5. தொழிலாளர் துறையில் தனிப்பிரிவு ஒன்று அமைத்து இப்பணிகளைத் தொடர நடவடிக்கை எடுக்க வேண்டும்.

6. ஒவ்வொரு மாவட்டத்திலும், 'குழந்தைத் தொழிலாளர் மறுவாழ்வு மற்றும் நலச் சங்கமும், குழந்தைத் தொழிலாளர் மறுவாழ்வு நலநிதி'யும் ஏற்படுத்தப்படவேண்டும்.

இந்திய உச்ச நீதிமன்ற ஆணைப்படி, 1997ஆம் வருடம் ஏப்ரல் மாதத்தில் நிறுவனங்கள் வாரியாக குழந்தைத் தொழிலாளர்கள் கணக்கெடுப்புப் பணி செய்யப்பட்டது. அதன்படி அபாயகரமான தொழில்களில் நகரப் பகுதிகளில் 3,107 குழந்தைகளும், கிராமப் பகுதிகளில் 6,386 குழந்தைகளும், அபாயகரமற்ற தொழில்களில் நகர்ப் பகுதிகளில் 8,828 குழந்தைகளும் ஈடுபடுத்தப்பட்டுள்ளதாக கண்டறியப்பட்டுள்ளது.

அபாயகரமான தொழில்களில் குழந்தைத் தொழிலாளர்களை ஈடுபடுத்தி வேலையளிப்பவர்களுக்குச் சட்டபூர்வமான அறிவிப்புகள் வழங்கப்பட்டு, வேலைக்கு அமர்த்திய ஒவ்வொரு குழந்தைக்கும் ரூ.20,000 வைப்பீடு செய்ய வேண்டுமென்றும், அபாயகரமற்றத் தொழிலிலிருந்து குழந்தைத் தொழிலாளர் விடுவிக்கப்பட்டு, அவர்களுக்குக் கல்வி அளிக்க வேண்டும் என்றும் தெரிவிக்கப்பட்டது. அபாயகரமற்றத் தொழில்களில் குழந்தைத் தொழிலாளர்களை ஈடுபடுத்திய வேலையளிப்பவர்களுக்கு முதலில் சட்டபூர்வமான அறிவிப்புகள் வழங்கப்பட்டு, அந்தக் குழந்தைக்கு ஒரு நாளைக்கு இரண்டு மணி நேர பகுதி நேரக் கல்வி அளிக்க நிறுவனம் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்றும் உத்தரவு வழங்கப்பட்டுள்ளது. இந்திய உச்ச நீதிமன்றத் தீர்ப்பினை மாவட்ட ஆட்சியாளர்கள், கல்வி, தொழிற்சாலை ஆய்வகம் மற்றும் தொழிலாளர் துறை அதிகாரிகள் பொறுப்பேற்று அமல்படுத்தி வருகிறார்கள். அபாயகரமான தொழில்களில் ஈடுபடுத்தப்பட்டுள்ள 7 குழந்தைத் தொழிலாளர்களுக்காக இதுவரை ரூ.1,40,000 வசூல் செய்யப்பட்டுள்ளது.

1997 ஏப்ரல் மாதம் மேற்கொள்ளப்பட்ட கணக்கெடுப்பில் தீப்பெட்டி மற்றும் பட்டாசு, பீடி, தோல் பதனிடல், கைத்தறி, பட்டு நெசவு, நெசவாலை, ஜெம் கட்டிங் மற்றும் சுரங்கம் போன்ற குறிப்பிட்ட ஆபத்தான தொழிலில் ஈடுபட்டுள்ள குழந்தைத் தொழிலாளர்களின் எண்ணிக்கை மிகக் குறைவாக இருந்ததைக் கருத்திற்கொண்டு 4-11-1997-இல் துணைக் கணக்கெடுப்பு மேற்கொள்ள மாநிலத்திலுள்ள அனைத்து மாவட்ட ஆட்சியரும் கோரப்பட்டுள்ளனர். மேலும், 1997 ஏப்ரல் மாதக் கணக்கெடுப்பின்போது செய்யப்பட்டது போலவே துணைக் கணக்கெடுப்பின்போது ஆபத்தான தொழிலில் ஈடுபட்டுள்ள குழந்தைத் தொழிலாளர்கள் கண்டுபிடிக்கப்பட்டால் சம்பந்தப்பட்ட வேலையளிப்போரிடமிருந்து ரூ. 20,000 நஷ்ட ஈட்டுத் தொகை வழங்கக்கோரி சட்ட ரீதியான நோட்டீஸ் கொடுக்கவும் மாவட்ட ஆட்சியர்கள் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளனர்.

மேற்கண்ட உச்ச நீதிமன்றத் தீர்ப்பினை அமல்படுத்துவதற்காக ரூ.7.70 லட்சம் செலவில் தொழிலாளர் நல ஆணையரின் தலைமையின்கீழ் ஒரு கண்காணிப்புப் பிரிவு தொழிலாளர் நல ஆணையரகத்தில் அமைக்கப்பட்டுள்ளது.

மாவட்ட ஆட்சியர்கள் மாவட்டங்களில் "மாவட்டக் குழந்தைத் தொழிலாளர் மறுவாழ்வு" சங்கங்களை ஏற்படுத்த நடவடிக்கை





மேற்கொண்டு வருகின்றனர். 18 மாவட்டங்களில் இச்சங்கங்கள் அமைக்கப்பட்டுவிட்டன. மாவட்டக் குழந்தைத் தொழிலாளர் மறுவாழ்வு மற்றும் நல நிதியை ஏற்படுத்தியுள்ளது.

1997ஆம் ஆண்டில் 191 வழக்குகள் குழந்தைத் தொழிலாளர்கள் சட்டத்தின் கீழ் தவறிழைத்த நிர்வாகத்தின் மீது தொடரப்பட்டு, அவற்றில் 110 வழக்குகள்மீது தீர்ப்புகள் அளிக்கப்பட்டுள்ளதோடு, அவற்றிற்கு அபராதத் தொகையாக ரூ.6,40,750/- நீதிமன்றத்தால் வசூலிக்கப்பட்டுள்ளது.

பதிவு செய்யப்பட்ட தீப்பெட்டி தொழிற்சாலைகளில் பணிபுரியும் தொழிலாளர்களுக்கான நல நிதி, உச்ச நீதிமன்றத்தின் கட்டளையின் அடிப்படையில் உருவாக்கப்பட்டுள்ளது. இந்த நல நிதி 1-1-1991 முதல் நடைமுறைக்கு வந்துள்ளது. பதிவு செய்யப்பட்ட தீப்பெட்டித் தொழிற்சாலை உரிமையாளர்கள் தொழிலாளர் ஒருவருக்கு ஆண்டு தோறும் ரூ.2/- வீதம் இந்த நல நிதிக்குச் செலுத்த வேண்டும் என ஆணையிடப்பட்டது. அரசு தன் பங்காக தொழிலாளர் ஒருவருக்கு ரூ.2/- வீதம் செலுத்தி வந்தது. இந்த நல நிதி பின்னர் பதிவு பெற்ற பட்டாசுத் தொழிற்சாலைகளில் பணிபுரியும் தொழிலாளர்களுக்கும் விரிவுபடுத்தப்பட்டது. பணியமர்த்துவோர் செலுத்த வேண்டிய பங்குத் தொகையும் ரூ.2/-லிருந்து ரூ.10/- ஆக உயர்த்தப்பட்டது. விருதுநகர், திருநெல்வேலி, தூத்துக்குடி, வேலூர், மதுரை, திருச்சி மற்றும் தருமபுரி மாவட்டங்களில் இந்த நல நிதியை நிர்வகிக்க ஒரு மாவட்டக் குழு உருவாக்கப்பட்டுள்ளது.

## அத்தியாயம் - 5

**தமிழ்நாடு தொழிலாளர் நல வாரியம்:**

தொழிலாளர் நலம் என்றாலே நிர்வாகம் தொழிலாளர்களுக்கு அளிப்பதே என்ற நிலையை 1972-ஆம் ஆண்டு தமிழ்நாடு தொழிலாளர் நல நிதிச் சட்டம் மாற்றியுள்ளது. தொழிலாளர் மற்றும் வேலையளிப்போர் மற்றும் அரசு ஆகியோர் அளிக்கும் நல நிதிப் பங்குத் தொகையினைக் கொண்டு 'பல்வேறு தொழிலாளர்களுக்கும், அவர்தம் குடும்பங்களுக்கும் பயன்பெறும் வகையில் நலத் திட்டங்களை இவ்வாரியம் செயல்படுத்தி வருகிறது.

[1998 ஏப்ரல் 24

இச்சட்டத்தின்படி மாநில தொழிலாளர் நல அமைச்சர் அவர்களைத் தலைவராகக் கொண்டு தமிழ்நாடு தொழிலாளர் நல வாரியம் இயங்கி வருகிறது.

இவ்வாரியம் தமிழகம் முழுமையும் 52 இடங்களில் குழந்தைகள் காப்பகங்களுடன் கூடிய தையற் பயிற்சிப் பிரிவுகளும் மற்றும் 19 இடங்களில் தையற் பயிற்சி மட்டும் அமைக்கப்பட்டு செயல்பட்டு வருகிறது. மேற்படி தையற் பயிற்சிப் பிரிவுகளில் தொழிலாளர்களைச் சார்ந்த அவர்களது மனைவியர், திருமணமாகாத மகள் மற்றும் சகோதரிகளுக்கும் தையற் பயிற்சி அளிக்கப்படுகிறது. பயிற்சிக் காலங்களில் உதவித் தொகையாக பிரதிமாதம் ரூ.40/-ம், தேர்வுக்குச் சென்றால் பயிற்சி பெற்ற காலம் முழுவதற்கும் மேலும் பிரதிமாதம் ரூ.20/-ம், தேர்வில் தேர்ச்சி பெற்றால் மேலும் ரூ.20/- பிரதி மாதமும் ஆக மொத்தம், பிரதி மாதம் ரூ.80/- வழங்கப்படுகிறது. பயிற்சி முடிவில் பயிற்சியாளர்கள் அரசு நடத்தும் தேர்வுக்கு அனுப்பப்படுகிறார்கள். இத்தேர்விற்கான தேர்வுக் கட்டணம் வாரியத்தால் செலுத்தப்படுகிறது. மேலும், இதற்கான கீழ்நிலை/மேல்நிலைத் தேர்வில் தேர்ச்சி பெற்ற ஒவ்வொரு மையத்திலும் முதல் மதிப்பெண் பெறுபவர்களுக்கு ஒரு தையல் இயந்திரம் பரிசாக வழங்கப்படுகிறது. குழந்தைகள் பிரிவில் பயிலும் குழந்தைகளுக்கு இலவச சத்துணவு, பால், பழம், முட்டை ஆகியவை வழங்கப்புடுகின்றன. தவிர அனைத்து குழந்தைகளுக்கும் தகுதி பெற்ற மருத்துவர்களால் மாதமிருமுறை மருத்துவப் பரிசோதனை செய்யப்படுகிறது. ஒவ்வொரு வருடமும் இரண்டு ஜோடி `டெரிகாட்டன்' சீருடை குழந்தைகளுக்கு வழங்கப்படுகிறது.

தொழிலாளர்களும் அவர்களைச் சார்ந்தோர்களும் படிக்கும் பழக்கத்தை ஊக்குவிக்கும் பொருட்டு தமிழகத்தில் 9 இடங்களில் இலவசப் படிப்பகங்களை இவ்வாரியம் நடத்தி வருகிறது.

மாமல்லபுரம், குற்றாலம் மற்றும் வால்பாறை ஆகிய இடங்களில் தொழிலாளர்கள் மற்றும் அவர்கள் குடும்பத்தினர் தங்குவதற்காக ஓய்வு இல்லங்கள் கட்டப்பட்டுள்ளன. இங்கு மிகமிகக் குறைந்த வாடகையே வசூலிக்கப்படுகிறது.

சென்னையில் தொழிற்சங்கப் பிரதிநிதிகள், தொழிலாளர்கள் சம்பந்தப்பட்ட வழக்கு/விசாரணை/பேச்சுவார்த்தை ஆகியவற்றிற்காக வருபவர்கள் தங்குவதற்காக ஜீவா இல்லம் என்ற ஓய்வு இல்லம், டிஎம்.எஸ். வளாகம், சென்னை-6இல் கட்டப்பட்டுள்ளது.



1998 ஏப்ரல் 24]

காசநோயால் அவதியுறும் தொழிலாளர்கள் மருத்துவமனைகளில் தங்கி சிகிச்சைப் பெறுவதற்காக டிபி. சானடோரியம் தாம்பரம் (26 படுக்கைகள்), திருப்பூர் (26 படுக்கைகள்), ஆசாரிப் பள்ளம் (30 படுக்கைகள்), ஆண்டிப்பட்டி (20 படுக்கைகள்) மற்றும் வட ஆற்காடு மாவட்டம் கீழ்பெண்ணாத்தூர் (24 படுக்கைகள்) ஆகிய இடங்களில் உள்ள அரசு மருத்துவமனைகளில் இவ்வாரியம் தனிப் பிரிவினைக் கட்டியுள்ளது.

இவ்வாரியம் நடைமுறைப்படுத்தும் பல்வேறு நலத் திட்டங்களின் மூலம் பயன் பெற்றவர்களின் விவரம் கீழேத் தரப்பட்டுள்ளன:-

**1-1-1997** முதல் **31-12-1997** முடிய

| | |
|---|---|
| (1) தொழிலாளர் நல மையங்கள் | 52 |
| தையற் பயிற்சி நிலையங்கள் | 19 |
| மொத்தம் | **71** |
| மொத்த தையல் பயிற்சியாளர்கள் | 2,464 |
| (2) குழந்தைகள் காப்பகப் பிரிவு | |
| மொத்த காப்பகங்களின் எண்ணிக்கை | 52 |
| பயனுற்ற குழந்தைகள் | 2,034 |
| (3) மொத்தப் படிப்பகங்கள் | 9 |

**(4) தொழிலாளர்களின் குழந்தைகள் படிப்பிற்கான உதவித் தொகை வழங்கிய விவரம்:**

| | பயன் பெற்றவர்கள் | வழங்கப்பட்ட தொகை (ரூபாய்) |
|---|---|---|
| 1. பொறியியல் பட்டப் படிப்பு | 15 | 18,000.00 |
| 2. பொறியியல் பட்டயப் படிப்பு | 95 | 68,400.00 |
| 3. மருத்துவப் பட்டப் படிப்பு | 5 | 5,400.00 |
| 4. மருத்துவப் பட்டயப் படிப்பு | - | — |
| 5. சட்டப் படிப்பு | 1 | 1,200.00 |
| 6. வேளாண்மை பட்டப் படிப்பு | 1 | 1,200.00 |
| 7. தொழிற்பயிற்சிக் கல்வி | 41 | 20,500.00 |
| 8. மேல்நிலைக் கல்வி | 62 | 37,200.00 |

**(5) ஏனைய நலத் திட்டங்கள் மூலம் பயன்பெற்றவர்கள் :**

| | பயன் பெற்றவர்கள் | வழங்கப்பட்ட தொகை ரூபாய் |
|---|---|---|
| 1. தொழிலாளர்களுக்கு மூக்குக் கண்ணாடி செலவுத் தொகையைத் திரும்ப அளித்தல் | 227 | 28,335.00 |
| 2. தொழிலாளர் பிள்ளைகளுக்குத் தட்டச்சு, சுருக்கெழுத்து படிக்கக் கட்டணங்கள் ஈடுசெய்தல் | 54 | 7,162.00 |
| 3. பாடநூல் உதவித் தொகை | 780 | 34,265.00 |
| 4. ஈமச் சடங்கிற்குரிய உதவித் தொகை | 111 | 33,300.00 |
| 5. உடல் ஊனமுற்றவர்களுக்குச் செயற்கை உறுப்புகள் வழங்குதல் | - | - |
| 6. காது கேட்கும் கருவிகள் வழங்குதல் | 5 | 4,659.00 |
| 7. ஊனமுற்றவர்களுக்கு மூன்று சக்கர வண்டி வழங்குதல். | 1 | 2,950.00 |

"உழைப்பவர் உலகம்" என்ற மாத இதழை இவ்வாரியம் வெளியிடுகிறது. அதற்காக வாரிய நிதியிலிருந்து ஒவ்வொரு வருடமும் ரூ.3,00,000/- மானியம் வழங்கப்படுகிறது. மேலும், ஒவ்வொரு கல்வி மாவட்டத்திலும் 10ஆவது, 12ஆவது வகுப்புத் தேர்வுகளில் முதல் மற்றும் இரண்டாவது இடங்களில் வரும் தொழிலாளியின் குழந்தைகளுக்கு ரூ.1,000/- மற்றும் ரூ.500/- பரிசுத் தொகை வழங்கி ஊக்குவிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு இதற்காக இந்த அரசு ரூ.1.68 இலட்சம் 1997-98ஆம் ஆண்டு திட்ட மதிப்பீட்டில் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## இணைப்பு-6

### தமிழ்நாடு தொழிலாளர் கல்வி நிலையம்

தமிழ்நாடு தொழிலாளர் கல்வி நிலையம் 1973 ஆம் ஆண்டு நிறுவப்பட்டு, 1978இல் முதல் வகுப்பு நிலைக்கு உயர்த்தப்பட்டது. பின்னர் தமிழ்நாடு சங்கங்கள் பதிவுச் சட்டம் 1975-ன்கீழ் பதிவு





செய்யப்பட்டு, 08-10-1997 முதல் தன்னாட்சி நிறுவனமாக இயங்கி வருகிறது. மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்களைத் தலைவராகக் கொண்ட ஆட்சிமன்றக் குழு இந்நிலையத்தின் நிர்வாகத்தினைக் கவனித்து வருகிறது. இந்நிலையத்திற்கு இயக்குநராக தொழிலாளர் துறையிலிருந்து தொழிலாளர் இணை ஆணையர் நிலையில் ஒருவரை அரசு நியமனம் செய்துள்ளது.

இக்கல்வி நிலையத்தின் முக்கிய நோக்கங்கள் :

1. தொழிற் சங்கங்களிடையே ஆரோக்கியமான செயல்பாடுகளை உருவாக்குதல்.

2. நிர்வாகத்திற்கும் தொழிலாளர்களுக்கும் இணக்கமான நெருக்கத்தை தோற்றுவித்தல்.

3. தொழிலாளர் மற்றும் தொழிற்சாலைகள் ஆய்வுத் துறையில் பணியாற்றும் அலுவலர்களின் திறமைகளை வளர்த்தல்.

4. தொழிலாளர் குறித்து ஆராய்ச்சிகள் மேற்கொள்ளுதல்.

5. தொழிலாளர் மேலாண்மையில் பட்டப் படிப்புகள் நடத்துவதன் வாயிலாக எதிர்காலத் தொழில்துறை நிர்வாகத்திற்குத் தகுதியானவர்களை உருவாக்குதல்.

கல்வி நிலையத்தின் செயல்பாடுகள்:

இக்கல்வி நிலையம் தொழிலாளர் சம்பந்தப்பட்ட பயிற்சிகள், கருத்தரங்குகள் புத்தகப் பயிற்சிகள் ஆகியவற்றைத் தொடர்ந்து நடத்தி வருகிறது. தொழிலாளர்களுக்கும் தொழிற்சங்கப் பிரதிநிதிகளுக்கும், தொழிலகங்களில் பணியாற்றும் மேற்பார்வையாளர்களுக்கும் நிர்வாகப் பணியாளர்களுக்கும், தொழிலாளர் துறை மற்றும் தொழிற்சாலைகள் துறை அலுவலர்களுக்கும், தனியார் மற்றும் பொதுத் துறை நிறுவனங்களில் பணியாற்றும் பணியாளர்களுக்கும் இப்பயிற்சிகள் நடத்தப்பட்டு வருகின்றன.

இதைத் தவிர, இக்கல்வி நிலையம், தொழிலாளர் நிர்வாக முதுநிலை பட்டயப்படிப்பு (பி.ஜி.டி.எல்.ஏ) (பகுதி நேரம் மற்றும் அஞ்சல் வழி), தொழிலாளர் மேலாண்மைப் பட்டப் படிப்பு (பி.எல்.எம்), தொழிலாளர் மேலாண்மை முதுகலைப் பட்டப் படிப்பு (எம்.எல்.எம்) ஆகியவைகளை

நடத்தி வருகிறது. சென்னைப் பல்கலைக்கழகம் இக்கல்வி நிலையத்தால் நடத்தப்படும் தொழிலாளர் மேலாண்மை இளங்கலைப் பட்டப் படிப்பிற்கும், தொழிலாளர் மேலாண்மை முதுகலைப் பட்டப் படிப்பிற்கும் அங்கீகாரம் வழங்கியுள்ளது. 1997 ஆம் ஆண்டில் கடைகள் மற்றும் உணவு வர்த்தக நிறுவனங்களும், உரிமையாளர்களுக்குத் தொழிலாளர் நலச் சட்டங்களும் குறித்து 11 கருத்தரங்குகளும், தொழிற்சாலைகளுக்குப் பொருந்தும் தொழிலாளர் நலச் சட்டங்களின் கீழ் பராமரிக்கப்பட வேண்டிய பதிவேடுகள் மற்றும் அறிக்கைகள் தயாரிப்பது குறித்து 5 கருத்தரங்குகளும். மனிதவள மேம்பாடு என்னும் தலைப்பில் ஒரு கருத்தரங்கும் நடைபெற்றது.

1997-ஆம் ஆண்டில் மொத்தம் 1,392 நபர்கள் இப்பயிற்சிகளில் பங்கேற்றனர். 1997ஆம் ஆண்டில் இக்கல்வி நிலையத்திலிருந்து பட்டப் படிப்பு மற்றும் பட்டயப் படிப்பு முடித்து வெளி வந்துள்ளவர்களின் விவரங்கள்:-

| | |
|---|---|
| பி.எல்.எம். | 47 |
| எம்.எல்.எம். | 31 |
| பி.ஜி.டி.எல்.ஏ. | 134 |
| மொத்தம் | 212 |

மேலும் பி.ஜி.டி.எல்.ஏ. (அஞ்சல் வழி) பயிற்சி மாணவர்களுக்குச் சென்னை மற்றும் திருச்சியில் ஒருங்கிணைப்பு வகுப்புகள் (Contact Classes) நடைபெற்றன.

1998-99ஆம் ஆண்டில் நடத்த உத்தேசிக்கப்பட்டுள்ள பயிற்சிகள்/ கருத்தரங்குகள்:-

இக்கல்வி நிலையத்தில் கீழ்க்கண்ட பயிற்சித் திட்டங்களும் கருத்தரங்குகளும் 1998-99ஆம் ஆண்டில் நடத்தப்படவுள்ளன.

1. தொழிலாளர் நலச்சட்டங்களைப் பற்றி தோட்ட/தொழில் நிறுவனங்கள், பீடி நிறுவனங்கள், உணவு நிறுவனங்கள் மற்றும் கடைகள், ஆகியவற்றில் உள்ளோருக்கு விளக்கமுறைக் கருத்தரங்கு.

2. தொழிலாளர் துறை அலுவலர்களுக்கு சமரச நடவடிக்கைகள் மற்றும் அமலாக்கப் பணி தொடர்பாக பயிற்சிகள்.



3. தொழிலாளர்களுக்கும் அவர்களது இல்லத்தரசிகளுக்கும் 'தரமிகுவாழ்வு' என்பது பற்றி பயிற்சி.

4. 'நல்ல தொழிற் சங்கம் மற்றும் தொழிற் சங்கத் தலைவர்களை உருவாக்குதல்' என்பது பற்றி பயிற்சி.

5. துறையின் சமரசம் மற்றும் அமலாக்க அலுவலர்களுக்கான பயிற்சி.

6. வாழ்வியல் பயிற்சி முகாம்.

7. குடும்பத்தைச் சந்தோஷமாக நிர்வகிப்பது எப்படி.

8. ஆரோக்கியமாக வாழ்வது எப்படி.

9. மகிழ்ச்சியாக வாழ்வது எப்படி.

10. வர்த்தக நிறுவனங்களும், தொழிலாளர் நலச் சட்டங்களும்.

11. மோட்டார் போக்குவரத்துத் தொழிலாளர் சட்டம்.

12. மருத்துவமனைகள் தொழிலாளர் நலச் சட்டங்கள்.

13. தொழிலகங்களில் ஒழுங்குமுறை.

14. திரையரங்குகளும் தொழிலாளர் நலச் சட்டங்களும்.

15. தோட்டத் தொழிலாளர் சட்டங்கள்.

16. மனிதவள மேம்பாடு.

17. தொழிற்சாலைகளுக்குப் பொருந்தும் தொழிலாளர் நலச் சட்டங்கள்.

## அத்தியாயம் - 7

# தொழிற்சாலைகள் நிர்வாகம்

*நிர்வாக அமைப்பு:*

தொழிலாளர்களின் உரிமைகளைப் பாதுகாப்பதும் மற்றும் அவர்களின் நியாயமான கோரிக்கைகளை நிறைவேற்றுவதும், இவ்வரசின் முக்கியக் குறிக்கோளாகும்.

தொழிலாளர்களின் பாதுகாப்பு, சுகாதாரம் மற்றும் நலன்களைப் பாதுகாப்பதில் இவ்வரசு முக்கியத்துவம் அளிக்கிறது.

தொழிற்சாலைகள் சட்டம் 1948-ன்கீழ் பதிவு செய்யப்பட்ட அனைத்துத் தொழிற்சாலைகளிலும், தொழிற்சாலைகள் சட்டம் மற்றும் 13 தொழிலாளர் நலச் சட்டங்களை தொழிற்சாலைகள் ஆய்வுத் துறை செயல்படுத்துகிறது. இந்த முக்கிய தொழிலாளர் நலச் சட்டங்களை செயலாக்குவதன் மூலம் பதிவு செய்யப்பட்ட தொழிற்சாலைகளில் பணிபுரியும் தொழிலாளர்களின் உடல்நலம், பாதுகாப்பு மற்றும் அவர்களின் நல வசதிகள் உறுதி செய்யப்படுகின்றன.

தொழிற்சாலைகள் சட்டம் மற்றும் பிற தொழிலாளர் நலச் சட்டங்களைச் செயல்படுத்தி நிர்வகிக்கும் தொழிற்சாலைகள் ஆய்வகத் துறைக்கு தொழிற்சாலைகள் தலைமை ஆய்வாளர் தலைவர் ஆவர். அவருக்கு உதவியாக 1 தொழிற்சாலைகள் கூடுதல் தலைமை ஆய்வாளர், 4 தொழிற்சாலைகள் இணைத் தலைமை ஆய்வாளர்கள், 29 தொழிற்சாலைகள் துணைத் தலைமை ஆய்வாளர்கள், 51 தொழிற்சாலைகள் ஆய்வாளர்கள், 45 தொழிற்சாலைகள் உதவி ஆய்வாளர்கள், 1 தலைமை மருத்துவ அலுவலர், 6 மருத்துவ அலுவலர்கள், 1 கணக்கு அலுவலர் மற்றும் 1 நிர்வாக அலுவலர் ஆகியோர் உள்ளனர்.

புதிதாக அமைக்கப்பட்டுள்ள மாவட்டங்களில் தொடர்ச்சியாக தொழிற்சாலைகள் சட்டம், 1948-ன்கீழ் வருகின்ற தொழிற்சாலைகளில், தொழிற்சாலைகள் சட்டத்தினையும் இதர தொழிலாளர் நலச் சட்டங்களையும் திறம்படச் செயல்படுத்த, கீழ்க் குறிப்பிட்டுள்ள தொழிற்சாலைகள் ஆய்வாளர்கள் மற்றும் தொழிற்சாலைகள் உதவி ஆய்வாளர்கள் பதவிகள் 1997-ஆம் ஆண்டில் தோற்றுவிக்க அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

1. அரசாணை எண் 36, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை, நாள் 26-3-1997-ன்படி கரூரில் தொழிற்சாலைகள் ஆய்வாளர் மற்றும் தேவையான பணியாளர்களுடன் தொழிற்சாலைகள் ஆய்வாளர் அலுவலகம் இயங்குவதற்கு அனுமதிக்கப்பட்டுள்ளது.

2. அரசாணை எண் 60, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு துறை, நாள் 6-5-1997-ன்படி அரியலூரில் தொழிற்சாலைகள் ஆய்வாளர்





மற்றும் தேவையான பணியாளர்களுடன் தொழிற்சாலைகள் ஆய்வாளர் அலுவலகம் இயங்குவதற்கு அனுமதிக்கப்பட்டுள்ளது.

மேலும், இத்துடன் சென்னை மூன்றாம் சரகம், தொழிற்சாலைகள் ஆய்வாளர் மற்றும் திண்டுக்கல் முதல் சரகம் தொழிற்சாலைகள் ஆய்வாளர் அலுவலகங்கள் முறையே திருவள்ளூர் மற்றும் தேனிக்கு மாற்றம் செய்யப்பட்டு அவைகள் தொழிற்சாலைகள் ஆய்வாளர் அலுவலகம், திருவள்ளூர் என்றும் தொழிற்சாலைகள் ஆய்வாளர் அலுவலகம், தேனி என்றும் இயங்க அறிவிக்கப்பட்டுள்ளதோடு, இரண்டு தொழிற்சாலைகள் உதவி ஆய்வாளர்கள் பதவிகள் புதிதாக தோற்றுவிக்கப்பட்டுள்ளது.

தொழிற்சாலைகளில் தொழிற்சாலை சட்டத்தையும் மற்ற சட்டங்களையும் நேரடியாகச் செயல்படுத்துவதற்கு தொழிற்சாலைகள் துணைத் தலைமை ஆய்வாளர் தலைமையில் 13 கோட்டங்கள் உள்ளன. இவையன்றி, தொழிற்சாலைகளில் தொழிலாளர்களுக்குப் பாதுகாப்பின் அவசியத்தை வலியுறுத்தி வகுப்புகள் நடத்துவதற்கும், அழுத்தக் கலன்களைச் சோதிப்பதற்கும், உதவி அறுவை மருத்துவர்கள் உதவியுடன் தொழிலாளர்களின் உடல்நலனைச் சோதிப்பதற்கும், பாதுகாப்பு மற்றும் நல அளவீடுகள் செய்வதற்கும் தொழிற்சாலைகள் துணைத் தலைமை ஆய்வாளர் தலைமையில் 10 சோதனை மற்றும் பாதுகாப்புக் கோட்டங்கள் உள்ளன.

பெரும் அபாயம் மற்றும் விபத்துக்கள் நிகழ வாய்ப்பிருக்கும் அபாயகரமான தொழிற்சாலைகளுக்காக பெரும் அபாயம் மற்றும் விபத்துத் தடுப்புக் குழு ஒன்று தொழிற்சாலைகள் ஆய்வகத் துறையால் அமைக்கப்பட்டுள்ளது. இக்குழு தொழிற்சாலைகள் கூடுதல் தலைமை ஆய்வாளர் தலைமையின் கீழ் இயங்குகிறது.

தொழிற்சாலைகளில் பொருள்களின் உற்பத்தித்திறன் குறித்த கருத்துக்களையும், செயல் நுணுக்கங்களையும் பற்றி தொழிலாளர்கட்கு பயிற்சி அளிப்பதற்காக தொழிற்சாலைகள் ஆய்வகத் துறையில் உற்பத்தித்திறன் பிரிவு ஒன்று தொழிற்சாலைகள் இணைத் தலைமை ஆய்வாளர் தலைமையில் இயங்கி வருகிறது.

மாநில அளவிலான உயர்மட்ட முத்தரப்புப் பாதுகாப்புக் குழு மற்றும் மாநில அளவிலான செயல்குழு/வல்லுநர் குழு முக்கிய

[1998 ஏப்ரல் 24

கடமையுடன் செயல்பட்டு வருகிறது. தொழிற்சாலைகள் தலைமை ஆய்வாளர் பதவித் தரத்தில் உறுப்பினர் செயலாளர் அவர்களின் கீழ் மாநில அளவிலான உயர்மட்ட முத்தரப்புப் பாதுகாப்புக்குழு செயல்பட்டு வருகிறது.

**2. பாதுகாப்பு மேம்பாடு**

*பெரும் விபத்து மற்றும் பேரபாயத் தடுப்புக்குழு:-*

தொழிற்சாலைகள் தலைமை ஆய்வாளர் அவர்களின் கட்டுப்பாட்டின் கீழ் கூடுதல் தலைமை தொழிற்சாலைகள் ஆய்வாளரின் தலைமையின் கீழ் இயங்கும் பெரும் விபத்து மற்றும் பேரபாயத் தடுப்புக் குழு 1988-ஆம் ஆண்டு தோற்றுவிக்கப்பட்டது.

பெரும் விபத்து மற்றும் பேரபாயத் தடுப்புக் குழு, பேரபாயத் தடுப்பு முறைகளைத் தயாரிப்பதற்கான தகுந்த வழிமுறைகளை அளித்து வருகிறது. அபாயகரமான தொழில் முறைகளில் ஈடுபட்டுள்ள தொழிற்சாலைகளில் மேற்குறிப்பிட்ட தடுப்பு முறைகளின் செயலாக்கத்திற்கு தொழிற்சாலைகள் ஆய்வகத் துறையால் மேல் நடவடிக்கை எடுக்கப்படுகிறது. சோதனை மற்றும் பாதுகாப்புக் கோட்டங்கள் இக்குழுவின் கட்டுப்பாட்டுக்குள் இயங்கி வருகிறது.

நமது மாநிலத்தில் அபாயகரமான பொருட்களை மூலப்பொருளாகக் கொண்டு செயல்படும் பேரபாயத் தொழிற்சாலைகள் 76 உள்ளன. இவற்றில் கீழ்க்கண்ட பேரபாயங்கள் ஏற்படக் கூடிய வாய்ப்புகள் உள்ளன.

(அ) தொழிற்சாலைகள் வளாகத்திற்குள் உள்ள தொழிலாளர்களுக்கு உண்டாகக்கூடிய பெரும் விபத்து அபாயங்கள்.

(ஆ) தொழிற்சாலைகள் வளாகத்திற்கு வெளியில் வசிக்கும் பொது மக்களுக்கு உண்டாகக்கூடிய பெரும் விபத்துக்கள் மற்றும் பொருட்சேதங்கள்.

(இ) சுற்றுச் சூழல் மாசுபடுவதன் காரணமாக ஏற்படும் எதிர் விளைவுகள்.

பேரபாயகரமான தொழிலில் ஈடுபட்டுள்ள தொழிற்சாலைகள் அதிகமாக உள்ள இடங்களாக மணலி, நெய்வேலி, கடலூர், இராணிப்பேட்டை, மேட்டூர் மற்றும் தூத்துக்குடி ஆகிய 6 இடங்கள் அடையாளம் காட்டப்பட்டுள்ளன.



1998 ஏப்ரல் 24]

இந்த இடங்களில் உள்ள அபாயகரமான உற்பத்தி முறைகளைக் கையாளும் தொழிற்சாலைகளில் ஏற்படும் பேரபாயத்தைக் கட்டுப்படுத்தும் பொருட்டு மேற்கொள்ளப்படும் அவசரகால நடவடிக்கைகள் அடங்கிய 'உள்ளிருப்பு அவசர காலத்திட்டங்கள்' சென்னை, தொழிற்சாலைகள் தலைமை ஆய்வாளரால் பெறப்பட்டு கூர்ந்தாய்வு செய்யப்பட்டு பதிவு செய்யப்படுகின்றன. ஒத்திகை அணி வகுப்பு மூலம் பேரபாயத்தைக் கட்டுப்படுத்தும் வழிமுறைகள் மற்றும் சரியாகக் கடைபிடிக்கப்படுகின்றனவா எனவும் சரி பார்க்கப்படுகிறது.

பேரபாயத் தொழிற்சாலைகளைச் சுற்றி வசிக்கும் பொதுமக்களுக்கு அவசரகாலத்தில் ஏற்படக் கூடிய இடர்பாடுகளிலிருந்து காப்பாற்றும் வழிமுறைகள் அடங்கிய "வெளியிருப்பு அவசரகாலத் திட்டங்கள்" பெறப்படுகின்றன. இவற்றை சம்பந்தப்பட்ட மாவட்டத்தின் ஆட்சித் தலைவரைத் தலைவராகவும், தொழிற்சாலைகள் துணைத் தலைமை ஆய்வாளரை உறுப்பினராகவும் கொண்ட மாவட்ட அவசரகாலக் குழு பரிசீலிக்கிறது.

*பாதுகாப்புப் பயிற்சி மற்றும் அளவீடு:-*

இக்குழுவின் கட்டுப்பாட்டில், தொழிற்சாலைகள் துணைத் தலைமை ஆய்வாளரின் தலைமையிலான பத்து சோதனை மற்றும் பாதுகாப்புக் கோட்டங்கள் தேவையான பணியாளர்களுடன் இயங்குகின்றன. இக்கோட்டங்கள்:-

(1) தொழிற்சாலைகளில் பயன்படுத்தப்படும் அழுத்தக் கலன்களை சட்ட விதிகளின்படி நிர்ணயிக்கப்பட்ட காலமுறைப்படியான சோதனைகள் மேற்கொண்டு சான்றிதழ் வழங்குகின்றன.

(2) தொழிற்சாலைகளின் தொழிலாளர்கள், மேற்பார்வையாளர்கள் மற்றும் மேலாளர்களுக்கான பாதுகாப்புப் பயிற்சி வகுப்புகள் நடத்தி, குறிப்பாக தொழிலாளர்களுக்கு அவர்களது திறமைகள் மற்றும் பாதுகாப்பு விழிப்புணர்ச்சி முதலியன ஊக்குவிக்கப்படுகிறது. பாதுகாப்புத் தரம் மேம்படுத்தப்படவும், விபத்துக்களைக் குறைக்கவும் நிர்வாகத்தினருக்கு அறிவுரை வழங்கப்படுகிறது.

(3) அடிக்கடி விபத்துக்கள் நிகழும் தொழிற்சாலைகளில் விபத்துக்கள் ஏற்படுவதற்கான காரணங்களைக் கண்டறிந்து அவற்றைக் களைவதற்கான

வழிமுறைகளைப் பாதுகாப்பு அளவீடுகளின் மூலமாகக் கண்டறியப்பட்டு நிர்வாகங்களுக்கு மேல்நடவடிக்கைக்காகத் தெரிவிக்கப்படுகிறது.

மாநிலப் பாதுகாப்பு விருதுகள் :

தொழிற்சாலைகளில் சிறந்த பாதுகாப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளும் வண்ணம், நிர்வாகத்தினரை ஊக்குவிக்கும் பொருட்டு, தமிழக அரசு ஆண்டுதோறும் "மாநிலப் பாதுகாப்பு விருதுகள்" நிர்வாகத்தினருக்கு வழங்கி வருகிறது.

இவ்விருதுக்காக தொழிற்சாலைகள் கீழ்க்கண்டவாறு மூன்று பிரிவுகளாக பிரிக்கப்படுகிறது:-

'அ' பிரிவு - ஆண்டுக்கு 10 இலட்சம் மனிதநேரத்திற்குக் குறைவில்லாமல் வேலை செய்த தொழிற்சாலைகள்.

'ஆ' பிரிவு - ஆண்டுக்கு 5 இலட்சம் முதல் 10 இலட்சம் மனிதநேரம் வரை வேலை செய்த தொழிற்சாலைகள்.

'இ' பிரிவு - ஆண்டுக்கு 2 இலட்சம் முதல் 5 இலட்சம் மனிதநேரம் வரை வேலை செய்த தொழிற்சாலைகள்.

**இத்தொழிற்சாலைகள் கீழ்க்கண்ட திட்டங்களின் கீழ் மனுச் செய்யலாம்:**

திட்டம் 1– முந்தைய ஆண்டை ஒப்பிடுகையில் "விபத்து நிகழ் எண்ணிக்கை விகிதத்தை" அதிக அளவில் குறைத்துக் காட்டிய தொழிற்சாலைக்கு இப்பரிசு அளிக்கப்படுகிறது.

திட்டம் 2– நடப்பு ஆண்டில் குறைவான "விபத்து நிகழ் எண்ணிக்கை விகிதத்தை" தெரிவித்த தொழிற்சாலைகளுக்கு இப்பரிசு அளிக்கப்படுகிறது.

திட்டம் 3– நடப்பு ஆண்டில் மிக அதிகமாக "விபத்து நிகழாத மனிதநேரம்" செயல்புரிந்த தொழிற்சாலைக்கு இப்பரிசு அளிக்கப்படுகிறது.

ரூ.2,500/- மதிப்புள்ள முதல் பரிசு

வெள்ளிக் கேடயங்கள். 90.

ரூ.1500/- மதிப்புள்ள இரண்டாம் பரிசு வெள்ளி கேடயங்கள்-90



1995 ஆம் ஆண்டு மாநிலப் பாதுகாப்பு விருதுகள் வழங்கும் விழா 29-8-1997 அன்று திருச்சியில் நடத்தப்பட்டு, பரிசு பெற்றவர்களுக்கு மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் அவர்கள் பரிசுகளை வழங்கினார்.

| ஆண்டு | விருதுக்ள் | | |
| --- | --- | --- | --- |
| | முதல் | இரண்டாம் | மூன்றாம் |
| 1995 | 79 | 68 | 61 |

*தமிழக அரசின் உயர்ந்த உழைப்பாளர் விருதுகள்:*

பாதுகாப்பு நடவடிக்கைகளை ஊக்குவிப்பதன் நோக்கமாக, இவ்விருதுகள் தொழிலாளர்களுக்கு வழங்கப்படுகிறது.

தொழிற்சாலைகளின் உற்பத்தித் திறனை உயர்த்துதல், பணிச் சூழ்நிலைகளை மேம்படுத்துதல் மற்றும் பாதுகாப்புத் தரத்தை உயர்த்துதல் ஆகியவற்றில் நல்ல கருத்துகள் தரும் தொழிலாளர்களுக்கு இவ்விருதுகள் வழங்கப்படுகின்றன. தொழிற்சாலைகளில் பணிபுரியும் தொழிலாளர்களை மேற்கூறிய துறைகளில் ஊக்குவித்து அவர்களுக்கு மாநில அளவில் அங்கீகாரம் பெற்றுத் தருவதற்காக இவ்விருதுகள் வழங்கப்படுகின்றன. கருத்துகள் தரக்கூடிய தலைப்புகள் பின்வருமாறு:-

(1) தொழில் வியாதிகளை தடுத்தல், பாதுகாப்பு, உடல்நலம், நல வசதிகள் ஆகியவற்றை மேம்படுத்துதல், பாதுகாப்பு தரத்தை உயர்த்துதல் பாதுகாப்புக் கருவிகளை மேம்படுத்துதல்.

(2) பணியில் ஏற்படும் உடற் சோர்வை குறைத்தல் மற்றும் களைப்பு நீக்கும் வழிமுறைகள்.

(3) பொருட்களைக் கையாளும் முறைகள் மற்றும் சிப்பம் கட்டும் முறைகளை மேம்படுத்துதல்.

(4) இறக்குமதி செய்யப்படும் பொருட்களுக்குப் பதிலாக உள்நாட்டு பொருட்களைப் பயன்படுத்துதல்.

(5) இயந்திரங்களையும், கருவிகளையும் அதிக அளவில் பயன்படுத்தும் செயலில் சிக்கனம், உற்பத்தி நேர சிக்கனம், மின்சக்தி சிக்கனம், எரிபொருள் சிக்கனம் ஆகியவற்றுக்கான வழிமுறைகள்.

[1998 ஏப்ரல் 24

(6) வீணாகும் பொருள் சிக்கனம், அப்படியே வீணாகும் பொருட்களை மீளப் பயன்படுத்தும் வழிமுறைகள்.

(7) வேறு ஏதேனும் வழிகளில் உற்பத்தித் திறனைக் கூட்டுதல்

(8) நிர்வாக அமைப்பின் செயல் திறனை அதிகப்படுத்துதல்

வழங்கப்படும் மூன்று வகையான விதிகளின் விவரம்:

இனம்-அ: ரூ.5,000/-க்கான பணப் பரிசுடன் 3 பரிசுகள் கொடுக்கப்படுகின்றது.

இனம்-ஆ: ரூ.3,000/-க்கான பணப் பரிசுடன் 6 பரிசுகள் கொடுக்கப்படுகிறது.

இனம்-இ: ரூ.1,000/-க்கான பணப் பரிசுடன் 15 பரிசுகள் கொடுக்கப்படுகிறது.

1995 ஆம் ஆண்டுக்கான விருதுகள் 29-8-1997 அன்று திருச்சியில் நடைபெற்ற விழாவின்போது வழங்கப்பட்டது.

| ஆண்டு | விருதுகள் | | |
|---|---|---|---|
| | முதல பரிசு ரூ.5,000/- வீதம் | இரண்டாம பரிசு ரூ.3,000/- வீதம் | மூன்றாம பரிசு ரூ.1,000/- வீதம் |
| 1995 | 3 (12 தொழிலாளர்) | 6 (12 தொழிலாளர்) | 15 (28 தொழிலாளர்) |

சிவகாசி பயிற்சி மையம்:

தீக்குச்சி மற்றும் பட்டாசுத் தொழிற்சாலைகளில் பணிபுரியும் தொழிலாளர்கள் அபாயகரமான வேதியல் பொருட்களைப் பாதுகாப்பாகக் கையாளும் வழிமுறைகளை அறியாமலேயே கையாளுகின்றனர்.

எனவே, சிவகாசி பயிற்சி மையத் தொழிற்சாலைகள் துணைத் தலைமை ஆய்வாளர் ஒவ்வொரு மாதமும் மேற்குறிப்பிட்ட தொழிலாளர்களுக்கு 10 பாதுகாப்பு பயிற்சி வகுப்புகள் நடத்துகிறார். அபாயகரமான வேதியியல் பொருட்களைப் பாதுகாப்பாகக் கையாளுதல்,



1998 ஏப்ரல் 24]

செய்முறையை பயன்படுத்துதல், எடுத்துச் செல்லுதல், சேமித்து வைத்தல் போன்ற வழிமுறைகள் சொல்லித் தரப்படுகின்றன. காலப்போக்கில் விபத்துக்களின் எண்ணிக்கையைக் குறைப்பதற்காக இப்பயிற்சிகள் அளிக்கப்படுகின்றன.

1997-இல் தீக்குச்சி மற்றும் பட்டாசு தொழிற்சாலைகளில் 182 பயிற்சி வகுப்புகள் நடத்தப்பட்டு, 9,204 தொழிலாளர்கள் பயனடைந்துள்ளார்கள்.

தொகுதி தனி நபர் விபத்துக் காப்பீட்டுத் திட்டம்:

தமிழ்நாட்டில் உள்ள தீக்குச்சி மற்றும் பட்டாசு தொழிற்சாலைகளில் பணிபுரியும் தொழிலாளர்களின் நலனுக்காக தொகுதி தனி நபர் விபத்துக் காப்பீட்டுத் திட்டம் செயல்படுத்தப்படுகிறது.

இத்திட்டம் காப்பீடு செய்யப்பட்டவர்களுக்கு விபத்துக் காரணமாக பார்வை அல்லது கை, கால்கள் இழப்பு அல்லது இறப்பு ஏற்பட்டால் நிவாரணம் அளிக்கும் வகையில் உருவாக்கப்பட்டுள்ளது. ஈட்டுறுதி பயன், தொழிலாளர்கள் பணியில் ஈடுபட்டிருக்கும்போது ஏற்படும் விபத்துக்களுக்கு மட்டுமின்றி மற்ற விபத்து நேர்வுகளுக்கும் அளிக்கப்படும்.

இத்திட்டத்தில் ரூ.50,000/-த்திற்கு (24 மணிநேரம்) காப்பீடு செய்வதன் மூலமாக தீப்பெட்டி மற்றும் பட்டாசுத் தொழிலில் ஈடுபட்டுள்ள 10 வயது முதல் 65 வயது வரையிலான தொழிலாளர்கள் பயனடைகிறார்கள்.

சிவகாசி பட்டாசுத் தொழிற்சாலைகளில் சிறப்புக் குழு ஆய்வுகள்:

பட்டாசுத் தொழிற்சாலைகளில் ஏற்படும் வெடி விபத்துக்களை தடுப்பதற்கென்றே ஒவ்வொன்றும் நான்கு அணிகள் அடங்கிய இரு சிறப்பு ஆய்வுக் குழுக்கள் அமைக்கப்பட்டன. ஒவ்வொரு அணியிலும் 3 ஆய்வாளர்கள் வீதம் இந்த நான்கு அணிகளும் செப்டம்பர் மற்றும் அக்டோபர் மாதங்களில் அனைத்து 355 பட்டாசுத் தொழிற்சாலைகளிலும், தமிழ்நாடு தொழிற்சாலை விதிகள் 1950-ன்கீழ் கூறப்பட்டுள்ள பாதுகாப்பு முறைகள் கடைபிடிக்கப்படுகின்றனவா என ஆய்வுகள் மேற்கொண்டுள்ளன. இவ்வாறு சிறப்புப் பணி மேற்கொண்டதால் பட்டாசுத் தொழிற்சாலைகளில் மேற்கொண்டு வெடி விபத்துக்கள் நடக்காமல் தடுக்கப்பட்டது.

**3. உடல்நல மேம்பாடு:-** [1998 ஏப்ரல் 24

உடல்நல மேம்பாட்டு நடவடிக்கைகளில் ஒரு தலைமை மருத்துவ அலுவலரும், எட்டு மருத்துவ அலுவலர்களும் ஈடுபட்டுள்ளனர்.

தொழில் நலவியல்:-

தொழில் நலவியல் ஆய்வுக்கூடம் சோதனைக் கருவிகளுடன் சென்னையில் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

தொழிற்சாலைகளில் தொழிலாளர்களின் பணியிடப் பாதுகாப்பு மற்றும் உடல்நலத் தகுதியினைக் கண்காணிக்க தொழில் நலவியல் பிரிவு ஏற்படுத்தப்பட்டுள்ளது. பணிநிலைப் பிரிவு, அறுவை மருத்துவர் தரத்தில் உள்ள மருத்துவர் ஒருவரைத் தலைவராகக் கொண்டு செயல்பட்டு வருகிறது.

இத்தொழில் நலவியல் பிரிவுடன் இணைந்துள்ள ஆய்வகத்தில் காற்றில் பரவக்கூடிய வேதியியல் பொருட்களான அம்மோனியா, குளோரின், சல்பர்-டை-ஆக்ஸைடு, ஹைட்ராஜன் சல்பைடு மற்றும் பல்வேறு கனிமப்பொருள் தூசிகளின் செறிவை மதிப்பீடு செய்வதற்கான வசதிகள் உள்ளன. இரைச்சல் போன்ற பௌதிகக் காரணிகளும் பணி செய்யும் இடங்களில் அளக்கப்படுகிறது.

இந்த உடல்நலக் குழு, தொழில் ரீதியான நோய்கள் ஏற்பட வாய்ப்புள்ள தொழிற்சாலைகளில் உடல்நல அளவீடுகள் மேற்கொண்டும், தொழில் ரீதியான நோய்களைக் கண்டறிந்தும், தேவைக்கேற்ப மாதிரிகள் எடுத்து வந்து ஆய்வுக் கூடத்தில் பகுத்தாய்வு செய்தும், அதற்கேற்ப நிர்வாகத்தினருக்கு தொடர் நடவடிக்கை எடுக்க அறிவுறுத்தியும், தொடர்புடைய பதிவேடுகளையும் ஆவணங்களையும் பராமரித்தும் செயல்படுகிறது. 1997 ஆம் ஆண்டில் 16 தொழில் நலவியல் அளவீடுகள் நடத்தப்பட்டு, அதன் மூலமாக தொழிலாளர்களின் தொழில் உடல்நலம் குறித்து மதிப்பீடு செய்யப்பட்டது.

மருத்துவ அலுவலர்கள் 1950 ஆம் ஆண்டு தமிழ்நாடு தொழிற்சாலைகள் சட்ட விதிகளின் கீழ் சான்றளிக்கும் மருத்துவர்களாக அறிவிக்கப்பட்டுள்ளனர். அவர்கள் கீழ்க்கண்ட பணிகளைச் செய்து வருகின்றனர்.

(1) தொழிற்சாலைகள் சட்டத்தின் அட்டவணையில் அடங்கிய அபாயகரமான செயல்முறைகள் நடைபெறும் தொழிற்சாலைகளில்



1998 ஏப்ரல் 24]

பணிபுரியும் தொழிலாளர்களைப் பரிசோதனை செய்து சான்றிதழ்கள் வழங்குதல்.

(2) வளர் இனம் பருவத் தொழிலாளர்களைப் பரிசோதனை செய்து உடல்நிலைத் தகுதிச் சான்றிதழ்கள் வழங்குதல்.

(3) உடல் நலத்திற்கு ஆபத்து விளைவிக்கும் தொழிற்சாலைகளில் உடல்நல அளவீடு நடத்துதல் மற்றும் ஆபத்துக்களைக் கண்டறிந்து அவற்றை பகுப்பாய்வு செய்து தீர்வு முறைகளை எடுத்துரைத்தல்.

(4) குழந்தைத் தொழிலாளர்கள் (பணி நீக்குதல் மற்றும் முறைப்படுத்துதல்) சட்டம், 1986 ன்கீழ் குழந்தைத் தொழிலாளர்களின் வயதினைக் கண்டறிய ஆய்வு அலுவலர்களுக்கு உதவுகின்றனர்.

தொழிற்சாலைகளில் ஏற்படும் அதிக இரைச்சல் ஒரு பெரிய இடர்பாடு ஆகும். அதிக இரைச்சலினால் தொழிற்சாலையின் உள்ளே சுற்றுச்சூழல் பாதிப்பு ஏற்பட்டு தொழிலாளர்களுக்கு காது கேளாமை ஏற்படவும், மனநோய்கள் ஏற்படவும் வாய்ப்புகள் உள்ளன. இந்த இடர்பாடுகளை சமாளித்திட தொழிற்சாலைகள் ஆய்வகத் துறை கடுமையான முயற்சியினை மேற்கொண்டு வருகிறது. தொழிற்சாலையில் பல்வேறு பகுதிகளில் ஏற்படும் இரைச்சலின் அளவினை கண்டறிந்திட தொழிற்சாலைகள் ஆய்வாளர்களுக்கு "ஒலி அளவினைக் கண்டறியும் கருவிகள்" வழங்கப்பட்டுள்ளன. இந்த ஆண்டில் 13 "ஒலி அளப்பான்" கருவிகள் வாங்கப்பட்டு அவைகள் தொழிற்சாலைகள் துணைத் தலைமை ஆய்வாளர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

தொழிற்சாலைகள் ஆய்வாளர்கள் ஆய்வின்போது இந்த ஒலி அளப்பான் கருவியினைப் பயன்படுத்தி, தொழிற்சாலைகளில் தொழிலாளர்கள் பணிபுரியும் பகுதிகளில் உள்ள அதிக இரைச்சலின் அளவினைக் கண்காணிப்பதுடன் அவற்றிலிருந்து தொழிலாளர்களை பாதுகாத்திட தகுந்த நடவடிக்கை எடுத்து வருகிறார்கள்.

**4. மாநில அளவிலான உற்பத்தித் திறன் பிரிவு:-**

இப்பிரிவு 1985ஆம் ஆண்டில் தோற்றுவிக்கப்பட்டு, தொழிற்சாலைகள் இணைத் தலைமை ஆய்வாளர் தலைமையின்கீழ் இதர ஆதரவுப் பணியாளர்களுடன் இயங்கி வருகிறது. இப்பிரிவு தொழிற்சாலைகளில் பணிபுரியும் தொழிலாளர் மற்றும் மேற்பார்வை நிலைகளில் உள்ள

பணியாளர்களுக்கு உற்பத்தித்திறன் குறித்த கருத்துக்களையும், நுணுக்கங்களையும் பரப்புவதைக் குறிக்கோளாக் கொண்டு ஈடுபட்டு வருகிறது. தொழிலாளர்களுக்கு தற்போது உள்ள வள ஆதாரங்களைக் கொண்டு, குறைந்த வேலை நேரத்தில் பொருட்கள் வீணாவதைத் தடுத்து அதிகப் பொருட்களை உற்பத்தி செய்ய கற்பிக்கப்பட்டு, ஊக்குவிக்கப்படுகிறார்கள். அதிக உற்பத்தித் திறனுக்கும் அதன் விளைவால் அதிக வருமானம் பெறவும் பல நல்ல ஊக்கத் திட்டங்களை இப்பிரிவு நடைமுறைப்படுத்துகிறது. தொழிற்சாலை அளவில், உற்பத்தித் திறன் மற்றும் அதன் நுணுக்கங்கள் குறித்து சிறப்பு அறிவைப் பெறவும், அவர்களது உற்பத்தித் திறன் மற்றும் தரத்தை மேம்படுத்தவும் உற்பத்தித் திறன் பயிற்சி வகுப்புகள் தொழிலாளர்களுக்கு நடத்தப்படுகின்றன. மேலும் இப்பிரிவு, பணியில் பாதுகாப்பு ஆராய்வு, வேலை முறையை சீர்படுத்துதல் குறித்த ஆய்வு, வேலை நேரங்களைக் குறித்த ஆய்வு மற்றும் வேலை இயக்க ஆய்வு ஆகிய பணிகளில் ஈடுபட்டு வருகிறது.

**5. சிறுதொழில் நிறுவனங்கள்:**

1-1-1998-இல் உள்ளபடி தொழிற்சாலைகள் சட்டம், 1948-ன்படி பதிவு செய்யப்பட்ட தொழிற்சாலைகளின் எண்ணிக்கை 25,443 ஆகும். இவற்றில் 14,274 தொழிற்சாலைகள் சிறுதொழில் நிறுவனங்கள் ஆகும்.

சாதாரணமாக, தொழிற்சாலைகள் சட்டம், 1948-ன்கீழ் பதிவு செய்யப்பட்ட தொழிற்சாலைகள் ஆறு மாதங்களுக்கு ஒரு முறை ஆய்வு செய்யப்பட வேண்டும். சிறு தொழில் நிறுவனங்கள் துன்பத்தைக் கருதி மேற்கொண்ட ஆய்வுக்காலம் கீழ்க்கண்டவாறு திருத்தி அமைக்கப்பட்டுள்ளது.

| வரிசை என் | தொழிற்சாலைகளின் வகைப்பாடு | ஆய்வுக்கால முறை |
|---|---|---|
| 1. | சிறு தொழில் நிறுவனங்கள் (கேடு விளைவிக்கக் கூடிய மற்றும் அபாயகரமான தொழிலில் ஈடுபடாதவை) சிறு தொழில் நிறுவன சான்று பெற்ற தொழிற்சாலைகள். | இச்சிறுதொழில் நிறுவனங்கள் தொழிலாளர்கள் அல்லது தொழிற் சங்கங்களிடமிருந்து புகார் பெறப் பட்டால் மட்டும் ஆய்வு செய்ய வேண்டும். அவ்வாறு புகார் பெறப்படாத நிலையில் ஐந்தாண்டுக்கு ஒருமுறை ஆய்வு மேற்கொள்ள வேண்டும். |
| 2. | (1) 1950ஆம் ஆண்டு தமிழ்நாடு தொழிற்சாலைகள் விதி அட்டவணை 1 முதல் 32 முடிய உள்ள அட்டவணையின் (அட்டவணை 24 தவிர) படி கேடு விளைவிக்கக்கூடிய மற்றும் அபாயகரமான தொழிலில் ஈடுபட்டுள்ள சிறுதொழில் நிறுவனங்கள் | இத்தொழிற்சாலைகள் ஆறு மாதத்திற்கு ஒரு முறை ஆய்வு செய்ய வேண்டும். |
| 3. | (2) சிறுதொழில் நிறுவனங்கள் (வகைப்படுத்தாத இதர தொழிற்சாலைகள் மட்டும் இதில் அடங்கும்.) | இத்தொழிற்சாலைகளை ஆறு மாதத்திற்கு ஒரு முறை ஆய்வு செய்யவேண்டும். |
| | (3) அட்டவணை 24-க்கு உட்பட்ட தீப்பெட்டி மற்றும் பட்டாசுத் தொழிற்சாலைகள் (அவைகள் சிறு தொழில் நிறுவனமாக வகைப்படுத்தப்பட்டாலும்.) | இத்தொழிற்சாலைகள் மூன்று மாதத்திற்கு ஒரு முறை ஆய்வு செய்யவேண்டும். |



*சிறு தொழில் நிறுவனங்களுக்கான குழு:-*

தொழிலாளர் நலச் சட்டங்களை சிறு தொழில் நிறுவனங்களில் செயல்படுத்தும் முறையை மேற்பார்வையிடுதல் மற்றும் கண்காணிப்பதற்காக ஒரு தனிக் குழுவை தமிழ்நாடு அரசு அமைத்துள்ளது. இக்குழுமம் தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறையின் செயலாளர் தலைமையின்கீழ் இயங்கி வருகிறது. இக்குழுவின் உறுப்பினர்–செயலாளராக தொழிற்சாலைகள் தலைமை ஆய்வாளர் உள்ளார். மேற்கண்ட குழு 15-05-1997 அன்று கூடியபோது உறுப்பினர்கள், தொழிற்சாலைகள் ஆய்வகத் துறையினரது ஒத்துழைப்பு சிறு தொழில் நிறுவனங்கள் வளர்ச்சிக்கு உதவியாக இருப்பதாகக் குறிப்பிட்டுள்ளார்.

**6. மனை மதிப்பீட்டுக் குழு:-**

1948ஆம் ஆண்டு தொழிற்சாலைகள் சட்டத்தின் பிரிவு ‘41 அ’-ன்படி அமைக்கப்பட்டுள்ள மனை மதிப்பீட்டுக் குழு பெரும் விபத்து மற்றும் பேரபாயம் விளைவிக்கக் கூடிய உற்பத்தித் தொழில்களில் ஈடுபடும் தொழிற்சாலைகள் விண்ணப்பத்தினை ஆராய்ந்து இத்தொழிற்சாலை அமைப்பதற்கான மனைப் பொருத்தம் மற்றும்

சுற்றுப்புற சூழ்நிலை குறித்து ஆராய்ந்து ஒப்புதல் வழங்க அரசுக்கு ஆலோசனை வழங்குகிறது.

இம்மனை மதிப்பீட்டுக் குழு, தொழிற்சாலைகள் சட்டப் பிரிவு 41-ன்படி 36 விண்ணப்பங்களைப் பெற்று அவற்றினை பரிசீலனை செய்து, அரசின் ஒப்புதலுக்காக சமர்பித்துள்ளது. அரசு இதுவரை 24 விண்ணப்பங்கள் மீது ஒப்புதல் வழங்கியுள்ளது. மீதம் 12 விண்ணப்பங்கள் அரசின் பரிசீலனையில் உள்ளது.

**7. மாநில அளவிலான உயர்மட்ட முத்தரப்புப் பாதுகாப்பு மற்றும் மாநில அளவிலான செயல் குழு / வல்லுநர் குழு**

போபால் துயர நிகழ்ச்சிக்குப் பிறகு தமிழ்நாட்டிலுள்ள அபாயகரமான இரசாயனத் தொழிற்சாலைகளில் உள்ள தொழிலாளர்கள் மற்றும் பொதுமக்கள் ஆகியோரின் பாதுகாப்பினையும், சுகாதாரத்தையும் பாதுகாக்கும் பொருட்டு அத்தொழிற்சாலைகளில் கடைப்பிடிக்கப்படும் பாதுகாப்பு நடவடிக்கைகள் போதுமானதாக உள்ளதா என ஆராய்ந்து ஒரு அறிக்கையினை அளிக்க டாக்டர் எம். சாந்தப்பா, முன்னாள் துணை வேந்தர், சென்னைப் பல்கலைக்கழகம் அவர்கள் தலைமையில் (டாஸ்க் ஃபோர்ஸ்) செயல் குழுவினை 1985 ஆம் ஆண்டு தமிழக அரசு நிறுவியது. அரசுக்கு அக்குழு முக்கியமான சில பரிந்துரைகளைச் செய்தது.

அக்குழுவினால் செய்யப்பட்ட பரிந்துரைகளின் அடிப்படையில் தொழிலக உடல்நல ஆபத்துக்களைக் குறித்த தகவல்களை மேம்படுத்தவும், இரசாயன தொழிற்சாலைகள் மற்றும் ஆபத்தை விளைவிக்கும் இரசாயனத்தை உபயோகப்படுத்தும் தொழிற்சாலைகள் மற்றும் விஷத் தன்மையுள்ள பொருட்களை உபயோகப்படுத்தும் உற்பத்தி முறைகளிலும் பாதுகாப்பு வழிவகைகளை நடைமுறைப்படுத்தவும், தமிழ்நாடு அரசு கீழ்க்கண்ட இரு குழுக்களை ஏற்படுத்தியது.

1. மாநில அளவிலான உயர்மட்ட முத்தரப்புப் பாதுகாப்புக் குழு.
2. மாநில அளவிலான செயல் குழு/வல்லுநர் குழு.

மாநில அளவிலான உயர்மட்ட முத்தரப்புப் பாதுகாப்புக் குழுவில் பல்வேறு அரசு துறைகளின் பிரதிநிதிகளில், அபாயகரமான தொழிற்சாலைகளின் பிரதிநிதிகள், தொழிற்சங்கங்களின் பிரதிநிதிகள் மற்றும் இரசாயனத் தொழிற்சாலை வல்லுநர்கள் ஆகியோர்கள்



அரசாணை எண் 153, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை, நாள் 26-2-1988-ன்படி இடம் பெற்றுள்ளனர். மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் மேற்படி குழுவின் தலைவராவார்.

மேற்படிக் குழுவின் பணி, தொடர் பணியாக உள்ளது. மாநில அளவிலான உயர்மட்ட முத்தரப்புப் பாதுகாப்புக் குழுவின் கொள்கைகளும் குறிக்கோள்களும் கீழ்க்கண்டவாறு உள்ளன.

1. மாநிலத்தில் உள்ள தொழிற்சாலைகளில் உள்ள பாதுகாப்பு மற்றும் உடல் நலம் குறித்த நிலைகளின் மீது கொள்கை முடிவுகள் எடுத்தல்.

2. செயல்/வல்லுநர் குழுவினரால் திரட்டப்பட்ட புள்ளி விவரங்களைப் பயன்படுத்தி இரசாயனம் மற்றும் ஆபத்து விளைவிக்கும் தொழிற்சாலைகளில் விரைவான மற்றும் முழுமையான பாதுகாப்பு அடைதல்.

3. இரசாயனம் மற்றும் ஆபத்து விளைவிக்கும் தொழிற்சாலைகளில் பேராபத்துக் கட்டுப்பாடு அமைப்பு அறிமுகப்படுத்துதல்

4. அபாயகரமான தொழிற்சாலைகளின் அமைவிடம்/மனைப் பகுதியில் உற்பத்தி முறையால் ஏற்படும் அபாயங்கள் மற்றும் அதனைச் சரி செய்வதற்கான பாதுகாப்பு அம்சங்கள் ஆகியவை குறித்து திறனாய்வு செய்தல்.

அரசு ஆணை எண் 139, நாள் 26-9-1996-ன்படி இக்குழுவானது 1-7-1996 முதல் 30-6-1999 வரை மூன்று ஆண்டு காலத்திற்கு மீள அமைக்கப்பட்டது.

மாநில அளவிலான உயர்மட்ட முத்தரப்புப் பாதுகாப்புக் குழு ஆறு மாதங்களுக்கு ஒரு முறை கூட வேண்டும்.

மாநில அளவிலான செயல்/வல்லுநர் குழுவில் அரசின் பல்வேறு துறையைச் சார்ந்த பிரதிநிதிகளும், தொழில்நுட்ப நிபுணர்களும் இடம் பெற்றுள்ளனர். தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்புத் துறை செயலாளர் இதன் தலைவர் ஆவார்.

இக்குழுவானது அரசாணை எண் 138, நாள் 26-9-1996-ன்படி 1-7-1996 முதல் 30-6-1999 வரையிலான 3 ஆண்டு காலத்திற்கு மீள அமைக்கப்பட்டுள்ளது.

இந்தக் குழு மூன்று மாதங்களுக்கு ஒரு முறை கூட வேண்டும். உறுப்பினர் செயலர்/தொழிற்சாலைகள் தலைமை ஆய்வாளர் மேற்கண்ட இரண்டு குழுக்களுக்கும் உறுப்பினர்–செயலராகச் செயல்படுவார். ஆபத்து விளைவிக்கக் கூடியதும், நச்சுத்தன்மை கொண்டுள்ளதுமான இரசாயனப் பொருட்களை உற்பத்தி செய்யக்கூடியதும், அவற்றை கையாளக்கூடிய தொழிற்சாலைகளில் துரித ஆய்வு மேற்கொண்டு, அவற்றில் நடைமுறையிலுள்ள பாதுகாப்பு ஏற்பாடுகள் குறித்த விவரங்களைச் சேகரித்தலும், அவற்றின் மேம்பாட்டிற்கான ஆலோசனைகளைக் கூறுவதும் மாநில அளவிலான உழைப்புப் படை/வல்லுநர் குழுவின் முக்கிய பணிகள் ஆகும். இக்குழுவின் உறுப்பினர்கள் தமிழ்நாட்டிலுள்ள 59 இடர்மிகுந்த தொழில் நிறுவனங்களை ஆய்வு செய்து, தமது அறிக்கையைச் சமர்பித்துள்ளனர்.

சர்க்கரை ஆலைகள், எரிசாராயத் தொழிற்சாலைகள், மதுபானம் தயாரிக்கும் தொழிற்சாலைகள் ஆகியவற்றின் பாதுகாப்பு, தொழிலாளர் உடல்நலம் மற்றும் சுற்றுச் சூழல் மாசடைதல் ஆகிய அம்சங்களை ஆய்ந்து உரிய பரிந்துரைகள் செய்யும் பொருட்டு, உறுப்பினர்—செயலாளர்/தலைமைத் தொழிற்சாலைகள் ஆய்வாளர், சென்னை 6 அவர்களை தலைவராகவும், பாதுகாப்பு உடல்நலம் மற்றும் சுற்றுச் சூழல் குறித்த அறிவியல் ஆகிய துறைகளிலுள்ள மூன்று நிபுணர்களை உறுப்பினர்களாகக் கொண்டும், அரசு ஆணை எண் 133, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை, நாள் 19-9-1997 இல் ஒரு துணைக் குழு அமைக்கப்பட்டுள்ளது. இக்குழு பணிகளைத் துவங்கியுள்ளது. இன்னும் 6 மாதத்திற்குள் இதனுடைய அறிக்கையை அரசுக்கு சமர்ப்பிக்கும்.

**எதிர்காலத் திட்டங்கள் (1998-99)**

தமிழ்நாட்டிலுள்ள மேற்கூறிய தொழிற்சாலைகளில் மீண்டும் ஆய்வு மேற்கொள்ள ஒரு துணைக் குழு (Sub-Committee) அமைக்கும் பொருட்டு உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.



**1998-99ஆம் ஆண்டுக்கான பகுதி - 2 திட்டங்கள்**

உதகமண்டலம் மற்றும் பொள்ளாச்சி ஆகிய மலைப் பிரதேசங்கள் அடங்கிய எல்லைகள் சரிவர அரசு போக்குவரத்து மூலம் இணைக்கப்படவில்லை. எனவே, இந்த இரண்டு மலைப்பிரதேசங்களில் உள்ள தொழிற்சாலைகளில் தொழிற்சாலைகள் சட்டம் மற்றும் இதரச் சட்டங்களை நல்லமுறையில் அமலாக்கம் செய்ய அந்த இடங்களில் உள்ள ஆய்வாளர்களுக்கு 1998-99இல் வாகனம் வாங்க ரூ. 7.20 இலட்சம் அரசு அனுமதி அளித்துள்ளது. உறுப்பினர்-செயலர் மற்றும் மண்டல அலுவலகங்களுக்கு ரூ. 1.75 இலட்சம் செலவில் 5 பேக்ஸ் இயந்திரங்கள் வாங்கவும், அம்பத்தூர் மற்றும் சேலம் துணைத் தலைமை தொழிற்சாலை ஆய்வாளர் அலுவலகங்களுக்கும், மற்றும் மதுரை இணைத் தொழிற்சாலை தலைமை ஆய்வாளர் இல்லத்திற்கும் 0.24 இலட்சம் செலவில் 3 தொலைபேசி அமைக்கவும், தலைமை அலுவலகத்திற்கு கணினி மற்றும் துணைப் பாகங்கள் வாங்கவும் ரூ. 2.00 இலட்சத்திற்கு அரசு ஒப்புதல் அளித்துள்ளது.

## அத்தியாயம் 8

### தொழிலாளர் அரசு ஈட்டுறுதித் திட்டம்

இம்மாநிலத்தில் இத்திட்டம் 1955 முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டம் மத்திய அரசு தொழிலாளர் நலத்துறையின்கீழ் சமூகப் பாதுகாப்புப் பிரிவுக் கட்டுப்பாட்டின்கீழ் இயங்கும் தொழிலாளர் நலக் காப்பு நிதிக் கழகம் மூலம் நிர்வகிக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்திற்காக நிதி இக்கழகத்தினால் நிர்ணயிக்கப்பட்ட தொழிலாளர்கள் மற்றும் முதலாளிகளிடமிருந்து பெறப்படும் பங்குத் தொகைகள் மூலம் கிடைக்கிறது.

இத்திட்டம் மின்சக்தியைப் பயன்படுத்தும் 10-க்கு மேற்பட்ட பணியாளர்களைக் கொண்ட தொழிற்சாலைகள் மற்றும் மின்சக்தியைப் பயன்படுத்தாமல் 20-ம் அதற்கு மேற்பட்ட பணியாளர்களைக் கொண்ட தொழிற்சாலைக்குப் பொருந்தும். 1-1-1997 முதல் மாத வருமானம் ரூ.6,500-க்கு குறைவாகப் பெறும் ஊழியர்கள் இத்திட்டத்தின்கீழ் பயன்பெறுவார்கள். அதைப்போல் வேலையளிப்போர் மற்றும் தொழிலாளர் 4.75 விழுக்காடு மற்றும் 1.75 விழுக்காடு என திருத்தி அமைக்கப்பட்டுள்ளது. இத்திட்டம் தமிழ்நாட்டில் உள்ள எல்லா

[1998 ஏப்ரல் 24

மாவட்டங்களிலும் விரிவாக்கப்பட்டுள்ளது. (இராமநாதபுரம் மற்றும் விழுப்புரம் மாவட்டங்கள் தவிர)

இத்திட்டத்தின்கீழ் பின்வரும் உதவிகளை தொழிலாளர்களுக்கும் அவர்களது குடும்பத்தார்களுக்கும் பெறுவதற்காக வகை செய்யப்பட்டுள்ளது.

| | |
|---|---|
| 1. மருத்துவ உதவி | : மருத்துவப் பொருட்களும் மற்றும் சிகிச்சையுமாக அளித்தல். |
| 2. உடல் நலமின்மைக்காக உதவி<br>3. நீடித்த உடல் நலமின்மைக்காக உதவி<br>4. பேறுகால உதவி | பணமாக அளித்தல் |
| 5. தற்காலிகமாக இயலாமை உற்றோருக்கு உதவி<br>6. நிரந்தரமாக இயலாமை உற்றோருக்கு உதவி<br>7. சார்ந்துள்ளோர்கள் நல உதவி<br>8. இறுதிச் சடங்குக்குரிய செலவுத் தொகை<br>9. உடல் நலமின்மைக்காக கூடுதல் உதவி | பணமாக அளித்தல் |

இத்திட்டத்தின்கீழ் மருத்துவ வசதி அளிக்கும் பொறுப்பு தமிழ்நாடு அரசின் கடமையாகும்.

இம்மாநிலத்தில் உள்ள 7 தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருத்துவமனைகளும், அந்த மருத்துவமனைகளில் உள்ள படுக்கைகளின் எண்ணிக்கைகளும் பின்வருமாறு:

| | |
|---|---|
| 1. தொ.அ.ஈ. மருத்துவமனை, அயன்புரம், சென்னை-23... | 616 |
| 2. தொ.அ.ஈ. மருத்துவமனை, கோயம்புத்தூர் .. | 500 |
| 3. தொ.அ.ஈ. மருத்துவமனை, மதுரை .. | 209 |
| 4. தொ.அ.ஈ. மருத்துவமனை, வேலூர் .. | 50 |



1998 ஏப்ரல் 24]

| | |
|---|---|
| 5. தொ.அ.ஈ. மருத்துவமனை, சிவகாசி, விருதுநகர் மாவட்டம் .. | 50 |
| 6. தொ.அ.ஈ. மருத்துவமனை, சேலம் .. | 50 |
| 7. தொ.அ.ஈ. மருத்துவமனை, ஒசூர், தர்மபுரி மாவட்டம் .. | 50 |
| 8. தொ.அ.ஈ. மருத்துவமனை, இணைப்புகள் .. | 136 |
| படுக்கைகள் அரசு மருத்துவமனையில் ஒதுக்கீடு செய்யப்பட்டது .. | 266 |
| மொத்தம் .. | **1,927** |

இது தவிர 153 தொழிலாளர் அரசு ஈட்டுறுதி நிலையான மருந்தகங்கள், 5 நடமாடும் மருந்தகங்கள் மற்றும் இரண்டு பயன்படுத்திக் கொள்ளும் மருந்தகங்கள் இம்மாநிலத்தில் இயங்கி வருகின்றன. இவைகள் அந்தந்த மண்டல நிர்வாக மருத்துவ அலுவலர்கள் நிர்வாக கட்டுப்பாட்டில் இயங்கி வருகின்றது.

தொழிலாளர் அரசு ஈட்டுறுதி நிலையான மற்றும் நடமாடும் மருந்தகங்களின் 62 மருந்தகங்கள் காப்பு நிதிக் கழகத்தினால் கட்டப்பட்ட கட்டடங்களில் இயங்குகின்றன.

தனியார் வாடகைக் கட்டடங்களில் இயங்கும் தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருந்தகங்கள் சொந்தக் கட்டடங்களில் இயங்குவதற்காக, கட்டடங்கள் கட்டித்தர, 1-4-1990 முதல் 7:1 என்ற விகிதத்தில் மொத்தச் செலவினைப் பகிர்ந்துகொள்ள, காப்புறுதிக் கழகமும், தமிழக அரசும் ஒப்புக்கொண்டுள்ளன.

1-12-1997 முடிய இத்திட்டத்தின் மூலம் காப்புறுதி செய்து கொண்டவர்களின் எண்ணிக்கை தொடர்பான விவரங்களை கீழ்க்கண்டுள்ளவாறு காணலாம்.

இதில் அடங்கிய குடும்பங்களில் காப்புறுதி செய்து கொண்ட தொழிலாளர்கள் எண்ணிக்கை 11,90,290.

பயன் அடைவோரின் எண்ணிக்கை (மொத்தம்) .. 46,18,325

[1998 ஏப்ரல் 24

இம்மாநிலத்தில் உள்ள ஈட்டுறுதி செய்யப்பட்ட தொழிலாளர்களின் உறுப்பினர்களும், இதில் முழு மருத்துவ சிகிச்சை பெறத்தகுதி உடையவர்கள்.

1-4-1997 முதல் முழுமையாக மருத்துவ வசதிக்கான தொகையை ரூ.410இல் இருந்து ரூ.500/- ஆக புது தில்லி காப்புநிதிக் கழகம் உயர்த்தி உத்தரவிட்டுள்ளது. இதில் ரூ.165/- மருத்துவச் செலவிற்காகவும், ரூ.335/- நிர்வாகச் செலவிற்காகவும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

*தொ.அ.ஈ. திட்ட வளர்ச்சித் திட்டங்கள்:*

4-1-1996 அன்று உச்ச நீதிமன்றத்தால் வழங்கப்பட்ட தீர்ப்பின்படி தொ.அ.ஈ. மருத்துவமனைகளில் இரத்த வங்கி செயல்பட மருந்தகங்கள் மற்றும் அழகூட்டும் பொருட்கள் சட்டத்தின்படி (Drugs and Cosmetics Act) தொ.அ.ஈ. திட்டத்தின்கீழ் உரிமம் பெற (Licence) உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டு கீழ்க்காணும் மருத்துவமனைகளில் இரத்த வங்கி செயல்பட உரிமம் பெறப்பட்டுள்ளது.

1. தொ.அ.ஈ. மருத்துவமனை, அயன்புரம், சென்னை-23.
2. தொ.அ.ஈ. மருத்துவனை, கோயம்புத்தூர்.

## அத்தியாயம்-9

## தொழிலாளர் வருங்கால வைப்பு நிதி

1952ஆம் ஆண்டு தொழிலாளர் வருங்கால வைப்புநிதி பலவகை விதித் துறைகள் சட்டத்தின் விதித்துறைகளின்கீழ் வகுக்கப்பட்ட 3 திட்டங்களில், 1952ஆம் ஆண்டு தொழிலாளர் வைப்பு நிதித் திட்டமும் ஒன்று. இது 1-11-1952ஆம் நாளிலிருந்து செயலுக்கு வந்தது. இச்சட்டம் ஜம்மு-காஷ்மீர் மாநிலம், அசாம் மாநிலத்தில் தேயிலைத் தோட்டங்கள் நீங்கலாக இந்தியா முழுமைக்கும் விரிவுப்படுத்தப்பட்டுள்ளது. தொழிலாளர்களுக்கு கட்டாயப் பங்குத் தொகை வருங்கால வைப்பு நிதியினை ஏற்படுத்துவதே இத்திட்டத்தின் நோக்கமாகும். இதில் தொழிலாளரும், தொழிலதிபரும் பங்குத் தொகை செலுத்தவேண்டும். தொடக்கத்தில் இச்சட்டம் ஆறு பெருந்தொழில்கள் சம்பந்தப்பட்ட தொழிலாளர்களுக்கு மட்டுமே செயல்படுத்தப்பட்டது. படிப்படியாக இது மேலும் பல தொழில்களுக்கும் ஏனைய நிறுவனங்களுக்கும்



1998 ஏப்ரல் 24]

விரிவுபடுத்தப்பட்டுள்ளது. இன்று இத்திட்டம் 177 தொழில்களில் ஈடுபடுத்தப்பட்டுள்ள தொழிலாளர்களுக்கு பல்வகையான நிறுவனங்களுக்கும் பொருந்துமாறு செய்யப்பட்டுள்ளன.

வயது முதிர்வு ஓய்வு, பணி ஓய்வு, நிரந்தரமான மற்றும் முற்றிலும் ஊனமுற்றோர் பணியிலிருந்து ஓய்வு பெறும் முன்னரே இறக்க நேரிடுதல் மற்றும் இதுபோன்ற பல நிலையில் உள்ளவர்களுக்கு அவர்கள் செலுத்தும் வருங்கால வைப்பு நிதியிலிருந்து மாதாந்திர ஓய்வு ஊதியம் வழங்கும் திட்டம் குறித்து தொழிலாளர் ஓய்வூதியத் திட்டம் 16-11-1995 முதல் அறிமுகப்படுத்தப்பட்டு, செயல்படுத்தப்பட்டு வருகிறது. இதனைத் தொடர்ந்து 1971ஆம் ஆண்டு தொழிலாளர் குடும்ப ஓய்வூதியத் திட்டம் கைவிடப்பட்டது.

*நிதியினை நிருவகித்தல்:*

தொழிலாளர் வருங்கால வைப்பு நிதித் திட்டம், குடும்ப ஓய்வூதியத் திட்டம், ஈ.டி.எல்.ஐ. திட்டம் ஆகிய இம்மூன்று திட்டங்களும் மத்திய பொறுப்பாட்சியால் நிர்வாகிக்கப்படுகிறது. இது மத்திய அரசினால் நியமிக்கப்பட்ட தலைவர், துணைத் தலைவர் மத்திய வருங்கால வைப்பு நிதி ஆணையர் (பதவி நிலையால்), மத்திய அரசின் 5 பிரதிநிதிகள், மாநில அரசுகளின் 15 பிரதிநிதிகள், தொழிலாளர் அமைப்புகளின் 10 பிரதிநிதிகள், தொழிலதிபர் அமைப்புகளின் 10 பிரதிநிதிகள் ஆகியோரைக் கொண்ட முத்தரப்புக் குழுவாகும். தற்போதுள்ள மத்திய பொறுப்பாட்சியர் குழு 9-4-1997இல் மத்திய அரசால் இக்குழு மீண்டும் மாற்றியமைக்கப்பட்டது.

*பொருந்தும் தன்மை:*

இச்சட்டம், திட்டங்கள் விதித் துறைகள் 20 அல்லது அதற்கு மேற்பட்ட தொழிலாளர்கள் பணிக்கமர்த்தப்பட்டுள்ள ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட தொழில்களில் ஈடுபட்டுள்ள தொழிற்சாலைகள் / நிறுவனங்களுக்கு அல்லது மத்திய அரசு குறிப்பிட்டுள்ள பல்வகை நிறுவனங்களுக்குப் பொருந்தும். 20 தொழிலாளர்களைப் பணியமர்த்தியுள்ள புதிய தொழில் நிறுவனங்களைப் பொறுத்தமட்டில், மூன்று ஆண்டுகளுக்கு இச்சட்டம் பொருந்தாது. 50 தொழிலாளர்களுக்குக் குறைவாகப் பணி அமர்த்தியுள்ள கூட்டுறவுச் சங்கங்களில் சட்டத்தின்கீழ் பதிவு செய்யப்பட்டுள்ள கூட்டுறவுச்

[1998 ஏப்ரல் 24

சங்கங்களுக்கும், மின் சக்தி உதவி இன்றிச் செயல்படுபவையும் கட்டுப்பாட்டிலுள்ள அதற்கு சொந்தமான அல்லது மத்திய/மாநில அரசின் சட்டத்தால் நிறுவப்பட்ட நிறுவனங்களுக்கு (ஆனால் இந்த நிறுவனங்களில் பணியாளர்கள் இத்தகைய பயன்களைப் பெற்று, அனுபவித்து வரவேண்டும்) இச்சட்டம் பொருந்தாது. இச்சட்டத்தின் விதித் துறைகள்கீழ் வராத தொழிற் சாலைகள்/நிறுவனங்கள் அவற்றின் பெரும்பான்மை தொழிலாளர்களின் ஒப்புதலுடன் தானாக முன்வந்து இச்சட்டத்தின்கீழ் கொண்டு வருமாறு கோரலாம்.

*பங்குத் தொகை வீதம்:*

இத்திட்டத்தின்கீழ் தொழிலாளி மற்றும் வேலை அளிப்போர் இருவரும் அடிப்படைச் சம்பளம், அகவிலைப்படி (உணவு சலுகைக்கான ரொக்க மதிப்பு உட்பட) மற்றும் தொடர்படி எவையேனும் வழங்கப்பட்டால் அதனையும் சேர்த்து மொத்த ஊதியத்தில் 10% மற்றும் 12% முறையே பங்குத் தொகையாகச் செலுத்த வேண்டும்.

**திருத்திய பத்து சதவிகித அளவு கீழ்க்கண்ட நிறுவனங்களுக்குப் பொருந்தும்:**

(அ) 20 நபர்களுக்கும் குறைவானோர் பணிபுரியும் எல்லா நிறுவனங்கள்.

(ஆ) பி.எப்.ஐ.ஆர்.-ஆல் நலிந்த தொழிற்சாலை என அறிவிக்கப்பட்டவைகள்.

(இ) நிதி ஆண்டின் இறுதியில் ஏற்பட்ட மொத்த நஷ்டம் அந்நிறுவனத்தின் நிகர மதிப்பிற்கு சமமாகவோ அல்லது அதிகமாகவோ இருக்கும் நிறுவனங்கள்.

(ஈ) கீழ்க்கண்ட ஏனைய நிறுவனங்கள்

1) சணல்

2) பீடி

3) செங்கல்

4) நூற்பாலையைத் தவிர்த்த கயிறு தொழில் நிறுவனங்கள்

5) பிசின் தொழிற்சாலைகள்.



1998 ஏப்ரல் 24]

மாற்றியமைக்கப்பட்ட 12 சதவிகித பங்குத் தொகை மேலே குறிப்பிட்ட இனங்கள் தவிர 1952ஆம் ஆண்டைய தொழிலாளர் வைப்பு நிதி மற்றும் பல்வகைச் சட்டத்தின் கீழ்வரும் அனைத்து நிறுவனங்கள்/தொழிற்சாலைகளுக்குப் பொருந்தும். மேற்சொன்ன சட்டத் திருத்தம் 22-9-1997 முதல் அமலாக்கப்படுகிறது.

*நிர்வாகக் கட்டணங்கள்:*

இத்திட்டத்தின்கீழ் வருகின்ற நிறுவனங்களின் தொழிலதிபர்களிடமிருந்து, உறுப்பினர்களின் மொத்தச் சம்பளத்தில் (இதன் அடிப்படையில் வருங்கால வைப்பு நிதி வசூலிக்கப்படுகிறது) 0.65 சதவீதம் என்ற வீதத்தில் நிர்வாகக் கட்டணம் வசூலிப்பதின் மூலம், இந்நிதியை நிர்வகிப்பதற்கான செலவுச் செய்யப்படுகிறது. விலக்களிக்கப்பட்ட நிறுவனங்கள் எந்த மொத்த கூலியில் வருங்கால வைப்புநிதி வசூலிக்கப்படுகின்றதோ, அந்த மொத்தக் கூலித் தொகையில் 0.09% என்ற வீதத்தில் ஆய்வுக் கட்டணம் செலுத்த வேண்டும்.

**1952-ம் ஆண்டு தொழிலாளர் வருங்கால வைப்பு நிதித் திட்டம் உறுப்பினராதல்:**

மாதச் சம்பளம் 5,000 ரூபாய்க்கு மிகைப்படாத தொழிலாளர்கள் அனைவரும் 1-10-1994-ந் நாளிலிருந்து தொழிற்சாலை நிறுவனத்தில் பணியில் சேர்ந்த நாளிலிருந்து வருங்கால வைப்புநிதி திட்டத்தில் உறுப்பினராக வேண்டும். முன்னர் குறிப்பிடப்பட்ட குறைந்த பணிக்கால அளவிற்கு உட்பட்டு அனைத்துத் தொழிலாளர்களிடமிருந்தும் வருங்கால வைப்பு நிதி பிடிக்கப்பட வேண்டும்.

***இத்திட்டத்தின்கீழ் வரும் நிறுவனங்கள்/சந்தாதாரர்கள் (1952ஆம் ஆண்டு தொழிலாளர் வருங்கால வைப்புநிதித் திட்டம்)***

இவ்வட்டாரத்தில் 31-12-1997 ஆம் நாள்வரை இச்சட்டத்தின் கீழ் கொண்டு வரப்பட்டுள்ள நிறுவனங்கள் சந்தாதாரர்களின் விவரம் வருமாறு :

| | விலக்களிக் கப்பட்டவை | விலக்களிக் கப்படாதவை | மொத்தம் |
|---|---|---|---|
| நிறுவனங்களின் எண்ணிக்கை | 425 | 36,518 | 36,943 |
| சந்தாதாரர்களின் எண்ணிக்கை (இலட்சத்தில்) | 5.16 | 24.82 | 29.98 |

1-1-1997 முதல் 31-12-1997ஆம் நாள் வரையிலான கால அளவில் 3,038 நிறுவனங்கள் இச்சட்டத்தின் கீழ் கொண்டுவரப்பட்டுள்ளன.

**வட்டாரக் குழு:**

1952ஆம் ஆண்டு தொழிலாளர் வருங்கால வைப்பு நிதிச் சட்டம் ஒவ்வொரு மாநிலத்திற்கும் ஒரு வட்டாரக் குழுவை அமைக்க வகைசெய்கின்றது. இதில் தமிழ்நாடு அரசின் தொழிலாளர் நலத் துறை செயலாளர் தலைவராவார். இதில் தொழிலாளர் நல ஆணையரும், நிதித் துறை துணைச் செயலாளரும் மாநில அரசின் பிரதிநிதிகளான உறுப்பினர்களாக இருப்பர். இக்குழுக்கள் மத்திய பொறுப்பாட்சியர் குழுவின் கட்டுப்பாட்டின்கீழ் செயல்படுகின்றன.

வட்டாரக் குழு மத்தியக் குழுமத்திற்குப் பின்வரும் பிரச்சினைகளில் அறிவுரை வழங்குகிறது.

1. மத்தியக் குழு அவ்வப்போது வட்டாரக் குழுவிற்கும் அனுப்புகின்ற விஷயங்கள் குறித்து.

2. பொதுவாக மாநிலத்தில் இத்திட்டத்தின் நிர்வாகம் தொடர்பான அனைத்து விஷயங்கள் அதிலும் குறிப்பாக,

அ) வருங்கால வைப்பு நிதி பங்குத் தொகைகள், ஏனைய கட்டணங்களின் வசூல் முன்னேற்றம்.

ஆ) வழக்குகளுக்கு விரைந்து தீர்வு காணல்.

இ) உரிமைக் கோரிக்கைகளை விரைந்து தீர்த்து வைத்தல்.

ஈ) இந்நிதி உறுப்பினர்களுக்கு ஆண்டுக் கணக்குகளை ஒப்படைத்தல்.



உ) திரும்பப் பெறக்கோரும் தொகைகளுக்கு விரைந்து அனுமதி வழங்குதல்.

**துணை வட்டார அலுவலகங்கள்:**

சென்னையில் உள்ள வட்டார அலுவலகம், சென்னை, காஞ்சிபுரம், திருவள்ளூர் மற்றும் மத்திய அரசின் நேரடி ஆட்சிக்கு உட்பட்ட பாண்டிச்சேரி மாநிலம் ஆகியவற்றிலுள்ள சந்தாதாரர்களின் தேவைகளை நிறைவு செய்கிறது. கூடுதலாக, தமிழ்நாடு வட்டாரத்தில் கோவை, மதுரை, திருச்சி, திருநெல்வேலி, சேலம், வேலூர் ஆகிய இடங்களில் 6 துணை வட்டார அலுவலகங்கள் அருகிலுள்ள சந்தாதாரர்களின் தேவைகளை நிறைவு செய்வதற்காகச் செயல்பட்டு வருகின்றன. மேலும், அருகிலுள்ள சந்தாதாரர்களின் வசதியைப் பொருட்டு அம்பத்தூரில் ஒரு சார்பு கணக்கு அலுவலகம் அமைக்கப்பட்டுள்ளது.

**துணை வட்டார அலுவலகங்கள் வருமாறு:**

| | | |
|---|---|---|
| கோயம்புத்தூர் | : | கோயம்புத்தூர், நீலகிரி |
| மதுரை | : | மதுரை, திண்டுக்கல், இராமநாதபுரம், தூத்துக்குடி, சிவகங்கை, விருதுநகர் மற்றும் தேனி. |
| திருச்சிராப்பள்ளி | : | திருச்சி, புதுக்கோட்டை, தஞ்சாவூர், விழுப்புரம், கடலூர், பெரம்பலூர், நாகப்பட்டினம், கரூர், திருவாரூர். |
| திருநெல்வேலி | : | கன்னியாகுமரி, திருநெல்வேலி. |
| சேலம் | : | சேலம், தருமபுரி, நாமக்கல் மற்றும் ஈரோடு. |
| வேலூர் | : | வேலூர் மற்றும் திருவண்ணாமலை. |

**1952ஆம் ஆண்டு தொழிலாளர் வருங்கால வைப்பு நிதித் திட்டத்தின் பலன்கள்:**

இந்நிதியில் உறுப்பினராக உள்ள ஒருவர், அவருடைய பங்குத் தொகையையும் தொழிலதிபரின் பங்குத் தொகையையும், வட்டியுடன் முழுவதுமாக பின்வரும் நேர்வுகளில் 30 நாட்களுக்குள் திரும்பப்பெற உரிமையுடையவராவார்.

[1998 ஏப்ரல் 24

1. 55 வயதான பின்னர் பணியிலிருந்து ஓய்வு பெறும்போது.

2. நிரந்தரமாக முழு தகுதியின்மை காரணமாக பணியிலிருந்து ஓய்வு பெறும்போது.

3. வெளிநாட்டில் நிரந்தரமாக குடியேற அல்லது வேலைவாய்ப்புத் தேடி இந்தியாவிலிருந்து குடிபெயரும்போது.

4. ஆட்குறைப்பு காரணமாகப் பணியிலிருந்து பணியிறவு செய்யப்படும்போது.

5. தானாக முன்வந்து பணி ஓய்வு பெறும் திட்டத்தின்கீழ் பணியிறவு செய்யப்படும்போது.

இது தவிர, ஒரு உறுப்பினர் பணத்தைப் பெற விண்ணப்பித்த நாளுக்கு அடுத்து குறைந்தது 2 மாதங்கள் தொடர்ந்து பணியாற்றி முடித்ததன்பேரில், இருதரப்பு பங்குத் தொகையையும் வட்டியுடன் சேர்த்து, முழுமையாகப் பெற தகுதி உடையவராவார்.

ஒரு உறுப்பினர் இறந்து விட்டால், அவர் நியமித்த ஒருவர் அல்லது சட்டப்படியான அவருடைய வாரிசுதாரர் இருபங்கு தொகைகளையும் வட்டியுடன் சேர்த்துப் பெறத் தகுதியுடையவராவார். திருமணம் காரணமாக பெண் உறுப்பினர்கள் பணியிலிருந்து ராஜினாமா செய்தால் இரண்டு மாதம் காத்திருக்க வேண்டும் என்ற அவசியம் இந்நேர்வில் பொருந்தாது.

### சிறப்பு சேமநிதி (Special reserve fund)

வெளியேறும் உறுப்பினர்களுக்கு அவர்களது கூலியில் பிடித்தம் செய்யப்பட்டு கணக்குகளைத் தீர்க்கும்போது, தொழிலதிபரால் இந்நிதியில் தொகை செலுத்தப்படாத அவர்களுடைய பங்குத் தொகையை மட்டும் கொடுப்பதற்காகச் சிறப்பு சேமநிதி ஒன்று ஏற்படுத்தப்பட்டுள்ளது. எனினும், சிறப்புச் சேமநிதியிலுள்ள இத்தொகை தொழிலதிபர் பங்குத் தொகை செலுத்தாததற்காக கீழ்க்கண்ட எதிர்பாரா நேர்வுகளைத் தவிர உபயோகிக்க கூடாது:

1. ஐந்து வருடங்களுக்கு மேலாக நிர்வாகம் மூடியிருக்குமேயானால்.

2. நிறுவனங்களைக் கலைத்துவிடும்படியான சூழ்நிலையில்.



1998 ஏப்ரல் 24]

3. தேசிய நெசவாலைகள் (N.T.C. Mills) பொறுத்தவரையில் நெசவாலை எடுத்துக்கொள்ளும்/தேசியமயமாக்கப்படுத்துவதற்கு முன்பும்.

### தொழிலாளர் வருங்கால வைப்பு நிதி கோரிக்கையினைத் தீர்த்து வைத்தல்

கீழே காட்டப்பட்டுள்ள விவர அட்டவணை வரப்பெற்ற கோரிக்கைகளின் எண்ணிக்கை, தீர்வு காணப்பட்டவை, நிலுவை ஆகியவற்றைக் காட்டுகிறது. (1-1-1997 முதல் 31-12-1997 வரை)

| | | |
|---|---|---|
| 1. | 1-1-1997 அன்றுள்ளபடி நிலுவையாக உள்ள கோரிக்கைகள் | 14,813 இனங்கள் |
| 2. | 1-1-1997 முதல் 31-12-1997 வரை வந்த கோரிக்கைகள் | 2,33,607 இனங்கள் |
| 3. | தீர்வு காணப்பட வேண்டிய மொத்த கோரிக்கைகள் | 2,42,880 இனங்கள் |
| 4. | தீர்வு காணப்பட்ட கோரிக்கைகள் | 1,93,320 கோரிக்கைகள் |
| 5. | குறைகளைத் திருத்த திருப்பி அனுப்பப்பட்ட, மறுக்கப்பட்ட கோரிக்கைகள் | 45,424 கோரிக்கைகள் |
| 6. | 31-12-1997 அன்றுள்ளபடி நிலுவையாக உள்ள கோரிக்கைகள் | 9,136 கோரிக்கைகள் |

**1-1-1997 முதல் 31-12-1997 வரை தீர்வு காணப்பட்ட கோரிக்கைகள் குறித்த பகுப்பாய்வு**

| | | இனங்கள் எண்ணிக்கை | வழங்கப்பட்ட தொகை (ரூ. இலட்சத்தில்) |
|---|---|---|---|
| 1. | இறப்பு | 3755 | 987.03 |
| 2. | வயது முதிர்வு ஓய்வு | 55.44 | 2981.15 |
| 3. | பதவி விலகல் | 180986 | 23626.94 |
| 4. | ஆட்குறைப்பு | 1527 | 252.78 |
| 5. | பல்வகை | 1508 | 282.75 |
| | **மொத்தம்** | **193320** | **28130.65** |

[1998 ஏப்ரல் 24

**31-12-1997** நாளன்றுள்ளவாறு நிலுவையாக உள்ள கோரிக்கைகள் குறித்த பகுப்பாய்வு வருமாறு:—

| | | |
|---|---|---|
| (1) | இரண்டு மாதங்களுக்கும் குறைவாக நிலுவையிலுள்ள கோரிக்கைகள் | 9,136 இனங்கள் |
| (2) | 2 மாதங்களுக்கு மேல் 6 மாதங்களுக்குக் குறைவாக நிலுவையாக உள்ள கோரிக்கைகள் | - |
| | மொத்தம் | **9,136** |

தொகை திரும்பப் பெறுதல்

உறுப்பினர்கள், அவர்கள் உறுப்பினர்களாக பின்வரும் காரணங்களுக்காக இருக்கும் காலத்தில் தொகைகளைத் திரும்பப்பெற/முன்பணமாக பெற அனுமதிக்கப்படுவர்.

(அ) உறுப்பினர் எடுக்கும் ஆயுள் காப்பீட்டுப் பத்திரத்திற்காக.

(ஆ) குடியிருக்கும் வீடு/ அடுக்கு வீடு அல்லது வீட்டுமனை வாங்க, குடியிருக்கும் வீடு கட்ட

(இ) குறிப்பிட்ட முகவர்களிடமிருந்து பெற்ற வீட்டுக் கடன்களைத் திரும்பச் செலுத்த.

(ஈ) தொழிற்சாலை/நிறுவனம் கதவடைப்பு அல்லது மூடப்பட்டால் அல்லது வேலை நிறுத்தம் நீங்கலாக ஏனைய காரணத்தினால் உறுப்பினர் இரண்டு மாதம் கூலி பெறவில்லை எனில்.

(உ) உறுப்பினர் அல்லது அவருடைய சகோதரர் அல்லது சகோதரி திருமணம் அல்லது குழந்தையின் படிப்பிற்காக.

(ஊ) உறுப்பினர் அல்லது அவருடைய குடும்பத்தினர் உடல் நலமின்மைச் செலவிற்காக.

(எ) வெள்ளம், பூகம்பம் அல்லது கலவரம் போன்ற காரணங்களினால் சொத்துக்களுக்குச் சேதம் ஏற்படுத்துவதால் ஏற்படும் எதிர்பாராச் செலவு.

(ஏ) உறுப்பினர் பணியாற்றும் தொழிற்சாலை அலலது நிறுவனத்தில் மின் வெட்டுக் காரணமாக அவருக்கு ஏற்படும் ஊதிய இழப்பைச் சரிகட்ட.

(ஐ) உடல் ஊனமுற்ற உறுப்பினர் அவருக்குத் தேவையான சாதனங்களை வாங்குவதற்காகவும் செலவிற்காக.



1998 ஏப்ரல் 24]

(ஒ) பணியிலிருந்து ஓய்வு பெறும் ஒரு வருடத்திற்குள் வைப்புத் தொகை முன்பணமாக 90% எடுத்துக்கொள்ளலாம் (பத்தி 68 என்.என்).

1-1-1997 முதல் 31-12-1997 வரையில் அனுமதிக்கப்பட்ட வரையிலான கால அளவில் திரும்பப் பெற்ற முன்பணம் உறுப்பினர்களுக்கு வழங்கியது பற்றிய விவரம்.

| | | இனங்களின் எண்ணிக்கை | வழங்கப் பட்ட தொகை (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|---|---|
| 1. | ஆயுள் ஈட்டுறுதி பாலிசிகளுக்கு தொகை செலுத்துவதற்கு | 7716 | 208.96 |
| 2. | வீட்டுமனை/வீடு வாங்குவதற்காக அல்லது வீடு கட்டுவதற்காக பெறப்பட்ட கடன் தொகையைத் திருப்பி செலுத்துவதற்கு | 9988 | 3879.57 |
| 3. | கடன் கணக்கைத் தற்காலிகமாக முடிப்பதற்கு அல்லது நிறுத்தி வைப்பதற்கு | 3295 | 215.26 |
| 4. | உறுப்பினரை/குடும்ப உறுப்பினர்களை மருத்துவமனையில் சிகிச்சைக்காக ஏற்பட்ட செலவைச் சமாளிப்பதற்கு | 2600 | 268.83 |
| 5. | உறுப்பினரின்/உறுப்பினருடைய மக்களின் சகோதரரின்/சகோதரியின் திருமணச் செலவுகளைச் சமாளிப்பதற்கு | 16996 | 1644.29 |
| 6. | வெள்ளம், நிலநடுக்கம் அல்லது கலவரங்கள் போன்ற அசாதாரண ஊதிய இழப்பைச் சரிக்கட்டுவதற்கு | | |
| 7. | மின்வெட்டு காரணமாக ஊதிய இழப்பைச் சரிகட்ட | 28191 | 1333.37 |
| 8. | உடல் ஊனமுற்ற உறுப்பினர்கள் துணைக் கருவிகள் வாங்குவதற்கு | | |
| 9. | பணியிலிருந்து ஓய்வு பெறுவதற்குமுன் ஒரு வருட காலத்திற்குள் 90% வைப்புத் தொகையிலிருந்து எடுக்கப்பட்டது | | |
| | மொத்தம் | **68786** | **7550.28** |

[1998 ஏப்ரல் 24

**ஆண்டுக் கணக்கு விவர அறிக்கை வழங்குதல்**

இந்நிலையில் உறுப்பினர் கணக்கில் இருந்த தொடக்க இருப்பு அவ்வாண்டு பெறப்பட்ட பங்குத் தொகை, வரவு வைக்கப்பட்ட மொத்த வட்டித் தொகை, தொகை பெறப்பட்டிருந்தால், அது குறித்த விவரங்கள் ஆண்டு இறுதியில் உள்ள இறுதி இருப்பு ஆகிய விவரங்களைக் காட்டுகின்ற கணக்குக் குறித்த விவர அறிக்கை தொழிலாளர் எந்தத் தொழிற்சாலையில்/நிறுவனத்தில் இறுதியாகப் பணி புரிந்தாரோ அந்தத் தொழிற்சாலையின்/நிறுவனத்தின் தொழிலதிபர் மூலமாக ஒவ்வொர் உறுப்பினர்களுக்கும் வழங்கப்படுகிறது.

1-1-1997ஆம் நாளிலிருந்து 31-12-1997ஆம் நாள் வரையிலான கால அளவில் 33.63 இலட்சம் ஆண்டுக் கணக்கு விவர அறிக்கைக் குறிப்புகள் உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன. 31-12-1997ஆம் நாள் நிலவரப்படி இன்னும் 18.54 இலட்சம் கணக்கு விவரக் குறிப்புகள் வழங்க வேண்டியுள்ளது.

**1995ஆம் ஆண்டு தொழிலாளர் ஓய்வூதியத் திட்டம்:**

முன்பிருந்த 1971ஆம் ஆண்டு தொழிலாளர் குடும்ப ஓய்வூதியத்திற்குப் பதிலாக, புதியதாக அறிமுகப்படுத்தப்பட்ட 1995ஆம் ஆண்டின் ஓய்வூதியத் திட்டம் அதன் உறுப்பினர்களுக்கும் மற்றும் அவர்களின் குடும்ப உறுப்பினர்களுக்கும் மாதாந்திர ஓய்வூதியம் பெறும்வகையில் வகை செய்யப்பட்டுள்ளது. இத்திட்டம் 16-11-1995ஆம் நாளிலிருந்து செயல் படுத்தப்படுகிறது.

| உறுப்பினர்கள் | குடும்ப உறுப்பினர்கள் |
|---|---|
| வயது முதிர்ந்த ஓய்வூதியம் | விதவை/மனைவியை இழந்த வருக்கான ஓய்வூதியம் |
| பணி ஓய்வுக்குப் பின் ஓய்வூதியம் குறுகிய கால ஓய்வூதியம் | குழந்தைகளுக்கான ஓய்வூதியம் அநாதைகளுக்கான ஓய்வூதியம் |
| நிரந்தர மற்றும் முற்றிலும் செயலற்ற நிலையில் உள்ளவர்களுக்கான ஓய்வூதியம் | வாரிசாக நியமிக்கப்பட் டோருக்கான ஓய்வூதியம் |



1998 ஏப்ரல் 24]

**1995ஆம் ஆண்டு தொழிலாளர் ஓய்வூதியத் திட்டத்தின் சிறப்பியல்புகள்**

1971ஆம் ஆண்டின் குடும்ப ஓய்வூதியத் திட்டத்தில் அங்கத்தினர்களாக உள்ள எல்லா உறுப்பினர்கள் மற்றும் 16-11-1995ஆம் தேதிக்குப் பிறகு வருங்கால வைப்பு நிதியில் அங்கத்தினர்களாகும் உறுப்பினர்கள் எல்லோருக்கும் இத்திட்டம் பொருந்தும்.

வருங்கால வைப்பு நிதியில் உறுப்பினர்களாக இருந்து, 1971-ம் ஆண்டு தொழிலாளர் குடும்ப ஓய்வூதியத் திட்டத்தில் சேராதவர்கள் இன்னும் பணியில் இருந்தால் அவர்கள் 1995ஆம் ஆண்டு தொழிலாளர் ஓய்வூதியத் திட்டத்தில் சேர இசைவு தெரிவிக்கலாம், அதற்கான காலக்கெடு எதுவுமில்லை.

1971ஆம் ஆண்டின் முந்தைய குடும்ப ஓய்வூதியத் திட்டத்தில் உறுப்பினர்களாக இருந்து 1-4-1993-க்குப் பிறகு வேலையின்றி இருந்தாலும் 1995ஆம் ஆண்டு தொழிலாளர் ஓய்வூதியத் திட்டத்தில் இசைவு தெரிவிக்கலாம்.

அடிப்படை ஊதியம் மற்றும் அகவிலைப்படி சேர்ந்து இவற்றில் 8.33% ஓய்வூதியத் திட்டத்திற்கு பங்குத் தொகையாகச் செலுத்த வேண்டும்.

தொழிலதிபர்கள் செலுத்தும் வருங்கால வைப்பு நிதி பங்குத் தொகையிலிருந்து ஓய்வூதிய பங்குத் தொகைக்கு மாற்றப்பட வேண்டும்.

உறுப்பினர்கள் சம்பளத்தில் 1.16 சதவிகிதம் மத்திய அரசு தன் பங்காக குடும்ப ஓய்வூதியத் திட்டத்திற்கு அளிக்கிறது. இத்திட்டத்தின் கீழ் ஓய்வூதியம் பெறுவதற்கு ஒவ்வொரு உறுப்பினரும் குறைந்தது தகுதியான 10 வருட காலம் பணி முடித்திருக்க வேண்டும்.

1971ஆம் வருட குடும்ப ஓய்வூதியத் திட்டத்தின்கீழ் பணியாற்றிய காலமும் தகுதியான பணிக்காலத்தை தீர்மானிப்பதற்கு கணக்கில் எடுத்துக்கொள்ளப்படும்.

1971ஆம் ஆண்டின் குடும்ப ஓய்வூதியத் திட்டத்தின்கீழ் 15-11-1995 வரையில் பணியாற்றிய காலத்திற்கு உண்டான ஓய்வூதியப் பயன்கள் வழங்கப்படும்.

16-11-1995 முதல் ஓய்வூதியம் வழங்குவதற்கான முறையை கீழ்க்கண்ட சூத்திரத்தில் உள்ளவாறு கணக்கிடலாம்:-

[1998 ஏப்ரல் 24

ஓய்வூதியத்திற்கான ஊதியம் X ஓய்வூதியத்திற்கான பணிக்காலம்

70

விதவைகள் மற்றும் குழந்தைகள் ஓய்வூதியம் வழங்குவதற்கு குறைந்தபட்சம் பத்து வருடம் தகுதியான பணிக்காலம் என்பது பொருந்தாது.

ஓய்வூதியத் திட்டத்தின்கீழ் உறுப்பினர் ஒரு மாதகால சந்தாவினை செலுத்தியிருந்தாலும் அவருக்கு இயலாமை ஓய்வூதியம் வழங்கப்படுதல் வேண்டும்.

சாதாரணமாக 58 வயதினை எய்தியவருக்கு ஓய்வூதியம் வழங்கப்படுதல் வேண்டும்.

50 வயதினை எய்திய உறுப்பினர் ஒருவர் குறைவான ஓய்வூதியம் பெறுவதற்கு தனது விருப்பத்தைத் தெரிவிக்கலாம்.

குறைந்த ஓய்வூதியம் பெறுவதற்கு உறுப்பினர் விருப்பம் தெரிவித்தால் அவரது மனைவி/நியமிக்கப்பட்ட நபருக்கு, தாம் செலுத்திய முதலீட்டிலிருந்து ஒரு ஒட்டுமொத்த தொகையை வழங்கலாம்.

10 வருடகால தகுதியான பணிக்காலம் இல்லாத உறுப்பினர் ஓய்வூதியம் பெற தகுதியில்லாதபோது, திரும்பப் பெறத்தக்க பயன் தொகையோ அல்லது திட்டத்தின் சான்றிதழையோ பெற தனது விருப்பத்தினை தெரிவிக்கலாம்.

ஓய்வூதியத்திற்கான உறுப்பினரின் முந்தைய பணிக்காலத்தை கணக்கிட திட்டத்தின் சான்றிதழ் வழி செய்கிறது.

திட்ட சான்றிதழ் பெற்றிருக்கும் உறுப்பினர் அவர் பணியில் இல்லாதபோது இறக்க நேரிடின் அவரது குடும்ப உறுப்பினர்கள் ஓய்வூதியப் பயன்களைப் பெறமுடியும்.

விதவைகள் ஓய்வூதியத்துடன், குழந்தைகள் ஓய்வூதியமும் அதிகபட்சம் இரண்டு குழந்தைகள் வரையில் ஒரே சமயத்தில் ஓய்வூதியம் அளிக்க வகை செய்யப்பட்டுள்ளது.



1998 ஏப்ரல் 24]

திருமணமான மகள்களுக்கும், அவர்களின் 25 வயது வரையில் குழந்தைகள் ஓய்வூதியம் வழங்க வகைசெய்யப்பட்டுள்ளது.

ஓய்வூதியம் பெற்றுக் கொண்டிருக்கும் சமயத்தில் விதவை/மனைவியை இழந்தவர் இறக்க நேரிடின் அல்லது மறுமணம் செய்துகொள்ளும் பட்சத்தில், அநாதைகளுக்கான ஓய்வூதியம் கூடுதலாக்கப்பட்டு விதிதப்படி அனுமதிக்கப்படும்.

தனக்கென குடும்பம் இல்லாத ஒரு உறுப்பினர் எந்த நபரை வேண்டுமானாலும் ஓய்வூதியப் பயன்களைப் பெறுவதற்கு வாரிசுதாரர்களாக நியமிக்கலாம்.

24 வருட தகுதியான பணிக்காலத்தை முடித்த நபர் ஒருவர் தனது 58 வயதினை அடையும்போது குறைந்தபட்ச ஓய்வூதியமாக ரூ. 500/- பெறலாம்.

இச்சட்டத்தின் கீழ் தொகுத்துப் பெறல் (Commutation) ஓய்வூதியம் பெறவும் வழிவகை செய்யப்பட்டுள்ளது. அதிகபட்சமாக, மூன்றில் ஒரு பங்கு ஓய்வூதியத் தொகையை தொகுக்கப் பெற்று அதற்கு ஈடாக சாதாரண ஓய்வூதியத்தைப் போல் 100 பங்கு சரி சமமான முதலீட்டுத் தொகையை மொத்தமாக பெற வகை செய்யப்பட்டுள்ளது. 16-11-1995 முதல் இது நடைமுறைப்படுத்தப்படும்.

ஓய்வூதிய நிதிக்கு தொழிலதிபர் தனது பங்கினை செலுத்தத் தவறினாலும் தகுதியுள்ள எல்லா நபர்களுக்கும் உத்திரவாதமாக ஓய்வூதியம் வழங்குவதற்கு வகை செய்யப்பட்டுள்ளது.

வருடாந்திர ஆய்வு மற்றும் நிதியின் மதிப்பீடு ஆகியவற்றை ஆய்வு செய்வதன் மூலம், இத்திட்டத்தின்கீழ் வழங்கப்படும் பயன்களை மறு ஆய்வு செய்யப்படுகிறது.

பயனீட்டாளர்களுக்குத் தாமாகவே வங்கியின் மூலமாக ஓய்வூதியம் வழங்கப்படும்.

இத்திட்டத்தின்படி, ஓய்வூதியம் பெறுவதற்கான மாத ஊதியம் அதிகப்பட்சமாக ரூ.5,000/-ஆகும். இருப்பினும் ஓய்வூதியத்திற்கான பங்குத் தொகை ஓய்வூதியத் திட்டம் நடைமுறைக்கு வந்த நாள்முதல் அல்லது ஊதியம் ரூ.5,000/-க்கு மிகைப்பட்ட நாள் முதல் இவற்றில் எது

முன்னதோ அதுமுதல். தொழிலதிபர் மற்றும் தொழிலாளரின் விருப்பத்திற்கிணங்க மாத ஊதியம் ரூ.5,000/-க்கு மிகைப்படினும் ஓய்வூதியம் வழங்கப்படும்.

15-11-1995 நிலுவையில் உள்ளபடி உறுப்பினர்களின் கணக்கில் உள்ள மொத்த வைப்பு நிதித் தொகை (இருபங்குகளும் சேர்த்து) திரும்பப் பெறக்கூடிய நோக்கங்களுக்காக கிடைக்கச் செய்ய வேண்டும். இதன் எந்த ஒருப் பகுதியும் ஓய்வூதிய நிதிக்கு மாற்றப்படக்கூடாது.

ஓராண்டிற்கு பிறகு ஓய்வூதியதாரர்களுக்கு 16-11-1996 முதல் 4% நிவாரணம் அளிக்கப்படுகின்றது.

**1995ஆம் ஆண்டு தொழிலாளர் ஓய்வூதியத் திட்டத்தின்கீழ் தீர்வு காணப்பட்ட ஓய்வூதியக் கோரிக்கைகளின் விவரம்**

(1-1-1997 **முதல்** 31-12-1997 **வரை**)

தீர்வு காணப்பட்ட மொத்த ஓய்வூதியக் கோரிக்கைகள் (விவரங்கள் தனித்தனியே)

| பெறப்பட்ட மொத்த விண்ணப்பங்களின் எண்ணிக்கை | தீர்வுகாணப்பட்ட கோரிக்கைகளின் எண்ணிக்கை | தகுதி இல்லாமல் ஓய்வு பெறும் உறுப்பினர்களின் ஓய்வூதியம் | விதவை/ நியமிக்கப்பட்ட நபரின் ஓய்வு ஊதியம் | ஊனமுற்றவர்களின் ஓய்வு ஊதியம் | அனாதைகளின் ஓய்வு ஊதியம் | குழந்தைகளின் ஓய்வூதியம் |
|---|---|---|---|---|---|---|
| 35371 | 16346 | 12040 | 4245 | 3 | 58 | 5441 |

தொழிலாளர் நல வைப்பீட்டுடன் இணைந்த காப்புறுதித் திட்டம்

**முன்னுரை**

பணியிலிருக்கும்போது இறக்கக்கூடிய வருங்கால வைப்பு நிதி உறுப்பினர்களின் குடும்பங்களுக்கு கூடுதல் பாதுகாப்பு அளிக்கும் நோக்குடன் 1976ஆம் ஆண்டு தொழிலாளர் நல வைப்பீட்டுத் திட்டத்துடன் இணைந்த காப்புறுதித் திட்டம் 1952ஆம் ஆண்டின் தொழிலாளர் வருங்கால வைப்பீட்டு நிதிகள் மற்றும் பல்வகை விதித் துறைகள் சட்டத்தின்கீழ் இயற்றப்பட்டது.





**பொருத்தமுடைமை**

தொழிலாளர் நல வைப்பீட்டுத் திட்டத்துடன் இணைந்த காப்புறுதித் திட்டம், 1976ஆம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் முதல் நாள் முதற்கொண்டு செயலுக்கு வந்தது. 1952ஆம் ஆண்டு தொழிலாளர் நல வருங்கால வைப்பு நிதிகள் மற்றும் பல்வகை விதித் துறைகள் சட்டம் பொருந்துகிற அனைத்து தொழிற்சாலைகள் / தொழில் நிறுவனங்களின் தொழிலாளர்களுக்கும் இது பொருந்தக் கூடியதாகும்.

**வருங்கால வைப்பு நிதித் திட்டத்தில் உறுப்பினராதல்:**

வருங்கால வைப்பு நிதித் திட்டத்தில் அனைத்து உறுப்பினர்களும் 1952ஆம் ஆண்டு தொழிலாளர் வருங்கால வைப்பு நிதிகள் பல்வகை விதித் துறைகள் சட்டம் 17-ஆம் பிரிவின் கீழ் விலக்களிக்கப்பட்ட வருங்கால வைப்பு நிதி உறுப்பினர்களும் இத்திட்டத்தின் கீழ் வருவர்.

**பங்குத் தொகை விகிதம்:**

தொழிலாளர், பங்குத் தொகை எதனையும் செலுத்த வேண்டியதில்லை. ஆயினும், தொழிலதிபரும், மத்திய அரசும் உறுப்பினர் சம்பளத்தின் முறையே 0.5 சதவீதம் மற்றும் 0.25% என்ற விகிதத்தில் காப்புறுதி நிதிக்குப் பங்குத் தொகை செலுத்த வேண்டும்.

*திட்டத்தின் நன்மைகள்:*

வருங்கால வைப்பு நிதி திட்டத்தில் உறுப்பினராக உள்ள ஒருவர், பணியில் இருக்கும்போது இறக்கும் நேர்வில் அவரது வருங்கால வைப்பு நிதித் தொகையைப் பெறும் நபருக்கு அத்தொகையுடன் முந்தைய 12 மாதங்களில் அல்லது அவர் உறுப்பினராக இருந்த கால அளவில், இதில் எது குறைவான கால அளவோ, அக்கால அளவில் இறந்துவிட்ட உறுப்பினரின் வருங்கால வைப்பு நிதி கணக்கிலுள்ள சராசரி இருப்புத் தொகைக்குச் சமமான உத்திரவாதத் தொகை ஒன்றும் வழங்கப்படுகின்றது. ஆனால் கணக்கிலுள்ள சராசரி இருப்புத் தொகை ரூ.25,000/-க்கு மேற்படுகிறபோது, ரூ.25,000-மும் ரூ.25,000/-க்கு மேற்படுகிற தொகையில் 25 சதவீதம் தொகையும் அவருக்குக் கொடுக்கத்தக்க தொகையாகும். மொத்தத்தில் அவ்வாறு வழங்குகிற தொகை ரூ.35,000/-க்கு மேற்படக்கூடாது.

[1998 ஏப்ரல் 24

## அத்தியாயம் - 10

### வேலைவாய்ப்புப் பணிகள்

வேலைவாய்ப்புப் பணி இந்தியாவில் இரண்டாம் உலகப் போருக்குப் பின் விடுவிக்கப்பட்ட போர் வீரர்கள் மற்றும் இதர பணியாளர்களைப் பணியமர்த்துவதற்காக தனிப்பட்ட அமைப்பு தேவை என்பதால், நாட்டின் பல்வேறு பகுதிகளில் வேலைவாய்ப்பு அலுவலகங்கள் துவக்கப்பட்டன. 1946 ஆம் ஆண்டு வரை, வேலைவாய்ப்புப் பணி, போர்ப் பணியிலிருந்து விடுவிக்கப்பட்ட பணியாளர்கள் மற்றும் போர் வீரர்களுக்காக மட்டுமே செயல்பட்டு வந்தது. 1948-க்குப் பிறகு அனைத்து வகை மனுதாரர்களுக்கும் இப்பணி விரிவுபடுத்தப்பட்டது. மைய அரசின் கட்டுப்பாட்டின்கீழ் இருந்து வந்த வேலைவாய்ப்பு அலுவலகங்கள் 1956 ஆம் ஆண்டு நவம்பர் மாதத்திலிருந்து மாநில அரசுகளின் கட்டுப்பாட்டின்கீழ் கொண்டு வரப்பட்டன. மைய அரசிடமிருந்து மாநில அரசுக்கு மாற்றப்பட்டபின் 1963 ஆம் ஆண்டு வரை தமிழ்நாட்டின் மாநில வேலைவாய்ப்பு அலுவலகங்கள் மாநில தொழிலாளர் நலத் துறை ஆணையரின்கீழ் செயல்பட்டு வந்தன. 1963 ஆம் ஆண்டில் வேலைவாய்ப்பு அலுவலகங்களும், அதுவரை தொழில் துறை நிர்வாகக் கட்டுப்பாட்டின்கீழ் இயங்கி வந்த தொழிற்பயிற்சி நிறுவனங்களும் ஒருங்கிணைக்கப்பட்டு, வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறை என்ற புதிய துறை உருவாக்கப்பட்டு அதன்கீழ் வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறை இயக்ககம் செயல்பட ஆரம்பித்தது.

வேலைவாய்ப்பு அலுவலகங்களில் அடிப்படைப் பணி, வேலை தேடுவோரைப் பதிவு செய்து அவர்களைப் பணியில் அமர்த்துவதாகும். வேலைவாய்ப்பு அலுவலகங்கள் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் மற்றும் இதர தேர்வு நிறுவனங்கள் கட்டுப்பாட்டின் கீழ் வராத மைய, மாநில அரசு மற்றும் அரசுத் துறை நிறுவனங்களில் உள்ள பணிக்காலியிடங்களுக்கு தகுதிவாய்ந்த மனுதாரர்களைப் பரிந்துரை செய்கின்றன. தமிழ்நாட்டில் செயல்பட்டு வரும் வேலைவாய்ப்பு அலுவலகங்களின் எண்ணிக்கை கீழ்வருமாறு:

| | | |
|---|---|---|
| (1) | மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகங்கள் .. | 29 |
| (2) | துணை வேலைவாய்ப்பு அலுவலகம் .. | 1 |



1998 ஏப்ரல் 24]

*சிறப்பு அலுவலகங்கள் :*

| | | |
|---|---|---|
| (3) | தொழில் மற்றும் செயல் வேலைவாய்ப்பு அலுவலகம், சென்னை. .. | 1 |
| (4) | உடல் ஊனமுற்றோருக்கான சிறப்பு வேலைவாய்ப்பு அலுவலகம், சென்னை .. | 1 |
| (5) | மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகம் (தொழில் திறனற்றோர்), சென்னை .. | 1 |
| (6) | தொழில்நுட்பப் பணியாளர்களுக்கான மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகங்கள் .. | 2 |
| (7) | பழங்குடியினருக்கான சிறப்பு தொழில் நெறி வழிகாட்டும் நிலையங்கள் (உதகமண்டலம், சங்கராபுரம், சேலம், திருவண்ணாமலை) .. | 4 |
| (8) | ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினருக்கான பயிற்றளிப்பு மற்றும் வழிகாட்டும் நிலையங்கள் (திருச்சிராப்பள்ளி, கோயம்புத்தூர், திருநெல்வேலி, வேலூர் மற்றும் கடலூர்) .. | 5 |
| (9) | பல்கலைக்கழக வேலைவாய்ப்பு தகவல் மற்றும் வழிகாட்டும் நிலையங்கள் .. | 3 |
| (10) | மண்டலத் துணை இயக்குநர் அலுவலகங்கள் .. | 4 |
| | மொத்தம் .. | 51 |

இவை தவிர, தமிழ்நாட்டில் 13 உடல் ஊனமுற்றோர்க்கான சிறப்புப் பிரிவுகள் மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகங்களுடன் இணைந்து செயல்பட்டு வருகின்றன.

அரசாணை எண் 1371, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை, நாள் 20-7-1989-ன்படி, வேலைவாய்ப்பு அலுவலகங்களின் செயல்பாடு குறித்து பெறப்படும் கடுமையான புகார்களை விசாரிக்கும் பொருட்டு, ஒரு சிறப்புக் குழு அமைக்கப்பட்டுள்ளது. புகார்களின்மீது புலன் ஆய்வு செய்ய ஒரு சிறப்புக் குழு அமைக்கப்பட்டுள்ளது புகார்களின் மீது புலனாய்வு செய்யப்பட்ட விவரம் பின்வருமாறு:

| வருடம் | விசாரிக்கப்பட்ட புகார்களின் எண்ணிக்கை |
|---|---|
| 1989 | 19 |
| 1990 | 14 |
| 1991 | 19 |
| 1992 | 15 |
| 1993 | 15 |
| 1994 | 20 |
| 1995 | 31 |
| 1996 | 33 |
| 1997 | 27 |

வேலைவாய்ப்பு அலுவலகப் பணிகளைக் கணினிமயமாக்கும் திட்டத்திற்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டு வருகிறது. இந்நிதியாண்டு வரை 24 வேலைவாய்ப்பு அலுவலகங்கள் கணினி மயமாக்கப்பட்டுள்ளன. எஞ்சியுள்ள ஒன்பது அலுவலகங்கள் படிப்படியாக கணினிமயமாக்கப்படவுள்ளன. வேலைவாய்ப்பு அலுவலகங்களைக் கணினிமயமாக்குவதின் மூலம் வேலைவாய்ப்பு அலுவலகங்கள் வேலை தேடுவோருக்கும், வேலை அளிப்போருக்கும் திறமை வாய்ந்த, புகாருக்கு இடமளிக்காத விரைவான சேவையை அளிக்க இயலும்.

இதுவரை, வேலை தேடுவோரைப் பதிவு செய்து அவர்களைப் பணியமர்த்தும் பணியில் மட்டும் ஈடுபட்டு வந்த வேலைவாய்ப்பு அலுவலகங்கள் தற்கால மற்றும் வருங்கால பொருளாதாரத் தேவைகளின் அடிப்படையில் புதிய முறையில் மாற்றியமைக்கப்பட வேண்டியுள்ளன. வேலைவாய்ப்புப் பணி, அமைப்பு ரீதியிலான துறைகளை மட்டுமின்றி, அமைப்பு ரீதியில் அ லாத தொழிலாளர்கள் மற்றும் இதர பணித்துறைகளையும் சார்ந்து செயல்பட வேண்டியுள்ளது. அதாவது, வேலைவாய்ப்பு அலுவலகங்கள் வேலைவாய்ப்பு, சுய வேலைவாய்ப்பு மற்றும் தொழில் பயிற்சி வாய்ப்புகளில் மொத்தத்தில் பெருக்கம் காண முனைய வேண்டும்.





**வேலை நிலவரத் தகவல் திட்டம்**

வேலைவாய்ப்பு அலுவலகங்கள் (கட்டாய காலியிட அறிவிப்புச் சட்டம்) 1959 இன்படி பொதுத் துறையைச் சார்ந்த அனைத்து நிறுவனங்களும், 25-ம் அதற்கும் மேற்பட்ட பணியாளர்களைக் கொண்ட தனியார் துறையைச் சார்ந்த நிறுவனங்கள் (வேளாண்மையைச் சார்ந்த நிறுவனங்கள் நீங்கலாக) ஒவ்வொரு காலாண்டு இறுதியிலும் அந்நிறுவனங்களில் பணியாற்றும் மொத்தப் பணியாளர்கள் எண்ணிக்கை, ஏற்பட்ட பணிகாலி இடங்கள், நிரப்பப்பட்ட பணிகாலியிடங்கள், மற்றும் தகுதியுள்ள பணியாளர்கள் கிடைக்காததால் நிரப்பப்படாமல் உள்ள பணிகாலி இடங்கள் ஆகிய விவரங்களைக் குறிப்பிட்ட படிவத்தில் வேலைவாய்ப்பு அலுவலகங்களுக்கு அனுப்புதல் வேண்டும். இது தவிர, இரண்டு ஆண்டுகளுக்கொருமுறை பணியாளர்களைப் பற்றிய தொழில் வாரியான விவரங்கள் வேலையளிப்போரிடமிருந்து சேகரிக்கப்பட்டு வருகின்றன.

**தொழில்நெறி வழிகாட்டும் பணி பற்றிய செயல்பாடுகள்**

மாணவர்களுக்கும், வேலைவாய்ப்பு அலுவலகப் பதிவுதாரர்களுக்கும் உதவுவதற்காக வேலைவாய்ப்பு அலுவலகங்களில் தொழில்நெறி வழிகாட்டிப் பிரிவுகள் பல்வேறு தொழில் வழிகாட்டிப் பணிகளை மேற்கொண்டு வருகின்றன. தினந்தோறும் நடத்தப்படும் கூட்டுக் கலந்துரையாடல்கள், பதிவு செய்யும்போது அளிக்கப்படும் தொழில் நெறி வழிகாட்டி ஆலோசனைகள், தன்னம்பிக்கையை வளர்க்கும் தொழில்நெறி வழிகாட்டிப் பணிகள் மற்றும் தொழில் நெறிப் பேச்சுக்கள் ஆகியவை மட்டுமல்லாது தொழில் தகவல் கண்காட்சிகள் மற்றும் கருத்தரங்குகளும் இப்பணியில் அடங்கும். வேலைவாய்ப்பு அலுவலகங்களில் செயல்படும் தொழில்நெறி வழிகாட்டும் பிரிவுகள் தவிர, பல்கலைக்கழக வேலைவாய்ப்பு தகவல் மற்றும் வழிகாட்டும் நிலையங்கள் மூன்றும், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினருக்கான பயிற்றுவிப்பு மற்றும் வழிகாட்டும் நிலையங்கள் ஐந்தும், பழங்குடியினருக்கான சிறப்புத் தொழில நெறி வழிகாட்டும் நிலையங்கள் நான்கும் பல்கலைக்கழக மாணவர்கள் மற்றும் ஆதி திராவிட மற்றும் பழங்குடியின மனுதாரர்களுக்கு தனிப்பட்ட முறையில் தொழில்நெறி வழிகாட்டிப் பணிகளை மேற்கொண்டு வருகின்றன.

[1998 ஏப்ரல் 24

1997ஆம் ஆண்டில், 55,636 மனுதாரர்கள் தொழில்நெறித் தகவல்களைப் பெற்றுள்ளனர். கூட்டுக் கலந்துரையாடல்கள் வாயிலாக 83,314 மனுதாரர்கள் பயன்பெற்றுள்ளனர். தொழில் தகவல் கண்காட்சிக்கு 89,892 மாணவர்கள் வருகை தந்துள்ளனர். மேலும், தன்னம்பிக்கையை வளர்க்கும் தொழில்நெறி வழிகாட்டிப் பணிகள் வாயிலாக 12,430 ஆதி திராவிட மற்றும் பழங்குடியின மனுதாரர்கள் பயன்பெற்றுள்ளனர். பள்ளிகள் கல்லூரிகளில் நடத்தப்பட்ட தொழில்நெறிப் பேச்சுக்கள் வாயிலாக 48,460 மாணவர்கள் பயன்பெற்றுள்ளனர்.

**கிராமப்புற பள்ளிகளைத் தத்து எடுத்து தொழில்நெறி வழிகாட்டிப் பணியை அப்பள்ளிகளில் தீவிரமாக மேற்கொள்ளும் முன்னோடித் திட்டம்**

மேல்நிலைப் பள்ளிக் கல்வி முடிந்த மாணவர்களுக்கு தொழில் நெறி வழிகாட்டிப் பணியை தீவிரமாக மேற்கொள்வதற்கேற்ப ஒவ்வொரு மாவட்டத்திலும், கிராமப்புறத்தில் உள்ள ஓர் அரசு மேல்நிலைப் பள்ளியைத் தத்து எடுப்பதற்கு அரசாணை எண் 17, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை, நாள் 23-1-1995-ன் வாயிலாக ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளன. இதன்படி ஒவ்வொரு மாவட்டத்திலும் சுமார் 200 மாணவர்கள் பயிலும் ஒரு கிராமப்புற மேல்நிலைப் பள்ளி, கல்வித் துறையுடன் கலந்தாலோசித்து தேர்வு செய்யப்பட்டு, அப்பள்ளியில் மேல்நிலைக் கல்வி பயிலும் மாணவர்களுக்கு தொழில்நெறி வழிகாட்டிப் பணி தீவிரமாக மேற்கொள்ளப்பட்டது. பாடக்குறிப்புகள் தயாரிக்கவும், தொழில்நெறி வழிகாட்டிச் சொற்பொழிவாளர்களுக்கு மதிப்பூதியம் வழங்கவும், ஒவ்வொரு மாவட்டத்திற்கும் ரூ.2,000 ஒப்பளிப்பு செய்யப்பட்டது. 1997-98 ஆம் ஆண்டில், மேற்படித் திட்டத்தின் கீழ் 22 பள்ளிகள் தத்தெடுக்கப்பட்டு, சீரிய முறையில் இத்திட்டம் செயல்படுத்தப்பட்டது. இத்திட்டத்திற்குக் கிடைத்த நல்வரவேற்பினைக் கருத்தில் கொண்டு, கல்வித் துறையுடன் கலந்தாலோசித்து 1998-99 ஆம் ஆண்டிலும் மேலும் பல பள்ளிகளை இத்திட்டத்தின்கீழ் கொண்டு வ[illegible]று வேலைவாய்ப்பு அலுவலக தொழில்நெறி வழிகாட்டி அலுவலர்களுக்கு அறிவுரை வழங்கப்பட்டுள்ளது.

புதிதாகத் தோற்றுவிக்கப்பட்ட தேனி, நாமக்கல், திருவாரூர், பெரம்பலூர் மற்றும் கரூர் மாவட்டங்களில் மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகங்கள் உருவாக்கப்பட்டன.



1998 ஏப்ரல் 24]

அரசுப் பள்ளிகளில் ஏற்படும் இடைநிலை ஆசிரியர் காலியிடங்களை ஆசிரியர் தேர்வு வாரியத்தின் மூலம் நிரப்பப்பட்டு வந்த முறை மாற்றி அமைக்கப்பட்டு அக்காலியிடங்கள் வேலைவாய்ப்பு அலுவலகப் பதிவு மூப்பின் அடிப்படையிலேயே நிரப்பப்பட வேண்டுமென 1996 ஆம் ஆண்டு அரசு முடிவெடுத்து ஆணை பிறப்பித்தது. இதன்படி இடைநிலை ஆசிரியர்கள், அவர்களது வேலைவாய்ப்பு அலுவலகப் பதிவு மூப்பின் அடிப்படையில் அரசுப் பள்ளிகளில் ஏற்பட்ட காலியிடங்களில் நியமிக்கப்பட்டனர்.

1-5-1996 முதல் 30-11-1997 வரையிலான காலத்தில் வேலைவாய்ப்பு அலுவலகங்களில் பதிவு செய்த 22,936 இடைநிலை ஆசிரியர்கள் அரசுப் பள்ளிகளில் நியமிக்கப்பட்டனர்.

## அத்தியாயம் 11

### கைவினைஞர் பயிற்சித் திட்டம்

ஒரு நாட்டின் பொருளாதார வளர்ச்சி, அதன் தொழிற் வளர்ச்சியைச் சார்ந்துள்ளது. தரம் வாய்ந்த உற்பத்தியைப் பெருக்குவதற்கு தொழிற்சாலைகளுக்கு மிகவும் திறமை வாய்ந்த மனித ஆற்றல் இன்றியமையாததாகிறது. கடந்த ஐந்தாண்டுத் திட்டங்களில், தொழில் துறையின் வளர்ச்சிக்காக அநேகத் திட்டங்கள் செயலாக்கப்பட்டதன் காரணமாக பல்வேறு தொழிற் பிரிவுகளில் தேர்ச்சி பெற்ற தொழில் நுட்பப் பணியாளர்களின் தேவை அதிக அளவில் உயர்ந்துள்ளது என்று புலனாகிறது. இன்று நாட்டின் பொருளாதாரத்தில் தோன்றிடும் வேலைவாய்ப்புகள், திறமை மிகுந்த மற்றும் அனுபவம் குறைந்த தொழிலாளர்களின் தேவையினை வலியுறுத்துகின்றன. தற்போது, இயந்திரங்கள் நவீன மயமாக்குதலும் தொழில் நுட்ப மேம்படுத்துதலும் உள்ள சூழ்நிலையில் இன்றியமையாத பல்வேறு திறனின் தேவை வளர்ந்து வருகிறது.

நவீன தொழில் நுட்பவியலின் முன்னேற்றத்திற்கு தகுந்தாற்போல் ஈடு செய்ய அனுபவம் வாய்ந்த பல்வேறு திறனுடைய மனித ஆற்றல் தொழிற்சாலைகளில் மிகவும் தேவைப்படுகிறது. எனவே தொழிற் சாலைகளின் இந்தத் தேவையினைக் கருத்தில் கொண்டு முறையான தொழிற் பயிற்சியின் மூலம் பல்வேறு தொழிற் பிரிவுகளில் திறமை

[1998 ஏப்ரல் 24

வாய்ந்த செயல்திறன் மிக்க கைவினைஞர்களை உருவாக்குவதில் கைவினைஞர் பயிற்சித் திட்டம் பெரும் பங்காற்றுகிறது.

கைவினைஞர் பயிற்சித் திட்டம், தமிழ்நாடு முழுவதிலும் உள்ள 52 அரசு தொழிற் பயிற்சி நிலையங்களில் கைவினைஞர்களை உருவாக்குகிறது. இவற்றில் மகளிருக்காக பத்தும், தாழ்த்தப் பட்டோருக்கென ஒன்றும் பழங்குடியினருக்கென ஒன்றும் இயங்குகின்றன. 16,880 இருக்கைகள் கொண்ட இத்தொழிற் பயிற்சி நிலையங்கள் அனைத்தும் தொழிற்சாலைகளின் தேவைக்கேற்றாற்போல் 35 பொறியியல் மற்றும் 15 பொறியியல் அல்லாத தொழிற் பிரிவுகளில் பயிற்சி அளிக்கின்றன. நாடு முழுவதிலும் தொழிற் பிரிவுகள் மற்றும் கருத்தியல் பாடத் திட்டங்களில் ஒரே சீரான தரத்தைப் பராமரிக்க அவைகள் அனைத்தும் வாழ்க்கைக் கல்வி பயிற்சித் திட்டத்தின் தேசியக் குழுவால் வடிவமைக்கப்பட்டுள்ளன. தற்பொழுது 17,000 பயிற்சியாளர்கள், தமிழ்நாடு முழுவதிலும் உள்ள அனைத்து அரசினர் தொழில் பயிற்சி நிலையங்களில் பயிற்சி பெற்று வருகின்றனர்.

இத்துறையில் வழங்கப்படும் தேசிய தொழிற் சான்றிதழ் பெற்றவர்கள் நம் நாட்டில் மட்டுமல்லாது, அயல் நாடுகளிலும் வேலைவாய்ப்புகள் அதிகம் பெற்று மிகவும் நன்மதிப்புப் பெறுவதால் ஆண்டுதோறும் மிகுதியான பயிற்சியாளர்களை அரசினர் தொழிற் பயிற்சி நிலையங்கள் தன்பால் ஈர்க்கின்றன.

## தனியார் தொழிற் பயிற்சி நிலையங்கள்

தொழில் பயிற்சி அளிப்பதற்குக் கட்டடம் கட்டுதல், இயந்திரங்கள் மற்றும் உபகரணங்கள் கொள்முதல் செய்தல் போன்றவற்றிற்கு மிக அதிக அளவில் நிதி முதலீடு செய்தல் வேண்டும். இம்மாநில முயற்சிகளை நிறைவு செய்திடவும், தொழிற்சாலைகளில் தேர்ச்சி பெற்ற கைவினைஞர்களின் தேவை அதிகரித்து வருவதனைப் பூர்த்தி செய்திடும் வகையிலும், 58,000 இருக்கைகள் கொண்ட 438 தனியார் தொழிற் பயிற்சி நிலையங்கள் இம்மாநிலத்தில் தோற்றுவிக்கப்பட்டுள்ளன. இத்தனியார் தொழிற் பயிற்சி நிலையங்களும், அரசினர் தொழிற் பயிற்சி நிலையங்களைப் போலவே வாழ்க்கைக் கல்விப் பயிற்சித் திட்டத்தின் தேசியக் குழுவால் அங்கீகரிக்கப்பட்ட தொழிற் பயிற்சியினை அளிக்கின்றன.



1998 ஏப்ரல் 24]

புதிய தனியார் தொழிற் பயிற்சி நிலையங்கள் ஆரம்பிக்க அதிகரித்து வரும் கோரிக்கைகளை நிறைவேற்றும் பொருட்டும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 1996-97 ஆம் ஆண்டின் நிதி நிலை அறிக்கையில் அறிவித்ததற்கிணங்கவும் தொழிற் பயிற்சி நிலையங்கள் இல்லாத 218 பஞ்சாயத்து ஒன்றியங்களில் படிப்படியாக மூன்றாண்டு காலத்தில் புதிய தனியார் தொழிற் பயிற்சி நிலையங்கள் தோற்றுவிக்கும் திட்டம் செயல்படுத்தப்படுகிறது. இதன் அடிப்படையில் முதல் படியாக ஆகஸ்ட் 1997 இல் பயிற்சி துவக்க 124 பஞ்சாயத்து ஒன்றியங்களில் 221 தனியார் தொழிற் பயிற்சி நிலையங்கள் துவக்க தற்காலிக அனுமதி வழங்கப்பட்டுள்ளது. மற்ற பஞ்சாயத்து யூனியன்களிலும், தனியார் தொழிற் பயிற்சி நிலையங்கள் 1998-99 ஆம் ஆண்டும் புதிதாகத் துவக்க துரித நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

## தனியார் தொழிற் பள்ளிகள்

தனியார் தொழிற் பயிற்சி நிலையங்களைத் தவிர, 6,326 பயிற்சியாளர்கள் இருக்கைகளுடன் அரசால் அங்கீகரிக்கப்பட்ட 145 தனியார் தொழிற் பள்ளிகள் இம்மாநிலத்தில் இப்போது இயங்கி வருகின்றன. இவற்றில் 68 தொழிற் பள்ளிகள் நிரந்தரமாக அங்கீகரிக்கப்பட்டு 50 தொழிற் பள்ளிகள் நமது பணியாளர் ஊதியம் மற்றும் பயிற்சி செலவினங்களில் 75 விழுக்காடுகள் அல்லது நிகர நஷ்டத்தில் எது குறைவோ அதனை ஈடு கட்டும் வகையில் அத்தொழிற் பள்ளிகளின் கணக்கு வழக்குகள் தணிக்கைச் செய்யப்பட்ட பின்பு அரசின் மானியமாகப் பெறுகின்றன. தற்பொழுது 4,997 பயிற்சியாளர்கள் இத்தனியார் தொழிற் பள்ளிகளில் பயிற்சி பெற்று வருகிறார்கள்.

## அகில இந்திய தொழிற் தேர்வு

பயிற்சியாளர்கள் அகில இந்திய தொழிற் தேர்வுகளில் கலந்து கொள்ளவும், நாட்டில் எப்பகுதியிலும் அவர்கள் வேலைவாய்ப்பினைப் பெறும் வகையிலும், தொழிற் கல்வியின் தரம் ஒரே சீராக இருப்பதற்காகவும், தொழிற் தேர்வுகள் தேசிய வாழ்வியல் பயிற்சிக் குழுவினால் வடிவமைக்கப்படுகின்றன. தொழிற் கல்வியின் தரத்தைப் பேணி, அகில இந்திய தொழிற் தேர்வு விடைத்தாள்களை ஒரே சீராக மதிப்பீடு செய்திட ஜூலை 1979 முதல் மைய மதிப்பீடு முறை அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

[1998 ஏப்ரல் 24

அரசினர் மற்றும் அங்கீகரிக்கப்பட்ட தொழிற் பயிற்சி நிலையங்கள் அனைத்தும் ஆண்டுதோறும் ஏறத்தாழ 30,000 திறமையான கைவினைஞர்களை உருவாக்குகின்றன. அவர்களில் ஏறக்குறைய 50 விழுக்காடுகள் வேலைவாய்ப்பைப் பெறுகின்றனர். மற்றும் சிலர் சொந்தமாக சுய வேலைவாய்ப்பு தொழில் மையங்களை அமைத்துக் கொள்கின்றனர். இம்மாநில பயிற்சியாளர்கள் அகில இந்தியத் திறனாய்வுப் போட்டிகளில் தொடர்ந்து நற்சாதனைகள் புரிந்து வருகின்றனர். 1997 வரையில் நடைபெற்ற 33 அகில இந்தியத் திறனாய்வுப் போட்டிகளில் 16 முறை முதல் நிலை பெற்று தன்னிகரில்லா பெருமையை இம்மாநிலம் அடைந்துள்ளது.

சிறந்த பயிற்சியாளர் மற்றும் பயிற்றுநர்களுக்கு மாண்புமிகு முதலமைச்சர் விருதுகள்

தேர்ச்சி பெற்ற பயிற்சியாளர்களை மேன்மேலும் ஊக்குவிக்கும் நோக்கத்தோடு ஆண்டுதோறும் மாநில அளவில் நடைபெறும் தொழிற் திறனாய்வு போட்டியில் முதன்மையாகத் தேர்ச்சி பெற்ற சிறந்த பயிற்சியாளர்களுக்கு ரொக்கமாக முதலமைச்சர் விருதுகள் வழங்கும் திட்டமொன்று அரசு அறிமுகப்படுத்தியுள்ளது. இவ்விதம் சிறந்த பயிற்சியாளர்களை உருவாக்கியப் பயிற்றுநர்களும் இவ்விருதுகள் மூலம் கௌரவிக்கப்படுகின்றனர். மேலும் பயிற்றுநர்கள் சிறந்த முறையில் பயிற்சியாளர்களுக்குப் பயிற்சி அளித்து முன் மாதிரியாகத் திகழ்ந்து பயிற்சி செம்மையாகச் செயல்படுவதை ஊக்குவிக்க அவர்களுக்கு ஆண்டு தோறும் நல்லாசிரியர் விருதுகளும் வழங்கப்படுகின்றன.

பயிற்றுநர்களுக்குப் பயிற்சி

துரிதமாக வளர்ந்து வரும் தொழில் நுட்ப வளர்ச்சியினைத் தெரிந்து கொள்ள ஆண்டுதோறும் 25 இளநிலைப் பயிற்சி அலுவலர்கள் மத்திய பயிற்சி/முன்னோடிப் பயிற்சி நிலையங்களுக்கு அனுப்பப்பட்டு அவர்களுக்குப் பயிற்சியளிக்கப்படுகிறது. அதன் பயனாக அவர்கள் தொழிற் பயிற்சி நிலையத்தில் நமது பயிற்சியாளர்களுக்குக் கருத்தியல் பாடங்களை சிறந்த முறையில் கற்றுத்தரவும், செயல்முறைகளைச் செய்து காட்டவும் ஏதுவாகிறது. 25 பேர் கொண்ட அணி ஒன்று ஆகஸ்டு 1997இல் அனுப்பப்பட்டுள்ளது. இவர்கள் 1998 ஜூலையில் தமது பயிற்சியை முடிப்பார்கள்.



1998 ஏப்ரல் 24]

தொழிலாளர்களுக்கான மாலை நேர வகுப்புகள்

தொழிலாளர்கள் பயன் பெற மாலை நேர வகுப்புத் திட்டம் தொழிற்சாலைகள் செறிவுள்ள வட சென்னை, கிண்டி, அம்பத்தூர், கோவை, மதுரை, மேட்டூர் அணை, திருச்சி மற்றும் ஓசூர் ஆகிய 8 இடங்களில் உள்ள அரசினர் தொழிற்பயிற்சி நிலையங்களில் செயல்படுத்தப்படுகிறது. பல்வேறு பணிமனைகளிலும் தொழிற் நிறுவனங்களிலும் பணிபுரியும் தொழிலாளர்களுக்கு அவர்களின் தொழிற்பிரிவுகளில் கருத்தியல் அறிவு இத்திட்டத்தின் மூலம் கற்றுத் தரப்படுகிறது. ஆண்டுதோறும் 1,925 தொழிலாளர்களுக்கு இத்திட்டத்தின் கீழ் பயிற்சி அளிக்க போதுமான வசதிகள் செய்யப்பட்டுள்ளன.

அரசினர் தொழிற் பயிற்சி நிலையங்களை வலுப்படுத்துதல்

நவீன கால தொழில் நுட்ப முன்னேற்றத்திற்கேற்றவாறு தொழில்களும் அவற்றின் முறைகளும் மாறி வருகின்றன. இன்றைய மின்னணுவியல் காலமானது ஒவ்வொரு இயந்திரமும், கருவியும் கணினி உதவியுடன் இயங்குவதற்கு வழி வகுத்துள்ளது. எனவே மிகவும் பழமையான தொழிற் பிரிவுகள் நீக்கப்பட்டு அவற்றிற்குப் பதிலாக தொழிற் சாலைகளின் தேவைக்கேற்றாற்போல் புதிய நவீன தொழிற்பிரிவுகள் தொழிற் பயிற்சி நிலையங்களில் அறிமுகப்படுத்தப்படுகின்றன.

வேலைவாய்ப்புகள் மிகுந்துள்ள குளிர்பதனம், குழைவியல்பு, ஏற்றுமதி ஆடைகள் தைத்தல், அச்சுத் தொழில், ஏற்றுமதி தோல் ஆடைகள், டெஸ்க் டாப் பப்ளிஷிங் போன்ற தொழிற்பிரிவுகள் தொடங்கப்பட்டுள்ளன. தொழில் துறையில் ஏற்பட்டு வரும் தொழில் நுட்பவியலின் வளர்ச்சிக்கு இணையாக அரசினர் தொழிற் பயிற்சி நிலையங்களில், கணினியின் உதவியால் கட்டுப்படுத்தப்படும் நவீன இயந்திரங்கள் வழங்கப்பட்டு அவற்றில் பயிற்சி அளிக்கப்படுகின்றது. ஏனைய அரசினர் தொழிற் பயிற்சி நிலையங்களுக்கும் படிப்படியாக இந் நவீன இயந்திரங்கள் வழங்கப்பட்டு பயிற்சி அளிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

அரசினர் தொழிற் பயிற்சி நிலையங்களில் செய்முறை பயிற்சிகளை பயிற்சியாளர்கள் மிகத் துல்லியமாகச் செய்வதற்கு, 30 ஆண்டுகளுக்கு மேலாகப் பயன்படுத்தப்பட்டு தேய்ந்து வழக்கொழிந்து மற்றும் பழுதடைந்த கைக்கருவிகள் மற்றும் உபகரணங்கள் மாற்றப்பட்டு புதியவைகள் வழங்கப்பட்டுள்ளன.

அநேக தொழிற் பயிற்சி நிலையங்கள் சொந்தக் கட்டடங்களில் இயங்குகின்றன. இன்னும் சில வாடகைக் கட்டடத்தில் இயங்குகின்றன. எனவே அவற்றிற்கு புதியக் கட்டடங்கள் கட்ட அரசு திட்டமிட்டுள்ளது. சமீபத்தில் இராமநாதபுரம் அரசினர் தொழிற் பயிற்சி நிலையத்திற்கு கட்டடம் புதிதாகக் கட்டி முடிக்கப்பட்டுள்ளது. அதனைத் தொடர்ந்து மற்ற அரசு தொழிற் பயிற்சி நிலையங்களுக்கும் புதியக் கட்டடம் படிப்படியாகக் கட்ட உத்தேசிக்கப்பட்டுள்ளது.

## தொழிற் பயிற்சி நிலையங்களை நவீனப்படுத்துதல்

தொழில் நுட்ப மாற்றங்களுக்கு ஏற்ப நவீன நுண் கருவிகள் பயன்படுத்துவது அதிகரித்து வருவதால் வாழ்வியல் பயிற்சி மேம்பாட்டுத் திட்டம் அம்பத்தூர் மற்றும் கோயம்புத்தூரில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இத்திட்டம் தொழிற்சாலைப் பணியாளர்கள் தம்முடைய செயல் திறனை மேம்படுத்திடும் வகையில் அவர்களுக்கு நவீன நுண் கருவிகள் மற்றும் இயந்திரங்கள் கையாளவும் பராமரிக்கவும் தேவையான மேம்பட்ட தொழில் நுட்பப் பணியினை வழங்குகிறது.

ஒன்பதாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் நோக்கமே அரசு தொழிற் பயிற்சி நிலையங்களை நவீனப்படுத்துவதும், தொழிற் பயிற்சி தரமாக இருக்க இயன்றளவு இயந்திரங்களையும், உபகரணங்களையும் உபயோகப்படுத்துதலும், தேவையான உள்ளமைப்புகளை வழங்கலுமேயாகும். தொழிலகங்கள், விஞ்ஞான முன்னேற்றத்தினை மிக விரைவாகச் செயல்படுத்தத் தயாராகின்றன.

எனவே தொழிற்சாலைகளில் உற்பத்திக்கு முதுகெலும்பாகக் கருதப்படும் தொழிற் பயிற்சி நிலையப் பயிற்சியாளர்கள் நவீன இயந்திரங்கள் மற்றும் உபகரணங்களில் பயிற்சி பெறுதல் அவசியமாகிறது. இப்பயிற்சியினால் அவர்கள் தொழிற்சாலைகளில் பணியில் சேரும்போதே நேரடியாகவே பொருட்களை அதிக அளவில் உற்பத்தி செய்ய ஏதுவாகிறது.

1997-98 ஆம் ஆண்டில் வரவு-செலவுத் திட்டத் தொடரின்போது மாண்புமிகு முதலமைச்சர் அறிவித்ததற்கிணங்க ரூ.1,230.64 இலட்சம் செலவில் தற்சமயம் உள்ள 21 அரசினர் தொழில் பயிற்சி நிலையங்களை நவீனப்படுத்துதல் மற்றும் 13 அரசினர் தொழிற் பயிற்சி நிலையங்களில் புதிய தொழிற் பிரிவுகள் அறிமுகப்படுத்துதல் என்ற மேன்மையான



திட்டம் ஒன்றினை 1997-98 மற்றும் 1998-99 இரு ஆண்டுகளில் செயல்படுத்தி அரசு ஆணை வழங்கியுள்ளது. அதன்படி 1997-98 ஆம் ஆண்டில் 13 அரசினர் தொழிற் பயிற்சி நிலையங்களில் புதிய தொழிற் பிரிவுகள் அறிமுகப்படுத்தப்பட்டு ரூ.479.72 இலட்சம் செலவில் நவீன இயந்திரங்களும் உபகரணங்களும் கொள்முதல் செய்யவும், ரூ.129.00 இலட்சங்களில் கூடுதல் கட்டடங்கள் கட்டுதல் மற்றும் ஆழ்குழாய்க் கிணறுகள் அமைக்கவும் துரித நடவடிக்கைகள் செயலாக்கப்பட்டு வருகின்றன. 1998-99 ஆம் ஆண்டிலும் செயல்முறை மற்றும் செலவின இலக்குகளை அடைய இந்நடவடிக்கைகள் தொடரப்பட்டுள்ளன.

## தொழில் பழகுநர் பயிற்சித் திட்டம்

1961 ஆம் ஆண்டின் தொழில் பழகுநர் பயிற்சி, சட்ட விதிகளின்படி இம்மாநிலத்தில் தொழில் பழகுநர் பயிற்சித் திட்டம் செயல்பட்டு வருகிறது. இது தொழில் பயிற்சியின் தொடர்ச்சியாகும். இத்திட்டத்தின் மூலம், இத்தொழிற் பயிற்சி நிலையத்தில் பயிற்சி முடித்தவர்களுக்கும் மற்றும் புதியவர்களுக்கும், 1 முதல் 4 வருடங்களுக்குத் தொழில் பழகுநர் பயிற்சி அளித்து பொருள் உற்பத்தியில் தம்முடைய திறமைகளை வெளிப்படுத்த அவர்களுக்கு வாய்ப்பளிக்கப்படுகிறது. தொழிற் நிறுவனங்களில் தொழில் பழகுநர்களுக்கு செய்முறைப் பயிற்சி வழங்கப்படும் காலத்தில் அவர்களுக்கான தொழில்பிரிவுகளைச் சார்ந்த கருத்தியல் பாடங்களை இம்மாநிலத்தில் நிறுவப்பட்டுள்ள 11 அரசு தொடர் அறிவுரை மையங்களில் கற்றுத் தரப்படுகின்றன. இதனால், தொழில் பழகுநர் பயிற்சி முடித்த பின் அவர்கள் நிலையான பொருள் உற்பத்திப் பெருக்கத்திற்கு தன்னம்பிக்கையோடு செயல்பட முடிகிறது. தொழில் பழகுநர் பயிற்சிக்குப் பின்பு அகில இந்தியத் தொழில் தேர்வில் வெற்றி பெற்றவர்களுக்கு தேசிய தொழிற் பழகுநர் சான்றிதழ் வழங்கப்படுகிறது. இவ்வாறாக இத்திட்டம், வளர்ந்து வரும் தொழிற்சாலைகள் தேவையினைப் பூர்த்தி செய்திடும் வகையில், அகில இந்தியா முழுவதும் ஒரே சீரான பயிற்சி வழங்கி தேவையான திறமை வாய்ந்த கைவினைஞர்களைக் கிடைக்க வைக்கிறது. தற்போது தொழில் பழகுநர் பயிற்சித் திட்டத்தின்கீழ் 16,993 பயிற்சியாளர்கள் இம்மாநிலம் முழுவதிலும் 2,099 தொழிற் நிறுவனங்களில் பயிற்சி பெற்று வருகிறார்கள். இதுவரை இத்திட்டத்தின் மூலம் 1,47,568 தொழில் பழகுநர்கள் பயிற்சி பெற்றுள்ளனர்.

[1998 ஏப்ரல் 24

## பழங்குடியினர் துணைத் திட்டம்

பழங்குடியினர் துணைத் திட்டம் குறிப்பிட்ட பகுதியில் வாழும் மலைவாழ் பழங்குடியினருக்கு மட்டும் பயன் அளிக்கக் கூடிய தனிச்சிறப்பு திட்டமாகும்.

பழங்குடியினர் துணைத் திட்டம் விழுப்புரம் மாவட்டம், சங்கராபுரம் அரசினர் தொழிற் பயிற்சி நிலையத்தில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. பழங்குடியினர் சமூகப் பொருளாதார நிலையை மேம்படுத்தும் வகையில் அவர்களுக்கு எளிதில் வேலைவாய்ப்பு கிட்டும் சில தொழில் பிரிவுகளில் தொழிற் பயிற்சி வழங்குவதே இத்திட்டத்தின் நோக்கமாகும்.

## அரசு தொழிற் பயிற்சி நிலையத்தின் மேம்பட்ட தொழிற்நுட்ப பயிற்சித் திட்டம் அறிமுகப்படுத்துதல்

மத்திய அரசு நிதி உதவியுடன் இத்திட்டம் புதியதாக அம்பத்தூரில் 1997-98ஆம் ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. திறமையான புதிய சந்ததியினரை உயரிய தொழில் நுட்பத்தில் சிறந்த பயிற்சி அளித்து அவர்களின் செயல் திறனை மேம்படுத்துவது இப்பயிற்சி முறையின் நோக்கமாகும். இதற்கான செலவு முழுவதையும் மைய அரசு ஈடு செய்கிறது.

## மேலாண்மை நிர்வாக தகவல் முறை

இந்த மத்திய அரசு செயலாக்கத் திட்டம், புதியதாக வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறை ஆணையரகத்தில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. மிகவும் குறைவான நேரத்தில் திட்டங்களின்கீழ் செயல்படும் நிலையங்களின் அனைத்து விவரங்கள் மற்றும் முடிவுகள் எடுக்க ஆணைகள் பிறப்பிக்கத் தேவையான தொழிற் பிரிவுகள் சம்பந்தமான விவரங்கள், பயிற்சியின் தரம், நிதி விவரங்கள் போன்றவற்றை உடனுக்குடன் நிர்வாகத்திற்கு அளித்து அவற்றைப் பராமரிப்பதே இத்திட்டத்தின் முக்கிய நோக்கமாகும். இத்திட்டம் முழுமைக்கும் ஆகும் செலவை மைய அரசே ஈடு செய்கிறது.

## உலக வங்கி நிதியுதவியுடன் வாழ்வியல் பயிற்சித் திட்டம்

பல்வேறு தொழில்களில் மனித ஆற்றலின் தேவைக்கேற்ப பயிற்சித் திட்டத்தினை மேம்படுத்தும் நோக்குடன் உலக வங்கி நிதியுதவியுடன் வாழ்வியல் மேம்பாட்டுத் திட்டம் செயலாக்கப்படுகிறது. இத்திட்டம் கைவினைஞர் பயிற்சி, தொழிற் பழகுநர் பயிற்சி, மகளிர் வாழ்வியல்



1998 ஏப்ரல் 24]

தொழிற் பயிற்சி மற்றும் திறமைமிகு தொழிலாளருக்கான வாழ்வியல் மேம்பாட்டுப் பயிற்சி ஆகியவைகளை உள்ளடக்கியதாகும். இத்திட்டத்தின் கீழ் ரூ. 2,174.41 இலட்சம் செலவில் ஒன்பது திட்டங்கள் மைய அரசு பொறுப்பேற்கும் திட்டங்களாக 1989-90 முதல் 1995-96 வரை ஏழு ஆண்டுகளில் செயல்படுத்த மைய மற்றும் மாநில அரசுகள் ஒப்புதல் அளித்துள்ளன. இத்திடம் 31-12-1997 வரை நீடிக்கப்பட்டு, திட்டத் தொகை ரூ. 1,655.54 இலட்சங்கள் கூடுதலாக அனுமதிக்கப்பட்டது. இத்திட்டச்செலவினை மைய அரசும், மாநில அரசும் சமமாகப் பகிர்ந்து கொள்கின்றன.

உலக வங்கி நிதியுதவியுடன் செயல்படுத்தப்பட்டு வரும் ஒன்பது திறமை மேம்பாட்டுத் திட்டங்களில் கீழ்க் காணும் திட்டங்கள் 31-12-1997-வுடன் முடிவடைந்து, அவைகள் 1-1-1998 முதல் திட்டம் சாரா (Non-Plan) திட்டத்தின்கீழ் செயலாக்கப்படவிருக்கின்றன.

### 1. மகளிருக்கான தொழிற் பயிற்சி நிலையங்கள்

தொழிற்சாலைகளில் திறமை மிகுந்த மற்றும் திறமைக் குறைவான மனித ஆற்றலின் தேவையைப் பூர்த்தி செய்திடும் வகையில் மகளிர் வாழ்வியல் பயிற்சித் திட்டத்தினை நிறைவானதாகவும், தரமுள்ளதாகவும் செய்திட ஐந்து மகளிர் அரசினர் தொழிற் பயிற்சி நிலையங்கள் ஒவ்வொன்று அம்பத்தூர், கோவை, சேலம், மதுரை மற்றும் புள்ளம்பாடியில் துவங்கப்பட்டுள்ளன.

### 2. இயந்திரப் பராமரிப்பு மையங்கள்/பணிமனை

அரசினர் தொழிற் பயிற்சி நிலையங்களிலுள்ள பழுதடைந்த இயந்திரங்கள், முன்பு தனியார் தொழிற்சாலைகளில் பழுதுபார்க்கப்பட்டு வந்த நிலை மாறி தற்போது ஆறு இயந்திரப் பராமரிப்பு மையங்கள் முறையே அரசினர் தொழிற் பயிற்சி நிலையம், வட சென்னை, கோவை, திருச்சி, சேலம், மதுரை மற்றும் பேட்டை மற்றும் மாநில அளவிலான இயந்திரப் பராமரிப்புப் பணிமனை அம்பத்தூரிலும் இயந்திரங்கள் உடனுக்குடன் பழுதுபார்க்கப்பட்டு சீர் செய்யப்படுகின்றன.

### 3. தொழிற் பயிற்சி நிலையங்களின் விரிவாக்கம்

மாறிவரும் தொழிற்சாலைகளின் தேவைக்குத் தகுந்தாற்போல தேர்ச்சி பெற்ற கைவினைஞர்கள் மிகுதியாக தேவைப்படுவதினைக் கருத்தில்

கொண்டு 25 புதிய தொழிற் பிரிவுகள் 16 அரசினர் தொழிற் பயிற்சி நிலையங்களில் இவ்விரிவாக்கத் திட்டத்தின்கீழ் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன.

**4. வாழ்வியல் முன்னேற்றப் பயிற்சித் திட்ட விரிவாக்கம்**

புதுமைமிகு இயந்திரங்களைக் கையாளுவதில் தேவையான மேம்பட்ட தொழில் நுட்பவியலைத் தெரிந்து கொள்ளும் வகையில் தொழிற்சாலைகளில் பணிபுரியும் தொழிலாளர்களுக்கு மேம்பட்ட பயிற்சி அளிக்கத் தேவையான வசதிகள் செய்யப்பட்டு, கோவை, அரசினர் தொழிற் பயிற்சி நிலையத்திலுள்ள வாழ்வியல் மேம்பாட்டுப் பயிற்சித் திட்டம் மூன்று பயிற்சிப் பிரிவுகளுடன் விரிவாக்கம் செய்யப்பட்டுள்ளது.

**5. ஒலி, ஒளிச் சாதன வசதிகள் அமைத்தல்**

பயிற்சியாளர்களுக்கு அளிக்கப்படும் பயிற்சி உபயோகமானதாகவும், திறம்பட அமையவும், வகுப்பறை போதனா முறையினை மேம்படுத்தவும் 38 அரசினர் தொழிற் பயிற்சி நிலையங்களில் ஒளி, ஒலிச் சாதனங்கள் படிப்படியாக வழங்கப்பட்டுள்ளன.

**6. அடிப்படைப் பயிற்சி மையங்கள்/தொடர் அறிவுரை மையம்**

இரண்டு அடிப்படைப் பயிற்சி மையங்கள், முறையே வேதியியல் மற்றும் தோல் பிரிவுகளைக் கொண்டது இராணிப்பேட்டையிலும், மற்றொன்று உணவகம் மற்றும் உணவளிப்பு மற்றும் பரிமாறுதல் தொழிற் பிரிவுகளைக் கொண்டு அம்பத்தூரிலும் அமைக்கப்பெற்றுள்ளது. பெருமளவில் தொழிற் பழகுநர்கள் பயிற்சி பெறும் வகையில் வட சென்னை, கிண்டி, அம்பத்தூர் மற்றும் கோவை ஆகிய நான்கு தொடர் அறிவுரை மையங்களும் விரிவுபடுத்தப்பட்டுள்ளன.

**7. மாநிலத் திட்ட செயலாக்கப் பிரிவு**

உலக வங்கி உதவியுடன் செயல்படும் திறமை மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் மாநிலத் திட்டச் செயலாக்கப் பிரிவு ஒன்று தனியாக ஆணையரகத்தில் உருவாக்கப்பட்டுள்ளது. செயலாக்கப்பட வேண்டிய பல்வேறுத் திட்டங்களைச் செவ்வனே அமல்படுத்தி, அவைகளைத் திறம்பட நடைமுறைப்படுத்துதல், பல்வேறு பயிற்சி நடவடிக்கைகளை





செயல்படுத்துதல் ஆகிய பணிகளை இப்பிரிவு மேற்கொண்டுள்ளது. இத்திடம் 31-12-1998 வரை நீட்டிக்கப்பட்டுள்ளது.

**8. இயந்திரங்களை நவினப்படுத்துதல்**

பதினைந்து ஆண்டுகளுக்கு முன் ஆரம்பிக்கப்பட்டு, செயல்பட்டு வரும் 31 அரசினர் தொழிற் பயிற்சி நிலையங்களில் உள்ள இயந்திரங்கள் மற்றும் கருவிகள் போன்றவைகள் வழக்கொழிந்தவைகளாகவும், பழுதடைந்தவைகளாகவும் ஆகிவிட்டன. எனவே, அவைகளை நவீனப்படுத்தி, பழையனவற்றை மாற்றி அமைத்து, பற்றாக்குறையான இயந்திரங்கள் புதிதாகப் படிப்படியாகக் கொள்முதல் செய்யப்பட்டு, பயிற்சியின் தரம் உயர்த்தப்பட்டுள்ளது. இத் திட்டத்தில் 1997-98 ஆம் ஆண்டில் அரசு இரண்டாம் கட்டக் கொள்முதல் முறையில் ரூ. 930.00 இலட்சம் அளவில் திட்டம் எண் 134 இல் நவீன இயந்திரங்கள் கொள்முதல் செய்து வருகிறது. இதன் மூலம் பயிற்சியாளர்களுக்கு மேம்பட்ட தொழிற் பயிற்சி 1997-98 இல் அளிக்க உத்தேசித்து, செயல்படுத்தி வருகிறது. இத்திட்டம் 1998-99 ஆம் ஆண்டிற்கும் நீட்டிக்கப்பட்டுள்ளது.

மாநிலத் திட்டங்களின் கீழ் 1998-99 ஆம் வருடத்திற்கான பகுதி-II திட்டங்கள்

(1) ரூ. 115.00 இலட்சங்கள் மதிப்பீட்டில் கிண்டியில் வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறை சிறப்பு ஆணையர் அலுவலகக் கட்டடம் கட்டுதல்.

(2) ரூ. 40.00 இலட்சம் மதிப்பீட்டில், திருப்பூரில் மகளிர் தொழிற் பயிற்சி நிலையத்திற்குக் கட்டடம் கட்டுதல்.

(3) திருவண்ணாமலை, விருதுநகர் மற்றும் புதுக்கோட்டை மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகங்களில் கணினி முறை ஏற்படுத்த 1998-99-ல் ரூ.15.00 இலட்சம் அரசு வழங்கியுள்ளது.

(4) 4 அலுவலர்களுக்கு ரூ.1.00 இலட்சம் செலவில் கணினியில் பயிற்சி அளித்தல்.

(5) ரூ.3.50 இலட்சம் செலவில் சென்னை மாவட்ட வேலை வாய்ப்பு அலுவலகக் கணினி ஏற்பாட்டு முறையை மேம்படுத்துதல்.

## அத்தியாயம் 12

### அயல் நாட்டு வேலைவாய்ப்பு நிறுவனம்

அயல்நாட்டு வேலைவாய்ப்பு நிறுவனம் 1956 கம்பெனிகள் சட்டத்தின்கீழ் பதிவு செய்யப்பட்டுள்ள நிறுவனமாகும். அது முழுமையாக தமிழக அரசுக்குச் சொந்தமானது.

அயல்நாட்டில் பணிபுரிய விரும்பும் மனுதாரர்கள் அயல் நாடுகளில் வேலைவாய்ப்புகளைப் பெற உதவுவதற்காக அரசால் இந்நிறுவனம் தொடங்கப்பட்டுள்ளது. அதனுடைய அனுமதிக்கப்பட்ட மூலதனம் ரூ.50 இலட்சமாகும். அதனுடைய செலுத்தப்பட்ட மூலதனம் ரூ. 15 இலட்சமாகும். 31-3-1997 நிலவரப்படி இந்நிறுவனத்தின் சேர்ந்து வந்த ஆதாயம் ரூ.7.76 இலட்சமாகும்.

ஆரம்பிக்கப்பட்ட காலத்திலிருந்து 28-2-1998 வரை இந்நிறுவனம் 5,037 மனுதாரர்களை அயல்நாடுகளில் வேலைவாய்ப்பில் அமர்த்தியுள்ளது. 1-4-1997 முதல் 28-2-1998 வரையில் வெளிநாடுகளில் வேலையில் அமர்த்தப்பட்டுள்ள 200 மனுதாரர்கள் இதில் அடங்குவர்.

அயல் நாடுகளில் உள்ள அரசு மற்றும் தனியார் வேலையளிப்போர்களிடம் இந்நிறுவனம் நற்பெயரை ஈட்டியுள்ளது. சவூதி அரேபியாவிலுள்ள சுகாதார அமைச்சகம் இந்நிறுவனத்தின் வாயிலாக, மருத்துவர்களை பல ஆண்டுகளாகப் பணியில் அமர்த்தி வருகிறது.

தனது பணியைப் பரவலாக்கும் நோக்கத்துடன் இந்நிறுவனம் விமானப் பயணச்சீட்டு விற்பனை செய்யும் பணியைத் துவக்கியுள்ளது. தவிர அதன் மனுதாரர்களுக்கும், பொது மக்களுக்கும் இந்நிறுவனம் 'பாஸ்போர்ட்' எடுத்துக் கொடுக்கும் பணியையும் செய்கிறது.

மனுதாரர்களை தேர்வு செய்யும் பணியைத் திறன் [illegible] விரைவாகவும் முடிக்க கணினிமயமாக்கப்பட்ட புள்ளி விவ[illegible] இந்நிறுவனம் பராமரித்து வருகிறது.

219088